# வரலாற்றில் இருந்து ஒரு பகுதி

## حقبة من التاريخ

பர்ஹான் ஸலபி

| இல | பொருளடக்கம் | பக்கம் |
| --- | --- | --- |
| 01 | வரலாற்றை கலங்கப் படுத்துவதற்கு சில அறிவிப்பாளர்கள் மேற்கொள்ளும் வழி முறைகள் | 01 |
| 02 | அஹ்லு ஸுன்னாக்களிடத்தில் செய்திகளை உறுதிப்படுத்துதல் என்ற வழி முறை எப்போது உருவானது? | 02 |
| 03 | செய்திகளை உறுதிப்படுத்துவதன் அவசியம் | 02 |
| 04 | நபிகள் நாயகம் அவர்கள் பற்றிய சுருக்க குறிப்பு | 02 |
| | • இந்த செய்தியை நபி ﷺ அவர்கள் கூறியதற்கான காரணம் | 03 |
| 05 | சகீபா பனீ ஸாயிதா | 05 |
| | • அபூ மிஹ்னப் வழியாக அறிவிக்கப்பட்ட இமாம் தபரியின் அறிவிப்பு | 05 |
| 06 | அபூ பக்கர் (رضي الله عنه) அவர்களும் விமர்சனங்களும் | 08 |
| | • அபூ பக்கர் (رضي الله عنه) அவர்கள் பாத்திமா (ழ) அவர்களின் வாரிசுரிமைச் சொத்தை வழங்காமல் அநீதி இழைத்தார்களா!.. | 08 |
| | • சில மார்க்கச் சட்டங்களை அபூ பக்கர் (رضي الله عنه) அவர்கள் அறிந்திருக்கவில்லை | 11 |
| | • அலி (رضي الله عنه) அவர்கள் அபூ பக்கர் (رضي الله عنه) இற்கு உடன்படிக்கை செய்வதை புறக் கனித்தார்களா? | 11 |
| | • காலித் இப்னு வலீத் (رضي الله عنه) அவர்களுடைய கொலைக் குற்றத்துக்குரிய தண்டனையை அபூ பக்கர் (رضي الله عنه) அவர்கள் தள்ளுபடி செய்தார்கள் | 12 |
| | • அபூ பக்கர் (رضي الله عنه) அவர்கள் அலி (رضي الله عنه) அவர்களின் வீட்டை எறிக்கும் படி சொன்னாரா?.... | 13 |
| | • அபூ பக்கர் (ழ) அவரகள் அலி (ழ) அவர்களைக் கொள்வதற்காக காலித் (ழ)அவர்களை அனுப்புதல் | 14 |
| 07 | அபூ பக்கர் (رضي الله عنه) அவர்கள் பற்றி நபிகள் நாயகம் | 15 |
| 08 | அபூ பக்கர் (رضي الله عنه) அவர்களின் ஆட்சிப் பொறுப்பு பற்றிய நபிகள் நாயகத்தின் சமிஞ்சைகள் | 15 |
| | • அபூபக்கர் (رضي الله عنه) அவர்கள் பற்றிய சுருக்கக் குறிப்பு | 15 |
| | • இவரது காலத்தில் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள் | 15 |
| | • அபூ பக்கர் (رضي الله عنه) அவர்களின் மரணம் | 17 |
| 09 | அமீருல் மு.ஃமினீன் உமர் இப்னு கத்தாப் (رضي الله عنه) | 17 |
| | • உமர் (رضي الله عنه) அவர்கள் பற்றிய சுருக்கக் குறிப்பு | 18 |
| | • உமர் (رضي الله عنه) அவர்களின் காலத்தில் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள் | 18 |
| | • உமர் (رضي الله عنه) அவர்கள் பற்றி நபிகள் நாயகம் | 18 |
| | • உமர் (رضي الله عنه) அவர்கள் கொலை செய்யப்படுதல் | 18 |
| | • உமர் (رضي الله عنه) அவர்களின் கொலை தொடர்பாக ஷீயாக்கள் | 19 |
| | • உமர் (رضي الله عنه) அவர்கள் தொடர்பான ஷீயாக்களின் விமர்சனங்கள் | 20 |
| | 1) உமர் (رضي الله عنه) அவர்கள் மார்க்கத்துக்கு முறணான தீர்ப்புக்களை வழங்கினாரா? | 20 |
| | 2) நபி ﷺ அவர்கள் தனது இறுதி நேரத்தில் அலி (رضي الله عنه) அவர்களின் ஆட்சியுரிமை தொடர்பாக சொல்ல வந்த உறுதி மொழியை தடுத்தார்களா? | 21 |
| | 3) உஸாமா (رضي الله عنه) அவர்களின் படையில் செல்வதை விட்டும் பின் | 23 |

வாங்கியவர்களை நபியவர்கள் சபித்தார்களா?
4) அலி இல்லாவிட்டால் உமர் அழிந்திருப்பார்
5) அமீருல் மு.்.மினீன் என்ற பட்டத்தை தனக்குத் தானே சூட்டிக் கொண்டார்
6) கேள்விகள் கேட்பதையும் குர்ஆனிய வசனங்களையும் அய்வு செய்வதையும் தடுத்தார்கள்

அமீருல் மு.்.மினீன் உதுமான் அவர்கள்

➢ பகுதி – 01

- கிலாபத்தை பொறுப்பேற்றல்
- உதுமான் அவர்களே கிலாபத்திற்கு தகுதியுடையவர்கள்

➢ பகுதி– 02

- உதுமான் அவர்கள் பற்றிய சுருக்கக் குறிப்பு
- உதுமான் அவர்கள் பற்றி நபிகள் நாயகம்
- உதுமான் அவர்களின் ஆட்சியல் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள்

➢ பகுதி– 03

- குழப்பம் ஆரம்பித்தல்
- காரணம் ஒன்று: யூதனான அப்துல்லாஹ் இப்னு ஸப.்.
- இப்னு ஸப.்.வுடைய பிரச்சாரத்திற்கு உதவி புரிந்தோர்
- காரணம் இரண்டு: இஸ்லாமிய சமூதாயத்தில் ஏற்பட்ட பொருளாதார எழுச்சி
- காரணம்மூன்று: உமர் அவர்களுக்கும் உதுமான் அவர்களுக்கும் இடையிலான வித்தியாசமான இயல்புகள்
- காரணம் நான்கு: குரைஷிகளின் தலமைத்துவத்தை சில அரபிய கோத்திரங்கள் விரும்பமை
- மிஸ்ர் வாசிகள் கடிதம் பற்றிக் கூறிய தகவல் என்ன?
- உதுமான் அவர்களை கொலை செய்யதது யார்?
- உதுமான் அவர்களுடைய கொலையை ஸஹாபக்கள் தடுக்கவில்லையா?
- உதுமான் அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள்
- **குற்றச்சாட்டு ஒன்று:** குர்ஆனை எறித்தல்
- **குற்றச்சாட்டு இரண்டு:** பிரயாணத்தில் தொழுகையை பூர்த்தியாக்கித் தொழுதல்
- உதுமான் அவர்கள் பிரயாணத்தில் தொழுகையை பூர்த்தியாக தொழுதார்கள்
- **குற்றச்சாட்டு மூன்று:** உதுமான் அவர்கள் தனது நெறுங்கிய சொந்தங்களை பதவியில் அமர்த்தினார்
- உதுமான் அவர்களால் நியமிக்கப்பட்ட நபர்கள்
- **குற்றச்சாட்டு நான்கு:** மர்வான் இப்னு ஹகமிற்கு ஆபிரிக்க 5ல் ஒரு பகுதியை வழங்குதல்
- **குற்றச்சாட்டு ஐந்து:** ஹிமா என்ற பகுதியை அதிகரித்தல்
- **குற்றச்சாட்டு ஆறு:** உதுமான் அவர்கள் பத்ர் மற்றும் உஹத் ஆகிய யுத்தங்களிலும் பையதுல் ரிழ்வான் என்ற உடன்படிக்கையிலும் களந்து கொள்ள வில்லை
- **குற்றச்சாட்டு ஏழு:** அபூதர் அவர்களை ரபதா என்ற இடத்தில் ஒதுக்கி வைத்தல்

- தபரியில் வந்துள்ள அறிவிப்பு 48
- இந் நிகழ்வு தொடர்பாக ஸஹீஹுல் புகாரியில் வந்துள்ள சரியான அறிவிப்பு 48
- **குற்றச்சாட்டு எட்டு:** வெள்ளிக் கிழமை தொழுகைக்கான அழைப்பை இரண்டாக அதிகரித்தல் 48
- **குற்றச்சாட்டு ஒன்பது:** ஹுர்முஸான் என்பவனை கொன்றமைக்காக உபைதுல்லாஹ் இப்னு உமர் (ﷺ) அவர்களுக்கு உதுமான்(ﷺ)அவர்கள் எதற்காக தண்டனை வழங்கவில்லை 49
- **குற்றச்சாட்டு பத்து:** நபி (ﷺ) அவர்களால் மதீனாவை விட்டும் விரட்டப்பட்ட ஹிகம் என்ற நபரை மீண்டும் அழைத்தமை 51

**11**

யார் இந்த மர்வான் இப்னு ஹகம்?.... 52
- ஆஹ்லுல் பைத்தினரை இவர் வெறுத்ததாக கூறப்படும் செய்தி 52
- தல்ஹா (ﷺ) அவர்களை கொலை செய்வதில் மர்வானின் பங்கு 53
- பெருநாள் உரையை மர்வான் முட்படுத்தினார் 53

**12**

அலி (ﷺ)அவர்களுடைய ஆட்சிக் காலம் 54

➢ பகுதி – 01

- அலி (ﷺ) அவர்கள் பற்றிய சிறு குறிப்பு 54
- அலி (ﷺ)அவர்களுடைய சிறப்புக்கள் 54

➢ பகுதி – 02

- அலி (ﷺ) அவர்கள் கலீபாவாக பைஅத் செய்யப் படுதல் 56
- ஒட்டகப் போரின் ஆரம்பம் 57
- அலி (ﷺ) அவர்கள் பஷராவிற்கு வருகை தரல் 59
- போரிற்கு முன்னரான நிகழ்வுகள் 61
- போரை நிறுத்துவதற்கான முயற்சிகள் 61
- தல்ஹா மற்றும் ஸுபைர் (ﷺ) அவர்களின் கொலை 62
- போரிற்குப் பிறகு 62
- ஸிப்பின் யுத்தம் 64
- முஆவியா (ﷺ) அவர்கள் ஆட்சிப் பொறுப்பை வாதிட்டார்களா? 65
- யாரின் பக்கம் சத்தியம் இருந்தது? 67
- தீர்ப்புக் கூறும் நிகழ்வு 68
- ஏன் அலி (ﷺ)அவர்கள் உதுமான்(ﷺ) யைக் கென்றவர்களை கொள்ளவில்லை? 70
- அலி (ﷺ) அவர்கள் கொலை செய்யப்படுதல் 71
- ஸஹாபாக்களுக்கு மத்தியில் முறண்பாடு ஏற்படக் காரணம்? 72
- ஆகவே அலி மற்றும் முஆவியா (ﷺ) க்கு இடையில் முறண்பாடு எதை முற்பத்துவது என்பதிலேயே ஆகும் 72
- இக்காலப் பகுதியில் ஸஹாபாக்கள் மூன்று பகுதியினராக காணப்பட்டனர் 73
- உதுமான், ஸுபைர், அலி, ஹுஸைன் (f) போன்ற நபித்தோழர்களை கொன்றவர்கள் தொடர்பாக அஹ்லுஸ் ஸுன்னாக்களின் நிலைப்பாடு 73
- ஸஹாபாக்கள் மத்தியில் இடம் பெற்ற விடயங்களில் சத்தியம் யார் பக்கம் உள்ளது? 73

| | | |
|---|---|---|
| 13 | அமீருல் மு.ஃ.மினீன் ஹஸன் இப்னு அலி رضي الله عنه | 74 |
| | ➢ பகுதி -01 | |
| | • ஹஸன் رضي الله عنه அவர்கள் பற்றிய சுருக்கக் குறிப்பு | 74 |
| | • இவர்கள் பற்றி நபிகள் நாயகம் | 74 |
| | • இவர்களது மரணம் | 75 |
| | • ஹஸன் رضي الله عنه அவர்கள் கலீபாவாக பைஅத் செய்யப்படுதல் | 75 |
| | • முஆவியா رضي الله عنه அவர்களோடு சமாதனம் மேற்கொள்ளலும், முஸ்லிம்களை ஒன்று படுத்துதலும் | 75 |
| 14 | அமீருல் மு.ஃ.மினீன் முஆவியா (رضي الله عنه) | 75 |
| | ➢ பகுதி – 01 | |
| | • முஆவியா (رضي الله عنه) அவர்கள் பற்றிய சுறுக்கக் குறிப்பு | 75 |
| | • இவரது மனைவிமார்கள் | 75 |
| | • இவரது பிள்ளைகள் | 75 |
| | • முஆவியா (رضي الله عنه) அவர்கள் பற்றி நபிகள் நாயகம் | 75 |
| | • முஆவியா (رضي الله عنه) அவர்கள் பற்றி இமாம்கள் | 75 |
| | • முஆவியா (رضي الله عنه) அவர்களின் மரணம் | 77 |
| | ➢ பகுதி – 02 | |
| | • முஆவியா (رضي الله عنه) அவர்களின் காலத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள் | 77 |
| | • கிலாபத்திலிருந்து மன்னராட்சிக்கு | 77 |
| | • யஸீத் இப்னு முஆவியாவிற்கு பைஅத் செய்யப்படுதல் | 78 |
| | • யஸீத் இப்னு முஆவியாவின் பைஅத் தொடர்பாக அஹ்லுஸ்ஸுன்னாக்களின் நிலைப்பாடு | 79 |
| | • யஸீத் கிலாபத்திற்குத் தகுதியானவராக இருந்தாரா? | 79 |
| 15 | யஸீத் இப்னு முஆவியாவின் ஆட்சி | 80 |
| | ➢ பகுதி – 01 | |
| | • யஸீதிற்கான பைஅத்தும் ஹுஸைன் (رضي الله عنه) அவர்கள் பைஅத் செய்ய மறுத்து மக்காவிலிருந்து கூபாவிற்குச் செல்லுதலும் | 80 |
| | • இராக் வாசிகள் ஹுஸைன் (رضي الله عنه) அவர்களுக்கு கடிதம் அனுப்புதல் | 80 |
| | • ஹுஸைன் (رضي الله عنه) அவர்கள் முஸ்லிம் இப்னு அகீலை அனுப்புதல் | 81 |
| | • உபைதுல்லாஹ் இப்னு ஸியாதை கூபாவின் கவர்னராக ஆக்குதல் | 81 |
| | • ஹுஸைன் (رضي الله عنه) அவர்கள் கூபாவிற்கு புரப்படுதல் | 82 |
| | • முஸ்லிம் இப்னு அகீலிற்கு கூபாவாசிகள் துரோகம் இழைத்தல் | 82 |
| | • ஹுஸைன் (رضي الله عنه) அவர்கள் வெளியேறுவதை ஸஹாபாக்கள் தடுத்தல் | 83 |
| | • ஹுஸைன் (رضي الله عنه) அவர்கள் காதிஸிய்யாவை வந்தடைதல் | 84 |
| | ➢ பகுதி – 02 | |
| | • ஹுஸைன் (رضي الله عنه) அவர்கள் கொலை செய்யப்படுதல் | 85 |
| | • கர்பலாவை வந்தடைதல் | 85 |

- ஹுஸைன் ﵁அவர்கள் கூபாவின் படைக்கு அல்லாஹ்வை 85
ஞாபகமூட்டல் 85
- கர்பலா யுத்தம் ஆரம்பமாதல்
- ஹுஸைன் ﵁அவர்களோடு, அவர்களது குடும்பத்தில் 87
கொலை செய்யப்பட்டவர்கள்
- ஹுஸைன் ﵁ அவர்களுடைய கொலை தொர்பான 87
முன்னறிவிப்பு 88
- மறுமை வேதனைக்கு முன்னரான உலக வேதனை 89
- ஹுஸைன் ﵁அவர்களைக் கொலை செய்தது யார்?
- கூபா வாசிகளுடைய சூழ்ச்சியும் ஹுஸைன் ﵁அவர்களின் 90
கொலையாளிகளாக அவர்கள் மாறுதலும்
- ஹுஸைன் ﵁ அவர்களை கொல்வதில் நேரடியாக 91
தொர்புபட்டவர்
- ஹுஸைன் ﵁ அவர்களது கொலையில் மக்களின் 91
நிலைப்பாடு
- ஹுஸைன் ﵁ அவர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக 92
மக்களிடத்தில் மூன்று வகையான கருத்துக்கள் நிலவுகின்றன 92

1) **கருத்து ஒன்று** 92
2) **கருத்து இரண்டு** 92
3) **கருத்து மூன்று** 93

- புதிதாக உருவாக்கப்பட்ட இரண்டு நூதன அநுஸ்டானங்கள்
- யஸீத் இப்னு முஆவியா பற்றிய அஹ்லுஸ் ஸுன்னாக்களின் 93
நிலைப்பாடு 94
- யஸீத் பற்றிய நடுத்தரமான நிலைப்பாடு 94
- யஸீத்தை சபிப்பதை விட்டும் தடுத்தல்
- நபி ﷺ அவர்களுக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்புக்குத் 95
தகுதியானவர் யார்?

1) போர்வை தொடர்பான நபிமொழியும் முபாகழா தொடர்பான 95
வசனம் 98
2) விலாயா பற்றிய வசனம்

- இவர்களின் இவ்வாதம் தவறு என்பதனை நாம் பின்வரும் 99
வழிமுறைகள் மூலம் நிரூபிக்கலாம் 101
- மன்ஸிலா தொடர்பான நபிமொழி 103
- தகலைன் தொடர்பான நபிமொழி 103
- இக்கூற்று தவறு என்பதை பின்வரும் வழிகள் மூலும் நிருபிக்கலாம்
- அலி ﵁ அவர்கள் என்னைச் சார்ந்தவர், நான் அவரைச் 103
சார்ந்தவர் 104
- நான் அறிவின் நகரமாவேன், அலி அதனது வாயிலாவான் 105
- செய்தியின் வாசகம் 105
- ஹதீதுல் இன்தார் 105
- அறிவிப்பளர் வரிசை 105
- இச் செய்தியின் வாசகம்
- நபிகள் நாகத்திற்குப் பிறகு மனிதர்களிளே மிக வீரமானவராக 106
காணப்பட்டார் 107
- மனிதர்களிலேயே மிக அறிந்தவர் 108
- நபியவர்களுக்கு உறவால் மிக நெறுங்கியவர்கள் 108

| | | |
|---|---|---|
| | • இஸ்லாத்தில் முதலில் இணைந்து கொண்டவர் | 108 |
| | • ஒரு போதும் சிலைகளுக்கு சிரம் பணிந்ததில்லை | |
| **16** | ஷீஆக்களிடத்தில் ஏகத்துவம் | 109 |
| | 1) தவ்ஹீத் அர்ருபூபிய்யா | 109 |
| | 2) தவ்ஹீத் அல் உலூஹிய்யா | 1[illegible]3 |
| | • அவர்களின் விபரங்களை பின்வருமாறு நோக்கலாம் | 1[illegible]5 |
| | 3) தவ்ஹீத் அஸ்மாஉஸ்ஸிபாத் | 1[illegible]5 |
| **17** | ஷீஆக்களுக்கும் யூதர்களுக்கும் இடையிலான ஒருமைப்பாடுகள் | 1[illegible]7 |

## வரலாறு தொடர்பான மேலதிக விரிவைத் தேடுவோர் பின்வருகின்ற வரலாற்று நூல்களை படிக்கவும்

01-இமாம் இப்னு ஜரீர் (ரஹ்) அவர்களின் தாரீகுத் தபரி02-இமாம் இப்னுகதீர் (ரஹ்)அவர்களின் அல்பிதாயா வன் நிஹாயா.

03-இமாம் தஹபீ (ரஹ்) அவர்களின் தாரீகுல் இஸ்லாம்.

தாரீகுத் தபரீஎனும் நூல் இஸ்லாமியவரலாறுதொடர்பாகபேசும் ஓர் முக்கிய நூலாகும். அதிகமானோர் அதிலிருந்தே வரலாறுகளைதேடுகின்றனர். அஹ்லுஸ் ஸுன்னாக்களும் அஹ்லுல் பித்ஆக்களும் அந்நூலையே ஆதாரமாககொள்கின்றனர். இந்தளவு அனைத்துப் பிரிவினராலும் மதிக்கத்தக்க ஒரு நூலாககருதப்படுகிறது.

## ஏனைய வரலாற்று நூல்களைவிட இந்நூல் முற்படுத்தப்படுவதற்கான காரணங்கள்

01-அக்காலப்பகதிக்கும் இமாம் தபரி அவர்களுக்கும் இடையிலான காலரீதியான நெருக்கம்.
02-தனது நூலில் குறிப்பிடும் தகவல்கள் அனைத்தையும் அறிவிப்பாளர் வரிசையோடு குறிப்பிடுவார்கள்.
03-இமாம் தபரி அவர்களின் கண்ணியமும் அறிவின் முதிர்ச்சியும்.
04-அதிகமான வரலாற்று நூல்கள் அதைத் தழுவியே தொகுக்கப்பட்டுள்ளன.

ஆகவேநாமும் வரலாற்றை அறிவதற்கு இமாம் தபரி அவர்களையே நாடுகிறோம். எனினும் நாம் முதலில் குறிப்பிட்டதுபோன்று வரலாறு விடயத்தில் இமாமவர்களுக்குள்ள முதல் நிலை காரணமாக: இருசாராரும் (அஹ்லுஸ்ஸுன்னா, அஹ்லுல் பித்ஆ) அவ்விடத்திலேயே ஒன்றுசேர்ந்து அவர்களுக்கு தேவையான வரலாற்றை திறட்டிக் கொள்வதால், இவ்விடயத்தில் இரு சாராருக்கும் இடையிலான வேறுபாடுதான் என்ன? தகவல் பெரப்படும் அடிப்படை நூல் ஒன்றாக இருப்பதால் இரு சாராரும் கூறுகின்ற தகவல்களையும் ஏற்றுக் கொள்ளலாமா என்கின்ற சந்தேகம் எமக்கு எழலாம், எனினும் நாம் ஏளவே இமாம் தபரி அவர்கள் பற்றி குறிப்பிட்டது போன்று அனைத்து

செய்திகளையும் அறிவிப்பாளர் வரிசைகளோடு சொல்லும் சிறப்பம்சம் உடையவர்களாவர், அப்படியானால் நாம் ஏற்கனவே குறிப்பிட்ட இருசாராரில் அஹ்லுஸ்ஸுன்னாக்கள் அறிவிப்பாளர் வரிசையை ஆராய்ந்து அவற்றில் சரியான அறிவிப்புக்களை மாத்திரம் ஆதாராமாகக் கொள்வார்கள், அஹ்லுல் பித்ஆக்கள் அறிவிப்பாளர் வரிசையை ஆராய்ந்தாலோ அல்லது ஆராயாவிட்டாலோ அவர்கள் சரியான அறிவுப்புக்களை மாத்திரமில்லாது பலவீனமான குறைகள் உள்ளவையும் ஆதாரங்களாக கொள்ளப்படும். ஆகவே நாம் முதலில் இருசாராருக்கும் அடிப்படையாக நூலின் ஆசிரியரின் போக்கை அறிந்துகொள்வது மிகப்பொருத்தமானது என எண்ணுகிறேன்.

# நூலாசிரியர் இமாம் தபரி அவர்களின் போக்கு

இவ்விடயம் தொடர்பில் இமாமவர்கள் தனது முன்னுரையில் மிகவும் தெளிவான செய்தியைதருகிறார்கள்: ''நான் கொண்டுவந்துள்ள அனைத்து செய்திகளும் நான் இட்ட சில நிபந்தனைகளின் அடிப்படையில் அமையப்பெற்றுள்ளன என்பதை எமது நூலை பார்ப்பவர் அறிந்துகொள்ளட்டும், நான் எனக்கு அறிவிக்கப்பட்ட அனைத்து செய்திகளையும் அதனை அறிவித்த பூரண அறிவிப்பாளர்களோடு கூறியுள்ளேன். நான் எனது நூலில் முன்னோர்களின் செய்திகளாக குறிப்பிட்டவற்றில் இருந்துதான் வெருக்க்கூடிய ஒரு செய்தியை கண்டு கொண்டால் அச்செய்தி தொடர்பான சரியான நிலையை அல்லது அந்நிகழ்வு தொடர்பான யதார்த்தமான கருத்தை விளங்கிக் கொள்ளாததால் ஏட்பட்டதென்று அவர் அறிந்துகொள்ளட்டும். மேலும் நான் அந்நிகழ்வுகளை எமது முன் வாழ்ந்தவர்கள் கூறியது போலவே தொகுத்துள்னே். என்றும் அக்காலகட்டத்தில் கிடைக்கப்பெற்ற இவை சரி,பிழை என்று உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் அன்றும் அறிந்துகொள்ளட்டும்'' எனவே மேற்குறிப்பிட்ட இமாம் தபரி அவர்களின் வாக்குமூலத்தினால் அவர் வாசகர்களிடம் ஒரு உடன்படிக்கை எடுத்துள்ளார் என்பது தெளிவாகிறது. தனது நூலில் ஏதாவது தான்வெருக்கும் செய்தியொன்றை பெற்றால் அதை ஆய்வுக்கு உட்படுத்திய பின்னர் சரியாக இருப்பின் ஏற்றுக்கொள்ளவும் பிழையாக இருப்பின் அப்புறப்படுத்தவும் என்பதே அவர் எமக்கு முன்வைக்கின்ற தகவல் ஆகும். எனவே ஹதீஸ்களை அறிஞ்ஞர்கள் கடைப்பிடிக்கும் வழிமுறையையே இமாமவர்களும் கடைப்பிடித்துள்ளார்கள். ஆகவே இமாமவர்கள் தனது நூல் முழுமையாக சரியான செய்திகளை மாத்திரம் கொண்டுள்ளது. என்று சொல்லவில்லை. மாறாகதான் உங்களுக்கு செய்திகளை கொண்டுவந்து சேர்க்கும் பணியை செய்துள்ளேன். அச் செய்திகளை உறுதிப்படுத்துவது எமது கடமையென்று கூறுகிறார்கள்.

இவ்வடிப்பயில் இமாம் தபரிஅவர்கள் தனதுவரலாற்று நூலில் லூத் இப்னு யஹ்யா என்ற நபர் வழியாக (சுட்டுப்பெயர்: அபுமிஹ்னப்) கிட்டத்தட்ட 587 அறிவிப்புக்களை பதிந்துள்ளான். இவ்வனைத்து அறிவிப்புக்களும் நபி (ஸல்) அவர்கள் மரணத்திலிருந்துகலீபா யஸீத் அவர்களுடைய ஆட்சிக்காலம் வரை வர்ணிப்பவையாக அமைந்துள்ளன. இக்காலப் பகுதிக்கிடையில் இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பாகவே நாமும் இந்நூலில் பேசப்போகின்றோம். அதற்குமுன் மேற்குறிப்பிட்ட அபுமிஹ்னப் என்பவன் மூலமாக என்னன்ன நிகழ்வுகள் பற்றிய செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன என்பதைப்பார்க்கலாம்.

01- ஸகீபாபனீ ஸாஇதா.

02- உதுமான்(ﷺ)அவர்களுடைய ஆட்சிப்பொறுப்பேற்பு பற்றிய ஆலோசனை.

03- உதமான்(ﷺ)அவர்களுக்கெதிராக கவாரிஜ்கள் கிழர்ச்சி செய்தமைக்கான காரணங்கள்.

04- உதுமான்(ﷺ)அவர்களின் கொலை.

05- அலி(ﷺ)அவர்களுடைய ஆட்சிக்காலம்.

06- ஜமல் யுத்தம்.

07- ஸிபின் யுத்தம்.

08- அலி,முஆவியா﴿ﷺ﴾அவர்களிருவருக்கிடையில் இடம்பெற்ற தீர்ப்பு பற்றிய செய்தி.

09- நஹ்ரபான் யுத்தம்.

10- முஆவியா﴿ﷺ﴾அவர்களுடைய ஆட்சிக்காலம்.

11- கர்பலா நிகழ்வு.

இவ்விடயங்கள் ஒவ்வொன்றும் தொடர்பாக அபுமிஹ்னபுடைய அறிவிப்புக்களிருப்பதைக் காணலாம். எனினும் அஹ்லுல் பித்ஆக்கள் இவனது அறிவிப்புக்களேயே தங்களுக்கான அதாரங்களாக கொள்கின்றனர். இந்த அபுமிஹ்னப் என்பவனைப் பொறுத்தவரை உண்மையில் நடந்த ஒரு சம்பவத்தை சொல்லுகின்றபோதும் சில விடயங்களை அதிகரித்தும் சிலவற்றைக் குறைத்தும் அறிவிக்கின்ற தன்மையைக் கொண்டவனாவான். இவன் தொடர்பாக இஸ்லாமிய அறிஞர்கள் பலர் விமர்சித்தள்ளனர். இவன் போன்று இன்னும் சில பெயர் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய நபர்களுடைய செய்திகளும் தாரீஹுத் தபரியில் பதியப்பட்டுள்ளன. இவர்கள் தொடர்பாகவும் அறிஞர்கள் பலவித்தில் விமர்சித்துள்ளனர்.

01- அல் வாகிதி.

02- ஸையப் இப்னு உமர்.

03- கல்பி.

# வரலாற்றை கலங்கப் படுத்துவதற்கு சில அறிவிப்பாளர்கள் மேற்கொள்ளும் வழி முறைகள்

**01-** முரண்பாடான மற்றும் பொய்யான செய்திகளை அறிவித்தல்.

**உதாரணம்:-**

ஆயிஷா (ரழி) அவர்களிடம் அலி ﷺ அவர்களின் மரணச்செய்தி வந்த போது சந்தோஷத்தில் சிரம் பணிந்தார்கள். இதுவொரு பொய்யான செய்தியாகும்.(1)

**02-** திரிபு படுத்தும் நோக்கில் வரலாற்றில் சிலவற்றை அதிகரித்தல் அல்லது குறைத்தல்.

**உதாரணம்:-**

சகீபா பனீ சாயிதா சம்பவத்தில் அபூ பக்கர் ﴿ﷺ﴾ அவர்கள் ஆட்சியை பொறுப்பேற்பது தொடர்பான அறிவிப்புக்களில் சில பொய்யான செய்திகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

**03-** நடந்தேரிய நிகழ்வுகளுக்கு தவறான விளக்கங்கள் வழங்குதல்.

**04-** சில தனி நபர்கள் பற்றி குறைகளையும் தவறுகளையும் வெளிப்படுத்துதல்.

**05-** வரலாற்றுச் சம்பவங்களை உறுதிப்படுத்துவதற்காக கவிதைகளை புனைதல்.

**06-** இட்டுக்கட்டப்பட்ட கடிதங்களையும் நூல்களையும் மக்கள் மத்தியில் நல்ல அபிப்ராயங்கள் பெற்றவர்களின் பெயரில் இணைத்தல்.

01-அபு பர்ஜ் அல் அஸ்பஹானி தனது அல் அஙானி என்ற நூலில் குறிப்பிடுகிறார்.இவர் ஷீயாப் பிரிவைச் சேர்ந்தவராவார்.

**உதாரணம்:-**

உதுமான் (ﷺ) அவர்களுக்கு எதிராக ஒரு கடிதம் ஆயிஷா மற்றும் ஸுபைர் ﷺ அவர்களின் பெயரில் இணைக்கப்பட்டது.

நஹ்ஜுல் பலாஹா என்ற நூல் அலி ﷺ அவர்களின் பெயரில் இணைக்கப்பட்டது.

## அஹ்லுஸ்ஸுன்னாக்களிடத்தில் செய்திகளை உறுதிப்படுத்துதல் என்ற வழி முறை எப்போது உருவானது?

இப்னு ஸீரின் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: "ஆரம்ப காலத்தில் அவர்கள் (ஸஹாபாக்கள்) அறிவவிப்பாளர்கள் பற்றி கேட்கவில்லை. எனினும் குழப்பம் (உதுமான் ﷺ யின் கொலை) நிகழ்ந்தன் பிறகு அறிவிப்பாளர்கள் பற்றி கேட்டார்கள். அதன் பிறகு செய்திகளை உறுதிப்படுத்தி கொண்டார்கள்.

## செய்திகளை உறுதிப்படுத்துவதன் அவசியம்

அல்லாஹ் அல் குர்ஆனில் இதன் அவசியம் பற்றி ஒரு அடிப்படையை நிருவுகிறான்:

''ஈமான் கொண்டவர்களே உங்களிடம் ஒரு கெட்டவன் ஒரு செய்தியை கொண்டு வந்தால் அதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்'' ( ஹுஜராத் : வசனம் (06) )

## நபிகள் நாயகம் அவர்கள் பற்றிய சுருக்க குறிப்பு

கி.பி 571 ரபீஉல் அவ்வல் 12ஆம் நாள் நபிகள் நாயகம் அவர்கள் பிறந்தார்கள். உலகமக்களுக்கு நேர்வழியாக அல்லாஹ் அவர்களை அருளினான்.

பிறக்கும் போதே தந்தையை இழந்து பிறந்தார்கள். 6ஆம் வயதில் தாயை இழந்தார்கள். தனது பாட்டனின் பொறுப்பிலும் பிறகு தன் சிறிய தந்தையின் பொருப்பிலும் வளர்ந்தார்கள்.

40வது வயதில் நபிப்பட்டம் வழங்கப்பட்டார்கள். மக்காவில் 13 ஆண்டுகள் இஸ்லாத்தின் பால் மக்களை அழைத்தார்கள், பிறகு மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்றார்கள். அங்கு இஸ்லாமிய ஆட்சியை உருவாக்கினார்கள். தனது வாழ்நாளில் 3 உம்ராக்களையும் ஹிஜ்ரி 10ல் தனது முதலாவதும் இறுதியுமான ஹஜ் கிரியையை நிறைவேற்றினார்கள்.

இக்காலப்பகுதியில் தான் இவ்வுலகை விட்டு பிரிய வேண்டிய தருணம் நெருங்கிவிட்டது என ஸஹாபாக்களுக்கு பல சந்தர்ப்பங்களில் சூசகமாக அறிவித்ததுண்டு.

(இறுதி ஹஜ்ஜின் போது ஸஹாபாக்களுக்கு கூறினார்கள்: ‘‘என்னிடம் இருந்து உங்களின் கிரியையை கற்றுக் கொள்ளுங்கள் இதற்கு பிறகு நான் உங்களோடு ஹஜ்ஜை நிறைவேற்றுவேனா! என தெரியாது’’ இச்சந்தர்ப்பத்தில் ஹஜ்ஜை முடித்து விட்டு அவரவர் அவர்களின் ஊர்களுக்கு திரும்பிச் சென்றனர் நபிகள் நாயகமும் மதீனாவில் இருந்து வந்த ஸஹாபாக்களும் மதீனாவிற்கு திரும்பினார்கள்.

இங்கு குறிப்பிட வேண்டிய ஒரு விடயம் என்னவெனில்: நபி (ஸல்) அவர்கள் ஹஜ்ஜிற்காக செல்லும் சந்தர்ப்பத்தில் போரிற்காக யமன் பகுதிக்கு காலித் ﷺ அவர்களின் தலைமையில் ஒரு படையை அனுப்பி வைக்கிறார்கள் இப்படை அப்போரில் வெற்றி பெருகிறது, இச்செய்தி நபியவர்களுக்கு கிடைத்தவுடன் அலி﴾ﷺ﴿அவர்களை அங்கு ஸகாத் மற்றும் அஹ்லுல் பைத்தினருக்கான பங்கை பெற்றுக் கொள்வதற்காக அனுப்புகிறார்கள். அங்கு அவர் சென்ற சந்தர்ப்பத்தில் அவருக்கும் ஏனைய ஸஹாபாக்களுக்கும் மத்தியில் ஒரு மனக்கசப்பு ஏற்படுகிறது. அலி﴾ﷺ﴿பற்றி நபியவர்களிடம் முறைப்பாடு செய்வதற்காக புரைதா﴾ﷺ﴿அவர்கள் நபிகள் நாயகம் அரபா மைதானத்தில் நிற்கும் போது வருகிறார்கள், வந்து முறையிடுகிறார்கள் இதைக்கேட்ட நபியவர்களின் முகம் சிவக்கன்றது கோபப்படுகிறார்கள் நீர் அலியை வெறுக்ககினறாயா? என புரைதா﴾ﷺ﴿அவர்களிடம் கேட்கிறார்கள் அதற்கவர் ஆம் என்கின்றார். அலியை வெறுக்காதே அவருக்கு அவர் எடுத்த பங்கை விட அதிகம் எடுக்க உரிமை உண்டு என நபிகள் நாயகம் புரைதா (ரழி) க்கு சொல்லி அனுப்புகிறார்கள்.

மீண்டும், மக்காவிலிருந்து மதீனா செல்லும் வழியில் ஓய்வு எடுப்பதற்காக கதீர் கும் ‘‘غدير خم’’ எனும் இடத்தில் தரிக்கிறார்கள், இவ்விடத்தில் அலி﴾ﷺ﴿பற்றிய செய்தி ஒன்றை அனைத்து ஸஹாபாக்களுக்கு (மதீனா வாசிகளுக்கு) முன்னிலையில் சொல்கிறார்கள்.

இச்செய்தியை ஷீஆக்கள் தமது ஆதாரங்களில் ஒன்றாக எடுத்து வைக்கிறார்கள்,எது எவ்வாராக இருந்தாலும் சொல்லப்பட்ட செய்தியை சரியாக விளங்கிக் கொள்வதில் ஷீஆக்கள் தவறுவிட்டு விட்டார்கள் என்றே நாம் கூறுகிறோம்.

நபிகள் நாயகம் கூறிய செய்தி இதோ: ‘‘ஸைத் பின் அர்க்கம் رضي الله عنه அறிவிக்கிறார்கள் “மக்காவுக்கும் மதினாவுக்கும் இடையில் உள்ள நீருள்ள கும் என்ற இடத்தில் நபியவர்கள் உரையாற்ற எழுந்தார்கள், அதில் கூறினார்கள். “மக்களே நான் ஒரு மனிதனாவேன் இறைவனின் தூதுவர் என் உயிரைக் கைப்பற்ற வந்தால் நான் அவருக்கு பதிலளிப்பேன். ஆகவே நான் உங்களிடம் இரண்டு விடயங்களை விட்டுச் செல்கிறேன், அதில் **முதலாவது** அல்லாஹ்வுடைய வேதமாகும், அதில் நேர் வழியும் ஒளியும் உள்ளது. அதை எடுத்துக் கொள்ளுங்கள்’’ பிறகு சொன்னார்கள்

“**இரண்டாவது** எனது குடும்பத்தினாகும், அவர்கள் விடயத்தின் அல்லாஹ்வை உங்களுக்கு நான் ஞாபகம் ஊட்டுகிறேன் என்று மூன்று முறை கூறினார்கள்)”

ஹுசைன் இப்னு ஸப்ரா என்பவர் இதன் அறிவிப்பாளரான ஸையித்(ﷺ)அவர்களிடம் கேட்கிரார்கள்: நபிகள் நாயகத்தின் மனைவி மார்கள் அஹ்லுல் பைத்தில் அடங்குவார்களா? அதற்கு ஸையித்(ﷺ)சொன்னார்கள்: ஆம். (ஸஹீஹுல் முஸ்லிம்: 2408)

அந்த செய்தியில் மேலதிகமாக வந்துள்ளது “நான் யாருடைய நேசராக இருக்கின்றேனோ அலியும் அவரது நேசராவார். (ஜாமிஉத் திர்மிதி : 3713, முஸ்னத் அஹ்மத் : 5.\347)

இந்த செய்தியினை ஷீயாக்கள் ஆதாரமாகக் கொண்டு அலி(ﷺ)அவர்கள் தான் நபிகள் நாயகத்திற்கு பிறகு இஸ்லாமிய ஆட்சியின் கலீபா என்கின்றனர். எனினும் இந்த செய்தியில் வந்துள்ள “மவ்லா-مولى” என்கின்ற பதம் நேசர் என்பதையே குறிக்கும். மாறாக தலைவர் அல்லது கலீபா என்பதையோ குறிக்காது.

**இந்த செய்தியை நபி (ﷺ) அவர்கள் கூறியதற்கான காரணம்:**

01- நபிகள் நாயகம் அவர்கள் அலி(ﷺ)அவர்களை எமனுக்கு யுத்தப் பொருட்களில் (கனீமத்) ஐந்தில் ஒரு பகுதியை எடுத்து வரும்படி அனுப்பினார்கள். அங்கு சென்ற அவர்கள் ஐந்திலொரு பகுதியை பெற்றுக்கொண்ட பிறகு அதில் ஒரு அடிமை பெண்னை தேர்ந்தெடுத்து அவளை சொந்தமாக்கி அவளோடு உறவு கொள்கிறார்கள். இதை கேள்விப்பட்ட புரைதா(ﷺ)அவர்கள், நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று நபிகள் நாயகத்திடம் முறைப்பாடு செய்ய வருகிறார்கள்.

இந்த முறைப்பாட்டை கருத்திற் கொண்டு மக்காவில் சொன்னதற்கு மேலதிக விளக்கமாக இவ்விடத்தில் வைத்து சொல்லிருக்கலாம்.

02- எமன் யுத்தத்தில் கனீமத் பொருட்களை யுத்தத்தில் பங்கு பற்றிய ஸஹாபாக்களுக்கு பிரித்திக் கொடுப்பதை அலி (ﷺ) அவர்கள் பிற்படுத்துமாரு செல்லிருந்தார்கள். எனினும் அவர்களுக்கு தலைவராக இருந்தவர் ஒருவருக்கு ஒரு ஒட்டகம் மற்றும் ஒரு அணிகளன் என்ற அடிப்படையில் பிரித்துக் கொடுக்கிறார். இதை கண்ணுற்ற அலி (ﷺ) அவர்களுக்கும் கோபம் ஏற்பட்டதால் கொடுக்கப்பட்ட அணிகளன்களை மீளப் பெருகிறார்கள். இந்த கடும் போக்கை அபூ ஸஈத் (ﷺ) அவர்கள் நபிகள் நாயகத்திடம் முறைப்படுகிறார்கள்.

ஆகவே இந்த இரண்டு முறைப்பாடுகளை கவனத்திற் கொண்டு ஹஜ் கிரிகை முடிந்து மதீனா செல்லும் வழியில் அவர்களிடமிருந்த கோபதாபங்களை களையும் வகையில் இந்த செய்தியை சொல்லியிருக்கலாம்.

உண்மையில் ஷீயாக்கள் சொல்வது போன்று மேற்குறிப்பிட்ட செய்தி அலி(ﷺ)அவர்களின் கிலாபத்தை சொல்வதாகயிருக்குமானால் அது

சொல்வதற்கு பொருத்தமான இடம் அரபா மைதானமேயாகும். ஏனெனில் அவ்விடத்திலேயே அனைத்து முஸ்லிம்களும் சமூகமளித்திருந்தார்கள். ஹஜ் கடமை நிறைவேற்றியவுடன் அவரவர் அவர்களின் ஊர்களுக்கு சென்று விட்டார்கள்.

நபி﴾ﷺ﴿அவர்கள் அச்செய்தியை மதீனாவில் இருந்து ஸஹாபாக்களுக்கு மாத்திரம் சொன்ன காரணம், அலி﴾﵁﴿அவர்கள் பற்றி முறைப்பாடு செய்த ஸஹாபாக்கள் அனைவரும் மதீனாவைச் சேர்ந்தவர்களேயாகும். ஆகவே அந்த செய்தியை நபி (ஸல்) அவர்கள் கூறியதற்கான காரணம் அலி﴾﵁﴿அவர்களின் மீது ஏனைய ஸஹாபாக்களுக்கு இருந்த கோபத்தை போக்குவதற்கேயாகும். மாறாக அவர்களின் கிலாபத்தை குறிப்பதற்காக அல்ல.

இச்சப்பவத்துக்கு பிறகு நபிகள் நாயகம் ஸஹாபாக்களுடன் மதீனவை வந்தடைகிறார்கள். பிறகு மதீனா வாசிகளுக்கு ஒரு உபதேஷம் செய்கிறார்கள். அதில் அபூ பக்கர், உமர், உதுமான்﴾﵁﴿போன்ற ஸஹாபாக்களின் பெயரைக் குறிப்பிட்டு அவர்கள் விடயத்தில் மக்களுக்கு உபதேஷம் செய்கிறார்கள். சிறுது நாட்களுக்கு பிறகு மைமூனா(ؓ) அவர்களின் வீட்டில் இருந்த நிலையில் நோய் வாய்ப்படுகிறார்கள். பிறகு அனைத்து மனைவி மார்களின் அனுமதியுடன் ஆயிஷா(ؓ)அவர்களின் வீட்டில் தங்க வைக்கப் படுகிறார்கள். இச்சந்தர்ப்பத்தில் ஒரு சம்பவம் நிகழ்கிறது, அது தொடர்பில் ஷீயாக்களால் உமர்﴾﵁﴿அவர்கள் அலி﴾﵁﴿அவர்களுக்கு நபிகள் நாயகத்தின் மூலமாக கிடைக்கவிருந்த ஆட்சித் தலைவருக்கான நியமனத்தை மோஷடி செய்து விட்டார். என குற்றம் சாட்டப்படுகிறார்கள்.

வரலாற்று நூற்களில் நாம் தேடிப்பார்த்தால் “வியாழக்கிழமை சோதனை - رزية الخميس” என்ற ஒரு தலைப்பில் காணலாம். அதில் சொல்லப்படுவதாவது நபியவர்கள் தான் மரணிப்பதற்கு ஐந்து நாட்களுக்கு முன் அதாவது வியாழக்கிழமையன்று தன்னைச் சூழவுள்ள ஸஹாபாக்களுக்கு சொல்கிறார்கள்: “என்னிடம் ஒரு ஏட்டைக் கொண்டு வாருங்கள் எனக்குப்பின் நீங்கள் வழி தவறாமல் இருப்பதற்காக ஒன்றை அதில் எழுதித் தருகின்றேன்” என்றார்கள். இதைக் கேட்ட உமர்﴾﵁﴿அவர்கள் எங்களுக்கு அல்லாஹவுடைய வேதமான அல் குர்ஆன் போதுமானது என்று என்றார்கள்.

(அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரழி))

(ஸஹீஹுல் புஹாரி : 114, ஸஹீஹுல் முஸ்லிம் : 1637)

இந்த செய்தியை வைத்துக் கொண்டு ஷீயாக்கள், நபியவர்கள் எழுதுவதற்கு எத்தனித்த செய்தி அலி﴾﵁﴿அவர்களின் ஆட்சிப்பொறுப்பேயாகும். இதையறிந்த உமர்﴾﵁﴿அவர்கள் அதை திட்டமிட்டு எழுத விடாமல் தடுத்து விட்டார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டை முன் வைக்கிறார்கள். (இது தொடர்பான விரிவான செய்தி இறுதிப் பகுதியில் காணலாம்)

நபிகள் நாயகம் நோய்வாய்ப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அப்பாஸ்(ரழி)அவர்கள், அலி (ரழி)அவர்களிடம் கூறுகிறார்கள்: "நிச்சயமாக நான் அப்துல் முத்தலிபின் குடும்பத்தாரின் மரண நிலையை நான் அறிவேன். ஆகவே நபி (ஸல்) அவர்களிடம் சென்று அவர்களுக்குப் பிறகு இவ்வாட்சிப் பொறுப்பு யாருக்குறியது என்று கேட்டு விட்டு வா" என்கிறார்கள். அதற்கு அலி(ரழி)அவர்கள் "நிச்சயமாக நான் அது பற்றி அவர்களிடம் கேட்கமாட்டேன். ஒரு வேளை நபி(ஸல்)அவர்கள் எமக்கு அதை தடுத்து விட்டால் பிறகு மக்கள் அதை எமக்கு தரமாட்டார்கள்" என்று கூறினார்கள்.

பிறகு நபி(ஸல்)அவர்களுக்கு நோய் கடுமையாகிறது, அபூ பக்கர்(ரழி)அவர்களை மக்களுக்கு தொழுகை நடாத்துமாறு ஏவுகிறார்கள். திங்கள் கிழமையன்று ஸுபஹ் தொழுகை நடாத்தி விட்டு அபூ பக்கர(ரழி)அவர்கள் சுன்ஹ் (இது மதீனாவின் கிழக்குப் பகுதியில் உள்ளது, இது நபியவர்களின் வீட்டிலிருந்து ஒரு மைல் தூரத்தில் அமைந்துள்ளது)

என்ற இடத்திலுள்ள தன் மனைவியின் வீட்டுக்கு சென்று விடுகிறார்கள். அச்சந்தர்ப்பம் பார்த்து நபிகள் நாயத்தின் உயிரும் கைப்பற்றப்படுகிறது. இச்செய்தியை அபூ பக்கர்(ரழி) அவர்களுக்கு எத்தி வைப்பதற்காக ஸாலிம் இப்னு உபைத் என்ற நபித் தோழர் செல்கிறார். செய்தி கேள்விப்பட்டவுடன், அபூ பக்கர்(ரழி)அவர்கள் ஆயிஷா(ரழி)அவர்களின் வீட்டிற்கு வருகிறார்கள்.

நபியவர்களின் மீது போற்றப்பட்ட முகத் திறையை நீக்கி அவர்களை முத்தமிட்டு விட்டு "நீர் உயிரோடு உள்ளபோது வாசைனை வீசினீர், மரணித்த போதும் வாசனை வீசுகிறீர் என்றார்கள். பிறகு உமர்(ரழி)அவர்களின் நபியவர்கள் மரணிக்கவில்லை என்ற பிடிவாதத்தை அபூ பக்கர்(ரழி)அவர்கள் தளர்த்தினார்கள். அவ்வேளையில் ஆல இம்ரான்: 114ம் வசனத்தை மக்கள் முன் ஓதிக் காட்டுகிறார்கள்"

## சகீபா பனீ ஸாயிதா

இவ்வேளையில் அலி, அப்பாஸ், பழ்ல்(ரழி)போன்ற ஸஹாபாக்கள் நபியவர்களைக் குழிப்பாட்டி கபனிடும்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். சில அன்ஸாரித் தோழர்கள் ஸஃத் இப்னு உபாதா(ரழி)தலைமையில் சகீபா பனீ ஸாயிதா என்ற இடத்தில் ஒன்று கூடி இருந்தார்கள். இச் சம்பவம் தொடர்பாக இரு வேறுபட்ட அறிவிப்புக்கள பதியப்பட்டுள்ளன. அதில் ஒன்று நிச்சயமாக பொய்யானதும் ஆதாரமில்லாத அதிகரிப்பை கொண்டதுமாகும். நாம் ஏளவே குறிப்பிட்டது போன்று அபூ மிஹ்னப் என்ற நபரின் அறிவிப்பு இமாம் தபரியின் வரலாற்று நூலில் பதியப்பட்டுள்டளது. இரண்டாவது அறிவிப்பு புகாரியில் சரியான அறிவிப்பாக இடம் பெற்றுள்ளது.

**01- அபூ மிஹ்னப் வழியாக அறிவிக்கப்பட்ட இமாம் தபரியின் அறிவிப்பு:**

நபியவர்களின் உயிர் கைப்பற்றப்பட்ட போது அன்ஸாரிகள் சகீபா பனீ ஸாஇதாவில் ஒன்று கூடி கூறினார்கள்: "இவ்வாட்சிப்பொறுப்பை முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்குப்பிறகு ஸஃத் இப்னு உபாதா(ரழி)அவர்களிடம் ஒப்படைப்போம். அவர்களில் ஒருவர் எழுந்து கூறினார்:

“உங்களுடைய வால்களால் அரபு தேசம் உங்களுக்கு பணிந்தது. ரஸுலுல்லாஹ் உங்களை பொருந்திற் கொண்ட நிலையில் மரணித்தார்கள். ஆகவே இவ்விடயத்தை (ஆட்சியை) மற்றவர்களுக்கு கொடுப்பதை விட நீங்களே தக்க வைத்துக் கொள்ளுங்கள்”

இக்கருத்திற்கு அனைவரும் உடன் பட்டார்கள். அவர்களில் ஒருவர் கூறினார்: “முஹாஜிர்களான குரைஷிகள் இதை மறுத்தால் எங்களில் ஒரு தலைவர் உங்களில் ஒருதலைவர் இருக்கட்டும் என்று கூறுவோம் என்றார்”

அதற்கு ஸஃத் இப்னு உபாதா(ﷺ)கூறினார்: “இதுவே முதலாவது பலவீனமாகும்” பிறகு இச் செய்தி உமர்(ﷺ)அவர்களுக்கு எட்டியது. அவர் அபூ பக்கர்(ﷺ)அவர்களிடம் வந்து “எங்களுடைய சகோதரர்களான அன்ஸாரிகள் ஒன்று கூடி இவ்வாறு கூறுகிறார்கள், வாருங்கள் நாம் அவர்களிடம் செல்வோம்” என்றார்கள். உடனே உமர், அபூ பக்கர்(ﷺ) ஆகிய இருவரும் வெளியேரிச் சென்றார்கள். வழியில் அபூ உபைதா(ﷺ)அவர்களை சந்தித்து தங்களோடு அழைத்துக் கொண்டு அன்ஸாரிகளிடம் சென்றார்கள். உமர்(ﷺ) அவர்கள் சொல்கிறார்கள்: “நான் எனது மனதுக்குள் அவ்விடத்தில் ஒன்றை பேசுவதற்கு ஆயத்தமானேன், பேச ஆரம்பித்த போது அபூபக்கர்(ﷺ)அவர்கள் என்னை தடுத்தார்கள்” பிறகு எம்மில் சிறந்தவரான அபூ பக்கர் (ﷺ)அவர்கள் பேச ஆரம்பித்தார்கள்: அவரின் பேச்சில் முஹாஜிர்கள்தான் ஆட்சிக்குத் தகுதியானவர்கள் என்று கூறினார்.

பிறகு, அன்ஸாரிகள் சார்பாக ஹுபாப் இப்னு முன்திர்(ﷺ)எழுந்து: “அன்ஸாரிகளே! இவ்வாட்சிப்பொறுப்பை நீங்களே சொந்தமாக்கிக் கொள்ளுங்கள், மனிதர்கள் உங்கள் பொறுப்பிலேயே இருக்க வேண்டும். உங்களுக்கு முரணாக எவருமே செயற்பட முடியாது. உங்கள் கருத்திற்கு முரணாக எவருமே கருத்து சொல்ல முடியாது. நீங்களே கண்ணியமுடையவர்கள்.................. எவராவது இதை மறுத்தால் அவர்களை இவ் ஊரை விட்டு அப்புரப்படுத்துங்கள்” என்று கூறினார்.

இவ்வேளையில் உமர் மற்றும் அபூ உபைதா(ﷺ)அவர்களிருவரும் முன்வந்து அபூ பக்கர்(ﷺ)யிடம் உங்களது கையை நீட்டுங்கள் என்று கூறி அவருக்கு ஆட்சியாளராக பைஅத் செய்தார்கள். இவ்வேளையில் உஸைத் இப்னு ஹுழைர்(ﷺ) கூறினார்: “அல்லாஹ்வின் மீது ஆனையாக ஹஸ்ரஜ் கூட்டத்தினர் இப்பொறுப்பை ஏற்றிருநதால் உங்கள் மீது ஆட்சி செய்த பெருமை அவர்களைச் சென்றிருக்கும். (இவர் ஹஸ்ரஜிகள் மீது பொறாமையுடையவர் என்று இவ்வறிவிப்பு கூறுகிறது) இதற்ககு, ஸஃத் இப்னு உபாதா கூறினார்:

“அல்லாஹ் மீது ஆணையாக இவ்விடத்தை விட்டு எழுந்து செல்ல சக்தியிருந்தால் நான் சென்றிருப்பேன். என்னை இவ்விடத்திலிருந்து தூக்கிச் செல்லுங்கள் என்றார். அங்கிருந்தவர்கள் அவரை அவரது வீட்டிற்குள் தூக்கிச் சென்றனர். சில நாட்களுக்குப் பிறகு சொன்னார்கள்:

“அல்லாஹ் மீது ஆனையாக எனது அம்புகளால் உங்களை கொய்வேன், எனது கையால் எத்தனை வால்கள் ஏந்த ஏழுமோ அத்தனை வால்களால் உங்களோடு சண்டை இடுவேன், எனது கூட்டத்தில் எனக்கு யார்

கட்டுப்பட்டார்களோ! அவர்களைக் கொண்டும் எனது குடும்பத்தைக் கொண்டும் உங்களோடு போர் புரிவேன்”

இதற்குப் பிறகு ஸ.்.த்(ﷺ)அவர்களோடு சேர்ந்து தொழுவதுமில்லை,ஹஜ் செய்வதுமில்லை. இவ்வாறே அபூ பக்கர் (ﷺ)அவர்கள் மரணிக்கும் வரை இருந்தார்.(1)

(தாரீஹுத் தபரி: 2:455)

சகீபா பனீ ஸாயிதா தொடர்பாக அபூ மிஹ்னபின் இடைச் செருகள்களும் பொய்களும் அடங்கிய ஸஹாபாக்கள் விடயத்தில் அவர்களுயை கண்ணியத்திற்கு பங்கம் விளைவக்கும் ஒரு நம்பகமில்லாத அறிவிப்பாகும்.

இந்த நிகழ்வு தொடர்பான சரியான தகவலை இமாம் புகாரி அவர்கள் தனது நூலில் குறிப்பிடுகிறார். அதாவது:

ஆயிஷா(ஒ)அவர்கள் அறிவிக்கிறார்கள்: “நபிகள் நாயகம் மரணித்த போது அன்ஸாரித் தோழர்கள் ஸ.்.த் இப்னு உபாதா(ﷺ)தலைமையிலே ஒன்று கூடி எங்களில் ஒரு தலைவர் உங்களில் (முஹாஜிர்கள்) உங்களில் ஒரு தலைவர் என ஆலோசனை செய்தனர், உடனே அபூ பக்கர், உமர், அபூ உபைதா(ﷺ)ஆகிய மூவரும் அவர்களிடம் சென்றனர், உமர்(ﷺ)ஏதோ சொல்லுவதற்கு ஆரம்பிக்க அபூ பக்கர்(ﷺ)அவர்கள் மௌனமாக இருக்கும்படி சொன்னார், பிறகு அபூ பக்கர்(ﷺ)அவர்கள் பேச ஆரம்பித்தார்கள்:

அவரின் உரையில் முஹாஜிர்களான நாங்கள் தலைவர்கள் அன்ஸாரிகளான நீங்கள் அமைச்சர்களாகும் என்று கூறினார்கள், உடனே ஹுபாப் இப்னு முன்திர் கூறினார்:

“அல்லாஹ்வின் மீது ஆணையாக அவ்வாறு இருக்க முடியாது, எங்களில் ஒரு தலைவர் உங்களில் ஒரு தலைவர் இருக்க வேண்டும், அதற்கு அபூ பக்கர்(ﷺ)அவர்கள் “அவ்வாரில்லை நாங்களே தலைவர்கள் நீங்கள் அமைச்சர்களாகும்” என்றார்கள், இதோ உமரும் அபூ உபைதா(ﷺ)யும் இருக்கிறாரகள். இவர்களிருவரில் ஒருவருக்கு உடன்படிக்கை செய்யுங்கள் என்றார்.

இதற்கு உமர்(ﷺ)அவர்கள்:

“அபு பக்கரே! நாம் உமக்கே உடன் படிக்கை செய்கிறோம், நீரே எங்களின் தலைவரும் எங்களில் சிறந்தவரும் ஆவீர், பிறகு உமர்(ﷺ)அவர்கள் அபு பக்கரின் கையை பிடித்து ஆட்சிக்காக உடன்படிக்கை செய்கிறார்கள், அங்கிருந்த அனைவரும் உடன்படிக்கை செய்தனர்” (ஸஹீஹுல் புகாரி: 3667-3668)

இதுவே இமாம் புகாரியின் நம்பத்தகுந்த அறிவிப்பாகும். உண்மையில் அவ்விடத்தில் நடந்த நிகழ்வு இதுவே ஆகும், அப்படியானால் மேற்குறிப்பிடப்பட்ட முதலாவது அறிவிப்பில் சொல்லப்பட்ட (ஹுபாப் இப்னு முன்திர் முஹாஜிர்களை இழிவாக கருதியது, உஸைத் இப்னு ஹுழைர்

ஸ.்.த் இப்னு உபாதாவின் மீது பொறாமை கொண்டது, ஸ.்.த் இப்னு உபாதா அபு பக்கர்(ﷺ)அவர்களுக்கு உடன் படிக்கை செய்தவர்களோடு போர் செய்வேன், மேலும் அவர்களோடு சேர்ந்து தொழாமலிருந்தது) அனைத்துமே அபு மிஹ்னபுடைய கையூட்டல்களே ஆகும்.

இந்நிகழ்வை படித்துப்பார்த்தால் சுமார் 30 நிமிடங்கள் கூட சென்றிருக்காது, ஆனால் பொய்யான செய்திகள் கலக்கப்பட்டதாகும், அதிக நாளிகைகள் சென்றது போன்று விளங்குகிறது, இச்சம்வம் தொடர்பாக இமாம் அஹ்மத் அவர்கள் ஒரு செய்தியை பதிகிறார்கள் அதாவது அபூ பக்கர்(ﷺ)அவர்கள் கூறினார்கள்:

நபிகள் நாயகம் கூறியதாக ‘‘மக்கள் அனைவரும் ஒரு பள்ளத்தாக்கால் சென்று அன்ஸாரிகள் இன்னொரு பள்ளத்தாக்கால் சென்றால், நான் அன்ஸாரிகளின் பள்ளத்தாக்கிலேயே செல்வேன்’’ மேலும் அபூ பக்கர்(ﷺ)அவர்கள் சொன்னார்கள்: ஸ.்.தே! உமக்குத்தெரியாதா! நபிகள் நாயகம் பின்வருமாரு சொல்லும் போது நீரும் அவ்விடத்தில் அமர்ந்திருந்தாயே! ‘‘குரைஷிகள்தான் இவ்வாட்சிக்குப் பொறுப்பானவர்களாகும், அவர்களில் நல்லவர் நல்லவரை பின்துயர வேண்டும், கெட்டவர் கெட்டவரை பின்துயர வேண்டும்’’ இதற்கு ஸ.்.த்(ﷺ)கூறினார்: “உண்மை செல்லிவிட்டீர்கள், நீங்களே! தலைவர்கள் நாங்கள் அமைச்சர்கள்” என்று கூறினார்.

(முஸ்னத் அஹ்மத்: 1.்.18.)

## அபூ பக்கர் (ﷺ) அவர்களும் விமர்சனங்களும்

இப்பகுதியில் அபூபக்கர்(ﷺ)அவர்கள் தொடர்பாக ஷீயாக்களால் சொல்லப்படும் சில விமர்சனங்கள் பதியப்பட்டுள்ள. சிலவேளை அந்த விமர்சனங்களுக்கு வரலாற்று ஆதாரங்களோ அவ்வாறு நடந்ததற்குறிய சான்றுகளோ இருக்காது. அவைகள் அவர்களுடைய கட்பனைகளாகவே இருக்கும். சிலவேளை அது தொடர்பான வரலாற்று நிகழ்வுகள் இடம் பெற்றிருக்கும், ஆனால் அவைகளை அவர்கள் ஒரு பக்கச்சார்பாக சிந்திப்பதனால் அவர் மீதான குற்றங்களாகவே அவைகளைக் கருதுகின்றன. அவைகள் தொடர்பான விளக்கங்கள் இங்கு பதியப்பட்டுள்ளன.

### 01-அபூ பக்கர் (ﷺ)அவர்கள் பாத்திமா(ழ)அவர்களின் வாரிசுரிமைச்சொத்தை வழங்காமல் அநீதி இழைத்தார்களா!..

நபிகள் நாயகம் மரணித்து சில நாட்களுக்குப் பிறகு அவர்களின் மனைவிமார்கள் ஒன்று கூடி நபிகள் நாயகம் அவர்கள் விட்டுச்சென்ற சொத்துக்களை ஆட்சித்தலைவர் அபூ பக்கர்(ﷺ)யிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம் என்று ஆலோசனை தீட்டுகிறார்கள். இதைக்கேள்விப்பட்ட ஆயிஷா(ழ)அவர்கள், அவர்களிடம் வந்து நபிகள் நாயத்திடம் தாம் செவியுற்றதாக, பின்வரும் செய்தியை சொல்கிறார்கள்: ‘‘நாங்கள் நபிமார்களாவர். நாங்கள் யாருக்கும் அனந்தரமாகமாட்டோம். நாங்கள் விட்டுச்சென்றவைகள் தர்மப்பொருட்களாகும்’’

(ஸஹீஹுல் புஹாரி: 3093 , ஸஹீஹுல் முஸ்லிம்: 1759)

இதை ஏனைய மனைவிமார்கள் செவியுற்றவுடன் அந்த எண்ணத்தை கைவிட்டு விடுகிறார்கள். இது ஒரு புறம், மறுபுரம் பாத்திமா(௯)அவர்கள் அபூ பக்கர்(௯) அவர்களிடம் நபிகள் நாயகம் அவர்கள் விட்டுச்சென்ற சொத்துக்களான ஹைபரிலுள்ள “பதக்” என்ற பூமியையும் ஏனைய பொருட்களையும் கேட்டு வருகிறார்கள். இச் சந்தர்ப்பத்தில்தான் நபிகள் நாயகத்திடம் செவியுற்றதாக மேற்குறிப்பிடப்பட்ட ஆயிஷா (௯)அவர்கள் கூறிய அதே செய்தியை சொல்கிறார்.

மேலும் நபிகள் நாயகம் விட்டுச்சென்ற சொத்துக்களையும் கொடுக்க மறுக்கிறார், இதைக் கேட்ட பாத்திமா(௯)அவர்கள் அபூ பக்கர் ﴾﵁﴿ அவர்கள் மீது கோபம் அடைகிறார்கள், அவரோடு தான் மரணிக்கும் வரை அவர்கள் பேசவில்லை, என்றும் அச்செய்தி சொல்கிறது.

இச்செய்தியை ஷீயாக்கள் ஆதாரமாகக்கொண்டு அபூ பக்கர்﴾﵁﴿அவர்கள் ஒரு மகளுக்கு தனது தந்தையின் வாரிசுச்சொத்தை கொடுக்காமல் அநீதிழைத்து விட்டார், அச்சொத்தை தனக்கு சொந்தமாக்குவதற்காக ஒரு செய்தியையும் நபிகள் நாயகம் கூறியதாக இட்டுக்கட்டி விட்டார், என குற்றம் சாட்டுகின்றனர்.

உண்மையிலேயே, அபூ பக்கர்﴾﵁﴿அவர்கள் தான் நபியவரகளிம் செவியுற்றதாக கூறும் செய்தி இட்டுக்கட்டப்பட்ட செய்தியாகயிருந்தால் இதை அவர் மாத்திரமே அறிவித்திருக்க வேண்டும், ஆனால் இதே செய்தி கிட்டத்தட்ட (09) நபித் தோழர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது, **(உதுமான், உமர், அப்பாஸ், அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ப், ஸ.்.த் இப்னு அபீ வக்காஸ், ஸுபைர் இப்னு அவ்வாம், ஆயிஷா (ரழி) ஆகியவர்களாகும்)**

ஷீயாக்கள் மத்தியில் பாத்திமா(௯)அவர்கள் பதக் என்ற நிலத்தை கேட்டதற்கு இரு வேறுபட்ட காரணங்கள் சொல்லப்படுகின்றன:-

01-அந்நிலம் பாத்திமா(௯)அவர்களின் வாரிசுச்சொத்தாகும்.

02-ஹைபர் போரன்று நபிகள் நாயகத்தால் பாத்திமா(௯)அவர்களுக்கு வழங்கப்பட்ட நன்கொடையாகும்.

**முதலாவது** கருத்தைப்பொருத்தவரை, பாத்திமா(௯)அவர்கள் அபூ பக்கர்﴾﵁﴿அவர்களிடம் தனது வாரிசுரிமையை கேட்டு வருகிறார்கள் அதற்கு அபூ பக்கர்﴾﵁﴿தான் நபிகள் நாயகத்திடம் செவிமடுத்த செய்தியை சொல்கிறார்கள், அதற்கு பாத்திமா(ரழி) கோபமடைகிறார்கள். ஏனெனில், அபூ பக்கர்﴾﵁﴿நபிகள் நாயகத்திடமிருந்து இந்த செய்தியை கேட்டவிதத்திலொ அல்லது விளங்கிய விதத்திலோ தவறு விட்டு இருக்கலாம் என பாத்திமா (ரழி) அவர்கள் எண்ணினார்கள். ஏனெனில் **முதலாவதாக:** இச்செய்தியை அவர்கள் அறிந்திருக்கவில்லை, **இரண்டாவதாக:** வாரிசுரிமை தொடர்பாக அல் குர்ஆனில் உள்ள பொதுப்படையாக சொல்லப்பட்ட வசனத்தின் அடிப்படையிலேயே அபூ பக்கர் ﴾﵁﴿ அவர்களிடம் வந்து வாரிசுரிமையை கேட்டார்கள்.

ஆகவே இவ்விடயத்தில் அபூ பக்கர்﴾رضي الله عنه﴿அவர்களுக்கு சார்பாக, தான் நபியவர்களிடம் செவுயுற்ற தெளிவான ஆதாரம் உள்ளது. ஆனால் பாத்திமா(ç)அவர்கள் நபி ﷺ அவர்களை இவ்விடயத்தில் வாரிசுரிமைச் வசனத்தை அடிப்பயையாக வைத்து தானும் தனது தந்தையும் அதற்குள் உள்ளடங்குவோம். என்று நினைத்ததே இந்த நிகழ்வுக்கு இட்டுச்சென்றது. எனினும் நபியவர்கள் இந்த பொதுப்படையான வசனத்தை விட்டும் அப்பாற்பட்டவர்கள் என்பதை பாத்திமா(ç)அவர்கள் அறிந்திருக்கவில்லை.

மேலும் அபூபக்கர்﴾رضي الله عنه﴿அவர்கள் பாத்திமா(ç)அவர்களை இச்சம்பவத்தின் மூலமாக கடுமையாக கோபமூட்டினார். எந்தளவுக்கெனில் ஆறு மாத காலங்கள் இருவரும் பேச வில்லை. ஏன்று ஷீயாக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

**<u>பதில்:-</u>**

அல்லாஹ்வுத்தஆலாவின் பொருத்தம் யாருக்கு கிடைக்கிறதோ அவருக்கு யாருடைய கோபமும் எவ்வித தீங்கையும் இழைக்காது. அந்தடிப்படையில் அல்லாஹ்வுத்தஆலா அபூ பக்கர்﴾رضي الله عنه﴿அவர்களை பொருந்திக்கொண்டான்.

۞ لَقَدْ رَضِيَ اللَّهُ عَنِ الْمُؤْمِنِينَ إِذْ يُبَايِعُونَكَ تَحْتَ الشَّجَرَةِ فَعَلِمَ مَا فِي قُلُوبِهِمْ فَأَنزَلَ السَّكِينَةَ عَلَيْهِمْ وَأَثَابَهُمْ فَتْحًا قَرِيبًا ﴿١٨﴾

“மு.ஃ.மின்கள் அந்த மரத்தடியில் உம்மிடம் வாக்குறுதி செய்த போது மெய்யாகவே அல்லாஹ் அவர்களைப்பொருந்தி (ஏற்றுக்) கொண்டான் அவர்களுடைய இதயங்களில் இருப்பதை அவன் அறிந்து, அவர்கள் மீது (சாந்தியையும்) அமைதியை(யும்) இறக்கியருளி, அவர்களுக்கு அண்மையில் வெற்றியையும் அளித்தான்.” (சூரா அல் பத்ஹ்: 18)

ஹிஜ்ரி 06ம் ஆண்டு நடந்த இந்த உடன்படிக்கையில் அபூ பக்கர் ﴾رضي الله عنه﴿ அவர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். ஆகவே எவருடைய கோபமும் அவர்களுக்கு எவ்வித தீங்கையும் ஏட்படுத்தாது.

வேறு வகையில் சொல்வதானால் அபூ பக்கர்﴾رضي الله عنه﴿அவர்களுடைய இடத்தில் இன்னொருவரிருந்து பாத்திமா(ç)அவர்கள் அந்நபரிடத்தில் இதே போன்று வாரிசுரிமையை கேட்டு வந்திருந்தால் அந்நேரத்தில் அந்நபர் இதே செய்தியை நபிகள் நாயத்திடம் கேட்டதாக பதிலளித்திருந்தால் அவ்விடத்தில் பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்ட நபியுடைய செய்தியை முட்படுத்துவதா? அல்லது பாத்திமா(ç)அவர்களுடைய வேண்டுகோளை முட்படுத்துவதா???

அவர்களின் இரண்டாவது கருத்துப்படி அந்நிலத்தை நபிகள் நாயகம் அவர்கள் பாத்திமா (ç)அவர்களுக்கு நண்கொடையாக வழங்கியதற்கு ஒரு ஆதாரத்தை முன்வைக்கின்றனர்.

சூரத்துல் இஸ்ராவின் 26வது வசனமான நெருங்கிய சொந்தங்களுக்கு அவர்களுடைய உரிமைகளை கொடுத்தல். என்பது தொடர்பான வசனம் ஹைபர் வெற்றி கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் இறங்கிய போது நபிகள் நாயகம் பாத்திமா(ழ)அவர்களை அழைத்து யுத்தத்தில் கிடைத்த பதக் என்ற நிலத்தை நண்கொடையாக வழங்கினார்கள்.

(தப்ஸீருஸ் ஸாபி: 3.ஃ.18)

என்ற செய்தியை சொல்கின்றனர்.

### இவ்விடத்தில் நாம் சில விடயங்களை கவணிக்க வேண்டும்

**01-**இச்செய்தி பொய்யான செய்தியாகும். அந்த வசனம் அங்கு இறங்கவுமில்லை, நபிகள் நாயகம் அதை நண்கொடையாக வழங்கவுமில்லை. பாத்திமா(ழ)அவர்கள் வாரிசுரிமையென்ற அடிப்படையில் கேட்டார்களே தவிர நன்கொடையென்றடிப்படையில் கேட்டதாக அச்செய்தி பதியப்படவுமில்லை. மேலும் ஹைபர் ஹிஜ்ரி 07ம் ஆண்டு வெற்றி கொள்ளப்பட்டது. அந்நேரத்தில் நபிகள் நாயகத்துடைய ஏனைய இரு மகள்களான ஸைனப், உம்மு குல்தூம்(ழ)அவர்களிருவரும் உயிரோடு இருந்தாரகள். எந்த அடிப்படையை வைத்து அவர்களை விட்டுவிட்டு பாத்திமா(ழ)அவர்களுக்கு மாத்திரம் நன்கொடையை வழங்கலாம்.

ஏனெனில் நன்கொடை விடயத்தில் பிள்ளையகளுக்கு மத்தியில் பிரிவினை காட்டக்கூடாதென்று நபியவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியுள்ளார்கள்.

(ஸஹீஹுல் முஸ்லிம்: 1623)

ஆகவே இச்செய்தி நபியவர்கள் பிள்ளைகளுக்கு மத்தியில் பிரிவினை காட்டினார்கள். என அவர்கள் மீது களங்கம் ஏற்படுத்துவதற்காக ஷீயாக்களால் புனையப்பட்ட செய்தியாகும்.

உண்மையிலேயே **பதக்** பகுதி பாத்திமா(ழ)அவர்களுக்கு நன்கொடையாக வழங்கி இருந்தால் அது அவரிடம் தானே இருக்க வேண்டும். பிறகு எதற்காக அபூபக்கர் (ﷺ)அவர்களிடம் அதைக் கேட்டார்கள். ஆச்சரியம் என்னவெனில் அபூ பக்கர் (ﷺ)அவர்களுக்குப்பிறகு உமர் அடுத்ததாக உதுமான் அவருக்கடுத்தாக அலி(ﷺ)அவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்கிறார்கள். அவர்கள் கூட அந்நிலத்தை நபிகள் நாயகத்துடைய வாரிசிக்குப் பிரித்துக் கொடுத்ததாக எந்தவித ஆதாரத்தையும் காணமுடியவில்லை. ஆகவே ஷீயாக்களின் பார்வையில் அபூ பக்கர்(ﷺ)அவர்கள் அநியாயக்காரர் என்றால் அலி(ﷺ)அவர்களும் அநியாயக்காரரே!...

### பாத்திமா (ரழி) அவர்கள் அபூ பக்கர் (ﷺ)அவர்களோடு கோபமாக இருந்த நிலையில் மரணித்தார்களா!...........

இமாம் தபரி அவர்கள் தனது வரலாற்று நூலில் இருவரும் ஆறு மாத காலங்கள் பேசாமலிருந்தார்கள் என்று குறிப்பிடுகிறார். எனினும் ஸஃபி

என்ற தாபிஇ மூலமாக பைஹகி மற்றும் பத்ஹுல் பாரி ஆகிய நூல்களில் பாத்திமா (ரழி) அவர்கள் மரணப் படுக்கையலிருக்கும் போது அபூ பக்கர்(ﷺ)அவர்கள் அவர்களுடைய வீட்டுக்கு வந்து இருவருக்கிடையிலிந்த கோபதாபங்களை போக்கியதாக நம்பகத்தகுந்த செய்தி பதியப்பட்டுள்ளது. (பத்ஹுல் பாரி: 06.∶.233)

**02-சில மார்க்கச் சட்டங்களை அபூ பக்கர்(ﷺ)அவர்கள் அறிந்திருக்கவில்லை:-** அதாவது இவ்வாறு மார்க்கச் சட்டங்களை அறியாத ஒருவர் தலைமை பொறுப்புக்கு தகுதியற்றவர் என ஷீயாக்கள் குற்றம் சாட்டுகின்றனர். அவ்வாறு அவர் அறியாத மார்க்கச் சட்டங்கள் யாவை?

- **திருடிய ஒரு நபருக்கு அவரது இடது கையை வெட்டினார்.**

ஏனெனில் அந்த சந்தர்ப்பத்தில் அந்நபர் மூன்றாவது தடவையாக திருடியிருந்ததால் இடது கையை வெட்டும்படி கட்டளையிட்டார். இது அவருடைய அறியாமையால் நிகழ்ந்ததல்ல. மாறாக நபிகள் நாயகத்துடைய செய்தியை அடிப்படையாக வைத்து இவ்வாறு கட்டளையிட்டார்.

அபூ ஹுரைரா(ﷺ)அவர்கள் அறிவிக்கிறார்கள்: “முதலாவது முறை ஒருவர் திருடினால் அவருடைய வலக்கரத்தை துண்டியுங்கள், மீண்டும் திருடினால் அவருடைய இடது காலை துண்டியுங்கள், மீண்டும் திருடினால் அவரருடைய இடக்கரத்தை துண்டியுங்கள் ..................”

(ஸரஹுஸ் ஸுன்னா)

ஆகவே அபூ பக்கர்(ﷺ)செய்தது நபியவர்கள் சொன்னதற்கு ஏற்பவேயாகும். சிலர் சொல்லுவது போன்று விமர்சனத்துக்கு உரியதல்ல.

- **ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்ட ஒருவரை எரித்தார்கள்.**

அபூ பக்கர் (ﷺ)வாழ்ந்த காலத்தில் எவரையும் உயிரோடு வைத்து எரித்ததில்லை, அவரது காலத்தில் இக்குற்றத்தில் ஒருவர் பிடிபடுகிறார், அவரது தலையை துன்டிக்குமாறு கட்டளையிடுகிறார்கள். அம்மனிதர் இறந்ததான் அப்பால் அவரது உடலை எரிக்குமாறு ஏவுகிறார்கள்.

இவ்வாறு செய்வதன் மூலம் அந்த இறந்த மனிதரின் உடலுக்கு எவ்வித வலியம் உணரப்படுவதில்லை, அது மட்டுமல்லாமல் அவர் இவ்வாறு செய்ததற்கு காரணம் ஏனைய மக்களை எச்சரிப்பதற்கே ஆகும்.

**03-அலி (ﷺ)அவர்கள் அபூ பக்கர் (ﷺ)இற்கு உடன்படிக்கை செய்வதை புறக் கனித்தார்களா?**

ஷீஆக்களின் எழுத்துக்களில் அலி(ﷺ)யும் பனூ ஹாஸிம்களில் சிலரும் அபூ பக்கருக்கு பைஅத் செய்யவில்லை என்பதை காணலாம், ஆனால் உண்மை இதற்கு மாறானதே, நாம் வரலாற்றைப்புரட்டும் போது இதற்கான பதிலை தெளிவாக பெற்றுக் கொள்ள முடியும்.

அபூ சயீத் அல்குத்ரி(ﷺ)அறிவிக்கிறார்கள்: அபூ பக்கர் (ﷺ)மிம்பரின் மீது அமர்ந்த போது அங்கு கூடியிருந்தவர்தளில் அலி(ﷺ)யை அவர்கள்

காணாததால் அவர்கள் எங்கே என கேட்டார்கள், உடனே அன்சாரிகளில் சிலர் எழுந்து சென்று அவரை அழைத்து வந்தார்கள். அபூ பக்கர்(رضي الله عنه)அவர்கள் அலி(رضي الله عنه)அவர்களிடம் கேட்டார்கள் ‘‘ரஸூலுல்லாஹ்வின் சிறிய தந்தையின் மகனே! முஸ்லிம்களின் தடியை (ஒற்றுமை) உடைக்க நினைக்கிறாயா என்றார்கள்.

அதற்கு அலி(رضي الله عنه)அல்லாஹ்வின் தூதரின் கலீபாவே அவ்வாறில்லை எனக்கூறி உடனே அவர்களுக்கு உடன்படிக்கை செய்தார்கள். (பைஹகி குப்ரா:08.∴143)

ஆகவே அபூ பக்கர்(رضي الله عنه)ஆட்சிப் பொறுப்பேற்ற மறுநாளே அலி(رضي الله عنه)அவர்கள் உடன்படிக்கை செய்து விட்டார்கள் என்ற உண்மை தெளிவாகின்றது. எனினும் ஆயிஷா (ரழி)அவர்கள் அறிவிக்கக்கூடிய புஹாரியில் வருகின்ற செய்தியான அலி(رضي الله عنه)அவர்கள் 06 மாத காலத்துக்குப்பிறகு தான் உடன்படிக்கை செய்தார்கள், என்ற செய்தியுடன் இது முறன்படுவதாக கூறுகின்றனர்.

எனினும் அவ்வாரான ஒரு முறண்பாடு இங்கு காணப்படுவதில்லை. அலி(رضي الله عنه)அவர்கள் அபூ பக்கர்(رضي الله عنه)அவர்கள் ஆட்சி பொறுபபேற்ற போது அவர்களுக்கு பைஅத் செய்த அதே சந்தர்ப்பத்தில் பாத்திமா(ரழி)அவர்கள் மரணித்த பிறகு அதாவது 06 மாத காலத்துக்குப் பிறகு இரண்டாவது தடவையாகவும் பைஅத் செய்துள்ளார், ஏனெனில் அவ்விடைப்பட்ட காலத்தில் “பதக்” நிலம் பற்றிய பிரச்சினையால் இருவருக்கும் மத்தியில் மனக் கசப்புகள் இருப்பதாக மக்கள் மத்தியில் ஒரு கருத்து பரவியிருந்தது. இதை போக்கும் வகையிலேயே அலி(رضي الله عنه)அவர்கள் இரண்டாவது முறையாகவும் பைஅத் செய்தார்கள்.

அதுமட்டுமல்லாமல் அலி(رضي الله عنه)அவர்கள் அபூ பக்கர் (رضي الله عنه)அவர்களுக்குப் பின்னால் தொழுததாகவும் அவர்களுடைய ஆலோசனைக் கூட்டங்களில் கலந்து கொண்டதாகவும் பல வரலாற்றுச் செய்திகளில் நாம் காணலாம். எனவே அலி(رضي الله عنه)அவர்களின் மீது ஷீயாக்கள் சொல்லும் மேற் குறிப்பிடப்பட்ட செய்தி பொய்யானதாகும்.

**04-காலித் இப்னு வலீத்(رضي الله عنه)அவர்களுடைய கொலைக் குற்றத்துக்குரிய தண்டனையை அபூ பக்கர்(رضي الله عنه)அவர்கள் தள்ளுபடி செய்தார்கள்.**

நபிகள் நாயகம் மரணித்ததன் பிறகு சில அரபு கோத்திரங்கள் இஸ்லாத்தை விட்டும் மதம் மாறினர். சிலர் அபூ பக்கர்(رضي الله عنه)அவர்களுக்கு ஸகாத் கொடுப்பதற்கு மறுத்தனர். அப்படிப்பட்ட ஒரு கோத்திரமே மாலிக் இப்னு நுவைரா என்பவனின் கோத்திரமாகும். நபியவர்களுடைய மரணச்செய்தி வந்த போது இவர்கள் மோலமடித்து மகிழ்ச்சி அடைந்து கொண்டாடியதாகவும் ஸகாத் கொடுப்பதற்கு மறுத்ததாகவும் மக்களிடமிருந்து பெற்ற ஸகாத் பொருட்களை இவன் மீண்டும் மக்களிடமே ஒப்படைத்ததாகவும் செய்தி அபூ பக்கர்(رضي الله عنه)அவர்களுக்கெட்டிய போது காலித் இப்னு வலீத்(رضي الله عنه)அவர்களை அவனது கூட்டத்தாரோடு போர் செய்வதற்காக அனுப்புகிறார்கள். (புதுஹூல் புல்தான்- பலா தூரி)

காலித்(ﷺ)அவர்கள் ஸகாத் பொருட்களை வழங்குவதற்கு ஏன் மறுக்கின்றீர்கள் என்று கேட்ட போது உங்களது தோழருக்கு (நபியவர்களை நாடுகிறான்) மாத்திரமே நாம் வழங்கினோம், அபூ பக்கர்(ﷺ)அவர்களுக்கு ஏன் வழங்க வேண்டும் என்று சொன்னான். இதைக்கேட்ட அவர்கள் கோபமுற்று (நபியவர்கள்) எமது தோழர் மாத்திரமா! உமது தோழர் இல்லையா! ஏன்று கேட்டு விட்டு அவர்களின் பமைடயிலிருந்த "ழிரார் இப்னு அவ்ஸர்" என்பவருக்கு மாலிக் இப்னு நுவைராவின் தலையை துண்டிக்குமாறு ஏவுகிறார்.

இன்னொரு அறிவிப்பில் வந்துள்ளது அக்காலத்தில் தன்னை நபியென வாதிட்ட "ஸஜாஹ்" என்பவனுடன் இவனும் சேர்ந்து கொண்டாதகவுமுள்ளது. (பஸ்லுல்கிதாப் பீ இத்பாதித் தஹ்ரீப்:105)

மற்றுமொறு அறிவிப்பில் காலித்(ﷺ)அவர்கள் இவ்விடயம் பற்றி மாலிக் இப்னு நுவைராவுடன் பேசிய போது இரு கூட்டத்தாருக்கும் இடையில் போர் மூண்டது, காலித்(ﷺ) அவர்கள் அக்கோத்திரத்தினரை சிறை பிடித்தார்கள். அதன் பிறகு அன்றைய நாளிரவு கடும் குளிராகயிருந்ததால் தமது படையிடம் என்று கூறினார்கள்.

இந்த வார்த்தைக்கு பனு தகீப் கோத்திரத்தினரிடம் கொல்லுங்களென்று அர்த்தமாகும். ஆகவே காலித்(ﷺ)அவர்கள் சிறைக் கைதிகளை கொல்லும்படி ஏவுகிறார் என்று எண்ணி அனைவரையும் கொண்டு விட்டனர். எனினும் காலித்(ﷺ)கூறிய அவ்வாரத்தைக்கு அவர் நாடிய அர்த்தம் "பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள்" என்பதேயாகும். எனவே இக் கொலைக்கும் காலித்(ﷺ)அவர்களுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

மற்றுமொரு குற்றச்சாட்டு கூறப்படுகிறுது அதாவது மாலிக் இப்னு நுவைராவை கொலை செய்யப்பட்டதன் பிறகு அவனது மனைவியை காலித்(ﷺ)அவர்கள் திருமணமுடித்து அவளது இத்தாக் காலம் முடிவடைவதற்கு முன்னதாக அவளோடு சேர்ந்தார். எனினும் இது பொய்யான ஒன்றாகும், இமாம் இப்னு கதீர் அவர்கள் சொல்கிறார்கள் மாலிக் இப்னு நுவைரா தனது மனைவியை ஏற்கனவே மணவிளக்க கொடுத்து விட்டு இத்தாக் காலம் முடிவடையும் தருனத்திலேயே அவர் இறந்துள்ளார், இறக்கும் போது இருவருக்கும் இடையிலிருந்த கணவன் மனைவி உறவு அற்று விட்டது, ஆகவே காலித்(ﷺ)அவர்கள் அவனது மனைவியை திருமணம் செய்து கொண்டது எவ்விதத்திலும் தவறு கிடையாது.

### 05-அபூ பக்கர் (ﷺ)அவர்கள் அலி(ﷺ)அவர்களின் வீட்டை எறிக்கும் படி சொன்னாரா?..

அலி(ﷺ)அவர்களும் அவரைச்சார்ந்த சிலரும் தனக்கு பைஅத் செய்யாமல் வீட்டில் ஒதுங்கி இருக்கிறார்கள்.என்பதைக்கேள்விப்பட்ட அபூபக்கர்(ﷺ)அவர்கள் உமர்(ﷺ)அவர்களை அழைத்து சிலரோடு அலி(ﷺ)அவர்களின் வீட்டிற்குச் செல்லுமாரும் தனக்கு பைஅத் செய்வதற்கு அழைக்குமாறும் அவ்வாறு அவர்கள் அதற்கு பதிளலிக்காவிட்டால் அவர்களை கொன்று விடுமாறும் ஏவினார்கள். உடனே உமர்(ﷺ)அவர்கள் தனது கையில் ஒரு நெருப்புக்கீற்றை எடுத்தக்

கொண்டு அலி(ﷺ)அவர்களின் வீட்டை நோக்கி எறிப்பதற்காக செல்கிறார்கள், இதைக்கண்ட பாத்திமா (ரழி) அவர்கள் உமர்(ﷺ) அவர்களிடம்: ஹத்தாபின் மகனே! எங்களது வீட்டை எறிப்பதற்காகவா வந்துள்ளாய்!.... எனக்கேட்டார்கள், அதற்கு உமர்(ﷺ)அவர்கள்: இந்த சமூகம் யாருக்கு பைஅத் செய்ததோ அவ்வாறு நீங்களும் செய்யாவிட்டால் எறித்து விடுவேன் என்கிறார்கள்.

(அக்துல் பரீட்: 02-450, தாரீஹு அபில் பைதா: 01-156)

மேற்குறிப்பிட்ட சம்பவமும் அவை இடம்பெற்றுள்ளதாக சொல்லப்பட்ட நூல்களும் ஷீயாக்களால் தொகுக்கப்பட்டவை ஆகும். இவை இடம் பெற்றதற்கான எவ்வித ஆதாரத்தையும் நாம் வரலாற்று நூல்களில் காணமுடியபது. ஆகவே இச்செய்தி உறுதிப்படுத்தப்படாத அவர்களின் வெரும் கற்பனையாகும்.

இவர்களால் சொல்லப்படும் இதே செய்தி அவர்களின் கொள்கையைப் போதிக்கும் வேறு சில நூல்களில் பதியப்பட்டுள்ளது, ஆனால் இரு செய்திகளுக்கும் இடையில் முறண்பாடு காணப்படுவதை நாம் காணலாம்.

**அந்த செய்தியாவது:** அபூ பக்கர்(ﷺ)அவர்கள் தனக்கு பைஅத் செய்யாத ஒரு கூட்டத்தார் அலி(ﷺ)அவர்களோடு அவர்களது வீட்டில் கூடியிருப்பதாக கேள்விப் படுகிறார்கள். உடனே உமர்(ﷺ)அவர்களை அங்கு சென்று அவர்களை வற்புறுத்தி இங்கு வரவழைக்குமாரு கட்டளை இடுகிறார்கள். உமர்(ﷺ)அவர்களும் நெறுப்புக்கீற்றை எடுத்துக் கொண்டு அங்கு சென்று: "நீங்கள் வீட்டை விட்டு வெளியேரவில்லையானால் நான் வீட்டை எறித்து விடுவேன்" என்று சப்தம் இடுகிறார்.

அந்நேரத்தில் அவர்களுக்கு சொல்லப்படுகிறது உமரே! வீட்டிற்குள் பாத்திமா(ரழி)அவர்கள் இருக்கிறார்கள் என்று, அதற்கு உமர்(ﷺ)அவர்கள் சொல்கிறார்கள் "யாரிருந்தாலும் சரியே" என, பிறகு உமர்(ﷺ)அவர்கள் வீட்டின் கதவிற்கு உதைக்கிறார்கள், கதவு திறபடுகிறது கதவிலிருந்த ஒரு ஆணி பாத்திமா(ரழி)அவர்களுடைய வயிற்றில் காயத்தை ஏற்படுத்துகின்றது, இதன் மூலம் அந்நேரத்தில் கற்பினியாக இருந்த பாத்திமா (ரழி)அவர்களின் சிசு (முஹ்ஸின்) மரணிக்கிறது. இதற்குப்பிறகு பாத்திமா(ரழி)அவர்கள் அபூ பக்கர்(ﷺ)அவர்களின் சபைக்குச்சென்று அவரையும் உமர்(ﷺ)அவர்களையும் சபிக்கிறார்கள். பிறகு ஸஹாபாக்களை ஒன்று கூட்டி ஒரு பிரசங்கம் நடாத்துகிறார்.

(அ.ஃலாமுன் நிஸா:04-11)

இச்செய்திக்கும் நாம் மேற்குறிப்பிட்ட செய்திக்குமிடையில் சில முறண்பாடுகளை நாம் கவணிக்க வேண்டும். நாம் முதலாவது குறிப்பிட்ட செய்தியில் பாத்திமா(ரழி)அவர்களோ உமர்(ﷺ)அவர்களோடு பேசியதாக கூறப்பட்டுள்ளது. ஆனால் இரண்டாவது செய்தியில் பாத்திமா(ரழி)அவர்கள் வீட்டிலிருப்பதாக வேரொருவரால் சொல்லப்படுகிறது. ஷீயாக்களின் நூல்களில் நபிகள் நாயகம் அவர்கள் தனது மரணத்துக்கு அடுத்ததாக அஹ்லுல் பைத்திலிருந்து பாத்திமா (ரழி) அவர்கள்தான் தன்னை

வந்தடைவார் என்று ஒரு செய்தி பதியப்பட்டுள்ளது. ஆனால் மேற்குறிப்பிட்ட ஆவர்களின் வரலாற்றுச் சம்பவத்தொடு ஒப்பு நோக்கும் போது பாத்திமா(ဠ)அவர்களுக்கு முன்னதாகவே அஹ்லுல் பைத்திலிருந்து அவர்களின் மூன்றாவது மகனான "முஹ்ஸின்" இறந்து விட்டார் என்கிறது, இது ஒரு தெளிவான முறண்பாடாகும். ஒரு கற்பினிப்பெண் தனது வயிற்றிலுல்ல குழந்தை இறந்தாலோ அல்லது பிறந்தாலோ அப்பெண்ணால் இயல்பாகவே அதிக தூரங்கள் நடக்கவோ அல்லது அவளது உடலிருந்து அதிக அழுத்தத்தை பிறயோகிப்பதோ இயற்கைக்கு முறனான விடயமாகும். ஆனால் மேற்குறிப்பிட்டட செய்தியில் பாத்திமா (ரழி) அவர்கள் அபூ பக்கர்(ဠ)அவர்களிடம் செல்கிறார்கள், தனது கோபத்தை வெளிப்படுத்துகிறார்கள், பிறகு மக்களை ஒன்று கூட்டுகிறார்கள், இவையனைத்துமே ஏதோ புராணக்கதை சொல்வது போன்று அமைகின்றது.

**06-அபூ பக்கர் (ဠ)அவரகள் அலி (ဠ)அவர்களைக் கொள்வதற்காக காலித்(ဠ) அவர்களை அணுப்புதல்.**

அபூ பக்கர்﴾ﷺ﴿அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் காலித் ﴾ﷺ﴿அவர்களிடம் சொன்னார்களாம்: "நான் ஸுபஹ் தொழுகை தொழுது முடித்து விட்டால் அலி﴾ﷺ﴿அவர்களுடைய கழுத்தை துண்டித்து விடு" எனினும் அவர் மக்களுக்கு தொழுகை நடாத்திக் கொண்டிருக்கும் பொழுது தொழுகையின் இறுதிப்பகுதியில் தான் அவ்வாறு சொன்னதற்காக கவலைப்பட்டு சூரியன் உதிக்கும் வரை அமர்ந்தவாரு சிந்தித்தார்கள். தொழுகை முடிந்தவுடன் " காலிதே! நான் சொன்னதை செய்யாதே" என்றார்களாம்.

(அல் இஸ்திகாதா: 09.˙.21)

இவையனைத்துமே அபூ பக்கர்﴾ﷺ﴿அவர்கள் மீது சொல்லப்படும் எவ்வித ஆதாரங்களுமற்ற உறுதிப்படுத்தப்படாத கற்பனை ரீதியான குற்றச்சாட்டுகளே ஆகும். இவை தவிர்ந்த இன்னும் ஏராளமான குற்றச்சாட்டுக்களை ஷீயாக்களுடைய எழுத்துக்களில் காணலாம். எனினும் விரிவை அஞ்சி இவற்றோடு சுருக்கிக்கொள்கிறேன்.

## அபூ பக்கர்﴾ﷺ﴿அவர்கள் பற்றி நபிகள் நாயகம்

அனஸ் இப்னு மாலிக்﴾ﷺ﴿அவர்கள் அறிவிக்கிறார்கள்: "ஒரு முறை நபியவர்களும் அபு பக்கர், உமர் மற்றும் உதுமான்﴾ﷺ﴿ஆகிய நாழ்வரும் உஹத் மலையில் ஏறினார்கள். அப்போது அது சற்று நடுங்கியது. அப்போது நபியவர்கள் கூறினார்கள்:உஹதே! அசையாமல் தரித்து நில்… உன் மீது ஒரு நபியும் ஒரு உண்மையாளரும் இரண்டு ஷஹீதுகளும் இருக்கிறார்கள் என்றார்கள். (01-புஹாரி: 2418)


அம்ர் இப்னு ஆஸ் ﴾ﷺ﴿அவர்கள் அறிவிக்கிறார்கள்:"ஒரு முறை நபியவர்கள் தன்னை ஒரு படையோடு அணுப்பினார்கள். அப்போது நான் நபியவர்களிடம் வந்து உங்களுக்கு மனிதர்களில் மிகவும் விருப்பமானவர் யாரென்று கேட்டேன். அதற்கு நபியவர்கள் ஆயிஷா என பதிளலித்தார்கள். மீண்டும் நான் ஆண்களில் யாரெனக் கேட்டேன், அதற்கவர்கள் அவளது தந்தை என்றார்கள்... (02-புஹாரி: 3662, முஸ்லிம்: 2384)

# அபூ பக்கர்(﵁)அவர்களின் ஆட்சிப் பொறுப்பு பற்றிய நபிகள் நாயகத்தின் சமிஞ்சைகள்

அபூ மூஸா(﵁)அவர்கள் அறிவிக்கிறார்கள்:“நபி(ﷺ)அவர்கள் நோயுற்றார்கள் தனது நோய் அதிகரித்த போது அபூ பக்கரை தொழுகை நடாத்துமாறு என்று அங்கிருந்தவர்களிடம் சொன்னார். அப்போது ஆயிஷா(ؓ)அவர்கள் கூறினார்கள்: அவர் ஒரு மெண்மையான ஒரு மனிதராவார். உங்களது இடத்தில் நின்று தொழுகை நடாத்துவதற்கு அவரால் இயலாது அதற்கு நபியவர்கள் அபூ பக்கரை மக்களுக்குத் தொழுகை நடாத்துமாறு ஏவுங்கள் என மீண்டும் சொன்னார்கள். ஆயிஷா(ؓ)அவர்கள் மீண்டும் அவர் ஏற்கனவே சொன்னதை சொன்னார். அதற்கு நபியவர்கள் ஆயிஷாவே! நீர் அபூ பக்கர்(﵁)அவர்களை மக்களுக்குத் தொழுகை நடாத்துமாறு சொல் என்றார்கள். (புஹாரி: 675, முஸ்லிம்: 420)

ஜுபைர் இப்னு முத்இம்(﵁)அவர்கள் அறிவிக்கிறார்கள்:“நபியவர்களிடம் ஒரு முறை ஒரு பெண்மனி வந்தால் அவளை மீண்டும் ஒரு நாள் வரும்படி சொன்னார்கள். அதற்கு அப் பெண் நான் மீண்டும் வரும் போது உங்களை காணாவிட்டால் என்ன செய்வது? என்று கேட்டால். அதற்கு நபியவர்கள் என்னை நீ காணாவிட்டால் அபூ பக்கர்(﵁)அவர்களிடம் செல் என்றார்கள். (ஸஹீஹுல் புஹாரி: 3659)

ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபியவர்கள் நோயுற்ற நிலையில் கூறினார்கள், உமது தந்தையும் உமது சகோதரனையும் இங்கு அழைத்து வா... நான் ஒரு ஏட்டை எழுதி ஒப்படைக்கப் போகிறேன். ஏனெனில் எனக்குப் பிறகு நானே மிகத் தகுதியானவரென ஒவ்வொருவரும் கூருவதை நான் பயப்படுகிறேன். மேலும் அபு பக்கர் (﵁)அவர்களுக்கு முன்னிலையில் குழப்பம் ஏற்படுவதை அல்லாஹ்வும் மு.ஃ.மின்களும் மறுத்து விட்டார்கள். (ஸஹீஹுல் புஹாரி : 5666)



**அபூபக்கர்(ரலி) அவர்கள் பற்றிய சுருக்கக் குறிப்பு**

முழுப்பெயர்:- அப்துல்லாஹ் இப்னு அபீ குஹாபா வேறு சில வரலாற்று நூல்களில் அப்துல்லாஹ் இப்னு உதுமான் என்றுள்ளது.

புனைப் பெயர்கள்:- ஸித்தீக், அதீக், சாஹிப், அத்கா

மனைவிமார்கள்:- ஹபீபா பின்த் காரிஜா, அஸமா பின்த் உமைஸ், உம்மு ரூமான், கதீலா பின்த் அப்தில் உஸ்ஸா

பிள்ளைகள்:- அப்துர்ரஹ்மான், அப்துல்லாஹ், முஹம்மத், அஸ்மா, ஆயிஷா, உம்மு குல்தூம்.

**இவரது காலத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள்.**

01- மதம் மாரியோருடனான யுத்தம்.
02- யர்மூக் யுத்தம்.
03- யமாமா யுத்தம்.
04- ஷாம் யுத்தம்.

**அபூ பக்கர் (ரலி)அவர்களின் மரணம்**

ஹிஜ்ரி 13ம் ஆண்டு ஜமாஅதுல் ஆகிர் மாதம் அபூ பக்கர்(ரலி)அவர்கள் நோயுற்றார்கள். அம் மாதத்திலேயே மரணித்தார்கள். அவர் மரணப் படுக்கையிலிருக்கும் போது அவர்களிடம் கேட்கப்பட்டது உமக்காக ஒரு வைத்தியரை அழைத்து வரவா? அதற்கு என்னை ஒரு வைத்தியர் கண்காணித்து விட்டார். என்னிடம் சொன்னார்: நான் நாடியதை செய்யக் கூடியவன் என (அவர் வைத்தியரென்று சொன்னது அல்லாஹ்வேயே ஆகும்)

(தபகாதுல் குப்ரா: 3∴.198)

பிறகு அவரது உயிர் சாந்தியாகவும் மிருதுவாகவும் அல்லாஹ்வால் கைப்பற்றப்படுகிறது. நபிகள் நாயகத்தின் மண்ணறைக்கு அருகில் அடக்கம் செய்யப்படுகிறார்.

# அமீருல் மு.∴மினீன் உமர் இப்னு கத்தாப்(ரலி)

இரண்டு ஆண்டுகளும் 03 மாதங்களும் ஆட்சிசெய்த அபூ பக்கர்(ரலி)அவர்கள் தனக்குப் பின்னரான ஆட்சிப் பொறுப்பை சரியான முடிவின் பிரகாரம்

உமர்(ﷺ)அவர்களிடம் ஒப்படைத்து சென்றார்கள். ஏனெனில் தனக்குப்பின் இவ்வாட்சிக்குப் பொருத்தமானவரும் தகுதியானவருமாக உமர்(ﷺ)அவர்களேயே கருதினார்கள். அவர்களது 10 வருட ஆட்சிக்காலம் அபூ பக்கர்(ﷺ)அவர்களது ஆட்சிக்குப்பிறகு பொன்னான காலமாக கருதப்பட்டது. ஷாம் பகுதியில் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப்பகுதியில் தனது பொறுப்பை ஏற்றுக் கொண்டார். யர்மூக் பகுதியில் முஸ்லிம் படைகளை ஒன்றுபடச் செய்து ரோமர்களை வெற்றி பெறச் செய்தார். இவ்வாறு இவரது காலத்தில் இஸ்லாம் உலகெங்கும் பரவ ஆரம்பித்தது.

நபிகள் நாயகம் அவர்கள் உமர் (ﷺ)அவர்களை குழப்பங்களைத் தடுக்கும் தடுப்புச்சுவர் என வர்ணித்துள்ளார். ஹுதைபா இப்னு யமான்(ﷺ)அவர்கள் அறிவிக்கிறார்கள்: "நாங்கள் உமர்(ﷺ)அவர்களிடம் அமர்ந்திருக்கும் போது உமர்(ﷺ)அவர்கள் கேட்டார்கள்: "உங்களில் யார் குழப்பங்கள் தொடர்பான செய்தியை நபியவர்களிடமிருந்து மணணமிட்டுள்ளீர்கள்" அதற்கு நான் கூறினேன்: "ஒரு மனிதனுக்கு தனது குடும்பத்தில், தனது செல்வத்தில் மேலும் தனது பிள்ளைகளில் மேலும் தனது அண்டை வீட்டாரில் ஏற்படும் குழப்பங்களுக்கு தொழுகை மற்றும் தர்மம் மற்றும் நன்மையை ஏவி தீமையை தடுத்தல் போன்றவை பரிகாரங்கள் ஆகும் என்றேன்"

அதற்கு உமர்(ﷺ)அவர்கள்: "நான் இதைப்பற்றி உம்மிடம் கேட்கவில்லை. நான் கேட்டது கடல் அலை போன்று வருகின்ற குழப்பங்களை ஆகும்" அதற்கு நான் சொன்னேன்: "அமீருல் மு∴மினினே! உமக்கும் அதற்குமிடையில் மூடப்பட்ட ஒரு கதவுள்ளது. எனவே உமக்கு அது எதுவித பிரச்சினையையும் ஏற்படுத்தாது" அதற்கு உமர்(ﷺ)அவர்கள்: "அக் கதவு உடைக்கப்படுமா? அல்லது திறக்கப்படுமா?" எனக் கேட்டார்கள். அதற்கு நான்: உடைக்கப்படும் என்றேன், அதற்கு உமர் (ﷺ)அவர்கள் "அப்படியானால் மீண்டும் மூடப்படாது" என கூறினார்கள், அதற்கு நான் ஆம் என்றேன், அங்கிருந்தவர்கள் என்னிடம் கேட்டார்கள் உமர்(ﷺ)அவர்கள் அக்கதவு பற்றி அறிவாரா? ஏன கேட்டனர், அதற்கு நான் ஆம் என்றேன். (ஸஹீஹுல் புகாரி: 7092, ஸஹிஹுல் முஸ்லிம்: 144)

இச்செய்தியில் குழப்பங்களுக்கு இடையில் உள்ள கதவு என்று கூறப்பட்டது, உமர்(ﷺ)அவர்களையே குறிப்பதாகும். அக்கதவு உடைக்கப்படும் என்று சொல்லப்பபட்டது உமர் (ﷺ)அவர்கள் கொலை செய்யப்படுவதே ஆகும்.

உமர்(ﷺ)அவர்கள் உயிரோடு உள்ள காலம் வரை குழப்பங்கள் எதுவுமே ஏற்படாது என நபியவர்கள் கூறிய அதே நிலையில் அவரது மரணத்துக்கு அப்பால் குழப்பங்கள் ஏற்படும் என சூசமாக சொல்லியுள்ளார்கள்.

## உமர் (ﷺ)அவர்கள் பற்றிய சுருக்கக் குறிப்பு

இவரது முழுப்பெயர்:உமர் இப்னு கத்தாப் இப்னு நுபைல் இப்னு அப்தில் உஸ்ஸா குரைஷ்.

**அவரது மனைவிமார்கள்:** 01-ஸைனப் பின்த் மல்ஊன், 02-முழைக்கா பின்த் ஜர்வல், 03-உம்மு ஹகீம் பின்த் அல் ஹாரித், 04-ஆதிக் பின்த் ஸைத், 05-உம்மு குல்தும் பின்த் அலி, 06-ஜமீலா பின்த் ஆஸிம், 07-கரீபா பின்த் அபு உமைய்யா.

**அவரது அண் பிள்ளைகள்:** ஸைத், ஆஸிம், அப்துர் ரஹ்மான், அப்துல்லாஹ், உபைதுல்லாஹ், இயாழ்.

**அவரது பெண் பிள்ளைகள்:** ருகைய்யா, ஸைனப், பாத்திமா, ஹப்ஸா.

## உமர்(ﷺ)அவர்களின் காலத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள்

01-காதிஸிய்யா யுத்தம்: முஹர்ரம் மாதம் ஹிஜ்ரி 14ல்.

02-அஜ்னாதைன் யுத்தம்: ஹிஜ்ரி 15ல் ரோமர்களோடு தொடுக்கப்பட்ட யுத்தமாகும்.

03-பைத்துல் முகத்தஸ் வெற்றி கொள்ளப்படுதல்.

04-தஸ்தர் மற்றும் சுவிஸ் ஆகிய பகுதிகள் வெற்றி கொள்ளப்படுதலும்

05- ஹுர்முஷான் என்ற பாரஷீக தளபதி சிரை பிடிக்கப்படுதல்.
06-- நஹாவன்த் யுத்தம்: ஹிஜ்ரி 21ல்.
07-- காலித் இப்னு வலீத்(ﷺ)அவர்களின் மரணம்: ஹிஜ்ரி 21ல்.

## உமர்(ﷺ)அவர்கள் பற்றி நபிகள் நாயகம்.

ஸஃத் இப்னு அபி வக்காஸ்(ﷺ)அவர்கள் நபியவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள்: “கத்தாபின் மகனே!! நிச்சயமாக எனதுயிர் எவன் கைவசமுள்ளதோ அவன் மீது சக்தியமாக, உம்மை ஷைத்தான் ஒரு பாதையால் சந்தித்தால், அப்பாதையை விட்டு விறண்டோடி இன்னொரு பாதையால் செல்கிறான்” (ஸஹீஹுல் புகாரி: 3683)

அபூ ஹுரைரா(ﷺ)அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “நாங்கள் நபி (ஸல்) அவர்களிடம் இருக்கும்போது அவர்கள் கூறினார்கள்: நான் உறக்கத்திலிருந்த வகையில் என்னை சுவனத்தில் கண்டேன். அப்போது ஒரு பெண் ஒரு மாளிகைக்கு அருகில் ஒரு பெண் வுழூச் செய்து கொண்டிருந்தால், இது யாருடைய மாளிகையென நான் கேட்ட போது இது உமர் (ﷺ)அவர்களுடைய மாளிகையென்று அவர்கள் கூறினார்கள்.(ஸஹீஹுல் புகாரி: 3680)

## உமர்(ﷺ)அவர்கள் கொலை செய்யப்படுதல்

உமர்(ﷺ)அவர்கள் ஹிஜ்ரி 23ல் தனது இறுதி ஹஜ்ஜை முடித்து விட்டு வருகின்ற வழியில் “அப்தஹ்” என்ற இடத்தில் இறங்கி அல்லாஹ்விடம் பின்வருமாறு பிரார்த்தனை செய்கிறார்கள்: ‘‘இறைவா! எனது வயது அதிகரித்து விட்டது, எனது பலம் குறைந்து விட்டது,இன்னிலையில் எனது

ஆட்சியின் ஏதும் குறைகள் ஏற்படுவதை நான் பயப்படுகிறேன். நபிகள் நாகம் அவர்கள் வாழ்ந்த ஊரிலையே என்னை ஷஹீதாக மரணிக்கச் செய்வாயாக…” உமர் ﵁அவர்களின் இப்பிரார்த்தனைக்கு அல்லாஹ் வெகுவிரைவில் பதிளலித்து விட்டான் அப்பிரார்த்தனையையும் ஏற்றுக் கொண்டான். மதீனா வந்து சில நாட்களால் அதாவது துல்ஹிஜ்ஜா மாதம் ஒரு வியாழனன்று உமர்﵁அவர்கள் மக்களுக்கு ஸுபஹ் தொழுகை நடாத்திக் கொண்டிருக்கும் வேளையில் அபு லு.ஃலுஆ என்ற பாரஷீக நாட்டைச்சேர்ந்த ஒரு நெறுப்பு வணங்கி இரு பக்கங்கள் கூராக்கப்பட்ட ஒரு கத்தியால் உமர்﵁அவர்களை மூன்று அல்லது ஆறு தடைவைகள் குத்துகிறான், அவ்விடத்திலேயே உமர்﵁அவர்கள் விழுந்து விடுகிறார்கள், தொழுகையை பூர்த்தி செய்வதற்காக அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப் அவர்கள் இமாமுடைய இடத்துக்கு முன்னேறுகிறார்கள், குத்தி விட்டும் ஓடும் அவனைப் பிடிப்பதற்காக பின்னாலிருந்த சிலர் எத்தனித்த போதும் அவ்வாறு வருபவர்களை இவன் தாக்கினான், கிட்டத்தட்ட உமர்﵁ அவர்களோடு சேர்த்து 14 நபர்கள் அவனால் தாக்கப்படுகிறார்கள்.

பிறகு உமர்﵁அவர்கள் இரத்தம் படிந்த நிலையில் அவரது வீட்டிற்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். பிறகு தன்னை தாக்கியவன் யாரென கேட்கிறார்கள்: அதற்கு முகீரா இப்னு ஷு.ஃபாவுடைய அடிமை அபு லு.ஃலுஆ என சொல்லப்படுகிறுது. அப்போது உமர்﵁ அவர்கள் தன்னை கொல்ல நினைத்தவன் முஸ்லிமாக இருந்ததில்லை என்பதற்காக அல்லாஹ்விடத்தில் நன்றி பாராட்டுகிறார்கள்.

பிறகு கூறினார்கள்: “அவனை அல்லாஹ்வுத்தஆலா இழிவு படுத்துவானாக நாம் அவனுக்கு நல்லதையே செய்தோம், ஏனெனில் முகீரா அவனுக்கு ஊதியமாக ஒவ்வொரு நாளும் இரண்டு திர்கங்களை வழங்கினார், பிறகு அதை அதிகரித்துத்தரும் படி என்னிடம் கேட்டான், ஏனெனில் அவனொரு தச்சனாகவும் இரும்பு உருக்குகின்ற ஒரு கொள்ளனாகவும் இருந்தான், நான் அவனுக்கு ஒரு மாதத்திற்கு 100 திர்கம் என்ற அடிப்படையில் அதிகரித்துக் கொடுத்தேன்”

மேலும் உமர்﵁அவர்கள் அச்செய்தியில் சொல்கிறார்கள்: “நான் அவனிடம் நீ நெறுப்பால் இரும்புகளை ஆயுதங்களாக செய்கிறாய் என எனக்கு எட்டியது” அதற்கு அபு லு.ஃலுஆ கூறினான்: “இறைவன் மீது ஆணையாக நான் உமக்கு ஒரு ஆயுதத்தை செய்வேன், அது பற்றி கிழக்கில் உள்ளவர்களும் மேற்கில் உள்ளவர்களும் பேசுவார்கள்”

இச்சம்பவம் புதன் கிழமையன்று பகல் வேளையில் இடம் பெருகிறது. மறுநாள் அதிகாலையிலேயே உமர்﵁அவர்களை அவன் செய்த ஆயுதத்தால் கொலை செய்கிறான். (அல் பிதாயா அந் நிஹாயா)

ஆகவே இச் செய்தியின் அடிப்படையில் பார்த்தால் அபு லு.ஃலுஆ உமர் ﵁ அவர்களைக் கொள்வதற்காக பல நாட்களாக திட்டம் தீட்டியுள்ளான், என்பது தெளிவாகிறது. அது மட்டுமலாமல் இதற்கு முன் உமர்﵁அவர்கள் ஸஹாபாக்களிடம் யுத்தத்தல் பிடிபட்ட கைதிகளை அவர்களது பகுதிக்கு அணுப்பி விடுங்களென இதற்கு முன்

கூறியுள்ளார்கள். ஆனால் சில ஸஹாபாக்கள் அவர்கள் எங்களுக்கு அதிகமான தேவைகளை நிறைவேற்ற உதவியாக இருக்கின்றனர், எனக்கூறி மறுத்து விடுகின்றனர்.

## உமர் (ﷺ) அவர்களின் கொலை தொடர்பாக ஷீயாக்கள்

இக்கொலைக்கும் ஷீயாக்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லாவிட்டாலும் அபு லு.ஃ.லுஆ பற்றி அவர்களின் நூல்கலில் சிறப்பாக சொல்லப்பட்டுள்ளன. எந்தளவுக்கெனில் “பாபா ஸுஜாவுத்தீன்” (மார்க்கத்தின்வீரம்) என்றெல்லாம் சொல்லப்பட்டுள்ளது. (அல்கினா அல் அல்காப்: 01-14)

01- எனினும் அவன் உமர் (ﷺ) அவர்களைக் கொள்வதற்கான காரணத்தை இமாம் இப்னு தைய்மிய்யா (ரஹ்) அவர்கள் சொல்கிறார்கள்: “நிச்சயமாக அபு லு.ஃ.லுஆ ஒரு தெளிவான இறை மறுப்பாளனாவான், இஸ்லாத்தின் மீதுள்ள குரோதத்தாலும் முஸ்லிம்களை பழி வாங்க வேண்டும் என்பதற்காகவும் உமர் (ﷺ) அவர்கள் பாரஷீக தேஷத்தை வெற்றி கொண்டதற்காகவுமே அவர்களைக்கொலை செய்தான். (மின்ஹாஜுஸ் ஸுன்னா: 06-370)

உமர் (ﷺ) அவர்கள் கொலை செய்யப்பட்ட நாளை அவர்கள் பெருநாள் தினமாகவும் அபு லு.ஃ.லுஆவை ஒரு முஸ்லிமாகவுமே கணிப்பிடுகிறார்கள். (அன்வாரு நு.ஃ.மானிய்யா:01-108)

### உமர் (ﷺ) அவர்கள் தொடர்பான ஷீயாக்களின் விமர்சனங்கள்

01- **உமர் (ﷺ) அவர்கள் மார்க்கத்துக்கு முறணான தீர்ப்புக்களை வழங்கினாரா?**

ஒரு முறை ஒரு மனிதர் உமர் (ﷺ) அவர்களுடைய சபைக்கு வந்து நான் குளிப்புக் கடைமையான நிலையில் அதை சுத்தம் செய்வதற்கு நீர் கிடைக்க வில்லையானால் நான் தொழுகையை நிறைவேற்ற வேண்டுமா? என கேட்டார், அதற்கு உமர் (ﷺ) அவர்கள் நீ நீரைப் பெற்றுக் கொள்ளும் வரை நீ தொழாதே என தீர்ப்பளித்தார்கள், அச்சபையிலிருந்த அம்மார் (ﷺ) அவர்கள் எழுந்து கலீபாவே நீங்களும் நானும் ஒரு படையில் இருந்த போது இருவரும் குளிப்பு கடமையானோம், அப்போது சுத்தம் செய்வதற்க நீர் கிடைக்காததால் நீங்கள் நீர் கிடைக்கும் வரை தொழுகையை நிறைவேற்றவில்லை நானோ மண்ணில் உருண்டு பிரன்டு தொழுகையை நிறைவேற்றினேன், அப்போது இது பற்றிய நபி (ஸல்) அவர்களிடம் சொன்ன போது அவர்கள் தயம்மம் செய்யும் முறை பற்றி கற்றுத்தந்தார்கள், இது உங்களுக்கு ஞாபகத்தில் இல்லையா? என அம்மார் (ﷺ) அவர்கள் கேட்டார்கள்.

இச்செய்தியின் ஷீயாக்கள் உமர் (ﷺ) அவர்கள் மார்க்கத்துக்கு முறணான தீர்ப்புக்களை அவரது ஆட்சியில் வழங்கி கொண்டிருந்தார், என அவர்கள் வழமையான மற்றவர்களை குறை சொல்லுவது போல் இதையும் மக்கள் மத்தியில் ஒரு குறையாக சொல்லுகின்றார்.

இவ்விடத்தில் நாம் சில விடயங்களை கவனிக்க வேண்டும். முதலாவதாக முஸ்லிம் உம்மத்தில் நபிகள் நாயகத்திற்கு பிறகு ஒருவருடைய கூற்றை வைத்து கண்மூடித்தனமாக அதை தீர்ப்பாக எடுக்க முடியாது. நாம் சில அறிஞர்களுடைய வரலாறுகளைப் படிக்கின்ற போது அவர்களுடைய தீர்ப்புக்களின் ஒரு சிலது ஸுன்னாவுக்கு மாற்றமாக அமைவதைப் பார்க்கலாம். இது மனித இயல்பே ஆகும். மனிதன் தவறு இழைக்கக்கூடியவன் என்றடிப்படையில் இவற்றை வைத்து ஒருவரை விமர்சனம் செய்ய முடியாது. அப்படியானால் உமர்(ரலி)அவர்களும் மனிதன் என்ற விதி முறைகளுக்கு உட்பட்டவர்களாகும்.

இதை விமர்சிக்கின்ற ஷீயாக்கள் அலி(ரலி)அவர்களை விமர்சிக்காதது ஏன் என நாம் சிந்திக்க வேண்டும். ஏனெனில் அவர் கூட ஒரு சந்தர்ப்பத்தில் தீர்ப்பு வழங்குவதில் தவறிட்டுள்ளார்.

ஒரு முறை அலி(ரலி)அவர்கள் கூறினார்கள்: கணவனையிழந்த கற்பினியான பெண் நீண்ட காலங்கள் இத்தா இருக்க வேண்டும். அதாவது கற்பினிப் பெண் தனது பிள்ளையைப் பெற்றாலும் மேலும் அதிகமாக 04 மாதங்கள் இத்த இருக்க வேண்டுமெனக் கூறினார்கள்.

இது ஸுன்னாவுக்கு தெளிவாக முறண்படுகின்ற ஒரு செய்தியாகும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் ஸபிய்யா அல் அஸ்லமி என்ற பெண்ணுக்கு அவர்களுடைய கணவன் அவள் கற்பினியாகயிருந்த நிலையில் மரணித்ததால் பிள்ளைப்பேறு வரை இத்தா இருக்கும் படி சொன்னார்கள். (ஸஹீஹுல் புஹாரி: 3991)

எனவே அலி(ரலி)அவர்களுடைய இத்தீர்ப்பை வைத்து நாம் அவர்களை விமர்சனம் செய்யமாட்டோம். காரணம் தவறு என்பது அனைவருக்கும் பொதுவானது. இந்நிலையில் உமர்(ரலி)அவர்கள் அவ்வாறு தீர்ப்பு வழங்கியதற்கு சில காரணங்களை அறிஞர்கள் சொல்கிறார்கள்:

01- உமர்(ரலி)அவர்கள் குளிப்புக் கடமையானால் அதை நீரால் மாத்திரமே சுத்தம் செய்ய வேண்டுமென்ற நம்பிக்கையை கொண்டிருந்தார்கள். அதன் தவறை அம்மார்(ரலி)அவர்கள் சுட்டிக்காட்டிய போது மௌனமாக இருந்ததும் அவர்களைத் தடுக்காமல் இருந்ததும் தனது தவறை ஒப்புக் கொண்டதாகவே அமைகின்றன.

02- ஒரு வேளை இச்சம்பவத்தை உமர்(ரலி)அவர்கள் மறந்திருக்கலாம். அதை அம்மார்(ரலி)அவர்கள் சுட்டிக்காட்டிய போது ஏற்றுக் கொண்டார்கள்.

**02- நபி(ஸல்)அவர்கள் தனது இறுதி நேரத்தில் அலி(ரலி)அவர்களின் ஆட்சியுரிமை தொடர்பாக சொல்ல வந்த உறுதி மொழியை தடுத்தார்களா?**

நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று நபிகள் நாயகம் மரணத்தருவாயில் இருக்கும் சந்தர்பத்தில் பின்வருமாறு கூறினார்கள்:

இப்னு அப்பாஸ்(ﷺ)அறிவிக்கிறார்கள்: “நபியவர்களுக்கு மரணம் சம்பவிக்கும் தருவாயில் அவர்களது வீட்டில் சில ஆண்கள் இருந்தனர், அவர்களுல் உமர்(ﷺ)யும் இருந்தார், அப்போது நபி (ஸல்) அவர்கள்: ‘‘நீங்கள் எனக்குப் பின்னால் வழிதவறாமல் இருப்பதற்காக உங்களிடம் (ஒன்றை) எழுதித் தருவதற்கு ஓர் ஏட்டை எடுத்து வாருங்கள்’’ என்றார்கள். அதற்கு அங்கிருந்த உமர்(ﷺ) “நிச்சயமாக நபியவர்களுக்கு நோய் அதிகரித்து விட்டது அதனாலேயே இவ்வாறு கூறுகிறார்கள், உங்களிடம் தான் குர்ஆன் இருக்கின்றதே அதைப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள் என்றார்” இந்நிலையில் நபியவர்களின் குடும்பத்தினர் ஒருவருக்கொருவர் முறண்பட்டு வாக்குவாதம் செய்து கொண்டனர். அவர்களில் சிலர் ஏட்டை நபியவர்களிடம் வழங்குங்கள் நாம் அவரகளுக்குப் பின்னர் வழிதவறாமல் இருப்பதற்காக அதில் எழுதட்டும் என்றனர். அவர்களில் சிலர் உமரவர்கள் கூறியது போன்று நோயின் கடுமை காரணமாகவே நபியவர்கள் இவ்வாறு சொல்கிறார்கள் என்றனர். அவர்களுக்கு மத்தியில் சப்தம் அதிகரித்த போது நபியவர்கள் (கோபமடைந்து) இவ்விடத்தை விட்டு எழுந்து செல்லுங்கள் என்றார்கள்.

இந்த செய்தியை சிலர் ஆதாரமாகக் கொண்டு உமர்(ﷺ)அவர்கள் நபியவர்களை நோயினால் உலருகிறார்கள், என்று கூறியதாக அவர் மீது குற்றம் சாட்டுகின்றனர். எனினும் இது பற்றி அறிவிக்கப்பட்ட வேறு சில அறிவிப்புக்களில் அவ்வார்த்தை உமர்(ﷺ)அவர்கள் தவிர்ந்த வேறு எவரிடமிருந்தோ வெளியாகியுள்ளது என்பது தெளிவாகின்றது.

உமர்(ﷺ)அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “நபியவர்களுக்கு நோயதிகரித்த போது மயக்கமுற்றார்கள். மயக்கம் தெளிந்ததன் பின்பு மக்கள் தொழுதார்களா? எனக் கேட்டார்கள் அதற்கு ஆயிஷா (ரழி) அவர்கள்: அவர்கள் உங்களை காத்திருக்கிறார்கள் என பதிளலித்தார்கள். அப்போது தொழுகைக்காக சுத்தம் செய்வதற்காக நீர் வைக்கப்பட்டது அதில் நபியவர்கள் குளித்து விட்டு தொழுகைக்குச் செல்ல ஆயத்தம் ஆன போது மீண்டும் மயக்கமுற்றார்கள். இவ்வாறு மூன்று முறை நிகழ்ந்தது. இறுதியில் அபூபக்கர் (ﷺ)அவர்களை தொழுகைகை நடாத்துமாறு ஏவினார். (ஸஹீஹுல் புகாரி: 687)

மேலும் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் அறிவிக்கிறார்கள்: “நான் நபியவர்களை கடுமையாக வேதனைப்படுவதைக் கண்டேன், அப்போது நான் அவர்கள் மீது இரக்கப்பட்டு அல்லாஹ்வின் தூதரே நீங்கள் ஏன் கடுமையாக வேதனைப் படுகிரீர்கள் என வினவினேன். அதற்கு அவர்கள் நான் உங்களில் இருவர் படும் வேதனையை அணுபவிக்கிறேன் என்றார்கள். (ஸஹீஹுல் புகாரி: 5648)

இச்செய்தியை வைத்து பார்க்கும் போது நபியவர்கள் மரணப்படுக்கையில் கடுமையாக வேதனைப் படுகிறார்கள், இந்நிலையில் ஏட்டைக் கொண்டு வாருங்கள் என்ற வார்த்தையை உமர்(ﷺ)அவர்கள் கேட்டவுடன் இந்தளவுக்கு நோயதிகரித்த நிலையிலும் எதற்காக உங்களை நீங்கள் வருத்திக்கொள்ள போகிரீர்கள் என்ற எண்ணத்தில் உமர்(ﷺ)அவர்கள் அங்கிருந்தவர்களிடம் நபியவர்களுக்கு நோய்

அதிகரித்து விட்டது. எங்களிடம் தானே அல்லாஹ்வின் வேதமான அல் குர்ஆன் உள்ளதே நபியவர்கள் இக்கஷ்டமான நிலையில் ஏன் எழுத வேண்டும்!... என்ற இரக்க மணப்பான்மையால் அவ்வார்த்தையைக் கூறியிருக்கலாம்.

அது மட்டுமல்லாமல் உமர்(ﷺ)அவர்கள் அவ்வாறு கூறியதற்கு காரணம்: நபயவர்களின் இறுதி ஹஜ்ஜின் போது அல் குரஆனின் சூரத்துல் மாயிதாவின் மூன்றாவது வசனமான

الْيَوْمَ أَكْمَلْتُ لَكُمْ دِينَكُمْ وَأَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِي وَرَضِيتُ لَكُمُ الْإِسْلَامَ دِينًا

**இதன் பொருள்:** நான் இன்றைய தினம் உங்களது மார்க்கத்தை உங்களுக்கு பூர்த்தியாக்கி விட்டேன். எனது அருட்கொடைகளை உங்கள் மீது பூரணமாக்கி விட்டேன், மேலும் இஸ்லாத்தை மார்க்கமாக உங்களுக்கு நான் பொருந்திக் கொண்டேன்.

மேலும் நபியவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: “உங்களை அல்லாஹ்விடமும் சுவர்க்கத்தில் அருகில் கொண்டு செல்லும் அனைத்து விடயங்களையும் அறிவித்து விட்டேன். நான் உங்களுக்கு அல்லாஹ் ஏவிய விடயங்கள் எதையுமே சொல்லாமல் விட்டதில்லை. மேலும் அல்லாஹ் தடுத்த எதையுமே நான் உங்களை விட்டு தடுக்காமல் விட்டதில்லை. (நஸயி: 2719)

மேற்குறிப்பிட்ட அல் குர்ஆன் வசனத்திலும் ஹதீதிலும் மார்க்கம் பூரணப்படுத்தப்பட்டு விட்டது. அதில் அனைத்து விடயங்களும் சொல்லப்பட்டு விட்டன. ஏன் உறுதியாக சொல்ல முடியும். இந்த அடிப்படையில் உமர் (ﷺ)அவர்களும் மார்க்கம் பூரணப்படுத்தப்பட்டு விட்டது. இதற்கு பிறகு நபியவர்கள் எதை புதிதாக சொல்லப் போகிறார்கள்: ஒன்று அது அல் குர்ஆனிலிருக்கும் அல்லது நோயின் அவலத்தின் காரணமாக நபியவர்கள் அவ்வாறு சொல்கிறார்கள். என்ற யூகத்தில் உமர்(ﷺ)அவர்கள் அவ்வாறு கூறியிருக்கிறார்.

## நபியவர்கள் எழுத நாடிய அந்த விடயம் என்ன?

அலி(ﷺ)அவர்கள் அறிவிக்கிறார்கள்:“நாங்கள் (நபியவர்கள் நோயுற்ற போது) அவர்களிடம் இருந்தோம். அப்போது தனது சமூதாயம் தனக்குப் பின் வழி தவறாமல் இருப்பதற்காக தான் ஒன்றை எழுதுவதற்கு ஒரு ஏட்டைக் கொண்டு வரும்படி என்னிடம் கூறினார்கள். எனினும் அதை எடுக்கச் செல்லும் வேளையில் அவர்களின் உயிர் கைப்பற்றப்படுமோ? என நினைத்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் அதிக மனன சக்தியும் கிரகிக்கும் தன்மையும் கொண்டவன், நீங்கள் நாடியதைக் கூறினால் நான் அவற்றை மனனமிட்டுக் கொள்வேன் என்றேன்.

அதற்கு நபியவர்கள் உங்களுக்கு நான் தொழுகையைக் கொண்டும் தர்மத்தைக் கொண்டும் நீங்கள் வலக்கரம் சொந்தமாக்கியோருக்கும் லநவ செய்வதைக் கொண்டும் உபதேஷம் செய்கிறேன் என்றார்கள். (பைஹகி: 05:18)

ஷீயாக்கள் உமர்(ரழி)அவர்களை நபியவர்களுக்கு மாறு செய்து விட்டார் என குற்றம் சாட்டினால் முதலாவதாக அலி(ரழி)அவர்களே மாறு செய்தவராவார். ஏனெனில் அவர்களே ஏட்டைக் கொண்டு வரும்படி நேரடியாக ஏவப்பட்டவராவார்.

நபியவர்கள் உண்மையிலேயே மார்க்கத்தில் கட்டாயமாக சொல்ல வேண்டிய ஒன்றை எழுதுவதற்கு நாடியருந்தாலோ அல்லது அலி(ரழி)அவர்களுடைய ஆட்சி சம்பந்தமாக எழுத விரும்பியிருந்தாலோ அந்நிகழ்வுக்குப் பின்னால் நபியவர்கள் நான்கு நாட்கள் உயிரோடு இருந்தார்கள். அக்காலப்பகுதியில் சொல்லியிருக்கலாமே ஆனால் அவ்வாறு சொன்னதாக எந்த ஆதாரத்தையும் எம்மால் காண முடியாது.

ஷீயாக்கள் சொல்வது போன்று அலி(ரழி)அவர்களின் கிலாபத் பற்றிய அவசியமான செய்தியை சொல்ல விடாமல் உமர் (ரழி)அவர்கள் தடுத்தார்கள் என்றால் உமர் (ரழி) அவர்களுக்கு ஷீயாக்களின் பார்வையில் மற்றவர்களுடைய மனதில் உள்ளவற்றை அறியக்கூடிய ஒரு சக்தி உள்ளதா?

அவர்கள் சொல்வது போன்று அலி(ரழி)அவர்களுடைய கிலாபத் பற்றிய செய்தியை உமர்(ரழி)அவர்கள் தடுத்ததால் சொல்லாமல் நபியவர்கள் மரணித்து விட்டார்கள் என்றால் நபியவர்கள் மார்க்கத்தில் ஒரு விடயத்தை எமக்கு சொல்லாமல் மறைந்து விட்டார்கள் என எண்ணலாமா?...

ஆகவே இவ்வாறான வழிகெட்ட சிந்தனைகள் வருவதை விட்டும் அல்லாஹ் எம்மைப் பாதுகாக்க வேண்டும். அதற்கு முன் நபியவர்களின் நுபுவத்திலும் ஸஹாபாக்களை குறை காண்பதை விட்டும் எமது உள்ளத்தை சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

### 03- உஸாமா(ரழி)அவர்களின் படையில் செல்வதை விட்டும் பின் வாங்கியவர்களை நபியவர்கள் சபித்தார்களா?

நபியவர்கள் தனது இறுதிக் காலப்பகுதியில் ஷாம் பகுதிக்கு போரிற்குச் செல்வதற்காக உஸாமா(ரழி)அவர்களின் தலைமையில் ஒரு படையை தயார் செய்தார்கள், அப்படையில் அபூ பக்கர், உமர், அபு உபைதா(ரழி)அவர்களாகிய மூவரும் உள்ளடங்கினர். இச் சந்தர்ப்பத்தில் அப்படையில் செல்லாமல் பின் வாங்கியவர்களை நபியவர்கள் சபித்தார்கள். நபியவர்கள் மரணித்த போது உஸாமா(ரழி)அவர்களின் படை சென்றது எனினும் அப்படையில் அபூ பக்கரோ, உமரோ செல்லவில்லை. ஆகவே அவ்விருவரும் நபிகள் நாயகத்தால் சபிக்கப்பட்டவர்களாவர். என்ற குற்றச் சாட்டை ஷீயாக்கள் வழமையாக குறை சொல்வது போன்று சொல்கின்றனர்.

எனினும் **முதலாவதாக:** நபியவர்கள் இவ்வாறு சபித்ததாக சொல்லப்பட்ட செய்தி பொய்யான செய்தியாகும். **இரண்டாவதாக:** அபூ பக்கர்(ரழி)அவர்கள் உஸாமா(ரழி)அவர்களுடைய படையில் இருந்ததில்லை. ஏனெனில் அவர்களை நபியவர்கள் மக்களுக்கு தொழுகை நடாத்துமாறு ஏவியிருந்தார்கள். இச்சந்தர்ப்பத்தில் நபியவர்கள் எவ்வாறு அபூ பக்கர் (ரழி) அவர்களை அப்படையில் செல்லுமாறு கட்டளை இட்டிருப்பார்கள்!....

உமர்(ﷺ)அவர்களைப்பொருத்த வரையில் அவர்கள் இப்படையில் இருந்தார்கள். எனினும் நபியவர்கள் மரணித்த போது கலீபாகயிருந்த அபூ பக்கர்(ﷺ)அவர்கள் உஸாமா(ﷺ) அவர்களிடம் சென்று ஆலோசனைகள் பெறவேண்டிய தேவைகள் இருப்பதால் உமர்(ﷺ) அவர்களை மதினாவில் தங்கவைப்பதற்கு அனுமதி கேட்கிறார்கள், அதற்கு உஸாமா(ﷺ) அவர்கள் அனுமதி வழங்குகிறார்கள். ஆகவே உமர்(ﷺ)அவர்கள் அப்படையில் செல்லாமல் இருந்தது கலீபாவினதும் படைத்தளபதியினதும் அனுமதிபெற்ற பின்னரே ஆகும்.

**04- அலி இல்லாவிட்டால் உமர் அழிந்திருப்பார்:**

இவ்வாறு ஒரு வாசகத்தை உமர்(ﷺ)அவர்கள் கூறியதாக பல நூல்கள் காணக்கூடியதாக உள்ளது. அதே போன்று இவ்வாசகத்தை அவர்கள் கூறியதற்கு ஒரு நிகழ்வும் பதியப்பட்டுள்ளது. **அதாவது :-** உமர்(ﷺ)அவர்கள் ஒரு விபச்சாரத்தில் ஈடுபட்ட ஒரு பெண்ணுக்கு கல்லெறிந்து கொல்லும்படி ஏவினார்கள். அப்போது அலி(ﷺ)அவர்கள் வந்து அப்பெண் சுயநினைவற்றவள் என அறிவித்தவுடன் உமர்(ﷺ)அவர்கள் தான் வழங்கிய தண்டனையை இரத்து செய்து விட்டு "அலி இல்லாவிட்டால் உமர் அழிந்திருப்பார்" என்று கூறினார்.
(அல் இஸ்தீஆப், அர் ரயாளுன் நழரா)

இவ்வாறு ஒரு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது மாத்திரமல்லாமல் இது போன்று வேறு சில அறிவிப்புக்களும் ஷீஆக்களது சில நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட அறிவிப்புக்களையும் சற்று விளக்கமாக நோக்கினால் சிறந்தது எனக்கருதுகிறேன்.

மற்றுமொறு அறிவிப்பில்:- உமர்(ﷺ)அவர்களிடம் விபச்சாரத்தில் ஈடுபட்டதாக ஒரு பெண் அழைத்து வரப்பட்டால், அதற்கு அவர்கள் அப்பெண்ணுக்கு கல்லெறிந்து கொல்லுமாறு கட்டளையிட்டார்கள். அப்பெண்ணை அழைத்துச் செல்லும் வழியில் அலி(ﷺ)அவர்களை சந்திக்கின்றனர். அப்போது அவர்கள் இப்பெண்ணுக்கு என்ன நேர்ந்தது எனக் கேட்டார். அதற்கவர்கள் இவள் விபச்சாரத்தில் ஈடுபட்டுவிட்டால் ஆகவே உமர்(ﷺ)அவர்கள் இவளுக்கு கல்லெறிந்து கொல்லும்படி கட்டளையிட்டார்கள் என்றனர். அதற்கு அலி (ﷺ) அவர்கள் அப்பெண்ணை அவர்களிடம் இருந்து விடுவிக்கச்செய்து அவர்களை திருப்பி அனுப்பினார்கள். அவர்கள் உமர்(ﷺ)அவர்களிடம் வந்தபோது அவர்களிடம் உமர்(ﷺ) அவர்கள் நீங்கள் எதற்காக மீண்டு வந்தீர்கள் எனக்கேட்டார் அதற்கவர்கள்: எங்களை அலி(ﷺ)அவர்களே திருப்பி அனுப்பினார் என்றனர்.

அதற்கு உமர்(ﷺ)அவர்கள் இவ்வாறு அலி (ﷺ)அவர்கள் செய்திருந்தால் அவர் அறிந்த ஒரு விடயத்திற்காகவே செய்திருப்பார். என்று கூறி, அலி(ﷺ)அவர்களை அழைத்து வரும்படி தூது அனுப்பினார். அப்போது அலி(ﷺ)அவர்கள சற்று முகத்தில் கோபத்தின் அடையாளம் தென்பட்ட நிலையில் வந்தார்கள். "நீர் ஏன் இவர்களை திருப்பி அனுப்பினாய்" என்று

உமர்(ரழி)அவர்கள் கேட்க, அதற்கு அலி(ரழி)அவர்கள்: "நீர் நபிகள் நாயகம் அவர்கள் பின்வருமாறு கூறிய செய்தியை செவிமடுக்க வில்லையா?

"மூன்று சாராரை விட்டும் பாவங்களை எழுதுகின்ற எழுது கோல் உயர்த்தப்பட்டுள்ளது. தூங்குகின்ற ஒருவர் கண் விழிக்கும் வரை வயது வராத சிறிய ஒருவர், வயதை அடையும் வரை புத்தி சுயாதீனம் அற்ற ஒருவர் மீண்டும் அவரது முன்னைய நிலையை அடையும் வரை" என்று கூறினார்கள்.

அதற்கு உமர்(ரழி)அவர்கள் "ஆம்" என்றார்கள். அதற்கு அலி(ரழி)அவர்கள்: "இப்பெண் புத்தி சுயாதீனம் அற்ற ஒரு பெண்ணாகக் இருந்த நிலையில் அவ்வீட்டார் இவளோடு இணைந்து கொண்டார்" அதற்கு உமர் (ரழி)அவர்கள்: "இந்த விடயம் எனக்குத் தெரியாது" என்று கூறி தண்டனையை இரத்துச் செய்தார்கள்.

இது இமாம் அஹ்மத் அவர்களுடைய **பழாயில்** என்ற நூலில் இடம்பெற்ற அறிவிப்பாகும். எனினும் இதில் உமர்(ரழி)அவர்கள் கூறியதாக சொல்லப்படும் **"அலி இல்லாவிட்டால் உமர் அழிந்திருப்பார்"** என்ற வாசகம் இடம்பெரவில்லை. மாறாக இவ்வாசகம் ஷீயாக்கலால் தொகுக்கப்பட்ட நூல்களில் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளன. உமர்(ரழி) அவர்கள் இந்நிகழ்வில் தான் அறியாத ஒன்றில் ஈடுபடப் பார்க்கிறார்கள், எனினும் பிறகு தடுக்கப்படுகிறார்கள், இந்நிலையில் உமர்(ரழி)அவர்கள் பாவம் செய்தவராக கருதப்பட மாட்டார். அவ்வாறு பாவம் செய்தவராக கருதப்படவில்லையானால் இவ்வார்த்தையை ஏன் அவர் கூற வேண்டும்! உமர்(ரழி)அவர்கள் எதற்காக அழிய வேண்டும்!!! ஒரு வேளை உண்மையிலேயே இவ்வாறு கூறியிருந்தால் இது அவரை குறை சொல்வதற்கு ஆதாரமாக எடுத்துக்கொள்ள முடியமா?...

**மற்றுமொரு அறிவிப்பு:** இமாம் இப்னு அபீ ஷய்பா தனது நூலில் அபூ ஸுப்யான் என்ற நபரைத் தொட்டு பின்வருமாறு அறிவிக்கிறார்: "ஒரு பெண் அவளது கணவன் சில காலம் அவளை விட்டு சென்று விட்டார், பின்பு அவள் கற்பினயாக இருக்கும் நிலையில் மீண்டும் வந்தார், தனது மணைவி கற்பினி என்ற செய்தியை அறிந்த அவர் ஆட்சியாளர் உமர் (ரழி) அவர்களிடம் முறைப்பாடு செய்தார். அதற்கவர்கள் அப்பெண்ணுக்கு கல்லெறிந்து கொள்ளுமாறு கட்டளை இட்டார்கள். இச்செய்தியை அறிந்த முஆத் இப்னு ஜபல்(ரழி) அவர்கள் உமர்(ரழி)அவர்களிடம் வந்து "உமக்கு இப்பெண்ணுக்கு தண்டனை வழங்க முடியும் என்பதே தவிர இவளது கருவில் உள்ள குழந்தைக்கு தண்டனை வழங்க முடியாது" என்றார். அதற்கு உமர் (ரழி)அவர்கள் அப்பெண் அக்குழந்தையை பெற்றெடுக்கும் வரை தடுத்து வைக்குமாறு ஏவினார்கள்.

சற்று காலத்துக்கு பிறகு அப்பெண் குழந்தையை பெற்றெடுத்த போது அது தனது தந்தையின் சாயலை போன்றிருந்ததால் அப்பெண்ணின் கணவர் இது தனது குழந்தையென ஒப்புக்கொண்டார். இதையறிந்த உமர்(ரழி)அவர்கள் : "முஆத்தைப் போன்ற ஒருவரை எமது பெண்கள் பெற்றெடுப்பதற்கு இயழாமல் போய் விட்டார்கள். முஆத் இல்லாவிட்டால் உமர் அழிந்திருப்பார்" என்று கூறினார்.

இச்செய்தியில் அலி(ﷺ)அவர்களுக்குப் பகரமாக முஆத் (ﷺ)அவர்கள் இடம்பெற்றுள்ளார்கள். எனினும் இதன் அறிவிப்பாளர் வரிசையில் ஹஜ்ஜாஜ் என்கின்ற ஒருவர் இடம்பெற்றுள்ளார். இவர் பலவீனமானவரென பல அறிஞர்களால் விமர்சிக்கப்பட்டுள்ளார். ஆகவே இந்நிகழ்வு இடம் பெற்றதாக ஊர்ஜிதமாக சொல்ல முடியாது.

முஹிப்புத் தபரி என்ற ஒருவர் தனது நூலில் பின்வருமாறு ஒரு செய்தியை குறிப்பிடுகிறார். உமர்(ﷺ)அவர்கள் 06 மாதத்தில் ஒரு குழந்தையை பெற்றெடுத்த ஒரு பெண்ணுக்கு (விபச்சார குற்றத்தில் சந்தேகப்பட்டு) கல்லெறிந்து கொள்ளும்படி கட்டளை இட்டார். அந்நேரத்தில் அலி(ﷺ)அவர்கள் அவ்விடத்திற்கு வந்து அல் குர்ஆனிய வசனங்களான:

(கர்ப்பத்தில்) அவனைச் சுமப்பதும்; அவனுக்குப் பால் குடி மறக்கச் செய்வதும் (மொத்தம்) முப்பது மாதங்களாகும். (அஹ்காப் : 15)

இன்னும் அவனுக்குப் பால் குடி மறத்த(லி)ல் இரண்டு வருடங்கள் ஆகின்றன் ஆகவே "நீ எனக்கும் உன் பெற்றோர்க்கும் நன்றி செலுத்துவாயாக என்னிடமே உன்னுடைய மீளுதல் இருக்கிறது." (லுக்மான் : 14)

ஆகிய வசனங்களை ஓதிக்காட்டி ஒரு கர்ப்பினி குழந்தையைப் பெற்றெடுக்கும் குறைந்த காலப்பகுதி 6 மாதங்களாகும் எனக் கூறினார்கள். இதை செவிமடுத்தவுடன் உமர்(ﷺ) அவர்கள் அப்பெண்ணுக்கு வழங்கிய தண்டனையை இரத்துச்செய்து விட்டு "அலி இல்லாவிட்டால் உமர் அழிந்திருப்பார்"

இச்செய்தியில் **உதுமான் இப்னு மத்வி அஷ்ஷெய்பானி** என்ற ஒரு நபர் இடம் பெற்றுள்ளார். **இவர் பலவீனமானவர்** என்றும் இட்டுக்கட்டப்பட்ட செய்திகளை அறிவிப்பவர் என்றும் இவர் அறிவிக்கும் செய்திகளை ஏற்றுக்கொள்ள முடியாததென்று பல அறிஞர்கள் விமர்சித்துள்ளார்கள். எனவே இவ்வறிவிப்பு ஒரு பலவீனமான அறிவிப்பே ஆகும்.

**அலி இல்லாவிட்டால் உமர் அழிந்திருப்பார்** என்ற வாசகம் இடம்பெற்ற அனைத்து அறிவிப்புக்களுமே பலவீனமானவையாகும். இவ்வாசகத்திற்கு காரணமாக சொல்லப்படுகின்ற அந்நிகழ்வு இமாம் அஹ்மத் அவர்களுடைய நூலில் குறிப்பிடப்பட்டிருப்பினும் இவ்வாசகம் அதில் காணப்படவில்லை. அதுமாத்திரமில்லாமல் ஷீயாக் கொள்கை சார்ந்த நூல்களில் மாத்திரமே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

### 02- அமீருல் மு.ஃமினீன் என்ற பட்டத்தை தனக்குத்தானே சூட்டிக் கொண்டார்

அமீருல் மு.ஃமினீன் என்ற பதம் முஸ்லிம்களின் தலைவர் என்ற அர்த்தத்தை குறிக்கின்றது. முதன்முதலாக ஆட்சியாளர்களில் இப்பெயர் மூலம் அழைக்கப்பட்டவர் உமர்(ﷺ)அவர்களே ஆவார். இவருக்கு முன்னால் ஆட்சி செய்த அபூ பக்கர்(ﷺ)அவர்கள் கலீபத்துல் ரஸுலில்லாஹ் (அல்லாஹ்வின் தூதர் பிரதிநி) என்ற பெயர் மூலமே அனைவராலும்

அழைக்கப்பட்டன. எனினும் உமர்(ﷺ)அவர்கள் காலத்தில் இஸ்லாமிய ஆட்சி விரிவடைந்ததால் மக்கள் அனைவரும் இவரை முதன்முதலாக அமீருல் மு.ஃமினீன் என்ற பட்டத்தினை வைத்து அழைத்தனர்.

இதற்கு ஷீயாக்கள் அப்பெயரை உமர்(ﷺ)அவர்கள் தனக்குத்தானே பெருமையூட்டும் முகமாக சூட்டிக் கொண்டார் என்ற குற்றச்சாட்டடை முன்வைக்கிறார்கள். எனினும் நாம் வரலாற்றை ஆய்வு செய்கின்ற போது இப்பெயர் உமர்(ﷺ)அவர்களுக்கு இராக் வாசிகளால் சூட்டப்பட்ட பெயர் என்பதையும் அன்றிலிருந்து அவர் அவ்வாறே அழைக்கப்பட்டார். என்பதையும் நாம் காணலாம். "உமர்(ﷺ)அவர்கள் அரம்பகாலத்தில் கடிதங்களை எழுதும் போது அபூபக்கர்(ﷺ) அவர்களின் பிரதிநிதி என்றே தன்னை குறிப்பிட்டு எழுதுவார். ஒரு சந்தர்ப்பத்தில் அவர் இராக்கின் கவர்னருக்கு இராக் வாசிகளைப்பற்றி அறிந்து கொள்வதற்காக அங்கிருந்து இருவரை மதீனாவிற்கு அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கொண்டதற்கினங்க அப்துல்லாஹ் இப்னு ரபீஆ, அதீ.ஃ இப்னு ஹாகம் ஆகிய இருவரும் மதீனாவிற்கு வந்து மஸ்ஜிதுன் நபவியில் நுழைந்த போது அங்கு அம்ர் இப்னு ஆஸ்(ﷺ)அவர்களை கண்டு கொள்கிறார். இவ்விருவரும் அவரிடம் "அமீருல் மு.ஃமினீடம் நாங்கள் செல்வதற்கு அனுமதி பெற்றுத் தாருங்கள்" என்று கேட்டனர்.

அதற்கவர் "அல்லாஹ்வின் மீது ஆனையாக நீங்களிருவரும் அவரது பெயரை சரியாக சொல்லியுள்ளீர்கள்" என்று கூறி விட்டு உமர்(ﷺ)அவர்களிடம் சென்று "அஸ்ஸலாமு அலைக்கும் அமீருல் மு.ஃமினீன்" என்று கூறினார். அதற்கு உமர்(ﷺ)அவர்கள் "இப்பெயரை உமக்கு யார் கற்றுத்தந்தது" என்று கேட்டார். அதற்கவர் பள்ளியில் நிகழ்ந்த சம்பவத்தைக் கூறிவிட்டு நீங்கள் அமீர் நாங்கள் முஸ்லிம்கள் என்று கூறினார்"

(அஷ்ஷீரா அல்ஜலிய்யா, ஆசிரியர்: ஷரிய்யா அப்துல்லாஹ் இப்னு ஜஹ்ஷ்)

**06 - கேள்விகள் கேட்பதையும் குர்ஆனிய வசனங்களையும் அய்வு செய்வதையும் தடுத்தார்கள்.**

உமர்(ﷺ)அவர்கள் ஒரு போதும் குர்ஆனிய வசனங்களை ஆய்வு செய்வதை தடுத்ததில்லை. மாறாக ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் இவருக்கும் இன்னுமொரு மனிதருக்கும் இடையில் இடம்பெற்ற ஒரு கருத்து பரிமாற்றதில் இஸ்தி.ஃபார் (இறை மன்னிப்பு) தொடர்பான ஒரு வசனத்தை சுட்டிக் காட்டினார்.

முஹம்மத் இப்னு அல்முன்தஷிர் என்பவர் அறிவிக்கிறார்: ஒரு மனிதர் உமர்(ﷺ) அவர்களிடம் கூறினார்: "நான் அல்லாஹ்வின் வேதத்தில் கடுமையான வசனத்தை அறிவேன்" அதற்கு உமர்(ﷺ)அவர்கள் தான் வைத்திருந்த ஒரு தடியால் அவருக்கு சிறுது அடித்து விட்டு "உமக்கு என்ன நேர்ந்து விட்டது, அல்லாஹ்வின் வேதத்தில் இவ்வாறு துருவித்துருவி ஆராய்கிறாய்" என்று கேட்டார். பிறகு அம்மனிதர் சென்று விட்டு மறு நாளும் உமர்(ﷺ)அவர்களிடம் வந்தார், அப்போது அவர்கள் "நீர் கூறிய அந்த வசனம் என்ன?" என்று கேட்டார். அதற்கு அம்மனிதர்: "என்னை நேற்றைய தினம் விட்டிருந்தால் நான் கூறியிருப்பேனே" என்று கூறினார். அதற்கு

உமர் رضي الله عنه அவர்கள்: “இந்நிகழ்வால் நேற்றைய இரவு நான் தூங்கவில்லையென்று கூறினார்”அதற்கு அம்மனிதர் அமீருல் மு.ஃமினீனே! அல்லாஹ் கூறுகிறான்:

(மு.ஃமின்களே!) மறுமையில் நீங்கள் விரும்பிய படியோ, அல்லது வேதத்தையுடையவர்கள் விரும்பிய படியோ நடந்து விடுவதில்லை - எவன் தீமை செய்கிறானோ, அவன் அதற்குரிய தண்டனை வழங்கப்படுவான்;. இன்னும் அவன் (அங்கு) அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் (தனக்குப்) பாதுகாவலனாகவோ, துணை செய்பவனாகவோ காண மாட்டான். (அந் நிஸா : 123)

எனும் வசனத்தை ஓதிக்காட்டி நாம் ஈடுபடுகின்ற அனைத்துப் பாவங்களுக்கும் எமக்கு தண்டனை வழங்கப்படும் எனக் கூறினார். அதற்கு உமர்(ﷺ)அவர்கள் அல்லாஹ் இறை மன்னிப்பு தொடர்பாக கூறிய வசனத்தை ஓதிக்காட்டி அம்மனிதருக்கு புரிய வைத்தார்கள்.

அல்லாஹ் கூறுகிறான் : “எவரேனும் ஒரு தீமையைச் செய்துவிட்டு, அல்லது தமக்குத் தாமே அநியாயம் செய்து பின்னர் அவர் (மனப்பூர்வமாக) அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்பாரானால் - அவர் அல்லாஹ்வை மன்னிப்பவனாகவும் மிக்க கருணை உடையவனாகவும் காண்பார். " (நிஸா: 110)

ஆகவே உமர் (ﷺ)அவர்கள் மீது சொல்லபபட்ட குற்றச்சாட்டான, குர்ஆனிய வசனங்களை ஆய்வு செய்வதை தடுத்தார்கள். என்பது இந்நிகழ்வை சரியாக புரிந்து கொள்ளாததால் ஏற்பட்ட விளைவே ஆகும். ஏனெனில் இந்நிகழ்வில் உமர்(ﷺ)அவர்கள் தடுத்தது எதையெனில் குர்ஆனிய வசனங்களில் அவசரப்பட்டு அது இறக்கப்பட்ட சூழ் நிலையறியாது அது தொடர்பான மற்றுமொறு வசனம் இறங்கியுள்ளது என்பதையறியாமல் ஆய்வு செய்வதை ஆகும்.

மற்றுமொரு குற்றச்சாட்டான உமர்(ﷺ)அவர்கள் கேள்விகள் கேட்பதை தடுத்தார்கள் என்பது இக்குற்றச்சாட்டை முன்வைப்பவர்களில் விழங்களில் ஏற்பட்ட குறைவே ஆகும். காரணம், இதுவரை நடக்காத அல்லது நடப்பதற்கு சாத்தியமற்றுப்போன ஒரு விடயம் தொடர்பாக கேள்விகள் கேட்பதையே அவர்கள் தடுத்தார்கள். ஏனெனில் இஸ்லாம் நடக்காத ஒன்றையோ, அல்லது நடப்பதற்கு சாத்தியமற்றுப்போன ஒன்றையோ கூறும் மார்க்கமல்ல. அது மாத்திரமல்லாமல் தேவையில்லாமல் அதிக கேள்விகள் கேட்பது ஒரு சமூகத்தை அழிவிற்கு இட்டுச்செல்லுமென்ற அடிப்படையில் தடுத்தார்கள்.

**இம்முறை அனைத்து அறிஞர்களாளும் கடைபிடிக்கப்பட்டிருந்த முறையே ஆகும்.**

மஷ்ரூக் என்பவர் அறிவிக்கிறார்: “நான் உபை இப்னு க.ஃப்(ﷺ)அவர்களிடம் ஒரு விடயம் தொடர்பாக வினவினேன். அப்போது அவர்கள்: இது

நிகழ்ந்துள்ளதா எனக் கேட்டார்கள். அதற்கு நான் இல்லை என்றேன். அதற்கவர்கள்: அது நிகழும் வரை காத்திருப்போம். அது நிகழ்ந்தால் அதற்கான தீர்பபை ஆய்வு செய்வோம் என்றார்கள்”

ஸைத் அல்முன்கிரி என்பவர் அறிவிக்கிறார்: “ஒரு மனிதர் இப்னு உமர்(ﷺ)அவர்களிடம் வந்து ஒரு விடயம் தொடர்பாக கேட்டார், நான் அது என்ன விடயமென்று அறிந்திருக்கவில்லை. அப்போது அவர்கள் நிகழாத ஒன்றைப்பற்றி கேட்காதீர். ஏனெனில் எனது தந்தை உமர் சொல்வதாக நான் செவிமடுத்துள்ளேன். அவர் மிம்பரில் இருந்த நிலையில் பின்வருமாறு கூறினார்: நிகழாத ஒன்றை கேட்கும் மனிதனை நான் காயப்படுத்த விரும்புகிறேன். ஏனெனில் அல்லாஹ் எமக்கு நிகழும் விடயங்களை மாத்திரமே தெரிவு படுத்தியுள்ளான்”

ஆமிர் அஷ்ஷ.ஃபி என்பவர் அறிவிக்கிறார்: “அம்மார் இப்னு யாஸிர்(ﷺ)அவர்கள் ஒரு விடயம் தொடர்பாக கேட்கப்பட்டார்கள். அப்போது அவர்கள் இது நிகழ்ந்த ஒரு விடயமா என்று கேட்டார். அதற்கு இல்லையென கூறப்பட்டது. அப்போது அவர்கள் அது நிகழும்பொது பார்த்துக் கொள்ளலாம் என்றார்கள்”

எனவே உமர்(ﷺ)அவர்கள் தேவையில்லாத, கற்பனை ரீதியிலான கேள்விகளைக் கேற்பதை மாத்திரமே தடுத்துள்ளார்கள். மேலும் இவ்வழிமுறையையே அனைத்து ஸஹாபாக்களும் அறிஞர்களும் கடைபிடித்துள்ளார்கள். இவ்வாறு உமர்(ﷺ)அவர்கள் மீது ஷீஆக்களால் ஏகப்பட்ட குற்றச்சாட்டுகள் அள்ளி வீசப்படுகின்றன.

# அமீருல் மு.ஃமினீன் உதுமான்(ﷺ)அவர்கள்

## பகுதி-01

### கிலாபத்தை பொறுப்பேற்றல்

**ஆலோசனை சபை:**

உமர்(ﷺ)அவர்கள் அபு லு.ஃலுஆ என்பவனால் தாக்கபபட்ட போது மக்களுடைய வேண்டுகோளுக்கிணங்க ஆட்சிப்பொறுப்பு பற்றிய தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை நபிகள் நாயகத்தால் சுவர்க்க வாசிகள் என போற்றப்பட்ட ஆறு ஸஹாபாக்களிடம் ஒப்படைத்தார்கள். (உதுமான், அலி, தல்ஹா, ஸுபைர், அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ப், ஸ.ஃத் இப்னு அபி வக்காஸ்) (ﷺ)ஆகியவர்களாவர்.

இமாம் புகாரி அவர்கள் அந்த வரலாற்றை தனது நூலில் உமர்(ﷺ)அவர்களுடைய கொலையிலிருந்து உதுமான்(ﷺ)அவர்களுடைய ஆட்சி பீடம் ஏறல் வரை உறுதிப்படுத்தப்பட்ட நபர்கள் மூலமாக பதிந்துள்ளார். **அந்த வரலாறானது**:

உமர்(ﷺ)அவர்களிடம் அமீருல் மு.ஃமினீனே தங்களுக்குப்பின்னால் இப்பொறுப்புக்கு ஒருவரை நியமியுங்கள் என கேட்கப்படுகிறது. அதற்கு உமர்(ﷺ)அவர்கள் இப் பொறுப்புக்குத் தகுதியானவர்களாக பின்வருகின்ற

நபர்களையே நான் கருதுகிறேன். ஏனெனில் நபிகள் நாயகம் அவர்களைப் பொருந்திக்கொண்ட நிலையிலேயே மரணித்தார்கள். எனக்கூறி மேற்குறிப்பிட்ட ஆறு ஸஹாபாக்களின் பெயர்களையும் பரிந்துரைக்கிறார்கள்.

அதன் பிறகு கூறினார்கள்: இவ்விடயத்தில் உங்களுக்கு எனது மகன் அப்துல்லாஹ் சாட்சியாக இருப்பார் எனினும் அவருக்கு ஆட்சியை பொறுப்பேற்கும் அதிகாரம் இல்லை. மேலும் இப்பொறுப்பு ஸஃத்﵁அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டால் அது அவருக்குரியது. அவ்வாறில்லையெனில் உங்களில் யார் ஆட்சிப்பொறுப்பை பெற்றுக்கொள்கிறாரோ அவர் ஸஃத் ﵁அவர்களிடம் உதவி பெற்றுக் கொள்ளட்டும்.

உமர்﵁அவர்கள் அடக்கம் செய்யப்பட்டதற்கு அப்பால் அவ் ஆறு பேரும் ஒன்று கூடினர். அப்போது அப்துர் ரஹ்மான்﵁அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: "எம்மில் மூவர் மற்றைய மூவரிடம் தமது பொறுப்புக்களை ஒப்படைப்போம்" அப்போது ஸுபைர்﵁ அவர்கள் தமது பொறுப்பை அலி﵁அவர்களிடம் ஒப்படைத்தார். தல்ஹா﵁அவர்கள் தமது பொறுப்பை உதுமான்﵁அவர்களிடம் ஒப்படைத்தார்கள். ஸஃத்﵁அவர்கள் தமது பொறுப்பை அப்துர் ரஹ்மான﵁அவர்களிடம் ஒப்படைத்தார்கள். இவ்வாறு மூவரும் தமது பொறுப்புக்களை விட்டு விளகிக்கொண்டனர். இவ்வேளை கிலாபத்தை பொறுப்பேற்க இருப்போர் அலி மற்றும் உதுமான், அப்துர் ரஹ்மான் ﵁ஆகிய மூவருமாகும்.

அப்போது அப்துர் ரஹ்மான்﵁அவர்கள் உதுமான், அலி﵁ஆகிய இருவரிடமும் கூறினார்கள்: "உங்கள் இருவரில் யார் இப்பொறுப்பை மற்றவருக்கு வழங்க உள்ளீர்கள்" அப்போது உதுமான், அலி﵁ஆகிய இருவரும் மௌனமாக இருந்தனர். அப்போது அப்துர் ரஹ்மான்﵁அவர்கள் அவ்விருவரில் ஒருவரின் கையைப் பிடித்து "உமக்கு அல்லாஹ்வின் தூதரோடு நெருங்கிய உறவு உள்ளது. இஸ்லாத்தில் ஆரம்பத்தில் இணைந்து கொண்டவரும் ஆவீர். நான் இவ் ஆட்சிப்பொறுப்பை உம்மிடம் ஒப்படைத்தால் நீர் நீதி செலுத்த வேண்டும்"

இவ்வாறு இருவரிடமும் கேட்டு விட்டு அலி﵁அவர்களைப் பார்த்து அலியே! நான் உதுமான்﵁யை ஆட்சியாளராக நியமித்தால் நீர் அவருக்கு செவி சாய்த்துக் கட்டுப்பட வேண்டும். என்று சொல்லி விட்டு பிறகு அதே போன்று உதுமான்﵁அவர்களிடமும் இவ்வாறு கேட்டார்கள். இவ்வாறு இருவரிடமும் வாக்குறுதி எடுத்ததன் பிற்பாடு உதுமான் ﵁அவர்களைப் பார்த்து உதுமானே! உமது கையை நீட்டும் என்று கூறி அவரை ஆட்சியாளராக நியமித்து பைஅத் செய்தார்கள். உடனே அலி﵁அவர்களும் பைஅத் செய்ததன் பிறகு அங்கு கூடியிருந்த அனைவரும் பைஅத் செய்தனர்.

இதுவே உதுமான்﵁அவர்கள் ஆட்சியை பொறுப்பேற்ற நிகழ்வை அறிவிக்கின்ற ஸஹீஹுல் புகாரியில் வருகின்ற சரியான செய்தியாகும். அந்நிகழ்வு தொடர்பான மேலதிக தகவல்களை உள்ளடக்கிய இன்னொருஅறிவிப்பும் இடம் பெற்றுள்ளது. அதாவது அப்துர் ரஹ்மான்

இப்னு அவ்ப்﴾رضي الله عنه﴿அவர்கள் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் முஹாஜிர்களிடமும், அன்ஸார்களிடமும் ஒவ்வொருவராக இப்பொறுப்புக்கு யார் மிகப் பொறுத்தமானவரென தீவிரமாக விசாரித்ததன் பிறகு அதன் பெறுபேற்றை சொல்லுகின்ற போது: "அல்லாஹ்வின் மீது ஆனையாக நான் முஹாஜிர் மற்றும் அன்ஸாரிகளுடைய அனைத்து வீடுகளுக்கும் சென்றேன். அவர்களிடம் இது பற்றி வினவினேன், அவர்களில் அனைவருமே உதுமான் ﴾رضي الله عنه﴿அவர்களேயே சிறப்பாக கருதினர்"

ஆகவே உதுமான்﴾رضي الله عنه﴿அவர்கள் ஆட்சியாளராக பொறுப்பை ஏற்றுக்கொண்டது அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப்﴾رضي الله عنه﴿அவர்களுடைய சொந்த முடிவல்ல. மாறாக மக்களால் தீர்மாணிக்கப்பட்ட முடிவேயாகும். கவலைக்குரிய விடயம் என்னவெனில் நாம் இஸ்லாமிய வரலாற்றை படிக்கின்ற பொழுது குறிப்பாக ஸஹாபாக்களுடைய வரலாறுகளை ஆய்வு செய்யும் பொழுது பெறும்பாலும் இரு வேறுபட்ட அறிவிப்புக்களை காணலாம். அதிலொன்று சரியானதாகவும் மற்றையது தவறானதாகவும் இருப்பது நிச்சயம், எனினும் எமது சமூதாயம் தவறான அறிவிப்புக்களை படித்து அவற்றையே ஏனையவருக்கும் கற்றுக் கொடுக்கின்றனர். இந்தவகையில் உதுமான்﴾رضي الله عنه﴿அவர்களுடைய ஆட்சி பொறுப்பேற்கும் நிகழ்வு தொடர்பாக இமாம் தபரி அவர்களுடைய வரலாற்று நூலில் நாம் ஏளவே கூறிய **அபு மிஹ்னப்** என்ற அறிஞர்களால் விமர்சிக்கப்பட்ட நபரால் ஒரு அறிவிப்பு பதியப்பட்டுள்ளது. **அது பின்வருமாறு:**

உமர்﴾رضي الله عنه﴿அவர்கள் தாக்கப்பட்ட போது அவர்களிடம்: "அமீருல் மு.்.மினீனே! தங்களுக்குப் பிறகு ஒருவரை கலீபாவாக நியமித்தால் சிறந்ததே என்று கூறப்பட்டது" அதற்கவர்கள்: "நான் யாரை நியமிப்பது?.... அபு உபைதா இப்னு ஜர்ராஹ் உயிரோடிருந்தால் நான் அவரை நியமித்திருப்பேன், என்னிடம் எனதிரட்சகன் ஏன் அவ்வாறு செய்தாய் என்று கேட்டால் உமது தூதர் அவர் இந்த சமூதாயத்தின் நம்பிக்கையாளர் என்று சொன்னதை நாம் செவிமடுத்துள்ளேன் என பதிளலிப்பேன். அல்லது அபு ஹு"தைபா﴾رضي الله عنه﴿அவர்களுடைய ஸாலிம் உயிரோடிருந்திருந்தால், நான் அவரை நியமித்திருப்பேன்" என்றார்கள்.

அப்போது ஒரு மனிதர் உமர்﴾رضي الله عنه﴿அவர்களிடம் கூறினார்: "உமது புதல்வர் அப்துல்லாஹ்﴾رضي الله عنه﴿அவர்களை கலீபாவாக நியமிக்கலாமே!... அதற்கு உமர்﴾رضي الله عنه﴿அவர்கள்: "உம்மை அல்லாஹ் சபிப்பானாக.... அல்லாஹ் மீது ஆனையாக நான் இதை ஒரு போதும் விரும்பியதில்லை. தனது மனைவியை மனவிளக்கு வழங்குவதற்கு சக்தியற்ற ஒரு மனிதரை நான் எவ்வாறு நியமிப்பது?.... மேலும் உமரின் குடும்பத்திலிருந்து ஒருவர் முஹம்மத் ﴾ﷺ﴿அவர்களின் சமூதாயம் தொடரபாக இறைவனிடம் கேள்வி கேட்க்கப்படுவதை நான் விரும்புவதில்லை. மேலும் நான் ஒருவரை எனக்குப்பின் நியமித்தால் என்னை விடச்சிறந்தவர் ஒருவர் (அபூ பக்கர்) அவருக்குப்பின் நியமித்து விட்டுச் சென்றுள்ளார். நான் நியமிக்கவில்லையானால் என்னை விடச் சிறந்தவர் ஒருவர் (நபிகள் நாயகம்) நியமிக்காமல் சென்றுள்ளார். நிச்சயமாக அல்லாஹ் தனது மார்க்கத்தை வீணாக்க மாட்டான்"

பிறகு அவர்கள் அங்கிருந்தோர் அவ்விடத்தை விட்டு வெளியேரிச்சென்று மீண்டும் வந்து உமர்(ﷺ)அவர்களிடம் கூறினார்கள்: “அமீருல் மு.ஃ.மினீனே! ஏங்களுக்கு நீங்கள் ஒரு உடன்படிக்கை செய்து தரலாமே என கேட்டார்கள்” அதற்கு உமர் (ﷺ)அவர்கள்: “நான் உங்களுக்கு ஒருவரை நியமிக்க நாடுகிறேன் அவர் உங்களை சத்தியத்தின்பால் இட்டுச் செல்வார்” என்று கூறி அலி(ﷺ)அவர்களைச் சுட்டிக் காட்டினார்கள்.

எனினும் நபி (ஸல்) அவர்கள் சுவனபாதி என்று கூறிய ஆறு நபர்களை உங்கள் மீது பொறுப்புச்சாற்றுகிறேன். அவர்களில் ஒருவரை தெரிவு செய்து கொள்ளுங்கள். நீங்கள் ஒருவரை நியமித்தால் அவரோடு நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். இந்நிகழ்வின் பின் அங்கிருந்த அனைவரும் அவ்விடத்ததை விட்டு சென்றார்கள். அப்போது அப்பாஸ் (ﷺ)அவர்கள் அலி(ﷺ)அவர்களிடம் கூறினார்கள்: “நீர் அந்த கூட்டத்தினரோடு இணைந்து கொள்ளாதே” அதற்கு அலி(ﷺ)அவர்கள்: “நான் முரண்பாடு ஏற்படுவதை வெறுக்கிறேன் என்றார்கள்” அதற்கு அப்பாஸ்(ﷺ)அவர்கள் “அப்படியானால் நீர் வெறுப்பதை நிறைவேற்று என்றார்கள்”

அடுத்த நாள் காலையில் அவ் 06 நபர்களையும் உமர்(ﷺ)அவர்கள் அழைத்து: “நான் உங்களை இம்மக்களின் தலைவர்களாகக் கருதுகிறேன். ஆகவே இவ் ஆட்சிப்பொறுப்பு உங்களைத் தவிர வேறு எவரிடமும் செல்லக்கூடாது. நிச்சயமாக நான் உங்களுக்கு மத்தியில் முரன்பாடுகள் ஏற்படுவதையும் அதன் மூலம் மக்கள் முரன்படுவதையும் பயப்படுகிறேன் என்றார்கள். நான் மரணித்தால் மூன்று நாட்கள் ஆலோசனை நடாத்துங்கள். சுஹைப் அவர்கள் மக்களுக்குத் தொழுகை நடாத்தட்டும். உங்களிடம் ஒரு கலீபா நியமிக்கப்படாமல் நீங்கள் 04வது நாளை அடையக்கூடாது. மேலும் சுஹைப் அவர்களிடம் கூறினார்கள்: நீர் மூன்று நாட்கள் மக்களக்கு தொழுகை நடாத்தும். அலி, உதுமான், ஸுபைர், ஸ.ஃ.த், அப்துர் ரஹ்மான்(ﷺ)ஆகியவர்களை அழையுங்கள். மேலும் தல்ஹா(ﷺ)அவர்கள் வந்தால் அவரையும் இணைத்துக் கொள்ளும். எனது மகன் அப்துல்லாஹ்வையும் ஆலோசராக நீங்கள் கூடுகின்ற இடத்துக்கு வரவைய்யுங்கள். சுஹைபே! நீர் அவர்களுக்கு முன்னால் நின்று ஆலோசனைகளை நடாத்துங்கள். அவர்களில் 05 போர் ஒருவரை ஆட்சியாளராக ஏற்றுக்கொண்டு ஒருவர் முரண்பட்டால் அவரது தலையை துண்டியுங்கள்.

மேலும் அவர்களில் நாள்வர் இணைந்து ஒருவரை ஆட்சியாளராக ஏற்றுக்கொண்டு ஏனைய இருவரும் மறுப்புத் தெறிவித்தால் அவ்விருவரின் தலையை துண்டியுங்கள். அல்லது அவர்களில் மூவர் ஒருவரையும் மற்றைய மூவர் இன்னொருவரையும் தெறிவு செய்தால் அவ்விடத்தில் எனது மகன் அவ்விரு பிரிவில் ஒரு பிரிவை தெரிவு செய்யும் அதிகாரம் வழங்கப்படுவார். அவர்களிலிருந்து கலீபா தெரிவு செய்யப்படல் வேண்டும். அவ்வாறும் அவர்கள் அப்துல்லாஹ்வுடைய தீர்ப்பை பொருந்திக் கொள்ளவில்லையானால் **அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப்** எப்பிரிவில் இருக்கின்றாரோ அவர்களோடு நீங்கள் இணைந்து கொண்டு மற்றவர்கள் இதற்கு உடன்படாவிட்டால் அவர்கள் அனைவரையும் கொலை செய்து விடுங்கள்”

இதுவே இமாம் தபரி அவர்கள் தனது நூலில் பதிந்த **அபு மிஹ்னப்** என்பவனுடைய அறிவிப்பாகும். இதிலே நாம் ஏற்கனவே குறிப்பிட்ட இந்நிகழ்வு தொடர்பான சரியான அறிவிப்புக்கும் இதற்குமிடையில் முரண்பாடுகளும் மறுக்கப்பட வேண்டிய அதிகரிப்புக்களும் செய்யப்பட்டுள்ளன.

உமர்(ﷺ) அவர்கள் இவ்வறிவிப்பின் அடிப்படையில் ஸாஹாபாக்களுடைய இரத்தங்கள் ஓட்டப்படுவதை ஆகுமாக்கினார்கள். என்று விழங்கப்படுகிறது. இதுவே இவ்வறிவிப்பு பொய் என்பதை தெளிவாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

## உதுமான்(ﷺ)அவர்களே கிலாபத்திற்கு தகுதியுடையவர்கள்

மக்கள் அனைவரும் ஒன்றினைந்து உதுமான்(ﷺ)அவர்களை ஆட்சியாளராக நியமித்து அவருக்கு உடன் படிக்கையும் செய்தார்கள். ஏனெனில் அபூ பக்கர் மற்றும் உமர்(ﷺ) அவர்களாகிய இருவருக்கும் பிறகு சிறந்த நபித்தோழராக அனைவராலும் உதுமான்(ﷺ) அவர்களே கருதப்படுகிறார்கள். இதை பின்வருகின்ற இப்னு உமர்(ﷺ)அவர்களுடைய செய்தி உறுதிப்படுத்துகிறது.

“நாங்கள் நபி (ஸல்) அவர்களுக்குப்பிறகு அவர்களின் தோழர்களாகிய அபூ பக்கர், உமர், உதுமான்(ﷺ)அவர்களை வேறு எவருக்கும் நாம் சமமாக கருதியதில்லை. இவர்களேயே சிறந்தவர்களாக கருதி வந்தோம். பிறகு ஏனைய நபித்தோழர்களை அவர்கள் பாட்டிலேயே விட்டு விட்டோம். அவர்களுக்கு மத்தியில் நாங்கள் சிறப்புபார்க்க வில்லை”

(ஸஹீஹுல் புகாரி: 3697)

மற்றுமொரு அறிவிப்பில்: நாங்கள் இவ்வாரு சொல்வதை நபியவர்கள் செவிமடுப்பவர்களாக இருந்தார்கள். எனினும் அவர்கள் எங்களை இவ்வாறு சொல்வதை விட்டும் தடுக்கவில்லை.

(மு.ஃஜமுத் தபரானி அல் கபீர்: 12:13132)

இதன் காரணமாகவே இமாம் அஹ்மத் அவர்களும் தாரகுத்னி அவர்களும் பின்வருமாறு சொல்கிறார்கள்: யார் உதுமான்(ﷺ)அவர்களை விட அலி(ﷺ)அவர்களை ஆட்சிப் பொறுப்பு விடயத்தில் முட்படுத்துகிறார்களோ அவர்கள் அனைத்து முஹாஜிர்களுக்கும் அன்ஸாரிகளுக்கும் மாறு செய்து விட்டார்கள். ஏனெனில் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப்(ﷺ)அவர்கள் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரிகளுடைய ஒவ்வொரு வீடாக சென்று இவ்விடயம் தொடர்பாக ஆலோசனை செய்தார்கள். அவர்கள் அனைவருமே உதுமான்(ﷺ)அவர்களேயே தகுதியானவர் எனக் கருதினர்” ஆகவே அக்காலத்தில் வாழ்ந்த அம்மக்களே தங்கள் ஆட்சியாளரே இவர்தான் என தெறிவு செய்ததன் பிறகு அவ்விடயத்தில் எமக்கு இரண்டாம் கருத்து சொல்வதற்கு எவ்வித அதிகாரமும் இல்லை.

**அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்களிடத்தில்:** யார் அபூபக்கர் மற்றும் உமர்(ﷺ)அவர்களை விட அலி(ﷺ)அவர்களை முற்படுத்துகிராரோ அவர்

வழிகேடனும் மார்க்கத்தில் புதிதை உண்டு பன்னுபவர் ஆவார். மேலும் யார் உதுமான்(ﷺ)அவர்களை விட அலி(ﷺ)அவர்களை முட்படுத்துகிறார்களோ அவர்கள் தவறிழைத்து விட்டார்கள். எனினும் இவ்விடயத்தில் சில அறிஞர்கள் கடும்போக்கை பிரயோகித்துள்ளார்கள். அதாவது யார் அலி (ﷺ)அவர்களை உதுமான்(ﷺ)அவர்களை விட முட்படுத்துகிராறோ அவர் நபித் தோழர்கள் அமானிதத்துக்கு மோசடி செய்து உதுமான்(ﷺ)அவர்களைத் தெரிவு செய்து விட்டார்களென என்னிக் கொன்டிருக்கிறார்கள்.

## பகுதி-02

## உதுமான் (ﷺ) அவர்கள் பற்றிய சுருக்கக் குறிப்பு

**முழுப் பெயர்:** உதுமான் இப்னு அப்பான் இப்னு அபில் ஆஸ் இப்னு உமைய்யா இப்னு அப்துஸ் ஸம்ஷ்.

**புனைப் பெயர்:** நபிகள் நாகத்தின் இரு புதல்விகளை திருமணம் செய்து கொண்டதால் ‘‘துன்னூரைய்ன்’’ என பெயர் சூட்டப்பட்டார்கள்.

## உதுமான் (ﷺ) அவர்கள் பற்றி நபிகள் நாயகம்

அபூமூஸா அல் அஷ்அரி(ﷺ)அவர்கள் அறிவிக்கிறார்கள்: “ஒரு முறை நபியவர்கள் ஒரு தோட்டத்தில் நுழைந்தார்கள். அதற்கு என்னை வாயிற் காவளராக நியமித்தார்கள். அப்போது உதுமான்(ﷺ)அவர்கள் நபிகள் நாயகத்திடம் நுழைவதற்கு அணுமதி கேட்டார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் என்னிடம் கூறினார்கள்: அவருக்கு கதவை திறந்த விடுங்கள், மேலும் அவருக்கு ஏற்பட இருக்கின்ற சோதனைகளுக்காக அவரிடம் சுவர்க்கத்தைக் கொண்டு நன்மாராயம் கூறுவீராக... என்றார்கள்” (ஸஹீஹுல் புகாரி: 3695)

முர்ரத் இப்னு க.்.ப்(ﷺ)அவர்கள் அறிவிக்கிறார்கள்: “நான் நபியவர்கள் குழப்பங்கள் பற்றிய செய்தியை கூற நான் செவிமடுத்தேன் அப்போது அவ்விடத்தால் முகத்துக்கு திரையிட்ட ஒரு மனிதர் சென்றார். அப்போது நபியவர்கள் கூறினார்கள்: இவர் அந்நாளில் நேர் வழியிலிருப்பார். அப்போது நான் அவர் யாரென அறிவதற்காக எழுந்து சென்றேன், அவர் உதுமான் (ﷺ)அவர்களாக இருந்தார்கள்” (திர்மிதி: 3704)

அப்துர் ரஹ்மான் இப்னு ஸம்ரா(ﷺ)அவர்கள் அறிவிக்கிறார்கள்: “நபிகள் நாயகம் அவர்கள் தபூக் யுத்தத்திற்கான படையை தயார் செய்து கொண்டிருக்கும் நிலையில் ஒரு ஆடையில் 1000 தீனார்களை உதுமான்(ﷺ)அவர்கள் நபியவர்களிடம் கொண்டு வந்து அவர்களுடைய மடியில் கொட்டினார்கள். அவற்றை நபிகள் நாயகம் ஒவ்வொன்றாக பிறட்டிப் பார்த்துக் கொண்டு இன்றைய தினத்துக்குப்பிறகு அப்பானுடைய மகன் என்ன செய்தாலும் அது அவருக்கு தீங்காக அமையாது. இவ்வாறு பல தடவைகள் கூறிக் கொண்டிருந்தார்கள்”

(அஹ்மத்: 05:63)

## உதுமான் (ﷺ) அவர்களின் ஆட்சியல் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள்

01- ஆபிரிக்க பிரதேஷம் வெற்றி கொள்ளப்படுதல்: ஹிஜ்ரி 27.
02- தாதுஸ் ஸவாரி யுத்தம்: ஹிஜ்ரி 31.
03- மஸ்ஜிதுன் நபவி வரிவாக்கப்படுதல்.
04- கடற்படை உறுவாக்கப்படுதல்.
05- குர்ஆன் இரண்டாவது தடவையாகவும் ஒன்று சேர்க்கப்படுதல்.

## பகுதி-03

## குழப்பம் ஆரம்பித்தல்

நபிகள் நாயகம் அவர்கள் தான் உயிரோடு இருந்த போது முன்னறிவிப்புச்செய்த உதுமான்(ﷺ)அவர்களுக்கு ஏற்படக்கூடிய மாபெறும் சோதனையான அவர் கொள்ளப்படுவதற்கு காரணமாக இருந்த குழப்பங்கள் ஹிஜ்ரி 34ம் ஆண்டு ஆரம்பமாகின. மிஸ்ர், கூபா மற்றும் பஸரா ஆகிய பிரதேஷங்களிலிருந்து வரம்பு மீறிய சில கவாரிஜ்கள் ஹஜ்ஜுக்காக செல்லப்போவதாக அறிவித்து விட்டு மதீனாவுக்கு வருகை தந்தனர். இவ்வாறு அவர்களின் மதீனா நகருக்கான வருகை மூன்று கட்டங்களாக அமைந்தது. அதன் விரிவான தகவல்களை அறிவதற்கு முன்னர் குழப்பங்கள் ஏற்படுவதற்கான காரணங்களை சற்று அலசலாம்.

**காரணம் ஒன்று:** யூதனான அப்துல்லாஹ் இப்னு ஸப.்.: இவனே குழப்பங்கள் ஏற்படுவதற்க பிரதான காரணமாக காணப்படுகிறான். இப்படியொரு நபர் இருப்பதை முன்னோர்கள் தங்களது எழுத்துக்கள் மூலமாக உறுதிப்படுத்தியுள்ளனர். இவனுக்கென தனிப்பட்ட கொள்கைகள், பிரத்தியேகமான இயக்கம் போன்றவை காணப்பட்டன. எனினும் இப்படியொரு நபர் இருப்பதை தாஹா ஹுஸைன் மற்றும் முர்தலா அல் அஸ்கரி போன்றோர் மறுத்துள்ளனர். அஸ்கரி என்பவரை பொறுத்தவரை இப்னு ஸப.். தொடர்பாக சொல்லப்படுகின்ற அறிவிப்புக்கள் அனைத்தையும் ஒன்று சோர்த்து, அறிஞர்களால் பொய்யரென விமர்சிக்கப்பட்ட **ஸெய்ப் இப்னு உமர்** வழியாக அறிவிக்கப்பட்ட செய்திகள், ஆகவே இவ்வறிவிப்புக்களை ஏற்றுக்கொள்ள முடியாது. முடிவில் **இப்னு ஸப.்.** என்ற ஒருவன் இல்லையென முடிவை வெளயிடுகிறார்கள். எனினும் இவருடைய வாதங்களை பின்வருகின்ற வழிமுறைகளினூடாக தவறு என நிருபிக்கலாம்.

01- இப்னு அஸாகிர் அவர்களுக்கு இப்னு ஸப.். பற்றிய அறிவிப்புக்கள் **அம்மார் அத்துஹ்னி, அபு துபைல் மற்றும் ஷு.்.பா, ஸலமா** போன்றோர் வழியாகவே கிடைக்கப்பெற்றுள்ளன. **ஸெய்ப் இப்னு உமர்** வழியாக கிடைக்கப்பெறவில்லை. (தாரீஹு தமஸ்க்: 06-29)

02- அதிகமான ஷீயா வரலாற்று ஆசியர்கள் மற்றும் அவர்களுடைய ஹதீஸ்கலை அறிஞர்கள் என்று சொல்லப்படுவோர்கள் இப்படியொரு நபர் இருந்ததை உறுதிப்படுத்தியுள்ளனர். அது மாத்திரமல்லாமல் ஷீயாக்களால் அவர்களது இமாம் என சொல்லப்படும் ஜ.்.பர் அஸ் ஸாதிக் (ரஹ்)

அவர்கள் கூறியதாக அவர்களது 05 நூல்களில் 05 அறிவிப்புக்கள் பதியப்பட்டுள்ளன.

03- அஹ்லுஸ் ஸுன்னாக்களைப்பொறுத்தவரை **இப்னு ஸப.ஃ.** பற்றிய வரலாற்றைத்தொகுத்த அனைவருமே அவனால் முஸ்லிம் சமூகத்தில் ஏற்பட்ட தாக்கங்களை குறிப்பிட்டுள்ளனர். எனினும் ஷீயாக்களில் தற்காலத்தில் தோன்றியவர்களே இவனின் இருப்பை மறுக்கின்றனர். அதேபோன்று ஷீயாக்கள் மறுக்கும் காரணத்தை அறியாத சில அஹ்லுஸ் ஸுன்னா எழுத்தாளர்கள் கூட அவர்களோடு இவ்விடயத்தில் ஒன்று படுகின்றனர்.

**அப்துல்லாஹ் இப்னு ஸப.ஃ.** ஆரம்பத்தில் யூதனாகயிருந்தான். பிறகு இஸ்லாத்தை ஏற்றதாகக்கூறிக் கொண்டு முஸ்லிம் சமூதாயத்தில் தனது காலை ஊன்றினான். பின்பு தான், அலி(ﷺ)அவர்களுக்குசார்பானவன் என்று கூறிக்கொண்டு அலி(ﷺ)அவர்களுக்கு கடவுள் தன்மை அளிக்கும் வகையில் **ஸபஇய்யா** என்ற இயக்கத்தை உருவாக்கினான்.

இவர்கள் ஒரு முறை அலி(ﷺ)அவர்களிடம் வந்து நீதான் அவன் என்றார்கள். அதற்கு அலி(ﷺ)அவர்கள் "அவன் என்பது யார்" எனக்கேட்டார்கள். அதற்கு **"நீதான் அல்லாஹு"** என்று கூறினர். உடனே அலி(ﷺ)அவர்கள் ஓர் நெறுப்புக்கிடங்கை தயார் செய்து இக் கூற்றிலிருந்து மீளாதவர்களை எறித்து விடுவேன் என்று கூறி அவர்களில் அதிகமானோரை எறித்தார். எனினும் அப்துல்லாஹ் இப்னு ஸப.ஃ.வும் மேலும் சிலரும் விரண்டோடி விட்டனர்.

இவன் சில யூதச் சிந்தாந்தங்களான **மீள் பிறப்பு, வஸிய்யத் மேலும் தலமைத்துவம் ஒரு குடும்பத்திலேயே காணப்பட வேண்டும்.** ஆகியவற்றை மக்கள் மத்தியில் பரப்பினான். அரபிகள் இவனின் கொள்கைகளால் கவரப்பட்டனர். மேலும் உதுமான் (ﷺ)அவர்கள் தொடர்பாக சில பொய்யான வதந்திகளை பரப்பினான். மேலும் இவனும் இவனைச் சார்ந்தோரும் **அலி, சுபைர் மற்றும் தல்ஹா, ஆயிஷா போன்ற நபித்தோழர்களின் பெயர்களை வைத்து அவர்கள் எழுதியது போல் சில கடிதங்களை எழுதினார்.** அக் கடிதங்களில் அந்நபித்தோழர்கள் உதுமான்(ﷺ)அவர்கள் தொடர்பாக சொல்லப்படும் குற்றச்சாட்டுகள் காணப்பட்டன. ஆகவே மக்கள் மத்தியில் நல்லபிப்ராயம் பெற்ற நபித் தோழர்களின் பெயர்களால் தங்களிடம் அக்கடிதங்கள் வந்தடைந்ததால் அவற்றை மக்கள் உண்மைதானென நம்பிவிட்னர்.

- மேலும் ''ஈஸா நபி மீண்டும் பூமிக்கு வருவதை நம்புவது போன்று முஹம்மத் நபியவர்களும் வருவார்கள். அவர்களே மீள் வருகைக்கு மிகத்தகுதியுடையவர்கள்'' என்ற மீள் வருகைக் கொள்கையை மக்கள் மத்தியல் பதித்தான்.

அத்தோடு ''இது வரை இவ்வுலகுக்க வந்த ஒவ்வொரு நபிக்கும் ஒவ்வொரு வஸிய்யத் காணப்பட்டார். அந்தடிப்படையில் அலி(ﷺ)அவர்கள் முஹம்மத் நபியவர்களுடைய வஸிய்யத் ஆகும்'' என்ற வஸிய்யத் கொள்கையையும் பிரச்சாரம் செய்தான்.

## இப்னு ஸப.ஃவுடைய பிரச்சாரத்திற்கு உதவி புரிந்தோர்

இவனுடைய வழிகேட்டின்பால் கொண்டு செல்லக்கூடிய இப்பிரச்சாரத்திற்கு பின்வருவோர் பங்குதாரர்களாக இருந்ததாக அடையாளம் காட்டப்பட்டுள்ளனர்.

- அல் காபிகி இப்னு கர்ப், அப்துர் ரஹ்மான் இப்னு உதைஸ் அல் பலவி, கினானா இப்னு பிஷ்ர், ஸைவ்தான் இப்னு ஹுமரான், அப்துல்லாஹ் இப்னு ஸய்த் இப்னு வர்கா, அம்ர் இப்னு கமிகில் ஹுஸாயீ, ஹுர்கூஸ் இப்னு ஸுகைர், ஹுகைம் இப்னு ஜபலாஹ், குதைய்ரதுஸ் ஸுகூனி ஆகியோர் ஆவார். (முஹ்தஸர் துஹ்பா அல்இத்னா அஷரிய்யா:317)

இவர்களே ஸஹாபக்களின் பெயர்களை பயன்படுத்தி சில கடிதங்களை எழுதி மக்கள் மத்தியில் கிளர்ச்சிக்கான வழியை வித்திட்டனர். இவ்விடயம் தொடர்பாக **மஸ்ரூக் என்ற தாபியி ஆயிஷா (ரழி) அவர்கள் கூறியதாக கூறுகிறார்: அவரை (உதுமான் அசுத்தத்திலிருந்து சுத்தமாக்கப்பட்ட ஆடையைப் போன்று விட்டு விட்டீர்கள். பிறகு செம்மரியாட்டை பழிகொடுப்பது போன்று அவரை அறுத்து விட்டீர்களென ஒரு சந்தர்ப்பத்திலே கூறினார். இதைக் கேட்ட அந்த தாபியி இது உங்களுடைய செயற்பாடுதானே நீங்கள்தானே மக்களை கிளர்ச்சி செய்யும்படி ஏவி கடிதங்களை அனுப்பினீர்கள். அதற்கு ஆயிஷா(ரழி)அவர்கள் கூறினார்கள்: யாரைக் கொண்டு மு.ஃமின்கள் ஈமான் கொண்டுள்ளார்களோ அவன் மீது சத்தியமாக நாம் இப்போது இவ்விடத்தில் அமர்வதற்கு முன்னர் எந்த காகிதத்தில் கருப்பு மையால் எழுதியதே இல்லை என்றார்கள்.**

இதன் அறிவிப்பாளர்களில் ஒரவரான **அல் அ.ஃமஷ்** என்பவர் கூறுகிறார்: அவர்கள் அக்கடிதங்களை ஆயிஷா(ரழி)அவர்கள் மூலமாக எழுதப்பட்டன என்று கருதி வந்தனர்.

(பிதாயா வன்னிஹாயா: 07-204)

அதே போன்று ஏனைய சில பெயர் குறிப்பிடப்பட்ட நபித்தோழர்களின் பெயர்களைக்கொண்டு எழுதப்பட்ட சில ஏடுகளும் மக்கள் மத்தியில் பரப்பப்பட்டன. அவை அனைத்துமே உதுமான்(ﷺ)அவர்களை இழிவு படுத்தும் வண்ணமே அமைந்தன. அப்துல்லாஹ் இப்னு ஸப.ஃவிற்கு கிலாபத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஆதரவாளர்கள் இருந்தனர். அவர்கள் இவனுக்கும் இவன் அவர்களுக்கும் கடிதப்பரிமாற்றங்கள் செய்து கொண்டே இருந்தான். அவனது ஆதரவாளர்களில் தங்கள் கடிதங்களில் குறிப்பிடுகின்ற விடயமாக பின்வரும் விடயங்களே முக்கிய இடம் பிடித்தன.

**“உதுமானால் நியமிக்கப்பட்ட கவர்னர் அவருடைய கட்டளையின் பிரகாரம் எங்களுக்கு இவ்வாறு அநீதி இழைத்தார். நாங்கள் மதீனாவுக்குச் சென்றோம் அப்போது உதுமான் எங்களோடு மோசமான முறையில் நடந்த கொண்டார், நபித்தோழர்களை உதுமான் இவ்வாறு நடாத்துகிறார். மேலும் எங்களுக்கு ஸுபைர், அலி, ஆயிஷா போன்றோர்களிடமிருந்து உதுமான் பற்றிய விமர்சனக் கடிதங்கள் வந்துள்ளன”** இவ்வாறு பொய்யான ஆதாரங்களை மக்கள் மத்தியில் காண்பித்து அவர்களை கிளர்ச்சிக்கு தயார் செய்த முதல் பணியை இவர்களே ஆரம்பித்தார்கள்.

**காரணம் இரண்டு:** இஸ்லாமிய சமூதாயத்தில் ஏற்பட்ட பொருளாதார எழுச்சி:- இமாம் ஹஸனுல் பஸரி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: “மக்கள் மத்தியில் ஒரு நாள் வந்தது. அப்போது அவர்கள் நல்லவற்றை தங்களுக்கு மத்தியில் பங்கிட்டுக் கொள்வார்கள். இறைவனின் அடியார்களே! வாருங்கள் தேனிலிருந்து உங்களது பங்கை எடுத்துக் கொள்ளுங்கள். செல்வத்திலிருந்து உங்களது பங்கை எடுத்துக்கொள்ளுங்கள் என்று அழைக்கப்படும்.

அதாவது உதுமான்(ﷺ)அவர்களது காலத்தில் பல்வேறுபட்ட பகுதிகளில் போராட்டங்கள் இடம்பெற்றன. இதன் மூலமாக மக்கள் மத்தியில் செல்வ செழிப்புக்கள் அதிகரித்தன. அவர்களிடம் பொறாமை பண ஆசை, சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாமை போன்ற மோசமான பண்புகள் வளர ஆரம்பித்தன.

**காரணம் மூன்று:** உமர்(ﷺ)அவர்களுக்கும் உதுமான்(ﷺ)அவர்களுக்கும் இடையிலான வித்தியாசமான இயல்புகள்:- உதுமான்(ﷺ)அவர்களுக்கு முன்னர் ஆட்சி செய்த உமர்(ﷺ) அவர்கள் கடும் போக்கு கொண்டவர்களாக இருந்தார்கள். எனினும் உதுமான்(ﷺ)அவர்கள் மென்மையானவர்களாகவும், இரக்கமுடையவர்களாகவும் காணப்பட்டார்கள். இதையே அப்துல்லாஹ் இப்னு உமர்(ﷺ)அவர்கள் உதுமான்(ﷺ)அவர்கள் முற்றுகை இடப்பட்டபோது பின்வருமாறு கூறுகிரார்கள்: “அல்லாஹ்வின் மீது ஆணையாக அவர்கள் உதுமான்(ﷺ)அவர்களின் விடயத்தில் சில விடயங்களை பழி தீர்க்க வந்துள்ளார்கள். எனினும் இவர் செய்த அதே காரியங்களை உமர்(ﷺ)அவர்கள் செயதிருந்தால் இவர்களில் எவருமே வாய் திரந்திருக்கமாட்டார்கள்” ஆகவே உதுமான்(ﷺ)அவர்களுடைய இயல்பே அவர்களுக்கெதிராக மக்களை கிழர்ந்தெழுவதற்கு ஒரு காரணமாக அமைந்தது.

**காரணம் நான்கு:** குரைஷிகளின் தலமைத்துவத்தை சில அரபிய கோத்திரங்கள் விரும்பாமை:- புதிதாக இஸ்லாத்தில் இணைந்து கொண்ட சில கோத்திரங்கள் குறிப்பாக நபிகள் நாயகத்தின் மரணத்திற்குப்பிறகு மதம் மாறி போராட்டத்தின் மூலமாக இஸ்லாத்தில் மீண்டும் நுழைந்து கொண்ட கோத்திரங்கள் அவர்களின் உள்ளங்களில் சில கசப்பான விடயங்களை மறைத்து வைத்துக்கொண்டே நுழைந்தனர். மேலும் குரைஷிகளின் தலமைத்துவத்தின் பொறுப்பை அவர்கள் விரும்பாததால் ஏன் ஆடசிப்பொறுப்பு எப்போதுமே குரைஷிகளிடம் இருக்க வேண்டும் என்று தங்களுக்குள் வினவிக்கொண்டனர். இதையே வரலாற்று ஆசிரியரான இப்னு கல்தூன் (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கூறுகிரார்:- “சில அரபிக்கோத்திரங்கள் குரைஷிகளின் தலமைத்துவத்தை ஒரு குறையாக பார்க்க ஆரம்பித்தனர். அவர்களின் உள்ளங்கள் அவற்றை வெறுத்தன. இதன் காரணமாக ஆடசியாளர்கள் மீது குறைகளை மக்கள் மத்தியில் பரப்பினர்”

(அத்தஹ்கீக் மவாகிபுஸ் ஸகாபா பில் பித்னா:01-365)

மேற்குறிப்பிட்ட காரணங்களே உதுமான்(ﷺ)அவர்களுக்கெதிராக கிளர்ச்சி தோண்றுவதற்கு முக்கிய இடம் பிடித்தன. இவை தவிர்ந்த மேலும் பல சிறிய காரணங்கள் இருப்பினும் இவைகள் அவற்றின் முக்கியமாக கருதப்படுகின்றன. தற்போது உதுமான்(ﷺ) அவர்களுக்கெதிரான கிளர்சிசியிலும் அவர்களது கொலையிலும் யாரெல்லாம் பங்கு தாரர்களாகவும் நேரடி காரணக் கருத்தாக்களாகவும் இருந்தனர் என்ற வரலாற்றை சரியான அறிவிப்புகளின் பிரகாரம் சுருக்கமாக பார்க்கலாம்.

ஹிஜ்ரி 34ம் ஆண்டு மிஸ்ரைச்சோர்ந்த சில கவாரிஜ்கள் தங்களுடைய பிரதேஷத்திற்கு கவர்னராக நியமிக்கப்பட்டிருந்த அமர் இப்னுஆஸ்(ﷺ)அவர்கள் தொடர்பான சில குற்றச் சாட்டுக்களை எடுத்துக்கொண்டு உதுமான்(ﷺ)அவர்களிடம் அவர்களைப்பற்றி முறையிட்டு கவர்னர் பதவியிலிருந்த அவரை அகற்றுவது என்ற முடிவில் வருகிறார்கள். இவர்கள் மதீனாவிற்கு வருவதற்கு முன் ஷாம் பகுதிக்குச்சென்று அங்குள்ள கவர்னர் முஆவியா(ﷺ) அவர்களைச் சந்தித்ததாகவும், அப்துல்லாஹ் இப்னு ஆமிர்(ﷺ)அவர்களைச் சந்தித்ததாகவும் அவ்விருவரிடமும் அம்ர் இப்னு ஆஸ்(ﷺ)அவர்கள் பற்றிய குற்றச்சாட்டுக்களை முன் வைத்ததாகவும் அதற்கு அவ்விருவரும் உங்களுடைய பகுதியின் கவர்னர் மீது வீனான குற்றச்சாட்டுக்களை சாட்டாதீர்கள் என்று கண்டித்ததாகவும் வரலாறுகள் பதியப்பட்டுள்ளன. இப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்க வேண்டும் என்ற நோக்கிலேயே கலீபா உதுமான்(ﷺ)அவர்களிடம் வந்து முறையிடுகிறார்கள். இதைக்கேட்ட உதுமான் (ﷺ) அவர்கள் தொழுகை நடாத்துதல் மேலும் போருக்கு தலைமை தாங்குதல் போன்ற பொறுப்புக்களிலிருந்து அம்ர் இப்னு ஆஸ்(ﷺ)அவர்களை நீக்கி விட்டு நபித்தோழர் அப்துல்லாஹ் இப்னு ஸஃத் இப்னு அபி ஷரஹ்(ﷺ)அவர்களுக்கு அப்பொறுப்புக்களை வழங்கி, வந்த மிஷ்ர் வாசிகளோடு இவர்களையும் அனுப்பி வைக்கிறார்கள்.

இக்கூட்டத்தினர் மிஷ்ருக்குச் சென்றவுடன் கலிபாவிடமிருந்து வந்த ஏவலின் பிரகாரம் அம்ர் இப்னு ஆஸ் (ﷺ)அவர்கள் கவர்னர் பொறுப்பிலிருந்து விலகி விட்டு அப்பொறுப்பில் அப்துல்லாஹ் இப்னு ஸஃத் இப்னு அபி ஷரஹ்(ﷺ)அவர்கள் அமர்கிறார்கள். இந்நிலையில் **முன்னோர்கள் சொல்வது போன்று மனித உள்ளம் குரங்கு போன்றது, ஆகவே அது ஒன்றை விட்டு ஒன்றில் தாவும் என்ற பழமொழி இவ்வூர் வாசிகள் மீது உண்மையானதோ தெரியாது**. அங்கு உதுமான்(ﷺ)அவர்களையும் புதிதாக கவர்னராக நியமிக்கப்பட்ட அப்துல்லாஹ்(ﷺ)அவர்களையும் விமர்சிக்கின்ற ஒரு கூட்டத்தினர் உருவாகினர். அவர்கள் உதுமான்(ﷺ)அவர்கள் கவர்னர் பொறுப்பிலிருந்து அனுபவமுள்ள ஸஹாபாக்களை நீக்கி விட்டு அனுபவமற்றவர்களை நியமிக்கின்றார், என்ற குற்றச்சாட்டுக்களை முன் வைத்தனர். மேலும் ஏற்கனவே நியமிக்கப்பட்ட அம்ர் இப்னு ஆஸ்(ﷺ)அவர்களை குறை கண்டது போன்று அப்துல்லாஹ் இப்னு ஸஃத்(ﷺ)அவர்களிடம் சில விடயங்களைக் குறைகளாகக் கண்டனர்.

மேலும் அப்பகுதியில் ஸஹாபாக்களுடைய சில புதல்வர்கள் மூலமாக இப்பிரச்சினை முற்றியதாகவும் கூறப்படுகிறது. **முஹம்மத் இப்னு அபீ பக்கர்** மேலும் **முஹம்மத் இப்னு அபீ ஹுதைப்பா** போன்ற ஸஹாபாக்களுடைய

புதல்வர்களையும் தங்களோடு இணைத்துக்கொண்டு அவ்வருடம் ரஜப் மாதம் அளவில் மக்காவுக்கு உம்ராவுக்காக செல்கிறோம் என்று அறிவித்துக்கொண்டு கிட்டத்தட்ட 600 நபர்கள் மதீனாவை நோக்கி வருகிறார்கள். இவ்விடயம் தொடர்பாக கவர்னர் அப்துல்லாஹ் ﷺ அவர்கள் ஏற்கனவே மதீனாவிற்கு கடிதம் மூலமாக அறிவித்திருந்தார்கள். அவ்வூர் வாசிகள் வந்த செய்தி கலீபா அவர்களுக்கு எட்டியவுடன் அலி ﷺ அவர்களையும் சில முக்கிய நபர்களையும் அவர்களிடம் சென்று பேச்சுவார்த்தை நடாத்துமாறு அனுப்பி வைக்கிறார்கள்.

(தாரீஹுத் தபரி: 05-110)

அவர்களிடம் சென்ற அலி ﷺ அவர்கள் மதீனாவிற்கு அருகிலுள்ள **ஜுஹ்பா** என்ற இடத்தில் அவர்களை சந்திக்கிறார்கள். அலி ﷺ அவர்களை மிஸ்ர் வாசிகள் கண்டவுடன் அவர்களைக் கண்ணியப்படுத்தி புகழ்ந்தே வரவேற்றார்கள். எனினும் அலி ﷺ அவர்கள் மிஸ்ர் வாசிகள் இவ்வாறு வந்ததற்கு கடுமையான கண்டனம் தெறிவிக்கிறார்கள். மேலும் எவ்விடயத்தில் குறை கண்டு வந்துள்ளீர்கள் என கடுமையான முறையில் வினவினார்கள். அதற்கவர்கள் பின்வருகின்ற காரணங்களை முன் வைத்தனர்.

01- நபி (ஸல்) அவர்கள் ஸகாத் பொருட்களாக கிடைக்கப்பெறும் ஒட்டகங்களை சேமிப்பத்ற்கு **ஹிமா** என்னுமிடத்தை வைத்திருந்தார்கள். அவ்விடத்தை உதுமான் ﷺ அவர்கள் பொறுப்பேற்றவுடன் விசாலப்படுத்தி விட்டார், இது நபிகள் நாயகம் செய்யாத ஒன்றாகும்.

02- குர்ஆனை எறித்தார்கள்.

03- மக்காவிற்கு ஹஜ்ஜுக்காக சென்ற வேளையில் பிரயானத்தில் சுருக்கித்தொழும் தொழுகைகளை பூரணப்படுத்தி தொழுதார்கள்.

04- மூத்த ஸஹாபாக்களை விட்டுவிட்டு அணுபவம் குறைந்தவர்களை பொறுப்புக்களில் அமரத்தினார்.

05- பனூ உமைய்யாக்களுக்கு ஆட்சிப்பொறுப்புக்களை வழங்கினார்.

இவ்வாறான சில குற்றச்சாட்டுக்களை உதுமான் ﷺ அவர்கள் மீது முன் வைத்தனர். இவை அனைத்துக்கும் அலி ﷺ அவர்கள் பதில் கூறி அவர்களை மிஸ்ருக்கு திருப்பி அனுப்பினார்கள். பிறகு உதுமான் ﷺ அவர்களிடம் வந்து அவர்கள் திரும்பிச்சென்ற செய்தியை அறிவித்து விட்டு மக்களுக்கு மத்தியில் இது பற்றி ஓர் உரையை நிகழ்த்துமாறும் கூறினார்கள். அதனடிப்படையில் உதுமான் ﷺ அவர்களும் மக்களுக்கு மத்தியில் உரை நிகழ்த்தி அதில் அல்லாஹ்விடம் பாவமண்ணிப்புக்கேட்டு தான் எனக்கு முன் ஆட்சி செய்த மூவர்களின் வழிகளிலேயே ஆட்சி செய்கிறேன் என்றும் அவ்வுரையில் கூறினார்கள். சில நாட்கள் சென்றதன் பிறகு மதீனாவில் உதுமான், மர்வான் மற்றும் அலி ﷺ ஆகிய மூவருக்கிடையில் ஒரு நிகழ்வு நடை பெறுகிறது. இச்செய்தி மிஸ்ர் வாசிகளுக்கு எவ்வழியிலோ எட்டுகிறது. உடனே அருகிலுள்ள கூபா மற்றும் பஷரா ஆகிய பிரதேஷங்களுக்கு கடிதத்தொடர்புகளை மேற்கொண்டு மதீனாவின் நிலமை தற்போது

சீரானதாகயில்லை. ஆகவே நாம் அனைவரும் மதீனாவுக்குச் செல்லாம் என அறிவித்தனர். **இச்சந்தர்ப்பத்திலேயே நாம் எற்கனவே குறிப்பிட்டது போன்று யூதன் அப்துல்லாஹ் இப்னு ஸப.்.வும் அவனது ஸஹாக்களும் ஸஹாபாக்களின் பெயர்களை வைத்து எழுதிய கடிதங்களும் மக்கள் மத்தில் வந்தடைகின்றன. இவற்றையும் காரணங்களாக வைத்து அம் மூன்று வாசிகளும் மதீனாவிற்கு வருகை தர தயாராகினர்.** (பிதாயா வன்னிஹாயா: 07-194)

ஹிஜ்ரி 35ம் ஆண்டு அம்மூன்று ஊர் வாசிகளும் நான்கு பகுதியினராக மதீனாவிற்கு வருகிறார்கள். இவர்களோடு இப்னு ஸவ்தா என்ற ஒருவனும் வருகிறான். இவ்வூர் வாசிகள் ஒவ்வொருவரும் தங்களுக்கென வேறுபட்ட நோக்கங்களை கொண்டிருந்தனர். அந்தடிப்படையில் மிஸ்ர் வாசிகள் அலி ﵁அவர்களை கலீபாவாக தெரிவு செய்ய வேன்டுமென்றும், கூபா வாசிகள் ஸுபைர் அவர்களைத் தெரிவு செய்ய வேண்டும் எனும் நோக்கத்திலும், பஷரா வாசிகள் தல்ஹா﵁அவர்களை தெரிவு செய்ய வேண்டுமென்ற நோக்கிலும் வருகிறார்கள். அனைவருமே மதீனாவிற்கு அருகிலுள்ள சில பகுதிகளில் கூடாரம் இடுகின்றனர். அதிலொரு பிரிவினர் **தீ கசப்** என்ற இடத்திலும் மற்றுமொரு பிரிவினர் **அ.்.வல்** என்ற இடத்திலும் அவர்கள் பொறும்பான்மையானோர் **தீ மர்வா** என்ற இடத்திலும் தரிக்கின்றனர்.

பிறகு தங்களிலிருந்து ஒரு சிறு குழுவை தாங்கள் ஹஜ்ஜுக்குச்செல்வதற்காகவே இவ்வழியாக வந்தோம். செல்லுகின்ற வழியில் மதீனாவிற்குள் நுழைய விரும்புகிறோம் என்று அனுமதி கேட்டு அனுப்புகின்றனர். எனினும் மதீனா வாசிகள் அவர்கள் வருவதை தடுத்துவிட்டனர். எனினும் வழுக்கட்டாயமாக நாங்கள் வரவே போகின்றோம். என்று கூறி உள் நுழைகின்றனர். அவ்வாறு வந்த தூதுக்குழுவில் மிஸ்ரைச்சார்ந்தோர் அலி﵁அவர்களிடம் சென்று அவர்களுக்க ஸலாம் சொல்லுகின்றனர். இவர்களைக் கண்ட அலி﵁அவர்கள் சப்தமிட்டு அவ்விடத்தை விட்டு அவர்களை விரட்டிவிட்டு பின்வருமாறு கூறுகிறார்கள்: “நிச்சயமாக **தூ மர்வா** என்ற இடத்திலும் **தீ கசப்** என்ற இடத்திலுமுள்ள படைகள் அல்லாஹ்வின் தூதரின் நாவினால் சபிக்கப்பட்டவர்கள் என்பதை நல்லவர்கள் அறிவார்கள்” என்று கூறினார்கள். அதேபோன்று பஷரா வாசிகள் தல்ஹா﵁ அவர்களிடமும், கூபா வாசிகள் ஸுபைர்﵁அவர்களிடமும் செல்கின்றனர். அவ்விருவரும் அலி﵁அவர்கள் சொன்ன பதிலைப்போன்றே இவர்களுக்கும் பதில் கூறி விரட்டினர்.

மறுபுரம் மிஸ்ர் வாசிகள் உதுமான்﵁அவர்களிடம் சென்று தங்களுக்கு கவர்னராக நியமிக்கப்பட்ட அப்துல்லாஹ் இப்னு ஸ.்.த்﵁அவர்களை நிக்கி விட்டு முஹம்மத் இப்னு அபீ பக்கர்﵁அவர்களை நியமிக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர். இதற்கு கலீபா உதுமான் ﵁அவர்கள் செவிசாய்த்து ஒரு உறுதிப்பிரமாணத்தை எழுதி அவர்களிடம் கொடுத்து அனுப்புகிறார்கள். வந்த நோக்கம் நிறைவேறியதால் தாங்கள் திரும்பிச்சொல்லப் போவதாக அறிவித்து விட்டு தங்களது ஊர்களுக்கு சென்றனர். எனினும் மீண்டும் அவர்கள் மதீனாவிற்கு வெளியில் தங்க வைக்கப்பட்டிருந்த அனைவரையும் அழைத்துக்கொண்டு தக்பீர் கூறிய

வண்ணம் உள் நுழைந்து மதீனாவை சுற்றி வழைத்தனர். அவர்கள் பெறும்பான்மையானோர் உதுமான்﴾ؓ﴿அவர்களின் வீட்டை சுற்றி வழைத்துக்கொண்டனர். ஆயினும் சென்ற குழுவினர் ஏன் திரும்பி வந்து மதீனாவையும், கலீபாவுடைய வீட்டையும் சுற்றி வழைத்த காரணத்தை மதீனா வாசிகள் அறிந்திருக்கவில்லை. இந்நிலமையில் கூட உதுமான்﴾ؓ﴿அவர்கள் மக்களுக்குத்தொழுகை நடாத்துவதற்காக பள்ளிக்குச்செல்லக் கூடியவர்களாகவும் வெளியிலிருந்து வந்த கவாரிஜ்கள் கலீபாவுக்குப்பின்னால் நின்று தொழக்கூடிய ஒரு சுமுகமான நிலை ஆரம்பக்கட்டத்தில் நிலவியது. ஸஹாபாக்களில் சிலர் அவர்களிடம் சென்று அவர்கள் மீண்டும் மதீனாவிற்கு வந்ததை கண்டித்தார்கள். மேலும் மிஸ்ர் வாசிகளிடம் நீங்கள் எதற்காக மீண்டும் வந்தீர்கள் என வினவினார்கள். அதற்கவர்கள் நாங்கள் எங்களது ஊர்களுக்குச்செல்லும் வழியில் ஒருவரின் மூலமாக எங்களைக் கொல்வதற்கு கட்டளையிட்டு எங்களது கவர்னருக்கு கலீபாலவால் அணுப்பப்பட்ட கடிதமொன்றை நாங்கள் பெற்றுக்கொண்டோம் என்றனர்.

(அக்கடிதத்தின் முழு வடிவத்தை பார்க்க தாரீஹுஃத் தபரி: 05-119)

அதற்கு ஸஹாபாக்கள் நீங்கள்தான் பிரிந்து உங்களது ஊர்களுக்குச்சென்று வெவ்வேறு பாதைகளால் சென்று விட்டீர்களே. அந்நிலையில் எவ்வாறு இச்செய்தியை அறிந்து கொண்டீர்கள்? என வினவினார்கள். அதற்கு இவர்கள் நீங்கள் நாடியதை நினைத்தக் கொள்ளுங்கள். எங்களுக்கு இந்நபரில் (உதுமானில்) ஒன்று அவர் எம்மை விட்டு நீங்க வேண்டும், அல்லது நாங்கள் அவரை நீக்கி விடுவோம். என்று கூறினார்கள்.

### மிஸ்ர் வாசிகள் கடிதம் பற்றிக்கூறிய தகவல் என்ன?

நான் ஏளவே குறிப்பிட்து போன்று மிஸ்ர் வாசிகள் மதீனாவிற்கு வந்த போது உதுமான்﴾ؓ﴿ அவர்களிடம் சென்று அப்துல்லாஹ்﴾ؓ﴿அவர்களை கவர்னர் பதவியிலிருந்து நீக்குமாறும் அதற்குப்பதிலாக முஹம்மத் இப்னு அபீ பக்கர் அவர்களை நியமிக்குமாறும் நடந்த நிகழ்வின் பிறகு அனைவரும் தங்களது ஊர்களுக்கு உதுமான் ﴾ؓ﴿அவர்கள் வழங்கிய உறுதிப்பிரமானக் கடிதத்தோடு செல்கிறார்கள். வழியில், ஒரு நபர் உதுமான்﴾ؓ﴿ அவர்களுடைய ஒட்டகத்தில் **(அவர் உதுமான் (ரழி) அவர்களுடையள அடிமையான அபுல் அ.ஃவர் அஸ் ஸலமி என்று சொல்லப்படுகிறது)** அவர்கள் செல்லுகின்ற பாதையில் சந்நேகப்படும் முறையில் செல்வதைக் கண்ணுற்ற நிலையில் அவரைப்பிடித்து சோதனை செய்கிறார்கள். அப்போது உதுமான்﴾ؓ﴿அவர்கள் எழுதியதாக அவருடைய முத்திரையிடப்பட்ட ஒரு கடிதம் பெறப்படுகிறது. அதிலே மிஸ்ர் கவர்னரான அப்துல்லாஹ் இப்னு ஸ.ஃத்﴾ؓ﴿அவர்களுக்கு உதுமான்﴾ؓ﴿அவர்கள் பின்வருமாறு சொல்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது:-

“மதீனாவிற்கு என்னிடம் வந்தவர்களை கொல்லுமாறும் மற்றவர்களை சிலுவையில் அரையுமாறும் மாறுகை மாறுகாலாக சிலர்களுக்கு வெட்டுமாறும் போன்ற செய்திகள் அதில் காணப்பட்டன” மதீனாவிற்கு வந்தவுடன் அக்கடிதத்தை அனைவருக்கும் காண்பித்தனர். மக்கள் அக்கடிடதம் தொடர்பாக உதுமான்﴾ؓ﴿அவர்களிடம் வினவிய போது

அதற்கவர்கள்: “இது நான் எழுதியதாக சொல்கிறது. எனினும் அல்லாஹ்வின் மீது ஆனையாக இதை நான் எழுதவுமில்லை. எனக்கு அது பற்றி எதுவுமே தெறியாது” என்று கூறினார்கள்.

இவ்வாறு உதுமான்(ؓ)அவர்கள் சொன்னதை அங்கு கூடியிருந்த சிலர் உண்மைப் படுத்தினர். வேறு சிலர் அவரைப் பொய்ப்பித்தனர். இதற்குப்பிறகு ஒரு ஜும்ஆ நாளன்று மக்களுக்கு உரை நிகழ்த்துவதற்காக கலீபா அவர்கள் மிம்பர் மேடையில் நபி (ஸல்) அவர்கள் ஊன்றிய அதே கோளை இவர்களும் ஊன்றி உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும் வேளையில் கிளர்ச்சிக்கார்களில் ஒருவர் எழுந்து உதுமான்(ؓ)அவர்களைக் கடுமையாகத் திட்டி அவர்களை மிம்பரிலிருந்து இறக்குகிறார். அவர்கள் வைத்திருந்த அக்கோளை அம்மனிதர் பரித்து தனது தொடைப்பகுதியால் உடைத்து எரிகிறார். பின்பு உதுமான்(ؓ) அவர்கள் தாக்கப்படுகிறார்கள். அங்கிருந்த சில ஸஹாபாக்கள் தடுத்ததன் காரணமாக சிறு காயங்களுடன் வீட்டிற்கு அழைத்துச்செல்லப் படுகிறார். இந்நிகழ்வுக்குப்பிறகு உதுமான்(ؓ) அவர்கள் மீதான நெறுக்கடிகளும், சோதனைகளும் அதிகரித்தன. இதற்குப்பிறகு கலீபா அவர்கள் கிழர்ச்சிக்காரர்களால் அவர்களது வீட்டில் முற்றுகை இடப்படுகிறார்கள். மஸ்ஜிதுன் நபவியில் தொழுவதற்கும் தொழுகை நடாத்துவதற்கும் தடை விதிக்கப்படுகிறது. அது மட்டுமல்லாமல் வெளியிலிருந்து நீர் கொண்டு வந்து குடிப்பதற்கும் தடை செய்யப்படுகிறார்கள். இம்முற்றுகை கிட்டத்தட்ட **40 நாட்கள்** நீடிக்கின்றன். அதாவது துல் க.்.தா கடைசிப்பகுதியிலிருந்து துல் ஹிஜ்ஜா பிறை 08ம் நாள் வரை ஆகும். அன்றைய தினமே உதுமான்(ؓ)அவர்கள் கொல்லப்படுகிறார்கள். கிளர்ச்சிக்காரர்கள் உதுமான்(ؓ) அவர்களிடம் இரண்டு வேண்டுகோளை விடுத்து அதிலொன்றை நிறை வேற்றும்படி கேட்டுக் கொண்டனர். அதிலொன்று: **தான் கலீபா பதவியில் இருந்து விலகிக்கொள்ள வேண்டும். அல்லது மதீனாவிலிருக்கின்ற மர்வான் இப்னு ஹகமை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும்.** இம்முற்றுகை காலப்பகுதியில் மக்களுக்குத் தொழுகை நடாத்தியவர்களாக சிலர்களை பெயர் குறிப்பிட்டு அறிவிப்புக்கள் இடம் பெற்றுள்ளன. (அல் காபிகி இப்னு ஹர்ப் (கிழர்ச்சிக்காறர்), அபு ஹுரைரா, தல்ஹா, அலி, அபு அய்யூப் (ؓ)ஆகியவர்களே நாம் அறிவிப்புக்களில் காணலாம்)

உபைதுல்லாஹ் இப்னு அதிய்யி என்பவர் உதுமான்(ؓ)அவர்களிடம் வந்து குழப்பக் காரர்களின் தலைவர் (அல் காபிகி இப்னு ஹர்ப்) எங்களுக்குத்தொழுகை நடாத்துகிறார், நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டார். அதற்கு கலீபா அவர்கள் தொழுகை மக்கள் செய்யும் காரியங்களில் மிகச்சிறந்த காரியமாகும். அவர்கள் நல்லது செய்தால் நீங்களும் அவர்களோடு சேர்ந்து நல்லது செய்யுங்கள். அவர்கள் தீயது செய்தால் அவற்றை விட்டு நீங்கள் விலகிக்கொள்ளுங்கள் என பதிளலிக்கிறார்.

(ஸஹீஹுல் புகாரி: 695)

இக்காலப்பகுதியில் சில நபித்தோழர்களும் உதுமான்(ؓ)அவர்களை காப்பாற்றும் எண்ணத்தில் அவர்களது வீட்டிற்கு வந்தனர். அவர்களில் சில ஸஹாபாக்கள் தங்களது பிள்ளைகளையும் அணுப்பி வைத்தனர்.

உதுமான் ﴾﵁﴿அவர்களை காப்பாற்றுவதற்காக வந்த ஸஹாபாக்களின் **பெயர்கள்:** ஹஸன், ஹுஸைன், அபூ ஹுரைரா, அப்துல்லாஹ் இப்னு ஸுபைர், முஹம்மத் இப்னு தல்ஹா, அப்துல்லாஹ் இப்னு உமர் ஆகியவர்களாவர்.

(பிதாயா வன்னிஹாயா: 07-184)

எனினும் உதுமான்﴾﵁﴿அவர்கள் கிளர்ச்சிக்காரர்களுடன் போர் செய்ய வேண்டாமென ஸஹாபாக்களுக்கு கட்டளை பிரப்பித்திருந்தார்கள். சில அறிவிப்புக்களில் உதுமான்﴾﵁﴿அவர்களை காப்பாற்றுவதற்காக வந்த ஸஹாபாக்களின் பிள்ளைகளின் எண்ணிக்கை 70 ற்கும் அதிகமென குறிப்படப்பட்டுள்ளது. எனினும் இவர்களின் எண்ணிக்கை கிளர்ச்சிக்காரர்களின் எண்ணிக்கையிலும் பாரக்க மிக்க குறைவானாகவெ இருந்தது.

இப்னு ஸீரீன் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: “ஸய்த் இப்னு தாபித்﴾﵁﴿அவர்கள் உதுமான்﴾﵁﴿அவர்களிடம் வந்து இதோ வீட்டு வாயலில் உதவியாளர்கள் இருக்கிறார்கள், நீங்கள் நாடினால் நாங்கள் நபியவர்களுக்கு இருந்தது போல் உங்களுக்கும் இரண்டாவது முறையாக உதவியாளராக இருக்கிறோம் என்றார்கள். அதற்கு உதுமான்﴾﵁﴿அவர்கள் போர் செய்வதென்றால் வேண்டாம் என்று தடுத்து விட்டார்கள்.

(முஸன்னப் இப்னு அபீ ஷைய்பா: 19509)

- இப்னு உமர்﴾﵁﴿ அவர்கள் உதுமான்﴾﵁﴿அவர்களிடம் வருகிறார்கள். அவர்களிடம் உதுமான்﴾﵁﴿அவர்கள் கூறினார்கள்: “இப்னு உமரே! அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை பார்... அவர்கள் அதை விட்டு விலகு என்று கூறுகிறார்கள்” அதற்கு இப்னு உமர்﴾﵁﴿ அவர்கள் கூறினார்கள்: “உதுமானே நீர் அதை விட்டு விலகினால் நீர் உலகத்தில் நிரந்தரமாக இருக்கப்போகிறாயா? எனக்கேட்டார்கள். அதற்கு உதுமான் ﴾﵁﴿அவர்கள் இல்லை எனக்கூறினார். அதற்கு இப்னு உமர் ﴾﵁﴿ அவர்கள்:- “நீர் அல்லாஹ் உமக்கு அணிவித்த ஆட்சியெனும் ஆடையை நீர் கலட்டுவதை நான் விரும்பவில்லை. நீர் அவ்வாறு செய்தால் உமக்குப்பின் வருபவர்கள் இதை வழி முறையாக எடுத்துக்கொண்டு தங்களை மக்கள் வெறுக்கும் போதெல்லாம் உமக்குப்பிறகு வருகின்ற கலீபாக்கள் தங்களை நீக்கிக் கொள்வார்கள்” (அஹ்மத்: 01-473)

இத்தோடு 04 குரைஷி இளைஞர்கள் தங்களது வால்களை உயர்த்திக்கொண்டு உதுமான்﴾﵁﴿அவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் ஹஸன் மற்றும் அப்துல்லாஹ் இப்னு ஸுபைர், மர்வான் இப்னு ஹகம், முஹம்மத் இப்னு காதிம் ஆகியவர்களாளும். (அல் இஸ்தீஆப்: 03-28)

### உதுமான் ﴾﵁﴿ அவர்களை கொலை செய்யதது யார்?

உதுமான்(ﷺ)அவர்கள் முற்றுகை இடப்பட்ட பின்னர் அவர்களின் வீட்டுச்சுவரில் ஏறி கலீபா அவர்கள் தமது கையில் குர்-ஆனை வைத்திருந்த நிலையில் அவர்களைக் கொலை செய்தார்கள். இமாம் ஹஸன் அல் பஷரி (ரஹ்) அவர்களிடம் உதுமான்(ﷺ)அவர்களைக் கொலை செய்தவர்களில் ஸஹாபாக்களும் உள்ளடங்குகிறார்களா? எனக் கேட்கப்பட்டது. அதற்கவர்கள் கொலை காரர்கள் மிஸ்ர் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பதிலளித்தார்கள். எனினும் கொலை செய்வதற்கு எத்தனித்தவர்கள் என்றடிப்படையில் சில நபர்களின் பெயர்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அவர்கள்: **கினானா இப்னு பிஷ்ர், ரூமான் அல்யமானி, ஜபலா, ஸவ்தான் இப்னு ஹும்ரான், அல் மவ்த் அல் அஸ்வத், மாலிக் இப்னு அல் அஸ்தர் அந்நகயி.** இவர்களே கிளர்ச்சிக்காரர்களுக்கு தலைமை தாங்கியதாக கூறப்படுகிறது. எனினும் உதுமான்(ﷺ)அவர்களின் கொலையில் நேரடியாக தொடர்பு பட்டவனாக **மிஸ்ரைச் சார்ந்த ஜபலா** என்பனின் பெயரே சொல்லப்படுகிறது.

**உதுமான் (ﷺ)அவர்களுடைய கொலையை ஸஹாபக்கள் தடுக்கவில்லையா?**

**காரணம் ஒன்று:** உதுமான்(ﷺ)அவர்கள்தான் ஸஹாபாக்கள் தங்களது வால்களை ஏந்திக் கொண்ட போது போர் செய்ய வேண்டாமென்றும் வால்களை கீழே போடும்படியும் கூறினார்கள். இது இரண்டு விடயங்களை எடுத்துக்காட்டுகிறது.

**01-**உதுமான்(ﷺ)அவர்களுடைய வீரம்.

**02-**முஹம்மத் நபியவர்களுடைய சமூதாயத்தின் மீது கொண்டுள்ள இரக்கம், ஏனெனில் தனக்கெதிராக கிளர்ச்சி செய்தவர்கள் குழப்பவாதிகள் என்று அறிந்திருந்தும் அவர்களோடு ஸஹாபாக்கள் போர் செய்தால் தனது ஒரு உயிருக்காக அதிகமானோரின் உயிர் பரிக்கப்படுவதை உதுமான்(ﷺ)அவர்கள் விரும்பவில்லை. தான் கொலை செய்யப்பட்டாலும் மற்றையவர்கள் காப்பாற்றப்பட வேண்டும். அது மட்டுமல்லாமல் மதீனா நகருடைய கண்ணியம் பேணப்பட வேண்டும். அதில் இரத்தம் சிந்தக்கூடாதென்று எண்ணினார்கள்.

**காரணம் இரண்டு:** ஸஹாபாக்களுடைய எண்ணிக்கைக்கும் கிளர்ச்சியாளர்களின் எண்ணிக்கைக்கும் இடையில் பாரிய வித்தியாசம் காணப்பட்டது, அக்காலப் பகுதியில் பெறும் பான்மையான ஸஹாபாக்கள் 04 இடங்களில் காணப்பட்டார்கள்.

01- மக்கா: அது ஹஜ்ஜுக்குரிய காலமாக இருந்ததால் அதிகமானோர் ஸஹாபாக்கள் ஹஜ்ஜுக்காக சென்று விட்டனர்.
02- சில நபித்தோழர்கள் மதீனாவிலிருந்து வெளியேரி கூபா, பஷரா, ஷாம் போன்ற பகுதிகளில் வாழ்ந்து வந்தனர்.

03- மேலும் சில ஸஹாபாக்கள் போராட்டத்திற்குச் சென்றிருந்தார்கள்.

04- இவர்களே அந்நேரத்தில் மதீனாவில் இருந்த ஸஹாபாக்களாகும். இவர்களுடைய எண்ணிக்கை கவாரிஜ்களுடைய எண்ணிக்கையை காட்டிலும் மிகவும் குறைவாகவே காணப்பட்டது.

**காரணம் மூன்று**: மதீனாவில் இருந்த ஸஹாபாக்கள் தங்களது பிள்ளைகளை உதுமான் ﴾ﷺ﴿அவர்களை காப்பாற்றுவதற்காக அனுப்பியிருந்தார்கள். அவர்கள் இந்த முற்றுகை உதுமான் رضي الله عنه அவர்களின் கொலையில் முடியும் என்று எண்ண்னியிருந்ததே இல்லை. எனினும் இவர்களை உதுமான்﴾ﷺ﴿அவர்கள் கவாரிஜ்களோடு போராடுவதை தடுத்து விட்டார்கள்.

## உதுமான் ﴾ﷺ﴿ அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள்

இப்பகுதியில் உதுமான் رضي الله عنهஅவர்கள் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டுக்களை விளக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளன. அவைகளில் சிலது பொய்யானவையும் மற்றும் சிலது இஸ்லாத்திற்காக செய்த நற்காரியங்களாகவும் ஆனால் மக்கள் மத்தியில் தவறாக புரிந்து கொள்ளப்பட்டவையும் வேறு சிலவை உதுமான் رضي الله عنه அவர்களுடைய இஜ்திகாத்திற்கு உட்பட்டவையும் இன்னும் சிலவை அவர்களால் தவறுதலாக அல்லாஹ்வின் விதிப்படி நிகழ்ந்தவையாகவும் இருக்கும். எனினும் அவைகள் மண்ணிக்கப்பட்டவையாகும். இந்த நான்கு வகை சார்ந்த குற்றச்சாட்டுக்கள் இப்பகுதியில் சொல்லப்படுகின்றன.

**குற்றச்சாட்டு ஒன்று:** குர்ஆனை எறித்தல்:- ஹுதைபா ஸ்ரீ இப்னு யமான்﴾ﷺ﴿அவர்கள் உதுமான்﴾ﷺ﴿ அவர்களிடம் ஒருமுறை வந்து குர்ஆன் ஓதப்படுகின்ற மற்றும் எழுதப்படுகின்ற விதத்தில் மக்கள் மத்தியில் பிரிவினை காணப்படுகின்றது. மேலும் அவர்களுக்கு மத்தியில் இவ்விடயங்களில் பாரிய முரண்பாடுகள் காணப்படுகின்றன என்று அறிவித்தார். மேலும் உதுமான்﴾ﷺ﴿அவர்களிடம் குர்ஆனை ஓதுகின்ற விடயத்தில் மக்களை ஒன்றுபடுத்து முகமாக இரண்டாவது முறையும் குர்ஆனைத் தொகுக்கும்படி ஏவினார்கள். ஆகவே உதுமான் ﴾ﷺ﴿அவர்களும் இரண்டாவது முறையாக குர்ஆனைத் தொகுப்பதற்கு உடன்பட்டு தற்போது மக்களால் ஓதப்படுகின்ற அனைத்து பிரதிகளையும் எறிக்கும்படி கட்டளை பிரப்பித்தார்கள். இக்குற்றச்சாட்டு தொடர்பான பின்வருகின்ற விளக்கங்கள் அறிஞர்களால் வழங்கப்படுகின்றன.

- உதுமான் رضي الله عنه அவர்களால் எறிக்கப்பட்ட குர்ஆன் பிரதிகளில் ஓதுவதை விட்டும் மாற்றப்பட்ட சில வசனங்கள் காணப்பட்டன. (மன்ஸூகாக்கப்பட்ட வசனங்கள்) அவற்றை சில நபித்தோழர்கள் அப்பிரதிகளில் பதிந்து வைத்திருந்தார்கள். மேலும் அப்பிரதிகளில் ஸூராக்களின் ஒழுங்குகள் வரிசைப் பிரகாரம் இல்லாமல் காணப்பட்டன.

- சில பிரதிகளில் சில ஸஹாபாக்கள் குர்ஆன் வசனங்களுக்குக்கொடுத்த விளக்கங்கள் வசனங்களோடு இணைந்தவாரு

பதியப்பட்டிருந்தன. அதன் காரணமாக உதுமான் رضي الله عنه அவர்கள் அப்பிரதிகளை எறிக்குமாறு கட்டளை பிரப்பித்தார்கள்.

இமாம் இப்னு அல் அரபி (ரஹ்) அவர்கள் இந்நிகழ்வு பற்றி கூறுகிறார்கள்: "இது அவர்களுடைய பாரிய நன்மையான வேலைத்திட்டமாகும். மேலும் அவர்களது மிகப்பெறும் சிறப்பம்சமாகும். அவர்கள் முரண்பாடு ஏற்படுவதை தடுாத்தார்கள். அல்லாஹ் குர்ஆனைப் பாதுகாத்தான். (அல் அவாஸிம் மினல் கவாசிம்: 80ம் பக்கம்)

**குற்றச்சாட்டு இரண்டு:** பிரயாணத்தில் தொழுகையை பூர்த்தியாக்கித் தொழுதல்:- நபி (ஸல்) அவர்கள் பிரயாணத்தில் இரண்டு ரக்ஆத்துக்களே தொழுதார்கள். அபூபக்கரும், உமரும் ﴿﷛﴾அவர்களாகிய இருவரும் அவ்வாறே செய்தனர். எனினும் உதுமான்﴿﷛﴾அவர்கள் தனது ஆட்சிக்காலத்தின் ஆரம்ப கட்டத்தில் பிரயாணத்தில் தொழுகையை சுருக்கி தொழுது விட்டு பிற்பட்ட காலத்தில் பிரயாணத்தில் பூரத்தியாக்கி தொழுதார்கள்.

**பதில்:** முதலாவதாக:- இது இஸ்லாமிய சட்ட விதிகளில் இஜ்திஹாத் சார்ந்த ஒரு விடயமாகும். உதுமான்﴿﷛﴾அவர்கள் இவ்விடயத்தில் இஜ்திஹாத் செய்தார்கள், எனினும் தவறிழைத்து விட்டார்கள். இதற்காக அவர்களுடைய இரத்தத்தை ஓட்டுவது ஆகுமாக்கப்பட்ட காரியமா?... அல்லது நபி (ஸல்) அவர்களைப்போன்று உதுமான் ﴿﷛﴾அவர்கள் தவறுகளிலிருந்து பாதுகாக்கப்பட்டவரா? இவ்விடயம் தொடர்பாக அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து முரண்பாடு காணப்படுகின்றது. எனினும் அதிகமான அறிஞர்கள் பிரயாணத்தில் சுருக்கித்தொழுவதை விரும்பத்தக்க ஸுன்னத் என்றே கூறுகின்றனர். உதுமான்﴿﷛﴾அவர்கள் இவ்விடயத்திற்கு மாற்றமாக செய்தார்களளெனில், அவர்கள் விரும்பத்தக்க ஒன்றையே விட்டார்கள். ஆகுமானதை செய்தார்கள். அல்லது அனுமதியளிக்கப்பட்டதை விட்டுவிட்டு கடமையாக்கப்பட்ட ஒன்றை செய்தார்கள்.

### உதுமான் ﴿﷛﴾ அவர்கள் பிரயாணத்தில் தொழுகையை பூர்த்தியாக தொழுதார்கள்

01- ஏனெனில் கலீபா அவர்கள் மக்காவில் திருமணம் செய்து இருந்தார்கள். ஆகவே அவர்களைப் பொறுத்தவரை மக்கா அவருக்கு சொந்த ஊராகும். இதன் காரணமாக தனது சொந்த ஊரில் தொழுகையைப் பூர்த்தியாகத் தொழுதார்கள்.

02- உதுமான்﴿﷛﴾ அவர்கள் தான் இறுதியாக செய்த ஹஜ்ஜின் போது புதிதாக இஸ்லாத்தை ஏற்ற சில மக்களும் வருகை தந்திருந்தனர். தான் அந்நிலையில் தொழுகையை இரண்டு ரக்ஆத்துக்களாக தொழுதால் புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர்களும் தொழுகை இரண்டு ரக்ஆத்துக்கள் என எண்ணி அவ்வாறே தங்களது ஊர்களிலும் செய்வார்கள் என்பதை பயந்து தொழுகையை அதனது அடிப்படையில் தொழுது காட்டினார்கள். அல்லாஹ்வே மிக அறிந்தவன்.

**குற்றச்சாட்டு மூன்று:** உதுமான் (ﷺ) அவர்கள் தனது நெறுங்கிய சொந்தங்களை பதவியில் அமர்த்தினார்:- இவ்விடயம் தொடர்பாக நோக்குவதற்கு முன்னர் உதுமான் (ﷺ) அவர்காளல் நியமிக்கப்பட்ட நபர்களை சற்று விரிவாக நோக்கினால் இவர்கள் வைக்கின்ற குற்றச்சாடடின் அரைப்பகுதி தகர்ந்து விடும்.

**உதுமான் (ﷺ) அவர்களால் நியமிக்கப்பட்ட நபர்கள்:**

01- ஸ.்.த் இப்னு அபீ வக்காஸ்: கூபா.
02- அபு மூஸா அல் அஷ்அரி: பஷரா மற்றும் கூபா.
03- அல் முகீரா இப்னு ஷு.்.பா: கூபா, ஆதர் பஹ்ஜான் மற்றும் அர்மினீயா.
04- அமர் இப்னு ஆஸ்: மிஸ்ர்.
05- ஜரீர் இப்னு அப்துல்லாஹ் அல் பஜலி: ஹுமதான், கர்கீஸியா.
06- பீப் இப்னு மஸ்லமா அல் பஹ்ரி: கென்ஸிரீன், அர்மீனியா.
07- அப்துர் ரஹ்மான் இப்னு காலித் இப்னு வலீத்: ஹிமஸ்.
08- அப்துல்லாஹ் இப்னு ஸிவார் அல் அப்தி: பஹ்ரைன்.
09- உதுமான் இப்னு அபீல் ஆஸ்: ஓமான், அல் பஹ்ரைன்.
10- ரபீ.். இப்னு ஸியாத்: ஸஜஸ்தான்.
11- கைஸ் இப்னு அல் ஹய்தம் அஸ்ஸலமி: குராஸான்.
12- ய.்.லா இப்னு உமைய்யா: யமன்.
13- காலித் இப்னு ஆஸ்: மக்கா.
14- அப்துல்லாஹ் இப்னு அம்ர்: மக்கா.
15- அப்துல்லாஹ் இப்னு அபீ ரபீயா: ஸன்ஆ.
16- அபுல் அ.்.வர் அமர் இப்னு ஸுபியான்: ஜோர்தான்.
17- அல்கமா இப்னு இப்னு ஹகீம்: பலஸ்தீன்.
18- உமைர் இப்னு உதுமான்: ஹுராஸான்.
19- அப்துல்லாஹ் இப்னு உமர்: அஸ் ஸஜஸ்தான்.
20- அப்துர் ரஹ்மான் இப்னு அபீஸ்: கிர்மான்.
21- உபைதுல்லாஹ் இப்னு முஅம்மர்: பாரிஸ்.
22- அமீன் இப்னு அஹ்மர்: குராஸான்.
23- இம்ரான் இப்னு பழீல்: ஸஜஸ்தான்.
24- ஆஸிம் இப்னு அம்ர்: கிர்மான்.
25- ஹுஸைன் இப்னு அபீல் பஹ்ர்: ஸவாதுல் பஷரா.
26- அஹ்னப் இப்னு கைஸ்: முரூ அஸ்ஸஹ்ஜான்.
27- கபீப் இப்னு குர்ரா: பல்ஹ்.
28- காலித் இப்னு அப்துல்லாஹ்: ஹுர்ரா.
29- அஸ்அத் இப்னு கைஸ்: ஆதர் பஹ்ஜான்.
30- ஸஈத் இப்னு கைஸ்: ரைய்.
31- ஹரம் இப்னு ஹஸ்ஸான்-
32- ஹரம் இப்னு ஹய்யான் -
33- குரைத் இப்னு ராஷித்-
34- அல் மின்ஜாப் அபு ராஷித் -
35- அல் துரஜமான் அல் ஹுஜைய்மி –
36- நஸீஹ் அல் அஜலி: ஹமதான்.
37- ஸாஇப் இப்னு அல் அக்ரா: அஸ்பஹான்.

38- மாலிக் இப்னு ஹபீப்: மாஹ்.
39- ஹகீம் இப்னு ஸலாமா: அல் மூஸி.
40- ஸல்மான் இப்னு ரபீஆ: அல் பாப், ஆர்மினியா.
41- உதைய்பா இப்னு அந் நிகாஸ்: ஹல்வான்.
42- ஹுபைப் இப்னு அல் அஸதி: மாஸ் பாதான்.
43- ஹுதைய்பதுல் இப்னு யமான்: ஆர்மினியர், ஆதர் பஹ்ஜான், ஜுகீ.
44- ஸைத் இப்னு தாபித்: மதீனாவில் உதுமான்﴾رضي الله عنه﴿அவர்களுடைய பிரதிநிதி.
45- ஸப்ராஹ் இப்னு அமர்: யமாமா.
46- ஊமைர் இப்னு அஸ்ஸ.ஃத்: ஹிம்ஸ்.
47- அப்துல்லாஹ் இப்னு கைஸ்: ஷாமுடைய சில பகுதிகளுக்கு.

மேறகுறிப்பிட்ட இந் 47 நபர்களும் உதுமான்﴾رضي الله عنه﴿அவர்களால் நியமிக்கப்பட்டவர்களாவர். எனினும் இவர்களுக்கும் உதுமான்﴾رضي الله عنه﴿அவர்களுக்கும் எவ்வித குடும்ப உறவு காணப்பட்டதில்லை. மறுபகுதியில் உதுமான் ﴾رضي الله عنه﴿அவர்களால் நியமிக்கப்பட்ட அவர்களின் குடும்பத்தைச்சார்ந்த சில நபர்களும் பதவிகளில் அமர்த்தப்பட்டன. அவர்களையும் சற்று நோக்கலாம்.

01- முஆவிய இப்னு அபீ ஸுபியான்: ஷாம்.
02- ஸாஈத் இப்னு ஆஸ்: கூபா.
03- வலீத் இப்னு உகுபா: கூபா.
04- அப்துல்லாஹ் இப்னு ஆமிர்: பஷரா.
05- அப்துல்லாஹ் இப்னு ஸ.ஃத் அபிஷ் ஷரஹ்: மிஸ்ர்.
06- அலி இப்னு அதீ: மக்கா.
07- அப்துர் ரஹ்மான் இப்னு ஸம்ரா: ஸஜஸ்தான்.
08- மர்வான் இப்னு ஹகம்: பஹ்ரைன்.

இவர்களே உதுமான்﴾رضي الله عنه﴿அவர்களால் தமது குடும்பம் சார்பாக நியமிக்கப்பட்ட நபர்களாவர். எனினும் தனது குடும்பத்திலிருந்து நியமித்த நபர்களுக்கும், குடும்பம் அல்லாதவர்களிடமிருந்து நியமிக்கப்பட்ட பாரிய வித்தியாசம் காணப்படுவதைக்காணலாம். உண்மையிலேயே இதை ஒரு விமர்சனமாக பார்ப்பது சற்று முட்டாள் தனமாகவே காணப்படுகிறது. ஏனெனில் நபிகள் நாயகம் அவர்கள் உயிரோடு இருக்கும்போது கூட பனு உமைய்யா கோத்திரத்திலிருந்தே அதிகமானோரை நியமித்துள்ளார்கள்.

இமாம் இப்னு தைய்மிய்யா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: நாம் நபிகள் நாயகத்தின் பணியாளர்களாக குரைஷிக்கோத்திரத்தில் பனு உமைய்யா குடும்பத்திலிருந்தே அதிகமானோர் தெரிவு செய்யப்பட்டதை அறிவோம். ஏனெனில் அவர்களிடமே தலமைத்துவத்திற்கான பண்பு காணப்பட்டது. (மின்ஹாஜுஸ் ஸுன்னா: 06-192)

எனினும் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் என்னவெனில் உதுமான்﴾رضي الله عنه﴿அவர்களால் தனது குடும்பத்திலிருந்து பொறுப்புக்களில் அமர்த்தப்பட்ட அனைவரும் ஒரே நேரத்தில் நியமிக்கப்படவில்லை. மாறாக கூபா நகரைப் பொறுத்தவரையில் அங்கு வலீத் இப்னு

உகுபா(ﷺ)அவர்களை நியமித்து விட்டு பின்பு அவர்களை நீக்கி அவர்களுக்குப்பதிலாக ஸஅத் இப்னு ஆஸ்(ﷺ)அவர்களை நியமித்தார்கள். மேலும் சிறிது காலத்தின் பிறகு அவர்களையும் நீக்கி விட்டார்கள். உதுமான்(ﷺ)அவர்கள் மரணிக்கும்போது அவர்களது குடும்பம் சார்பாக பதவியில் இருந்தவர்கள் 03 நபர்களேயாகும். (தாரீஹுத் தபரி: 03-445)

இவ்விடத்தில் சுற்றிக்காட்டப்பட வேண்டிய ஒரு விடயம் என்னவெனில் கலீபா அவர்கள் கூபாவின் பொறுப்பாகயிருந்த நபர்களை நீக்கியதற்குக் காரணம் அவரகளிடம் காணப்பட்ட குறையல்ல. மாறாக அவ்வூர் வாசிகளால் உதுமான்(ﷺ)அவர்களிடம் வந்த முறைப்பாடு காரணமாகவே அவர்களைப் பதவியிலிரந்து நீக்கினார். கூபா நகரைப் பொறுத்தவரையில் இஸ்லாமிய அறிஞர்களிடம் பல்வேறுபட்ட விமர்சனங்கள் நிலவுகின்றன்:

✓ அலி(ﷺ)அவர்கள் கூபா வாசிகளுக்கொதிராக பிரார்த்தனை செய்தள்ளார்கள்.

✓ கூபா வாசிகளே ஹஸன்(ﷺ)அவர்களுக்கு சூழ்ச்சி செய்தனர்.

✓ கூபா வாசிகளே ஹுஸைன்(ﷺ) அவர்களுக்கு சார்பாக அனுப்பப்பட்ட முஸ்லிம் இப்னு உகைல் அவர்களோடு செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு மாறு செய்தனர்.

✓ ஹுஸைன் (ﷺ)அவர்களை கொலை செய்தவர்கள் கூபா வாசிகளே ஆவர்.

✓ கூபா எக்காலத்திலும் தங்கள் மீது பொறுப்பு நியமிக்கப்பட்டவர்களை பொறுந்திக் கொண்டதே இல்லை.

ஆகவே நாம் ஏற்கனவே பார்த்தது போன்று உதுமான் (ﷺ)அவர்கள் பெறும் ஸஹாபாக்களை நீக்கி விட்டு அனுபவத்தில் குறைந்தவர்களை பொறுப்பில் நியமிக்கின்றார். என்று சொல்லப்பட்ட குற்றச்சாட்டானது கூபா வாசிகளின் பொருந்திக்கொள்ளா தன்மையினால் ஏற்பட்ட விளைவே ஆகும். அதுமட்டுமல்லாமல் நெருங்கிய சொந்தங்களை நியமிக்கும் விடயத்தில் இவர்களது பார்வையின் அடிப்படையில் **நோக்கினால் அலி(ﷺ)அவர்களும் தவறிழைத்தே உள்ளார்கள். அவர்கள் தனது குடும்பத்தைச்சார்ந்த அப்துல்லாஹ், உபைதுல்லாஹ், தமாம், அப்துர்ரஹ்மான் போன்றவர்களை நியமித்துள்ளார்.**

(தாரீஹு கலீபா இப்னு கய்யாத்: 200-201ம் பக்கம்)

அது மாத்திரமல்லாமல் உதுமான்(ﷺ)அவர்களால் நியமிக்கப்பட்டவர்களையும் அலி(ﷺ)அவர்களால் நியமிக்கப்பட்டவர்களையும் சற்று ஒப்பு நோக்கினால் அலி (ﷺ)அவர்களால் நியமிக்கப்பட்டவர்களை விட உதுமான்(ﷺ)அவர்களால் நியமிக்கப்பட்டவர்கள் எவ்விதத்திலும் சிறப்புக் குறைந்தவர்கள் இல்லை.

(மேலதிக தகவல்களுக்கு ஷியரு அஃலாமின் நுபலா: 03-445, 21, 34, தபரி: 02-610, அஹ்மத்: 04-279)

**குற்றச்சாட்டு நான்கு:** மர்வான் இப்னு ஹகமிற்கு ஆபிரிக்க 5ல் ஒரு பகுதியை வழங்குதல்: இக்குற்றச்சாட்டானது உறுதிப்படுத்தப்படாத ஒன்றாகும்.

உண்மையிலேயே ஆபிரிக்கப் பகுதிக்கு போரிற்குச்சென்றவர் அப்துல்லாஹ் இப்னு அபீ ஷரஹ்(ﷺ)அவர்களாவர் பிறகு எதற்காக உதுமான்(ﷺ)அவர்கள் மரவானிற்கு ஆபிரிக்க பகுதியின் 5ல் ஒரு பகுதியை வழங்க வேண்டும்.

**குற்றச்சாட்டு ஐந்து:** ஹிமா என்ற பகுதியை அதிகரித்தல்:- நபி (ஸல்) அவர்கள் ஸகாத்தில் வசூலிக்கப்படுகின்ற ஒட்டகங்களைப் பாதுகாப்பதற்காக ஹிமா என்ற பகுதியை ஒதுக்கினார்கள். அப்பகுதிக்கு ஒரு குறிப்பிட்ட எல்லையை வைத்து அதற்கு எவரையும் நுழைய அனுமதிக்கவில்லை. உதுமான்(ﷺ)அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் தர்மப் பொருட்கள் அதிகரித்ததால் அவற்றில் கிடைக்கப்பெற்ற ஒட்டகங்களை சேமிப்பதற்கு ஏற்கனவே வரையறுக்கப்பட்ட இடம் போதாமலிருந்தது. இதன் காரணமாக உதுமான் (ﷺ)அவர்கள் அப்பகுதியை விரிவு படுத்தினார்கள். அந்நேரத்தில் அல்லாஹ்வா உமக்கு இதை விரிவுபடுத்த அனுமதி தந்தது என்றெல்லாம் அவர்கள் மீது கொந்தளித்தனர்.

அதற்கு உதுமான்(ﷺ)அவர்கள் எனக்கு முன்னர் உமர்(ﷺ)அவர்கள் தர்மத்தில் கிடைத்த ஒட்டகங்களை சேமிப்பதற்கு அதை விரிவுபடுத்தினர். ஆகவே நாம் பொறுப்பேற்ற பிறகு கிடைக்கப்பெற்ற ஒட்டகங்களை அதிகரித்ததால் அவர் வழி முறையில் நின்று நானும் அப் பகுதியில் விரிவுபடுத்தினேன் என பதிலளித்தார்கள்.

**குற்றச்சாட்டு ஆறு:** உதுமான்(ﷺ)அவர்கள் பத்ர் மற்றும் உஹத் ஆகிய யுத்தங்களிலும் பையதுல் ரிழ்வான் என்ற உடன்படிக்கையிலும் களந்து கொள்ளவில்லை. இக்குற்றச்சாட்டுக்கான பதில் இமாம் புகாரி அவர்களுடைய ஹதீஸ் கிரந்தத்தில் பின்வருமாறு பதியப்பட்டுள்ளது. உதுமான் இப்னு மவ்ஹிப் என்பவர் அறிவிக்கிறார்: “மிஸ்ர் வாசிகளிலிருந்து ஒரு மனிதர் வருகை தந்து ஒரு கூட்டத்தினரைப்பார்த்து அவர்கள் யாரென வினவினார்? அதற்கு, அவர்கள் குரைஷிகள் என அவருக்க பதிலளிக்கப்பட்டது. அதற்கவர், அவர்களின் மத்தியிலுள்ள பெரியவர் யாரெனக்கேட்டார். அதற்கு, அப்துல்லாஹ் இப்னு உமர் என பதிலளிக்கப்பட்டது. உடனே அவர் அப்துல்லாஹ் இப்னு உமர்(ﷺ) அவர்களிடம் வந்து “இப்னு உமரே! நாம் உம்மிடம் சில விடயங்களைப்பற்றி கேட்கிறேன் அவை பற்றி எனக்கு அறிவித்து தா என கேட்டுக்கொண்டார்”

உதுமான் உஹத் யுத்த கலத்தை விட்டும் விரண்டோடியது உமக்குத் தெறியுமா? எனக் கேட்டார். அதற்கு இப்னு உமர்(ﷺ)அவர்கள் “ஆம்” என்றார்கள். மேலும் உதுமான் பத்ர் யுத்தத்தில் கலந்துகொல்லவில்லை என்பதை நீ அறிவாயா? எனக்கேட்டார். அதற்கும் “ஆம்” என்றார்கள். பிறகு அவர், உதுமான் ரிழ்வான் உடன்படிக்கையில் கலந்துகொல்லவில்லை என்பதை நீ அறிவாயா? என வினவினார். அதற்கு ஆம் என்று பதிலளித்தார்கள். பிறகு அம்மனிதர் அல்லாஹு அக்பர் என்று சப்தத்தை உயர்த்தினார் (தன் உதுமான் பற்றி எண்ணியவை சரியானவை என்ற சந்தோஷத்தை வெளிக்காட்டும் முகமாக) உடனே இப்னு உமர்(ﷺ)அவர்கள் அம்மனிதரை அழைத்து என்னிடம் வாருங்கள் இவ்விடயங்கள் தொடர்பாக தெளிவுபடுத்துகிறேன் என்று பின்வருமாறு கூறினார்கள்: “உதுமான் (ﷺ) அவர்கள் உஹத் கலத்தை விட்டும் விரண்டோடியதைப்

பொறுத்தவரையில் நான் அவரை அல்லாஹ் மண்ணித்து விட்டான் என்று சாட்சி கூறுகிறேன். என்று கூறி பின்வரும் வசனத்தை ஓதிக்காட்டினார்கள்.

إِنَّ ٱلَّذِينَ تَوَلَّوْا۟ مِنكُمْ يَوْمَ ٱلْتَقَى ٱلْجَمْعَانِ إِنَّمَا ٱسْتَزَلَّهُمُ ٱلشَّيْطَٰنُ بِبَعْضِ مَا كَسَبُوا۟ ۖ وَلَقَدْ عَفَا ٱللَّهُ عَنْهُمْ ۗ إِنَّ ٱللَّهَ غَفُورٌ حَلِيمٌ ﴿١٥٥﴾

இரு கூட்டத்தாரும் (போருக்காகச்) சந்தித்த அந்நாளில், உங்களிலிருந்து யார் திரும்பி விட்டார்களோ அவர்களை, அவர்கள் செய்த சில தவறுகளின் காரணமாக ஷைத்தான் கால் தடுமாற வைத்தான்: நிச்சயமாக அல்லாஹ் அவர்களை மண்ணத்து விட்டான் மெய்யாகவே அல்லாஹ் மன்னிப்பவனாகவும் பொறுமையுடையோனாகவும் இருக்கின்றான்.

(சூரா ஆல இம்ரான்: 155)

பத்ர் கலத்தில் உதுமான்﴿﵁﴾அவர்கள் சமுகமளிக்காமையைப் பொறுத்தவரையில் அவர் அந்நேரத்தில் நபி (ஸல்) அவர்களுடைய புதல்வியை திருமணம் முடித்திருந்தார். போருக்காக ஆயத்தங்கள் செய்யப்பட்ட போது தனது மகள் நோய் வாய்ப்பட்டிருப்பதை அறிந்த அவர்கள் உதுமான்﴿﵁﴾அவர்களை மதீனாவில் தங்குவதற்கு அனுமதியளித்தார்கள். பிறகு உதுமான்﴿﵁﴾அவர்களைப்பார்த்து உமக்கு பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்டவர்களைப்போல் கூலியும் அதற்கான பங்கும் உள்ளது என்றார்கள்.

ரிழ்வான் உடன்படிக்கையில் உதுமான் ﴿﵁﴾ அவர்கள் கலந்து கொள்ளாததை பொறுத்த வரை அந்நேரத்தில் மக்கா பிரதேஷத்தில் உதுமான் رضي الله عنه அவர்களை விட சிறந்ததொரு நபர் இருந்திருந்தால் அவரையே நபியவர்கள் அனுப்பியிருப்பார்கள். அது மாத்திரமல்லாமல் ரிழ்வான் என்ற உடன்படிக்கை உதுமான்﴿﵁﴾அவர்கள் மக்காவிற்கு சென்றதன் பிறகு அவர் கொலை செய்யப்பட்டுவிட்டார் என்று நபியவர்களிடம் வந்தடைந்த வாந்தியின் காரணமாக அவரிட்காக நிகழ்ந்த ஒன்றாகும். அதில் நபியவர்கள் தனது வலக்கரத்தை நீட்டி இது உதுமான﴿﵁﴾அவர்களுடைய கையென்று கூறி அவர்களுக்குப்பதிலாக நபியவர்கள் உன்படிக்கை செய்தார்கள். இவ்வாறு பதிலளித்ததன் பிறகு அப்துல்லாஹ் இப்னு உமர்﴿﵁﴾அவர்கள் அம்மனிதரிடம் நான் இப்போது உமக்குச்சொன்ன செய்தியோடு செல் என்றார்கள். (ஸஹீஹுல் புகாரி: 3699)

**குற்றச்சாட்டு ஏழு:** அபூதர் ﴿﵁﴾அவர்களை ரபதா என்ற இடத்தில் ஒதுக்கி வைத்தல்: இந்நிகழ்வு தொடர்பாக இரண்டு வகையான அறிவிப்புக்கள் பதியப்பட்டுள்ளன. அதிலொன்று ஸெய்ப் இப்னு உமர் வழியாக தபரி என்ற நூலிலும் மற்றையது ஸஹீஹுல் புகாரியிலும் பதியப்பட்டுள்ளது. இவ்விரண்டில் தபரியில் பதியப்பட்ள்ள அறிவிப்பானது அதனது அறிவிப்பாளர்

வரிசை மூலமாக நம்பகத் தன்மை அற்றதாகும். அது மாத்திரமல்லாமல் உதுமான்(ﷺ)அவர்கள் மீது கலங்கத்தை ஏற்படுத்தும் வண்ணம் உள்ளது.

**தபரியில் வந்துள்ள அறிவிப்பு:** ஷாம் பகுதியில் கவர்னராக இருந்த முஆவியா(ﷺ) அவர்களுக்கும் அபூதர்(ﷺ)அவர்களுக்கும் ஒரு விடயத்தில் வாக்குவாதம் ஏற்படுகிறது. இச் செய்தியை முஆவியா(ﷺ)அவர்கள் கலீபா உதுமான் (ﷺ)அவர்களுக்கு அபூதர் மக்களை குழப்பத்தில் ஆழ்த்துகிறார் என்று செய்தி அனுப்பி வைத்தார். அதற்கு உதுமான்(ﷺ)அவர்கள் அவரை என்னிடம் அனுப்புங்கள் என அறிவித்தார்கள். அபூதர் (ﷺ)மதீனாவிற்கு வந்தவுடன் அவர்களை உதுமான்(ﷺ)அவர்களை கடுமையாக கண்டித்தார்கள். பிறகு அவர் ரபதா என்ற இடத்திற்கு ஒதுங்கிச்சென்று விட்டார்.

(தாரீஹுத் தபரி: 03-335)

**இந்நிகழ்வு தொடர்பாக ஸஹீஹுல் புகாரியில் வந்துள்ள சரியான அறிவிப்பு:**

ஸைத் இப்னு வஹ்ப் அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் ரபதா என்ற இடத்தைக்கடந்து சென்ற போது அபூதர்(ﷺ)அவர்களை கண்டேன். அப்போது நான் அவர்களிடம் உங்களை யார் இவ்விடத்தில் தங்கவைத்தது என கேட்டேன். அதற்கவர்கள் நான் இதற்கு முன் ஷாமிலிருந்த போது நானும் முஆவியாவும் மக்கள் தங்கம் வெள்ளிகளை சேமித்து வைக்கின்ற விடயத்தில் முரண்பட்டுக் கொண்டோம். அதற்கு முஆவியா அவ்விடயம் தொடர்பாக இறங்கிய வசனங்கள் வேதங்கொடுக்கபபட்டோர் விடயத்தில் இறங்கியவையெனக் கூறினார். அதற்கு நான் எங்கள் விடயத்திலும் அவர்கள் விடயத்திலும் இறங்கியது எனக்கூறினேன்.

இது தொடர்பில் எனக்கும் அவருக்குமிடையில் சில கருத்து பரிமாற்றங்கள் இடம் பெற்றன. பிறகு முஆவியா(ﷺ)அவர்கள் உதுமான் (ﷺ)அவர்களுக்கு என்னைமுறையிட்டு ஒரு கடிதம் எழுதினார். உடனே உதுமான்(ﷺ)அவர்கள் என்னை மதீனாவிற்கு வருகை தரும்படி எனக்கு ஒரு கடிதத்தை அனுப்பி வைத்தார்கள். நான் மதீனாவிற்குச்சென்ற போது என்னை மதீனா வாசிகள் முதல் தடவையாக கண்டது போன்று என்னைப்பார்க்க வந்தனர். நான் இது தொடர்பில் உதுமான்(ﷺ)அவர்களுக்கு கூறினேன். அதற்கவர்கள் நீங்கள் நாடினால் எங்களுக்கு அருகில் இருக்கலாமே என்று கூறி என்னை இவ்விடத்தில் அமரச் செய்தார்கள். ஒரு ஹபஷி நாட்டு ஒருவரை எனக்கு தலைவராக நியமித்தால் கூட நான் அவருக்கு செவிசாய்த்துக் கட்ப்படுவேன் என்று கூறினார்கள். (ஸஹீஹுல் புகாரி: 1406)

ஆகவே உதுமான்(ﷺ)அவர்கள் அபூ தர்(ﷺ)அவர்களை ரபதா என்னுமிடத்தில் ஒதுக்கி வைக்கவுமில்லை மேலும் முஆவியா(ﷺ)அவர்கள் அப்பிரர்ச்சினை தொடர்பாக இவர்களை இழிவுபடுத்தவுமில்லை. மாறாக இவர்களுக்கு மத்தியில் சாதாரன இஜ்திஹாத் அடிப்படையிலான கருத்து பரிமாற்றங்களே நிலவின.

**குற்றச்சாட்டு எட்டு:** வெள்ளிக்கிழமை தொழுகைக்கான அழைப்பை இரண்டாக அதிகரித்தல்:-நபி(ﷺ)அவர்களுடைய காலத்தில் வெள்ளிக்கிழமை

ஜும்ஆவிற்கான அழைப்பு ஒன்றாகவே இருந்தது. எனினும் உதுமான்(ﷺ)அவர்கள் ஆட்சிக்கு வந்ததும் ஜும்ஆவிற்கான அழைப்பை இரண்டாக அதிகரித்தார். இது நபி (ஸல்) அவர்களுடைய வழிமுறைக்கு மாறுபட்டதாகும். என்ற குற்றச்சாட்டு உதுமான்(ﷺ)அவர்கள் மீது சொல்லப்படுகிறது. இவ்விடத்தில் நபிகள் நாயகம் கூறிய ஒரு செய்தியை ஞாபகப்படுத்துவது பொருத்தமானதாகும். ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனது வழி முறையையும் எனக்குப்பின்னர் வருகின்ற குலபாவுர் ராஷிதீன்களுடைய வழிமுறைகளையும் பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள்.

(அபு தாவூத்: 4608)

ஆகவே இவ்வாறு ஜும்ஆவிற்கான அழைப்பை அதிகரித்தது, குலபாவுர் ராஷிதீன்களுடைய வழிமுறைகளிலிருந்து ஒன்றாகும். உதுமான்(ﷺ)அவர்கள் குலபாவுர்ராஷிதீன்களில் ஒருவர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மேலும் உதுமான்(ﷺ)அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் முஸ்லிம்கள் வாழ்கின்ற பிரதேஷங்கள் விரிவடைந்ததால் ஜும்ஆ தினத்தன்று மக்கள் பள்ளிவாயலுக்கு நேரகாலத்தோடு வருவது சற்று பின்தங்கிய நிலையில் காணப்பட்டது. இதை தீர்க்கும் வகையில் ஜும்ஆவுடைய நேரம் நெருங்கி விட்டது என்பதை மக்களுக்குத் தெரிவிப்பதற்காக இரண்டாவது அழைப்பை அதிகரித்தார்கள். **இவ்விடயத்தில் அனைத்து ஸஹாபாக்களும் உடன்பட்டனர். இது அவ்வாறே அலி (ﷺ)அவர்களடைய ஆட்சிக்காலத்திலும் பனீ உமைய்யா மற்றும் பனி அப்பாஸ் ஆகியவர்களுடைய ஆட்சிக் காலத்திலும் பின்பற்றப்பட்டு வந்தது. இதற்கு எவருமே முரண்பட்டு கருத்து தெரிவிக்கவில்லை.** மேலும் முஸ்லிம்களுடைய ஏகோபித்த முடிவின் அடிப்படையில் இன்றுவரை இது பின்பற்றப்படுகிறது.

**குற்றச் சாட்டு ஒன்பது:** ஹுர்முஸான் என்பவனை கொன்றமைக்காக உபைதுல்லாஹ் இப்னு உமர்(ﷺ)அவர்களுக்கு உதுமான்(ﷺ)அவர்கள் எதற்காக தண்டனை வழங்கவில்லை:- அபு லு.ஃ.லுஆ என்ற நெறுப்பு வணங்கி உமர் رضي الله عنه அவர்களைக் கொன்றதன்பிறகு அவன் தன்னையும் மாய்த்துக்கொண்டான் என்ற செய்தி வரலாற்று நூல்களில் பிரபல்யமான ஒன்றேயாகும். அதேபோன்று உமர்(ﷺ)அவர்கள் கொல்லப்பட்ட மறுநாள் அவர்களுடைய மகன் உபைதுல்லாஹ்(ﷺ)அவர்கள் ஹுர்மஸான் என்ற ஒரு நபரைக்கொள்கிறார்கள். இவனைப் பொறுத்தவரையில் இவன் ஒரு நெறுப்பு வணங்கியாகபயிருந்து பிறகு இஸ்லாத்தை ஏற்றுக்கொள்கிறான்.

உபைதுல்லாஹ் இப்னு உமர்(ﷺ)அவர்களிடம் மறுநாள் தன்து தந்தையைக்கொன்ற அபு லு.ஃ.லுஆ என்பவனோடு ஹுர்முஸான் என்பவனை மூன்று நாட்களுக்கு முன் கண்டதாகவும் அவர்களிடத்தில் இரு பக்கங்கள் கூராக்கப்பட்ட ஓர் ஆயுதம் இருந்ததாகவும் அதன் மூலமாக உமர் (ﷺ)அவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்ற செய்தி கிடைத்தவுடன், இவனும் தனது தந்தையின் கொலையில் தொடர்புபட்டுள்ளான் என எண்ணி அவனை கொலை செய்கிறார்கள். இச்செய்தி தொடர்பாக ஸஈத் இப்னு முஸய்யப் என்ற தாபியி பின்வருமாறு விளக்கமாக அறிவிக்கிறார்: அப்துர் ரஹ்மான் இப்னு அபீ பக்கர்(ﷺ)அவர் உமர்(ﷺ)அவர்கள்

கொல்லப்பட்டவுடன் உபைதுல்லாஹ் இப்னு உமர்(ரலி) அவர்களிடம் வந்து பின்வருமாறு கூறினார்கள்: “நான் உமர் (ரலி) அவர்களைக்கொன்ற அபு லு.்.லுஆவை கடந்து சென்றபோது அவனுடன் ஜுபைளா என்பவனும், ஹுர்முஸான் என்பவனும் இருந்து கொண்டு ஏதோ ரகசியம் பேசுவது கண்ணுற்றேன், நான் அவர்களிடம் நெறுங்கிச்சென்ற போது அவர்கள் எழுந்து சென்று விட்டனர். அப்போது அவர்கள் மத்தியிலிருந்து இரு பக்கங்கள் கூராக்கப்பட்ட ஓர் ஆயுதம் விழுந்தது. ஆகவே உபைதுல்லாஹ்வே! உமர்(ரலி) அவர்கள் கொல்லப்பட்ட ஆயுதம் அதேபோல் உள்ளதா என்பதைப்பார் என்றார்கள்”

அப்போது உபைதுல்லாஹ்(ரலி)அவர்கள் தனது தந்தை கொல்லப்பட்ட ஆயுதத்தை உற்று நோக்கினார்கள். அப்துர் ரஹ்மான் வர்ணித்த ஆயதம் இதே போலிருப்பதை அறிந்து ஹுர்முஸான் என்பவனிடம் செல்கிறார்கள். அவன் தனது வீட்டிலிருந்து வெளியில் அவரிடம் வந்தபோது எனது குதிரை ஒன்றை பார்க்க செல்லாம் என்று அவனை அழைத்தார்கள். இருவரும் சென்று கொண்டிருக்கும் வேளையில் உபைதுல்லாஹ்(ரலி)அவர்கள் சற்று பின் வந்து அவனின் மேலால் தனது வாலை உயர்த்தினார்கள். வாழ் உயர்த்தப்பட்டதை அவன் கண்டதும், ‘‘லாஇலாக இல்லல்லாஹ்’’ என்ற கலிமாவை மொழிந்தான். பிறகு உபைதுல்லாஹ(ரலி)அவர்கள் ஜுபைனா என்பவனிடம் சென்று அவனையும் கொள்கிறார்கள், பிறகு அபூலு.்.லுஆ வுடைய மகளையும் கொள்கிறாரகள். இவ்வாறு மதீனாவில் தனது தந்தை கொலைசெய்யப்படுவதற்கு காரணமாக இருந்த அம்மூவரையும் கொல்கிறார்கள். எனினும் முஹாஜிர்கள் உபைதுல்லாஹ்(ரலி)அவர்களின் இச்செயலை வன்மையாகக் கண்டித்தனர். பிறகு உதுமான்(ரலி)அவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றவுடன் முஹாஜிர்களையும் அன்சாரிகளையும் அழைத்து, இவ்வாறு கொலையில் இந்நபர் தொடர்பாக ஆலோசனை சொல்லுங்கள் என வினவினார்கள். அப்போது அனைவரும் ஏகோபித்த முடிவில் அவருக்கு கொலைக்கான தண்டனை வழங்கலாம் என ஆலோசனை வழங்கினர். எனினும் அதிகமானோர் உபைதுல்லாஹ் இப்னு உமர் (ரலி)அவர்களின் சார்பாகவே இருந்தனர்.

பிறகு அவ்விடத்தில் அம்ரு இப்னு ஆஸ்(ரலி)அவர்கள் கூறினார்கள்: “அமீருல் மு.்.மினீனே! நிச்சயமாக இந்நிகழ்வு உங்களுக்கு ஆட்சிப் பொறுப்பு கிடைப்பதற்கு முன்னர் நிகழ்ந்ததாகும், ஆகவே இது தொடர்பாக நீங்கள் எம்முடிவும் எடுக்க வேண்டாம், என்று கூறியவுடன் அனைவரும் அவ்விடத்தை விட்டு அப்புரப்பட்டனர். பிறகு உதுமான்(ரலி) அவர்கள் உபைதுல்லாஹ்(ரலி)அவர்களின் கொலைக்குற்றத்தற்காக ஒருஅடிமைப் பெண்ணையும் இரு ஆண்களையும் பகரமாக வழங்கினார்கள்.

(அத்தபகாத் இப்னு ஸ.்.த்: 3-355)

இந்நிகழ்வை அடிப்படையாகக் கொண்டே உதுமான்(ரலி)அவர்கள் தன் ஆட்சிக்காலத்தில் கொலைக்கான தண்டனையை இஸ்லாத்தின் அடிப்படையில் வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்தனர். எனினும் இந்நிகழ்வு தொடர்பான மேலதிக ஆய்வுகளை மேற்கொண்டு, அதை இஸ்லாமிய சட்டவியலுடன் ஒப்பிடும் போது அதன் உண்மை நிலை

எமக்கு புலப்படும், எனினும் இக்குற்றச்சாட்டை நாம் படிக்கும் போது ஒரு நகைப்புக்குறிய விடயம் என்னவெனில் இந்நிகழ்வை உதுமான்(ரழி)அவர்கள் மீதான குற்றச்சாட்டாக கூறியவர்களுக்கு இவ்வாறும் செய்வதற்கு இஸ்லாதத்தில் இடமுண்டு என்ற விடயம் கூட அறியாத அறியாமையில் இருந்துள்ளார்கள் என்பதேயாகும். முடிவில் உதுமான் (ரழி)அவர்கள் கொலைக்கான தண்டனையை நிறைவேற்றாமல் இருந்தமைக்கு 3 காரணங்கள் கூறப்படுகின்றன.

**காரணம் ஒன்று:** ஹுர்மஸான் என்பவன் உமர் (ரழி) அவர்களைக் கொலைசெய்த அபூலுஃலுஆ என்பவனோடு இருந்ததால் உமர்(ரழி)அவர்களின் கொலையில் அவனுக்கும் தொடர்புள்ளது, கொலைக்கு ஆலோசனை வழங்கியவன் கொலை செய்தவன் போன்றவனாவான் என்ற அடிப்படையிலேயே உபைதுல்லாஹ்(ரழி)அவர்கள் அவனை கொலை செய்கிறார்கள். இதுவே உமர்(ரழி)அவர்களின் மார்க்கத் தீர்ப்பாகவும் இருந்தது. **“ஸன்ஆ வாசிகள் அனைவரும் ஒன்றினைந்த ஒரு மனிதனை கொல்வதற்கு சார்பாக இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் நான் கொலைத்தண்டனையை நிறைவெற்றுவேன்”** இதுவே உமர்(ரழி)அவர்களின் தீர்பாகக் காணப்பட்டது, ஆகவே இதனை அடிப்படையாகக் கொண்டு உபைதுல்லாஹ்(ரழி)அவர்கள் ஹுர்முஸானைக் கொலை செய்து இருக்கலாம்.

**காரணம் இரண்டு:** இதே போன்று ஒரு நிகழ்வு நபி(ஸல்)அவர்கள் உயிரோடு இருந்த காலப்பகுதியில் உஸாம(ரழி)அவர்களுக்கு இடம்பெற்றுள்ளது. அந்நிகழ்வுக்காக உஸாமா (ரழி)அவர்களை நபி (ஸல்) அவர்கள் தண்டிக்கவில்லை. மாறாக உஸாமா(ரழி) அவ்விடயத்தில் தக்க காரணத்திற்கு உட்பட்டவராக இருந்ததால் அவரை மன்னித்தது விட்டார்கள். **அதாவது :** ஒரு போரின்போது முஸ்லிம்களை கொன்றுகுவித்துக் கொண்டிருந்த ஒரு இணைவைப்பாளனை உஸாமா(ரழி)அவர்கள் காண்கிறார்கள். அவரை பிந்துயர்ந்து உஸாமா(ரழி)செல்கிறார், தான் பின்தொடரப்படுவதை அறிந்த அவர், அவரை விட்டும் ஒழிந்து கொள்கிறார். அவர் மறைத்து கொள்வதைக் கண்ணுற்ற இவர், அவர் ஒழிந்து கொண்ட இடத்திற்குச்சென்று அவரிற்கு மேலால் வாலை உயர்த்துகிறார்கள், தனக்கு மேலால் வால் உயர்த்தப்பட்டதை அறிந்த அந்நபர் **“லாஇலாக இல்லல்லாஹ்”** என்ற கலிமாவை கூறுகிறார். எனினும் கொல்லப்படுவதை பயந்ததால்தான் இவ்வாறு கூறினார் என உஸாமா(ரழி)எண்ணி அவரைக்கொன்று விடுகிறார்கள். இச்செய்தி நபி(ஸல்)அவர்களிடம் வந்தடைகிறது, அவர்கள் உஸாமா(ரழி)யை அழைத்து “அவர் லாஇலாக இல்லல்லாஹ் என கூறியதன் பிறகு கொன்றாயா?” என கேட்டார்கள். அதற்கவர் கொலைக்கு பயந்தே அவ்வாறு அவர் கூறினார் என பதிலளித்தார்கள். அதற்கு நபியவர்கள் கோபமடைந்து, அவரது உள்ளத்தை நீ பிளந்து பார்த்திருக்கக் கூடாதா? எனக்கேட்டார்கள்.

(ஸஹீஹுல் புஹாரி :4269)

எனினும் நபியவர்கள் உஸாமா(ரழி)அவர்களுக்கு கொலைக்கான தண்டனையை நிறைவேற்றவில்லை, ஏனெனில் அவர் சந்தேகத்திற்கு மத்தியில் கொலை செய்தார், அதே போன்றுதான் உபைதுல்லாஹ்(ரழி)அவர்களும் சந்தேகத்திற்கு மத்தியிலேயே கொலை செய்தார்.

**காரணம் மூன்று:** கொலை செய்யப்பட்ட ஹுர்முஸானிற்கு பொறுப்பாளர் (வலி) என்று எவருமே இருந்ததில்லை, ஆகவே ஒருவருக்கு பொறுப்பாளர் இல்லையெனில் அவருக்கு ஆட்சியாளரே பொறுப்பாளர் ஆவார், என்பதே இஸ்லாமிய ஷரீஅத்தின் சட்டமாகும், அவரே அவருக்குரிய அனைத்து உரிமைகளையும் நிறைவேற்றுவார். ஆகவே பொறுப்பாளரான கலீபா உதுமான்(ரழி)அவர்களே கொலையாளியை மன்னித்து விட்டார். எனவே நிச்சயமாக இம்மூன்று விடயங்களில் ஒன்றின் அடிப்படையிலோ அல்லது மூன்றையும் கொண்டோ இந்நிகழ்வை ஒப்பு நோக்கினால், உதுமான்(ரழி)அவர்கள் மீது கூறப்படும் இக்குற்றச்சாட்டின் உண்மை நிலை எமக்கு புலப்படும். அல்லாஹ்வே மிக அறிந்தவன்.

**குற்றச்சாட்டு பத்து:** நபி(ஸல்)அவர்களால் மதீனாவை விட்டும் விரட்டப்பட்ட ஹிகம் என்ற நபரை மீண்டும் அழைத்தமை. இது தொடர்பாக நாம் சில விடயங்களை அறிந்து கொள்வது அவசியமாகும்.

01- ஹிகம் என்ற நபரை நபியவர்கள் விரட்டியதாக அவர்களைத்தொட்டும் அறிவிக்கப்படும் அனைத்து செய்திகளும் உறுதிப்படுத்தப்படாத பலவீனமான செய்திகள் ஆகும்.

02- ஹிகம் என்ற நபர் ஹிஜ்ரி 8ல் மக்கா வெற்றியின் போது நபியவர்களால் மண்ணிப்பு வழங்கப்பட்டவர்களில் ஒருவராவார் ஆகவே இவ்வாறு மண்ணிப்பு வழங்கப்பட்டோர் மக்காவிலேயே தங்கள் இருப்பிடங்களை அமைத்துக்கொண்டனர். மாறாக அவர்கள் மதீனாவில் வசிக்கவில்லை. இந்நிலையில் ஹிகம் மக்காவில் இருக்கும் போது நபியவர்கள் அவரை எவ்வாறு மதீனாவில் வசிப்பதை விட்டும் தடுத்திருப்பார்?

03- இஸ்லாமிய மார்க்கத்தில் ஒருவரை தள்ளி வைப்தென்றாலோ அல்லது நாடு கடத்துவதென்றாலோ அதன் அதிகபட்ச கால எல்லை ஒரு வருடமேயாகும். உதாரணமாக திருமணம் செய்யாமல் விபச்சாரத்தில் ஈடுபட்ட ஒருவரை அதிகபட்சமாக ஒரு வருட கால எல்லை அவரை தண்டனை வழங்கும் முகமாக தள்ளி வைக்கலாம். என்று ஷரீஅத்தில் உள்ளது. எனினும் ஒருவரை அவர் வாழும் காலமெல்லாம் இவ்வாறு செய்யலாம் என்பதற்கு ஷரீஅத்தில் இடமில்லை. அப்படியானால் நபியவர்கள் ஹிகமை மதீனாவை விட்டும் ஒதுக்கி வைத்தார்கள் என்ற செய்தியை ஒரு வாதத்திற்கு உண்மயென்று எடுத்துக்கொண்டால் நபியவர்களின் ஆடசிக்காலம் அபூ பக்கர் மற்றும் உமர் (ரழி)ஆகிய மூவரின் காலயெல்லை கிட்டத்தட்ட 15 வருடங்களுக்கு மேற்படுகின்றது. எனவே 15 வருடங்களுக்குப்பிறகு ஒதுக்கி வைக்கப்பட்ட ஒரு மனிதரை நல்லெண்ணத்தின் அடிப்படையில் மீண்டும் அழைப்பதில் என்ன தவறுள்ளது?

இதே போன்று **அப்துல்லாஹ் இப்னு ஸஃத் இப்னு அபீ ஷரஹ்**(ரழி)ஒரு சந்ர்ப்பத்தில் இஸ்லாத்தை ஏற்றதன் பிறகு முர்தத்தாக செல்கிறான். இதன்

பிறகு மனம் வருந்தி இஸ்லாத்தில் மீண்டும் இணைந்து கொள்கிறார். எனினும் நபியவர்கள் அவர்களோடு எதுவித தொடபும் வைத்துக் கொள்ளவில்லை. இதையறிந்த உதுமான்(ﷺ)அவர்கள் நபியவர்களிடம் சென்று அவரை மண்ணிக்குமாறும் ஏற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறார்கள். நபியவர்களும் அவர்களை மண்ணித்து ஏற்றுக் கொள்கிறார்கள்.

இதே போன்றுதான் ஹிகம் என்பவருடைய விடயத்தில் இடம் பெற்றுள்ளது. எனினும் ஹிகம் அப்துல்லாஹ் இப்னு ஸ.்.த்(ﷺ)அவர்கள் செய்தது போல இஸ்லாத்தை தகர்க்கக்கூடிய பாவம் எதையும் செய்யவில்லையே!.... மதம் மாறி மீண்டும் இஸ்லாத்தில் இணைந்து கொன்டவரை மண்ணித்த நபியவர்கள் எதுவித தவறும் செய்யாத ஹிகமை மன்னிக்கமாட்டார்களா?

## யார் இந்த மர்வான் இப்னு ஹகம்?....

நாம் உதுமான்(ﷺ)அவர்களுடைய ஆட்சிக்காலத்தை படிக்கும்போது அல்லது உமைய்யாக்களுடைய ஆட்சிக்காலத்தை படிக்கும்போதும் **மர்வான்** என்ற ஒரு நபர் பற்றி விசேடமாக சொல்லப்படுவதையும் அவர் பற்றிய தவறான கருத்துக்கள் பதியப்படுவதையும் நாம் பார்க்கலாம். எனினும் இவ்விடத்தில் மர்வான் பற்றிய ஒரு குறிப்பை நோக்குவது சிறந்ததாகும்.

**இவரது முழுப்பெயர்:** மர்வான் இப்னு ஹகம் இப்னு அபுல் ஆஸ். பனு உமைய்யா.

**இவரது ஆரம்ப பெயர்:** அப்துல் ஹகீம்.

இவர் ஹிஜ்ரி 2ல் பிறந்தார். மக்கா வெற்றியன்று தனது வயது 6க இருக்கும் ரேபது நபியவர்களைக் காண்கிறார். இவர் நபித்தோழரா இல்லையா? என்பதில் அறிஞர்கள் முரண்பட்டுள்ளனர். "இப்னு ஹஜர் மற்றும் தஹபி ஆகிய அறிஞர்கள் இவரை நபித்தோழர் என்கின்றனர்" எனினும் அதிகமான அறிஞர்கள் இவரை நபித்தோழர் என்பதை விட தாபிஇ என்று கூறுவதே பொறுத்தமானது என்கின்றனர். ஏனெனில் இவர் நீண்டகாலம் மதீனாவில் வாழவுமில்லை. நபியவர்களோடு தோழமை கொள்ளவுமில்லை. இவர் தனது தந்தையோடு தாயிப் நகரத்திலேயே வாழ்ந்து வந்நார். ஹிஜ்ரி 65ம் ஆண்டு தமஸ்கஷில் மரணிக்கிறார். நபியவர்கள் மரணித்ததன் பிற்பாடு உதுமான் رضي الله عنهஅவர்களுடைய ஆட்சிக்காலத்தில் மதீனாவிற்கு வருகை தந்து கலீபாவுடைய எழுத்தாளராக பதவியேற்றார். பனு உமைய்யா ஆட்சிக்காலத்தில் 4வது கலீபாவாக பதவியேற்று கிட்டத்தட்ட 9 மாதங்கள் ஆட்சி செய்கிறார்.

**ஆஹ்லுல் பைத்தினரை இவர் வெறுத்ததாக கூறப்படும் செய்தி:** இது ஒருதெளிவான பொய்யாகும். அதற்கு எவ்வித ஆதாரமும் உறுதிப்படுத்தப்படவில்லை. இவர் பனு ஹாஷிம்களை (நபியவர்களின் குடும்பம்) அதிகமாக நேசிக்கக்கூடியவராக இருந்தார். உண்மையிலேயே இவர் அஹ்லுல் பைத்தினரை வெறுப்பவராக இருந்திருந்தால், இவர் அலி(ﷺ)அவர்களிடமிருந்த ஹதீஸ்களை அறிவித்திருக்கவோ அல்லது அலி(ﷺ)அவர்களுடைய பேரப்பிள்ளை ஸைய்னுல் ஆப்தீன் இவரிடமிருந்து

ஹதீஸ்களை அறிவித்திருக்கவோ மாட்டார்கள். இமாம் இப்னு தைய்மிய்யா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: "ஹுஸைன்(ﷺ)அவர்களுடைய மகன் அலி (ரஹ்) அவர்கள் தனது தந்தையிடமிருந்து கற்றதை விட மற்றவர்களிடமிருந்து அதிகமாக கற்றுள்ளார். ஏனெனில் ஹுஸைன் رضي الله عنه அவர்கள் ஹிஜ்ரி 61ம் ஆண்டு மரணித்த போது அலி (ரஹ்) அவர்கள் சிறு பிள்ளையாக இருந்தார்கள். அப்போது மதீனாவிற்கு வந்து ஆயிஷா, ஸபிய்யா(ழ) ஆகியவர்களிடமும் இப்னு அப்பாஸ் رضي الله عنه அவர்களிடத்திலும் மர்வானிடத்திலும் கல்வி கற்றுள்ளார்"

**தல்ஹா(ﷺ)அவர்களை கொலை செய்வதில் மர்வானின் பங்கு:** நாம் ஆரம்பத்தில் கூறியது போன்று அறிஞர்களால் விமர்சிக்கப்பட்ட **வாகிதி** என்பவர் அறிவிக்கிறார்: "ஒட்டகப்போர் நாளன்று அனைவருமே உதுமான் (ﷺ)அவர்களுக்காக போரிட்ட சந்தர்ப்பத்தில் மர்வான் அக்கலத்தில் தல்ஹா(ﷺ)அவர்களை காண்கிறார். அப்போது உதுமான்(ﷺ)அவர்களுடைய மகன் அபான் என்பவரிடத்தில் உமது தந்தையின் இரத்தம் இவர் மூலமாகவே ஓட்டப்பட்டது என்று கூறி தல்ஹா(ﷺ)அவர்களுக்கு தனது கையிலிருந்த ஈட்டியை எய்கிறார். அவ்விடத்தில் தல்ஹா (ﷺ)அவர்கள் மரணிக்கிறார். இதுவே **பொய்யனான வாகிதி** என்பவனுடைய அறிவிப்பாகும். எனினும் இந்நிகழ்வு நடந்ததற்கு எவ்வித ஆதாரமும் குறிப்பிடப்படவில்லை. இவ்விடத்தில் சில குறிப்புக்களை நோக்க வேண்டும். உதுமான்(ﷺ)அவர்களுக்காகவே தல்ஹா(ﷺ)அவர்களும் மர்வானும் ஒரே படையில் போர் புரிந்தார்கள். என்பது நாம் அனைவரும் அறிந்த விடயமே, இந்நிலையில் மர்வான் எதற்காக தனது அணியைச்சார்ந்தவரைக்கொல்ல வேண்டும்!.. அது மாத்திரமல்லாமல் தல்ஹா(ﷺ)அவர்கள் உதுமான்(ﷺ)அவர்களின் கொலையில் எதுவித தொடர்பும் பட்டதில்லை என்றும் தல்ஹா(ﷺ)அவர்கள் உதுமான்(ﷺ)அவர்களைக் காப்பாற்றுவதற்காக தனது மகன் முஹம்மதை அனுப்பி வைத்தார் என்பது கூட மர்வானுக்கு நன்கு தெரிந்த விடயமே, பிறகு எதற்காக மர்வான், தல்ஹா (ﷺ)அவர்களைக் கொல்ல வேண்டும்!..... ஆகவே மேற்குறிப்பிட்ட **வாகிதி என்பவனுடைய** அறிவிப்பிலேயே குளறுபடிகள் எற்பட்டுள்ளன.

**பெருநாள் உரையை மர்வான் முட்படுத்தினார்**

இது தொடர்பான செய்தி ஸஹீஹுல் முஸ்லிமில் இடம் பெற்றுள்ளது. இது தொடர்பில் மர்வான் தவறிழைத்துள்ளார் என்பதில் அனைத்து அறிஞர்களும் ஒருமித்த முடிவில் உள்ளனர். ஏனெனில் வணக்க வழிபாடுகள் விடயத்தில் நாம் எமது கையூட்டல்களை நுழைக்க முடியது. அவற்றை வஹியின் அடிப்படையிலேயே பின்பற்ற வேண்டும். எனவே மர்வான் தனது ஆட்சிக்காலத்தில் பெருநாள் உரையை தொழகைக்கு முட்படுத்தியது அவர் விட்ட தவறேயாகும்.

நாம் மேற்குறிப்பிட்ட 10 வகையான அம்சங்களே உதுமான்(ﷺ)அவர்கள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளாகும். இவைகளை பின்வருமாறு அட்டவனைப்பிரகாரம் நோக்கலாம்.

| | |
|---|---|
| பொய்யான விடயங்கள் | 7 , 4 , 10 |
| நல்லவைகள் | 1 , 6 |
| இஜ்திகாதிற்று உட்பட்டவைகள் | 3 , 5 , 2 , 9 , 8 |
| தவறுகள் எனினும் மண்ணிக்கப்பட்டவைகள் | உஹத் யுத்தத்தில் விரன்டோடியது. |

# அலி(رضي الله عنه)அவர்களுடைய ஆட்சிக்காலம்

## (பகுதி-01)

### அலி(رضي الله عنه)அவர்கள் பற்றிய சிறு குறிப்பு

இவரது முழுப் பெயர்: அலி இப்னு அபீ தாலிப் இப்னு அப்துல் முத்தலிப் இப்னு ஹாஷிம் குரைஷ். இவர் நபி (ஸல்) அவர்களுடைய சிறிய தந்தையின் மகனும் மேலும் அவர்களுடைய மருமகனுமாவார்.

புனைப் பெயர்: அபுல் ஹஸன், அபுத் துராப்.

### அலி(رضي الله عنه)அவர்களுடைய சிறப்புக்கள்

அபூ ஹுரைரா(رضي الله عنه)அவர்கள் அறிவிக்கிறார்கள்:"கைபர் தினத்தன்று நபியவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: "நான் நாளைய தினம் போருக்கான கொடியை ஒரு மனிதரிடம் கொடுக்க நாடுகிறேன். அவர் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நேசிக்கிறார், அவரையும் அல்லாஹ்வும் அவனது தூதரும் நேசிக்கின்றார்கள்" (ஸஹீஹுல் புகாரி: 3702)

அலி(رضي الله عنه)அறிவிக்கிறார்கள்: "என்னிடம் நபியவர்கள் ஒரு முறை கூறினார்கள்: அலியே உம்மை மு.்.மினைத் தவிர வேறு எவனும் நேசிக்க மாட்டான். மேலும் உம்மை நயவஞ்சுகனைத்தவிர வேறு எவரும் வெறுக்கவும் மாட்டான். (ஸஹீஹுல் முஸலிம்: 78)

ஸஃத் இப்னு அபி வக்காஸ்(رضي الله عنه)அவர்கள் அறிவிக்கிறார்கள்: "ஒரு முறை நபியவர்கள் அலி (رضي الله عنه)அவர்களிடம் கூறினார்கள்: நீர் என்னிடத்தில் மூஸாவிடம் ஹாரூன் இருந்த அந்தஸ்தில் உள்ளீர். எனினும் ஹாரூன் ஒரு நபியாவார். எனக்குப்பிறகு நபி வர முடியாது.

(ஸஹிஹுல் புகாரி: 3706)

## (பகுதி-02)

### அலி (رضي الله عنه)அவர்கள் கலீபாவாக பைஅத் செய்யப்படுதல்

ஹிஜ்ரி 35ஆம் ஆண்டு துல்ஹிஜ்ஜா மாதம் பிறை 18 அன்று காவாரிஜ்கலால் உதுமான்(رضي الله عنه) அவர்கள் அநீதி இழைக்கப்பட்டு கொல்லப்படுகிறார்கள்.

தனக்குப்பின் இஸ்லாமிய சமூகத்திதை பாதுகாக்கும் ஆட்சியாளர் ஒருவரை தெரிவுசெய்வதற்கு அநியாயக்காரர்கள் அவருக்கு இடம் கொடுக்கவில்லை. இந்நிலையில் மதீனா நகர் ஆட்சியாளரில்லாமல் 05 நாட்கள் வெருமையாக ஆட்சியாளர் இல்லாமல் இருந்ததாக சில அறிவிப்புக்கள் சொல்கின்றன. இந்நாட்களில் மதீனா நகருக்குத்தலைவராக கவாரிஜ்களுடைய தலைவன் நியமிக்கப்பட்டிருந்தான். முஹம்மத் இப்னு ஹனபிய்யா அவர்கள் அறிவிக்கிறார்கள்: "உதுமான்(ﷺ)அவர்கள் கொல்லப்பட்ட சந்தர்ப்பத்தில் அலி رضي الله عنه அவர்கள் அவர்களுடைய வீட்டிற்கு வருகிறார்கள். அப்போது அவர்களிடம் மக்கள் கூட்டமொன்று வந்து நிச்சயமாக இந்நபர் கொல்லப்பட்டு விட்டார். ஆகவே மக்களுக்கு ஒரு ஆட்சியாளர் அவசியமாகும். அதற்கு பொறுத்தமானவரென நாங்கள் கருதுவது தாங்களையே என்றனர்.

அதற்கு அலி(ﷺ)அவர்கள் நீங்கள் என்னை தெரிவு செய்யாதீர்கள். என்னை விடச்சிறந்தவர் உங்களுக்கு கிடைப்பார் என்றார். அதற்கு அவர்கள் உங்களைத்தவிர அதற்குத் தகுதியானவராக நாங்கள் அறிந்ததில்லை என்றனர். அதற்கு அலி (ﷺ)அவர்கள் நீங்கள் அவ்வாறு கருதினால் எனக்கு செய்யப்படுகின்ற பைஅத் ரகசியமாக இருக்கக்கூடாது. நான் பள்ளிக்குச்செல்கிறேன் யார் எனக்கு பைஅத் செய்ய நாடுகிறார்களோ அவர்கள் எனக்கு பைஅத் செய்யட்டும் என்று சொல்லி சென்றார்கள். மக்களும் அவருக்கு பைஅத் செய்தனர். (முஸ்னத் அஹ்மத்: 02-573)

ஆகவே அலி(ﷺ)அவர்களுக்கு மதீனாவிலிருந்த முஹாஜிர் மற்றும் அன்ஸாரித் தோழர்கள் அனைவரும் பைஅத் செய்தனர். எனினும் வரலாற்று நூல்களில் சில நபித் தோழர்களின் பெயர் குறிப்பிடப்பட்டு அவர்கள் அலி(ﷺ)அவர்களுக்கு பைஅத் செய்வதற்கு பின்வாங்கினர். என்று சொல்லப்படுகிறது. எனினும் சரியான அறிவிப்புக்களின் அடிப்படையில் நோக்கினால் மதீனாவிலிருந்த அனைதது சாராரும் அலி (ﷺ)அவர்களுக்கு பைஅத் செய்தார்கள் என்பதாகவே விளங்கப்படுகிறது. பின் வாங்கியவர்கள் எதற்கு பின் வாங்கினார்கள்? என்பதை நோக்கினால் அலி(ﷺ)அவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்று சில நாட்களுக்குப்பிறகு ஷாம் பகுதிக்கு போரிற்குச் செல்வதற்காக ஓர் படையை தயார் செய்தார்கள் இவ்வாறு போர் செய்வதற்கே சிலர் பின் வாங்கினார்கள். என்று தெளிவாகிறது. அலி رضي الله عنه அவர்கள் கலீபாவாக பதவியேற்றது தொடர்பாக மற்றுமொரு அறிவிப்பும் இடம்பெற்றுள்ளது, <u>**அதாவது:**</u> அலி (ﷺ)அவர்கள் ஓரிடத்தில் நிற்கும் போது சிலர் அவரிடம் வருகை தந்து நாம் உங்களுக்கு பைஅத் செய்கிறோம் என்றனர். உடனே அலி(ﷺ) அவர்கள், அவர்களை விட்டு விரண்டோடி **அம்ரு இப்னு மப்தூல்** என்பவரின் வீட்டுக்குள் நுழைந்து வீட்டுக்கதவை மூடிக்கொண்டார்கள். அவர்கள் கதவை தட்டியும் அலி(ﷺ)கதவை திறக்கவில்லை. அவர்கள் சென்று தல்ஹா மற்றும் ஸுபைர்(ﷺ)ஆகிய இருவரையும் அழைத்து வந்தனர். அவ்விருவரும் அவரிடம் வந்து "நிச்சயமாக இவ்வாட்சி ஆட்சியாளர் இல்லாமல் இருப்பது உகந்ததல்ல ஆகவே நீர் அப்பொறுப்பை ஏற்றுக்கொள் என்றனர்" எனினும்

இதை அலி﵁மறுத்துவிட்டார்கள். மீண்டும் அவர்கள் வற்புறுத்தியதால் கலீபாப் பொறுப்பை ஏற்பதாக கூறினார். உடனே அவ்விடத்திலேயே தல்ஹா﵁அவர்கள் பைஅத் செய்தார்கள். பிறகு பள்ளியில் அனைவரும் பைஅத் செய்தனர்.

(ஆல் பிதாயா வன் நிஹாயா)

இச்சந்தர்ப்பத்தில் நு.ஃமான் இப்னு பஸீர்﵁அவர்கள் உதுமான்﵁யின் இரத்தம் படிந்த ஆடையையும் அவரது மனைவி நாயிலா என்பவரின் வெட்டப்பட்ட விரலையும் தன்னோடு எடுத்துக்கொண்டு முஆவியா﵁அவர்களிடம் காண்பிப்பதற்காக ஷாம் பகுதிக்கு செல்கிறார். அவற்றை பெற்றுக் கொண்ட முஆவியா﵁அவற்றை மக்கள் பார்வைக்காக மிம்பரில் வைத்தார்கள். மேலும் இச்சிந்தப்பட்ட இரத்தத்திற்காக பலிவாங்க வேண்டும் என்று மக்களுக்கு கூறினார்கள். மக்களை அதைச்சுற்றி பார்வையிட்டு ஒரு வருடகாலமாக அழுதவண்ணமே காணப்பட்டார்கள்.

மறுபுறம் மதீனாவில் அலி﵁அவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றதன் பிற்பாடு தல்ஹா மற்றும் ஸுபைர் மற்றும் வேறு சில நபித்தோழர்களும் அலி﵁யிடம் வந்து உதுமான் ﵁யை கொலை செய்தவர்களுக்கு தண்டனையை நிறைவேற்றுமாறு கேட்டுக் கொண்டார்கள். எனினும் அலி رضي الله عنه தற்போதுள்ள நிலையில் அது இயலாத ஒன்று சற்று காலம் தாமதிக்கலாம் என காரணம் கூறினார்கள்.

ஸுபைர்﵁கலீபாவிடம் தன்னை கூபாவிற்கு கவரனராக நியமிக்கும் படியும், அங்கிருந்து கவாரிஜ்களோடு போரிடுவதற்காக ஒரு படையை அழைத்து வருவதாக கூறினார். அதே போன்று தல்ஹா﵁கலீபாவிடம் பஸராவிலிருந்து ஒரு படையை அழைத்து வரஅனுமதி கேட்டனர். எனினும் அலி﵁அவர்கள் தனக்கு ஆலோசனை கூறுவதற்கு நீங்கள் இருவரும் மதீனாவிலேயே இருக்க வேண்டும் என்று கூறி மறுத்துவிட்டார்கள். பிறகு முகீரா இப்னு ஸு.ஃபா﵁அவர்கள் அலி﵁யிடம் வந்து “ஏனைய பிரதேசங்களில் பொறுப்புக்களில் இருப்பவர்களை நீர் நீக்காமல் இருப்பதையே நான் சரியாக கருதுகிறேன்” என்றார்கள். பிறகு மறுநாள் அவர்களிடம் வந்து, “அலியே நீர் ஏனைய பிரதேசங்களில் பொறுப்பில் உள்ளவர்களை நீக்கி அவர்களில் உமக்கு யார் கட்டுப்படுகிறார்கள் அல்லது முறண்படுகிறார்கள் என்பதை சோதித்து பார்க்கலாம்” என ஆலோசனை கூறினார்.

இவ்வாறு அவர் இருநாட்கள் கூறியதையும் அலி﵁இப்னு அப்பாஸ்﵁அவர்களிடம் கூறினார்கள். அதற்கவர், “நேற்றைய தினம் அவர் உமர் உமக்கு ஆலோசனை கூறினார். ஆனால் இன்று உமக்கு அவர் மோசடி செய்து விட்டார் என கூறினார்” (இப்னு அப்பாஸ்﵁கவர்னர்களை நீக்கக்கூடாது எனற எண்ணத்தில் இருந்தார்) இச்செய்தி முகீரா﵁அவர்களை எட்டியதும், ஆம் உண்மைதான், நேற்று நான் அவருக்கு கூறிய போது அவர் ஏற்கவில்லை அதற்காக இன்று நான் மோசடி செய்வதற்காக அவ்வாறு கூறினேன்” என்று கோபமாக கூறினார்கள். பிறகு

அவர்கள் மக்காவிறகு சென்று விட்டார். பிறகு தல்ஹா மற்றும் ஸுபைர்(ﷺ)ஆகிய இருவரும் கலீபாவிடம் வந்து மக்காவிற்கு உம்றாவிற்கு செல்வதற்கு அனுமதி கேட்டு மக்காவிற்கு சென்றார்கள், அவ்விருவரோடும் மதீனாவிலீருந்து ஒரு கூட்டமும் மக்கா செல்வதற்கு ஆயத்தமானது. பிறகு இப்னு அப்பாஸ் (ﷺ)கலீபாவிடம் வந்து, "எந்த ஒரு கவர்னரையும் நீங்கள் நீக்க வேண்டாம். அவ்வாறு நீக்கினால் உதுமான்(ﷺ)அவர்களின் கொலைக்கு தண்டனை வழங்குமாறு உம்மை அனைவரும் வற்புறுத்துவார்கள். குறிப்பாக முஆவியாவை நீக்காதே என்றார்கள்" அதற்கு அலி(ﷺ): "எனக்கு அது சரியாக தோனவில்லை, எனவே நான் உங்களை ஷாமிற்கான கவர்னராக நியமிக்கிறேன், உடனே அங்கு செல்லுங்கள் என்றார்கள்" அதற்கு இப்னு அப்பாஸ்(ﷺ): "நான் முஆவியாவை கடுமையாக அஞ்சுகிறேன் எனக்கூறி மறுத்துவிட்டார்கள்" சிறிது காலத்திற்குபிறகு அலி (ﷺ)சில பகுதிகளுக்கு பொறுப்பாளர்கள் சிலரை நியமிக்கிறார்கள். **அதன் விபரம் பின்வருமாறு:**

01- இப்னு அப்பாஸ்(ﷺ): யமன்.
02- உதுமான் இப்னு ஹனீப்: பஸரா.
03- கைஸ் இப்னு ஸஃத் இப்னு உபாதா: மிஸ்ர்.
04- ஸஹ்ல் இப்னு ஹனீப்: ஷாம் (முஆவியாவிற்கு பகரமாக)

ஷாம் பகுதிக்கு நியமிக்கப்பட்ட ஸஹ்ல் இப்னு ஸஃத் அங்கு செல்கிறார், செல்லும் வழியில் முஆவியா(ﷺ)அவர்களிற்கு சார்பான ஒரு குழுவைச்சந்திக்கிறார். அப்போது, அவர்கள் "நீர் யார்" என கேட்கிறார்கள் அதற்கவர்: "நான் தலைவராக நியமிக்கப்ட்டவன் என்கிறார்கள்" அதற்கவர்கள்: "எப்பகுதிக்கு" என கேட்டார்கள், அதற்கவர்: "ஷாமிற்க என கூறினார்" அதற்கவர்கள்: உம்மை உதுமான்(ﷺ)அவர்கள் அனுப்பிருந்தால் நீர் வரலாம், அல்லது வேறு எவராவது அனுப்பிருந்தால் நீர் திரும்பிச்சென்றுவிடு என்றார்கள். இதைக்கேட்ட அவர் அலி(ﷺ)யிடம் வந்து இதை முறையிட்டார்கள். மிஸ்ர் பகுதிக்கு கவர்வனராக அணுப்பப்பட்ட ஸஃத் இப்னு கைஸைப் பொருத்தவரை அவரோடு அங்கிருந்தோர் முறண்பட்டுக் கொண்டனர். பெரும்பான்மையோர் அவருக்கு பைஅத் செய்தாலும் ஒரு சிறு தொகையினர் உதுமான்(ﷺ)யின் கொலைக்கு பதில் கிடைக்கும் வரை நாம் பைஅத் செய்யமாட்டோம் என்றனர். மேலும் அந்நேரத்தில் கூபாவில் கவர்னராக இருந்த அபூமூஸா அல் அஷ்அரி (ﷺ)சிறு தொகையினரை விட தங்களுக்கு அனைவரும் கட்டுப்படுகின்றனர் என ஒரு கடிதத்தை அலி(ﷺ)அவர்களுக்கு அனுப்பி வைக்கிறார். மேலும் அலி (ﷺ)அவர்கள் முஆவியா(ﷺ)அவர்களுக்கு தெடர்ச்சியாக 03 மாதங்களாக பல கடிதங்கள் அனுப்பினார். எனினும் முஆவியா(ﷺ)எதுவித பதிலும் அனுப்பவில்லை. இறுதியில் முஆவியா(ﷺ)ஒரு மனிதரை அலி(ﷺ)யிடம் அனுப்பினார்கள். அவரிடம் அலி(ﷺ)என்ன செய்தி கொண்டு வந்துள்ளாய் என வினவினார்கள்.

அதற்கவர்: "நான் உதுமான் (ﷺ)அவர்களின் கொலைக்காக பலிக்குப்பலி செய்ய வேண்டும் ஒரு சமூகத்திடம் இருந்து வந்துள்ளேன். மேலும் உதுமான(ﷺ)க்காக அவரின் ஆடையைச் சுற்றி அழுகின்ற 7000

பெரியார்களை திமஸ்கில் விட்டுவிட்டு வந்துள்ளேன்" அதற்கு அலி (ﷺ)அவரிடம்: "நான் உதுமானுடைய இரத்தத்திலிருந்து விடுபட்டவன் என்றார்கள்" பிறகு முஆவியா(ﷺ)இன் தூதுவர் வெளியில் சென்றுவிட்டார். இந்நிகழ்விற்குப் பிறகு அலி(ﷺ)அவர்கள் ஷாமிற்கு யுத்தத்திற்கு செல்லப்போவதாக அறிவித்து தனது பிரதிநிதிகள் அனைவருக்கும் போரிட்கான படையை தயார் படுத்துமாறு கட்டளையிட்டார்கள். எனினும் சில காரணங்களால் இப்போருக்கான பாதை மற்றுமொறு போறுக்கு திசை திருப்பப்பட்டதென்பதை நாம் பிற்பகுதியில் காணலாம்.

## ஒட்டகப் போரின் ஆரம்பம்

உதுமான் (ﷺ)அவர்களுடைய கொலை நடந்ததன் பின்னர் மதீனா வாசிகளிலில் அதிகமானோர் மக்காவிற்குச் சென்றுவிட்டனர். அதேபோன்று உம்மஹாதுல் மு.ஃமினீன்களும் அவ்வாண்டு ஹஜ்ஜுக்காக மக்காவிற்குச் சென்றுவிட்டனர். மேலும் உதுமான(ﷺ)அவர்களுடைய குடும்பந்தைச்சார்ந்த (பனு உமைய்யா) **வலீத் இப்னு உக்பா, அப்துல்லாஹ் இப்னு ஆமிர், ஸஈத் இப்னு ஆஸ்(ﷺ)ஆகியவர்களும் மர்வான் மற்றும் உதுமான் (ﷺ)அவர்களுடைய சகோதரன் போன்ரோறும் மக்காவிற்குச் சென்றோரில் அடங்குவர்.** அதேவேளையில் நாம் ஏற்கனவே கூறியது போன்று தல்ஹா மற்றும் ஸுபரை(ﷺ)ஆகிய இருவரும் கலீபா அலி(ﷺ)அவர்களிடம் உம்ராவிற்குச் செல்வதற்கான அனுமதி பெற்று மக்காவிற்குச் சென்றபோது அவர்களை பின்துயர்ந்து மதீனா வாசிகளிலொரு கூட்டத்தினரும் சென்றனர்.

ஒருபுறம் அலி(ﷺ)அவர்கள் ஷாமிற்கான போர்ப்படையை தயார் செய்து வைத்திருந்த நிலையில் அப்படையில் கலந்து கொள்வதற்கு அதிகமான மதீனா வாசிகள் மறுத்துவிட்னர். ஆகவே கலீபா அவர்கள் இப்னு உமர்(ﷺ)அவர்களிடம் தன்னோடு போரிற்காக வருமாறு அழைப்பு விடுத்தார். எனினும் இப்னு உமர்(ﷺ)அவர்கள்: "நான் ஒரு மதீனா வாசியாவேன். ஏனையோரும் உம்மோடு வந்தால் நானும் வருகிறேன். எனினும் இவ்வருடம் என்னால் போரிற்காக வர முடியாது" என்று கூறி மறுத்துவிட்டார்கள். இதற்குப்பிறகு இப்னு உமர் (ﷺ)அவர்கள் மக்காவிற்குச் சென்றுவிட்டார்கள். மேலும் எமன் பிரதேஷத்திலிருந்து அதற்கு கவர்னராக இருந்த ய.ஃலா இப்னு மனிய்யா (இவர் உதுமான்(ﷺ)அவர்களால் நியமிக்கப்பட்டவர்) தன்னோடு 600 ஒட்டகங்கள் மற்றும் 600 திர்கங்களை இணைத்துக் கொண்டு மக்காவிற்கு வருகிறார். ஆகவே ஒருபுறம் அலி(ﷺ)அவர்கள் ஷாமிற்கான போர் படையை தயார்செய்த நிலையிலிருக்கிறார்கள். மறுபுரம் மக்காவில் பெறும் ஸஹாபாக்கள் ஒன்று கூடுகிறார்கள்.

ஸுபைர் மற்றும் தல்ஹா ஆகிய இருவரும் மக்காவிற்கு வந்தடைவதற்கு முன்னரே உதுமான் (ﷺ)அவர்கள் கொல்லப்பட்ட செய்தி அங்கிருந்த ஆயிஷா (ரழி ) அவர்களிடம் வந்தடைந்திருந்தது. இந்நிலையில் மக்காவில் அனைவரும் ஒன்று கூடியவுடன் ஆயிஷா(ரழி) அவர்கள் அவர்களுக்கு மத்தியில் ஒரு உரை நிகழ்த்துகிறார்கள். அதில் "உதுமான் رضي الله عنهஅவர்கள் அநியாகமாக கொல்லப்பட்டுள்ளார்கள் என்றும் அவர் சிந்திய இரத்தத்திற்காக

நாம் போராட வேண்டுமென்றும் கூறுகிறார்கள்” அங்கிருந்தோர் அனைவரும் அவர்களின் கூற்றுக்கு உடன்பட்டு நீங்கள் எங்கு சென்றாலும் நாமும் அங்கு வருவோம் என்று கூறி தங்களின் போரிற்கான சம்மதத்தை தெரிவித்தனர். இதற்குப்பிறகு அனைவரும் எங்கு செல்வது என்ற ஆலோசனை இடம்பெற்றது. அதில் சிலர் உதுமான்(ﷺ)அவர்களுடைய குடும்பத்தினரான முஆவியா (ﷺ)அவர்கள் ஷாமிலே இருக்கிறார்கள். ஆகவே நாமும் அங்கு செல்வோம் என்றனர். வேறு சிலர் நாம் மதீனாவிற்குச்சென்று கலீபா அலி(ﷺ) அவர்களிடம் உதுமான்(ﷺ) அவர்களின் கொலைக்கு பதிலை வேண்டுவோம் என்றனர். மேலும் சிலர் நாம் பஷராவிற்குச்சென்று அங்கு போர் வீரர்களைக்கொண்டு எமது படையைப் பலப்படுத்தி அங்கிருந்து எமது போராட்டத்தை ஆரம்பிப்போம் என்றனர். இக் கருத்தே அனைவரின் சிந்தனைக்கும் பொருத்தமாக தோன்றியதால் அனைவரும் பஷரா செல்வதற்கு உடன்பட்டனர். ஆயிஷா(ு)அவர்கள் தவிர்ந்த எனைய உம்மஹாதுல் மு.ஃ.மினீன்கள் மதீனாவிற்குச் செல்லுகின்ற கருத்தில் இருந்ததால் பஷராவிற்குச்செல்ல மறுத்து விட்டனர்.

எனினும் ஹப்ஸா(ு)அவர்கள் மாத்திரம் பஷரா செல்வதற்கு உடன் பட்டாலும் அவர்களுடைய சகோதரன் இப்னு உமர்(ﷺ)அவர்களை செல்லவிடாமல் தடுத்தார்கள். இறுதியில் ஆயிஷா, தல்ஹா மற்றும் ஸுபைர்(ﷺ)அகியோர் தலைமையில் மக்காவிலிருந்து படை செல்வதற்கு ஆரம்பித்தனர். அவர்களோடு உம்மஹாதுல் மு.ஃ.மினீன்களும் **“தாது இர்க்**” என்ற இடம்வரை சென்று அங்கிருந்து அவர்களுக்கு பிரியாவிடை வழங்கினர். பஷரா செல்லும் காலம் வரை அப்துல்லாஹ் இப்னு ஸுபைர்(ﷺ)அவர்கள் மக்களுக்குத் தொழுகை நடாத்தினார். மேலும் மர்வான் அதான் கூறுபவர்களாகவுமிருந்தார். பஷராவிற்குச் செல்லும் பாதையில் ஓரிரவு ஹவ்அப் என்னுமிடத்தில் இராத்தங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது அவ்விடத்தில் வைத்து நாய்கள் குறைக்கும் சத்த்ததைக்கேட்ட ஆயிஷா(ு)அவர்கள் இது என்ன இடம் என்று கேட்டார்கள். அதற்கு இது ஹவ்அப் என்று கூறப்பட்டது.உடனே ஆயிஷா(ு)அவர்கள் இரு கைகளை பலமாக அடித்துக்கொண்டு “இன்னாலில்லாஹி வ இன்னா இலய்ஹி ராஜிஊன்” என்று கூறியவாறு, நான் மக்காவிற்கு திரும்பிச்செல்ல எண்ணுகிறேன் என்றார்கள். அதற்கு அங்கிருந்தோர் ஏன் என்று வினவினார்கள்? அதற்கு ஆயிஷா(ு)அவர்கள் நான் நபி (ஸல்) அவர்கள்: “உங்களில் ஒருவருக்கு ஹவ்அப் என்னுமிடத்தைச்சேர்ந்த நாய் குறைக்கும் போது நான் இருக்கக்கூடாதா?” எனக்கூறியதைக் கேட்டுள்ளேன். என்று கூறிவிட்டு என்னை மக்காவிற்கு கொண்டு செல்லுங்கள் என்று கூறினார்கள்.

அந்நேரத்தில் அப்துல்லாஹ் இப்னு ஸுபைர்(ﷺ)அவர்கள், ஆயிஷா(ு)அவர்களிடம் இது **ஹவ்அப்** என்ற இடமில்லை. நீங்கள் பதட்டப்பட வேண்டாமென்று கூறி அவர்களை சமாதானப் படுத்தினார்கள். பிறகு அப்படை பஷராவிற்கு வந்தடைகிறது. இச்செய்தி கேள்விப்பட்ட அதன் கவர்னர் உதுமான் இப்னு ஹனீப் அவர்கள் இம்ரான் இப்னு ஹுஸைன் (ﷺ)அவர்களையும் அபுல் அஸ்வத் அத்துவலியையும் அவர்கள் வந்த

செய்தியை அறிந்து வரும்படி அணுப்பி வைக்கிறார். அவ்விருவரும் ஆயிஷா (ரழி) அவர்களிடம் வந்து தாங்கள் வந்ததற்கான காரணத்தை கேட்ட போது அதற்கு அவர்கள் நாங்கள் உதுமான்﴿ﷺ﴾அவர்கள் சிந்திய இரத்தத்திறகான உரிமையை கேட்டு வந்துள்ளோம். ஏனெனில் அவர் கண்ணியமிக்க மாதத்தில் கண்ணியமிக்க இடத்தில் அநீதி இழைக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார். பிறகு அவ்விருவரும் தல்ஹா﴿ﷺ﴾அவர்களிடம் வந்த காரணத்தை வினவியபோது அவர்களும் ஆயிஷா(ﺭ)அவர்கள் அளித்த பதிலையே அளித்தார்கள். அதற்கு அவ்விருவரும் நீர் அலி رضي الله عنه அவர்களுக்கு பைஅத் செய்தாயா? ஏன தல்ஹா﴿ﷺ﴾ அவர்களிடம் கேட்ட போது அதற்கவர் ஆமென்று கூறினார்.

அவ்விருவரும் இச்செய்தியை கவர்னர் உதுமான் இப்னு ஹனீபிடம் அவர்களிடம் எத்தி வைத்தபோது, அதற்கவர்: “அமீருல் மு.ஃ.மினீன் இங்கு வரும் வரை நான் அவர்களை பஷராவிற்கு நுழைய விடமாட்டேன்” என்று கூறி மக்கள் அனைவரையும் தங்களது ஆயுதங்களை ஏந்திக்கொள்ளுமாறும் அனைவரையும் பள்ளியில் ஒன்று கூடுமாறும் கட்டளையிட்டார். இச்சந்தர்ப்பத்தில் ஒரு மனிதர் எழுந்து, “மக்களே! அவர்கள் அங்கிருந்து பயந்தவர்களாக இங்கு வந்திருந்தால் அவர்கள் பறவை கூட பாதுகாக்கப்படும் ஓர் ஊரிலிருந்தே வந்துள்ளார். அல்லது அவர்கள் உதுமான்﴿ﷺ﴾அவர்கள் சிந்திய இரத்தத்திற்கு பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் வந்திருந்தால் நாம் அவர்களை கொல்லவில்லை. ஆகவே அவர்கள் எங்கிருந்து வந்தார்களோ அவ்விடத்திற்கே திருப்பியணுப்புவோம்” என்றார். உடனே அஸ்வத் இப்னு ஸரீ.ஃ. என்பவர் எழுந்து, “அவர்கள் உதுமான் رضي الله عنهஅவர்களின் கொலைக்கு பழி தீர்க்க எமது உதவியை நாடி வந்துள்ளார்கள்” என்று கூறினார். உடனே அவ்விடத்திலிருந்தோர் அவரை பேசவிடாமல் தடுத்தனர். உதுமான் இப்னு ஹனீபிற்கு உதுமான்﴿ﷺ﴾அவர்களின் கொலையில் பஷரா வாசிகளுக்கும் தொடர்புண்டு என்ற விடயம் தெரிய வந்ததால் அஸ்வத் அவ்வாறு கூறியதை அவர் வெறுத்தார். பிறகு உதுமான் இப்னு ஹனீப் தனது படையுடன் ஆயிஷா(ﺭ) அவர்களிடம் வந்து அவர்களிடம் இது தொடர்பாக பேசியபோது அவரிற்கு பதில் சொல்லும் முகமாக ஆயிஷா(ﺭ)அவர்களும் பேசினார்கள். அவர்களுடைய பதிலைக்கேட்ட பஷராவிலிருந்து வந்த உதுமான் இப்னு ஹனீபின் படையிலிருந்த அதிகமானோர் ஆயிஷா (ﺭ)அவர்களின் படைக்கு மாறினர்.

அவ்விடத்திற்கு ஜாரியா இப்னு குதாமா வந்து: “உம்முல் மு.ஃ.மினினே! அல்லாஹ்வின் மீது ஆனையாக நீங்கள் உங்களது வீட்டிலிருந்து ஒட்டகத்தின் மீது ஆயுதத்தை ஏந்திக்கொண்டு இங்கு வந்தது உதுமான்﴿ﷺ﴾அவர்களடைய கொலையை விட இழிவானதாகும். ஆகவே நீங்கள் எங்கிருந்து வந்தீர்களோ அவ்விடத்திற்கு மீண்டும் செல்லுங்கள்” என்றார். இச்சந்தர்ப்பத்தில் ஹிகம் இப்னு ஜபலா என்பவன் அங்கு வந்து இரு படைகளுக்கு மத்தியில் போரை மூட்டிவிட்டான். அவ்விடத்தில் இரு படைகளுக்கு மத்தியில் இவனின் மூலமாக ஒரு போர் இடம் பெற்றது. **(இது சிறிய ஒட்டகப்போர் எனப்படும்**) ஆயிஷா(ﺭ) அவர்களும் அவர்களின்

படையிலிருந்த சிலரும் போரைத்தடுத்தும் போர் முற்றுப் பெறவில்லை. மறுநாளும் இரு படைகளுக்கு மத்தியில் கடுமையான போர் ஏற்பட்டு பகல் வேளையிலேயே போர் முற்றுப்பெற்றது.

## அலி (ﷺ) அவர்கள் பஷராவிற்கு வருகை தரல்

தல்ஹா மற்றும் ஸுபைர் ஆகிய இருவரும் பஷராவிற்கு வந்த செய்தியை அதன் கவர்னர் உதுமான் இப்னு ஹனீப், அலி(ﷺ)அவர்களுக்கு அனுப்பி வைக்கிறார். இதையறிந்த கலீபா அவர்கள் தான் ஷாமிற்கு போரிற்குச்செல்வதற்கு தயார் நிலையில் வைத்திருந்த படையை பஷராவிற்குச் செல்வதற்கு முடிவை மாற்றிக்கொண்டு மக்களுக்கு இது பற்றி அறிவித்தார். இதற்கு அங்கிருந்த 06 நபர்களைத்தவிர வேறு அனைவரும் உடன்பட்டனர். தனக்குப் பகரமாக மதீனாவில் குதம் இப்னு அப்பாஸ் அவர்களையும் மக்காவில் தம்மாம் இப்னு அப்பாஸ் அவர்களையும் ஹிஜ்ரி 36 ரபியுல் ஆகிர் கடைசிப்பகுதியில் நியமித்துவிட்டு பஷராவிற்கான தனது பயணத்தை தொடங்கினார். செல்லும் வழியில் ரபதா என்னுமிடத்தில் அப்துல்லாஹ் இப்னு ஸலாம்(ﷺ)அவர்களை சந்திக்கிறார்கள். அவர் அலி (ﷺ)அவர்களுடைய குதிரையின் கடிவாளத்தைப்பிடித்து, “அமீருல் மு.ஃ.மினீனே நீங்கள் மதீனாவிலிருந்து வெளியேற வேண்டாம். அல்லாஹ் மீது ஆணையாக நீங்கள் சென்றால் முஸ்லிம்களுடைய ஆட்சியாளர் மீண்டும் இங்கு வரமாட்டார்” என்று கூறினார். இதைக் கண்ணுற்ற அலி(ﷺ)யின் படையில் இருந்தோர் அப்துல்லாஹ் இப்னு ஸலாம்(ﷺ) அவர்களை திட்டினார்கள். எனினும் அலி رضي الله عنهதிட்டுபவர்களைத்தடுத்து “நபிகளாரின் தோழர்களை நல்ல மனிதராவார். அவரை விட்டு விடுங்களென்று கூறினார்கள்” இதற்குப் பிறகு அலி(ﷺ)அவர்களிடம் அவரது புதல்வர் ஹஸன்(ﷺ)அவர்கள் வந்து:, “தந்தையே!... நான் உங்களை இவ்வாறு செல்வதை விட்டும் தடுத்தேன். எனினும் நீங்கள் எனக்கு மாறு செய்து விட்டீர்கள். உங்களுக்கு எந்த உதவியாளரில்லாத நிலையில் நாளை நீங்கள் கொல்லப்படலாம்” என்று கூறினார்கள்.

அதற்கு அலி رضي الله عنهஅவர்கள்: “மகனே! நீர் என்மீது அதிகமாக பிரிவு காட்டுகிறாய், நீ எதைத்தடுத்து நான் அதற்கு மாறு செய்து விட்டேன். எனக்கேட்டார்கள். அதற்கவர்கள் நான் உங்களுக்கு உதுமான்(ﷺ)அவர்கள் கொல்லப்படுவதற்கு முன்னர் நீங்களிருந்த நிலையில் அவர் கொல்லப்படக் கூடாதென்பதற்காக தங்களை மதீனாவை விட்டும் வெளியேறும்படி கூறினேன், உதுமான்(ﷺ)அவர்களுடைய கொலைக்குப்பிறகு மக்கள் உங்களுக்கு பைஅத் செய்த போது மிஸ்ர் வாசிகள் அனைவரும் தங்களுக்கு கட்டுப்பட்ட செய்தி உங்களுக்கு வந்து சேரும் வரை நீங்கள் அவர்களுடைய பைஅத்தை ஏற்க வேண்டாமென்று கூறினேன். மேலும் இப்பெண்ணும் **ஆயிஷா (ரழி)** இவ்விரண்டு மனிதர்களும் **தல்ஹா மற்றும் ஸுபைர் (ரழி)** மதீனாவை விட்டு பஷராவிற்குச்சென்ற போது உங்களை வீட்டில் தரித்திருக்கும்படி கூறினேன். எனினும் இவையனைத்திலும் எனக்கு நீங்கள் மாறுசெய்து விட்டீர்களென்று கூறினார்கள்”

இதற்குப்பிறகு அலி﴾ﷺ﴿அவர்கள் போரிற்காக செல்லும் வழியில் ஒவ்வொரு பகுதிக்கும் தனது தூதுவர்களை அனுப்பி அங்கிருந்து தனக்குதவியாக படைகளை தயார் படுத்துமாறு கேட்டுக் கொண்டார்கள். அதனடிப்படையில் **முஹம்மத் இப்னு அபீ பக்கர்** மற்றும் **முஹம்மத் இப்னு ஜ.்.பர்** ஆகிய இருவரையும் கூபாவிற்கும் அஸ்தர் மற்றும் இப்னு அப்பாஸ்﴾ﷺ﴿ ஆகிய இருவரையும் அதற்குப்பிற்பாடும் இவர்களுக்குப்பிறகு அம்மார் மற்றும் ஹஸன்﴾ﷺ﴿ அவர்களிருவரையும் அனுப்பி வைத்தார்கள். இங்கு நாம் ஒரு முக்கிய குறிப்பை விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது அலி﴾ﷺ﴿அவர்களே தல்ஹா மற்றும் ஸுபைர்﴾ﷺ﴿அவர்களோடு போரிடுவதற்காக மதீனாவை விட்டு பஷராவிற்குச் சென்றார்களென்று மேற்குறிப்பிட்ட நிகழ்வுகள் மூலமாக எமக்கு புலப்படுகிறது. அதுவே உண்மை ஆகும். எனினும் சிலர் சொல்வது போன்று தல்ஹா மற்றம் ஸுபைராகிய இருவருமே அலி﴾ﷺ﴿அவர்களுக்கெதிராக போர் செய்வதற்கு கிழம்பிச் சென்றார்கள். என்ற செய்தி உண்மையானால் அவ்விருவரும் பஷராவிற்குச் செல்லாமல் நேரடியாக மதீனாவிற்கே வந்திருக்க வேண்டும்.

ஆயிஷா, தல்ஹா மற்றும் ஸுபைர்﴾ﷺ﴿ஆகிய மூவரும் அலி رضي الله عنه அவர்களுடைய கிலபாத்தை ஏற்றுக்கொள்ள வில்லையென்ற குற்றச்சாட்டு அவர்கள் மீது சொல்லப்படுகிறது. எனினும் இதை வரலாற்று ஆதாரங்களோடு பார்த்தால் அவர்கள், அலி﴾ﷺ﴿அவர்களை விமர்சிக்கவுமில்லை, அவரல்லாத வேறு எவருக்கும் பைஅத் செய்யவுமில்லை, பஷராவிற்கு அவர்கள் அலி رضي الله عنهஅவர்களோடு போர் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் செல்லவுமில்லை என்பது புலப்படுகிறது. அஹ்னப் இப்னு கைஸ் என்பவர் கூறுகிறார்: “நான் உதுமான் رضي الله عنه அவர்கள் கொல்லப்பட்டதன் பிறகு தல்ஹா மற்றும் ஸுபைர் ஆகிய இருவரையும் சந்தித்து எனக்கு நீங்கள் எதை ஏவுகின்றீர்களென்று கேட்டேன். அதற்கு அவ்விருவரும் நீர் அலி﴾ﷺ﴿யைப் பற்றிப்பிடித்துக்கொள் என்றார்கள். பிறகு மக்கா சென்று அங்கு ஆயிஷா (ரழி) அவர்களை சந்தித்து நீங்கள் எதை எனக்கு ஏவுகின்றீர்களெனக் கேட்டேன். அதற்கவர்கள் நீர் அலி﴾ﷺ﴿யைப்பற்றிப் பிடித்துக்கொள் என்றார்கள்.

(பத்ஹுல் பாரி: 13-38)

## போரிற்கு முன்னரான நிகழ்வுகள்

பஷரா சென்றதும் அலி﴾ﷺ﴿அவர்கள் தல்ஹா மற்றும் ஸுபைர்﴾ﷺ﴿ஆகிய இருவரோடு பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக **மிக்தாத் இப்னு அஸ்வத், க.்.கா இப்னு அம்ர்** ஆகிய இருவரையும் அனுப்பி வைக்கிறார். அவ்விருவரும் அவர்களிடம் சென்று பேசியபோது போரிற்கான அவசியம் தற்போதில்லை என்பதாகவே தல்ஹா மற்றும் ஸுபைர்﴾ﷺ﴿ஆகிய இருவரும் கூறினார்கள். எனினும் அவ்விருவரும் உதுமான்﴾ﷺ﴿அவர்களைக்கொலை செய்தவர்களை தண்டிக்காமல் விட்டுவிட முடியாது. அதை தற்போதே நிறைவேற்ற வேண்டுமென்ற கருத்தில் உறுதியாக இருந்தார்கள். எனினும்

அலி(ரலி)அவர்கள் தற்போதுள்ள குழப்ப நிலையில் கொலையாலிகளுக்கு தண்டனை வழங்குவது சாத்தியமில்லாதது. ஆகவே சற்று காலம் தாமதிக்கலாம் என்ற கருத்தில் இருந்தார்கள்.

எனவே உதுமான்(ரலி)அவர்களின் கொலையாளி கொல்லப்பட வேண்டுமென்ற முடிவில் இரு சாராறும் இருந்தாலும் அத்தண்டனையை எப்போது வழங்குவதென்பதிலேயே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இரு சாராறுக்கும் மத்தியில் உடன்படிக்கை வெற்றிகரமாக முடிந்ததால் மறு நாள் தங்களது இடங்களுக்கு திரும்பிசசெல்வதாக முடிவெடுத்து அன்றைய இரவு அவ்விடத்தில் தரிக்கிறார்கள். இவ்வாறு இரு சாராறுக்கும நடைபெற இருந்த போர் நிறுத்தப்பட்டு புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளது என்ற செய்தி அப்துல்லாஹ் இப்னு ஸப.்.வுடைய நாசகார கூட்டத்திற்கு எட்டியவுடன் இருவருக்கும் மத்தியில் உடன்பாடு ஏற்படுவதைத்தடுத்து போரை விதைக்க வேண்டுமென்று திட்டம் தீட்டுகிறார்கள். இரு சாராறும் தூங்கிக் கொண்டிருந்த வேளையில் அப்துல்லாஹ் இப்னு ஸப.்.வுடைய கூட்டம் தங்களை இரு பிரிவுகளாகப்பிரத்து ஒரு பிரிவினர் அலி(ரலி)அவர்களுடைய படையிருக்கும் இடத்திற்கும், மறுபிரிவு தல்ஹா மற்றும் ஸுபைர்(ரலி)அவர்களின் படையிருக்குமிடத்திற்கும் சென்று இரு படையிலிருந்தும் சில நபர்களைக்கொன்று விடுகிறார்கள். மறுநாள் காலையில் தங்கள் படைகளிலிருந்தவர்கள் சிலர் கொல்லப்பட்டுள்ளதையறிந்த இரு சாராரும் தமக்கு அவர்கள் மோசடி செய்து விட்டார்களென்று மாறிமாறி நினைத்துக்கொண்டனர். இருசாராருக்கும் மத்தியில் கடுமையான வாக்குவாதம் நிகழந்தது. முடிவில் போர் ஆரம்பமாவதற்கு இது ஒரு காரணமாகவும் அமைந்தது.

## போரை நிறுத்துவதற்கான முயற்சிகள்

போர் ஆரம்பமானதன் பின்னர் அவ்விரு படைகளிலும் உள்ள பெறும் ஸஹாபாக்கள் போரை நிறுத்துவதற்கு பல்வேறு வழிகளில் முயற்சித்தனர். எனினும் அவைகள் எதுவுமே வெற்றியளிக்கவில்லை. தல்ஹா(ரலி)அவர்கள் போரின் போது “மக்களே! மேௗனமாக இருங்கள்” என்று சப்தமிட்டு கூறினார்கள். எனினும் எவருமே மௌனமாக இருக்கவில்லை. மேலும் அலி(ரலி)அவர்களும் போரைத்தடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டாலும் அவருக்கு எவருமே பதிலளிக்கவில்லை மேலும் ஆயிஷா(ரலி)அவர்கள் க.்.ப் இப்னு ஸவ்ர் என்பவரிடம் போரை நிறுத்தவதற்காக அல்-குர்ஆனை கொடுத்து அனுப்புகிறார்கள். எனினும் அப்துல்லாஹ் இப்னு ஸப.்.வுடைய கூட்டத்தினர் அங்கு சமூகமளித்திருந்ததால் அவரை குர்ஆனை உயர்த்தவிடாமல் தடுத்து கொலை செய்து விட்டார்கள்.

ஆகவே இப்போர் இரு சாராரும் விரும்பாத நிலையிலேயே இடம்பெற்றுள்ளது. அதுமாத்திரமல்லாமல் போரை நிறுத்துவதற்கான முயற்சிகள் இரு படைகளிலிருந்தும் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அவைகள் எதுவுமே பயனளிக்கவில்லை. இப்போர் ளுகருக்குப்பிறகு ஆரம்பமாகி அதே நாள் சூரியன் மறைவதற்கு முன் முடிவுற்றது. அலி (ரலி)அவர்களுடைய படையில் 10,000 வீரர்களும் ஆயிஷா(ரலி)அவர்களின் படையில் 5000[கும்] 6000[கும்] இடைப்பட்ட வீரர்கள் இருந்தனர்.

அலி﴾رضي الله عنه﴿அவர்களுடைய போர்க்கொடி முஹம்மத் இப்னு அலி அவர்களிடமும் ஆயிஷா(g)அவர்களுடைய போர்க்கொடி அப்துல்லாஹ் இப்னு ஸுபைர்﴾رضي الله عنه﴿அவர்களிடம் இருந்தது. இப்போரில் அதிகமான முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். அதிகமான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இவையனைத்தும் அப்புல்லாஹ் இப்னு ஸப.்.வடைய தந்திரத்தினால் ஏற்பட்டவையாகும்.

### தல்ஹா மற்றும் ஸுபைர்﴾رضي الله عنه﴿அவர்களின் கொலை

இப்போரின்போது தல்ஹா﴾رضي الله عنه﴿அவர்களும் அவர்களுடைய புதல்வன் முஹம்மத் அவர்களும் கொல்லப்படுகிறார்கள்.ஸுபரை﴾رضي الله عنه﴿அவர்களைப் பொறுத்தவரை அவர் இப்போரில் கலந்து கொள்ளவில்லை. அதற்கான காரணம் இவரிற்கும் அலி﴾رضي الله عنه﴿அவர்களிற்குமிடையில் இடம்பெற்ற ஒரு சம்பாசனையே ஆகும். போர் மூண்ட சந்தர்ப்பத்தில் ஸுபைர்﴾رضي الله عنه﴿அவர்கள் அலி﴾رضي الله عنه﴿அவர்களை சந்திக்கிறார். அவரிடம் அலி﴾رضي الله عنه﴿அவர்கள்: “ஸுபைரே! நீர் நபி (ஸல்)அவர்கள் கூறிய செய்தியை நினைவில் வைத்துள்ளீரா? எனக்கூறி பின்வரும் செய்தியைக் கூறினார்கள்: “நீ அநியாயம் இழைத்த நிலையில் அலி﴾رضي الله عنه﴿அவர்களோடு போர் செய்வாய்” இதைக்கேட்டவுடன் ஸுபைர்﴾رضي الله عنه﴿போரில் கலந்து கொள்ளாமல் அவ்விடத்தை விட்டு சென்றுவிட்டார். இதை கண்காணித்துக் கொண்டிருந்த இப்னு ஜுர்மூஸ் என்பவன் ஸுபைர்﴾رضي الله عنه﴿அவர்களைப் பின்துயர்ந்து சென்று அவர்களைக் கொலை செய்கின்றான். தல்ஹா﴾رضي الله عنه﴿அவர்களைப் பொறுத்தவரையில் இனம் தெரியாத நபரால் வீசப்பட்ட ஈட்டியால் தாக்கப்பட்டு அதன் காரணமாக மரணிக்கிறார். வரலாற்று நூல்களில் தல்ஹா﴾رضي الله عنه﴿அவர்களுடைய மரணச்செய்தி பற்றி படிக்கும் போது அவ் ஈட்டியை வீசியது மர்வான் இப்னு ஹகம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இச்செய்தி உறுதிப்படுத்தப்படாத ஒன்றாகும்.

தற்போதுள்ள நிலையில் ஸுபைர் மற்றும் தல்ஹாرضي الله عنهஆகிய இருவரும் கொல்லப்பட்டு விட்டார்கள். இப்போது பேரிற்கு தலைமை தாங்கும் அடுத்த தகுதி ஆயிஷா(g)அவர்களை வந்தடைகிறது. இதையறிந்த சிலர் அவர்களைக் கொல்வதற்காக அவர்கள் அமர்ந்திருந்த ஒட்டகத்தை அண்மித்து வந்தனர். இதையறிந்த அலி ﴾رضي الله عنه﴿அவர்கள் ஆயிஷா(g) அவர்களைக் காப்பாற்றும் முகமாக அவர்களிருந்த ஒட்டகத்தின் கால்களைத் துண்டிக்கும்படி ஏவினார்கள். ஒட்கத்தின் கால் துண்டிக்கப்படகிறது: ஒட்டகம் கீழே விழுகிறது: ஆயிஷா(g)அவர்கள் காப்பாற்றப்படுகிறார்கள்: போரும் முடிவடைந்தது.

**போரிற்குப் பிறகு:** போர் முடிவடைந்ததன் பிற்பாடு அலி رضي الله عنهஅவர்கள் கொல்லப்பட்டவர்களுக்கு மத்தியில் நடந்து செல்கிறார்கள். வழியில் தல்ஹா ﴾رضي الله عنه﴿அவர்கள் கொலை செய்யப்பட்டிருப்பதை கண்ட அவர்கள் அவரிடம் வந்து அவரை அமர்த்தி அவரின் முகத்திலிருந்த மண்ணை தடவிவிட்டதன் பிறகு பின்வருமாறு கூறினார்கள்: “என்மீது இரக்கம் கொண்டவரே! உமக்கு வானத்தின் நட்ச்சத்திரிங்கள் குடை பிடிக்கின்றனவே என்று கூறி அழுது

விட்டு நான் இதற்கு 20 வருடங்களுக்கும் முன் பிறந்திருக்கக்கூடாதா என்று கைசேதப்படுகிறார்கள்”

அதேபோன்று தல்ஹா(ﷺ)அவர்களுடைய மகன் முஹம்மத் அவர்கள் கொல்லப்பட்டுள்ளதைக் கண்டு அலி (ﷺ)அவர்கள் அழுகிறார்கள். இதேபோன்று போரில் கலந்து கொண்ட அனைத்து ஸஹாபாக்களும் போர் நடைபெற்றமைக்காக கைசேதப்பட்டனர். இச்சந்தர்ப்பத்தில் ஸுபைர்(ﷺ)அவர்களைக் கொலை செய்த இப்னு ஜுர்மூஸ் ஸுபைர்(ﷺ)அவர்களுயை வாலோடு அலி(ﷺ)அவர்களிடம் வந்து “நான் ஸுபைரக் கொண்று விட்டேன், கொன்று விட்டேன் என்று இரு முறை கூறினான்” இதைக்கேட்ட அலி(ﷺ)அவர்கள்: “நிச்சயமாக இந்த வால் நபி (ஸல்) அவர்களை விட்டும் கஷ்டங்டகளை போக்கிய வாலாகும். ஸபிய்யாவின் மகன் ஸுபைரைக் கொன்றவனுக்கு நரகம் என்று சொல்லுங்கள் என்று கூறி விட்டு இப்னு ஜுர்மூஸை தன்னிடம் வர வேண்டாமென்று கூறினார்கள்”

(தபகாத் இப்னு ஸ.்.த்: 03-105)

போர் முடிந்ததன் பிற்பாடு அலி(ﷺ)அவர்களிடம் சிலர் வருகை தந்து போரில் தோற்ற தல்ஹா மற்றும் ஸுபைர் (ﷺ)அவர்களின் படையில் இருந்த பொருட்களை தங்களுக்கு பங்கு வைக்குமாறு கேட்டுக்கொண்டனர். அதற்கு அலி(ﷺ)அவர்கள் மறுத்து விட்டார்கள். இவ்வாறு கூறியவுடன் அவர்கள் அங்கிருந்து சென்று இன்னொரு இடத்தில் இருந்த நிலையில் “அவர்களின் இரத்தத்தை ஓட்டுவது ஆகுமாக்கப்பட்ட நிலையில் அவர்களின் சொத்துக்கள் எங்களுக்கு ஏன் ஆகுமாகாதென்று கதைத்துக்கொண்டனர்” இச்செய்தி அலி(ﷺ)அவர்களிடம் வந்து சேர்ந்தபோது அவர்கள் உங்களில் எவர் மு.்.மினீன்களின் தாயான ஆயிஷா(ρ)அவர்களை தனது பங்கில் எடுத்துக்கொள்ள விரும்புகிறீர்கள் என கடுமையாக கேட்டார்கள். அதற்குப்பிறகு சொத்துக்களில் பங்கு கேட்டவர்கள் எதையும் பேசவில்லை. (அல்பிதாயா வன்னிஹாயா: 07-273)

பிறகு அலி(ﷺ)அவர்கள் பஷராவிற்குள் நுழைகிறார்கள். அங்கிருந்தோர் அனைவரும் அவரை ஆட்சியாளராக ஏற்றுக்கொண்டு பைஅத் செய்கிறார்கள். இப்னு அப்பாஸ்(ﷺ) அவர்களை பஷராவின் கவர்னராக நியமித்து விட்டு ஆயிஷா(ρ)அவர்கள் இருந்த பனீ கல்ப் என்ற கோத்திரத்தாரின் வீட்டிற்கு அவர்களை சந்திப்பதற்காக செல்கிறார்கள். அவ்விடத்தில் சென்று உள் நுழைவதற்கு அனுமதி கேட்டு முகமன் கூறினார்கள். ஆயிஷா (ρ)அவர்கள் அலி(ﷺ)அவர்களை வரவேற்றார்கள். அவ்வீட்டில் கொல்லப்பட்டவர்களுக்காக அழுது கொண்டிருந்த சில பெண்கள் இருந்தார்கள். அவர்களில் ஆயிஷா(ρ)அவர்களின் அணியில் கொல்லப்பட்ட அப்துல்லாஹ் இப்னு கலப் என்பவரின் மனைவியும் இருந்தார். அவர் அலிرضي الله عنهஅவர்களிடம் “நீர் எமது பிள்ளைகளை அநாதையாக்கியது போல அல்லாஹ் உமது பிள்ளைகளை அநாதையாக்குவான் என்று கோபமாகக் கூறினார்” எனினும் அலி(ﷺ)அவர்கள் எவ்வித பதிலும் சொல்லாமல் வெளியே வந்தார்கள். மீண்டும் அப்பெண் அதேவார்த்தை கூறியபோது ஒரு மனிதர் வந்து அமீருல்

மு.ஃ.மினீனே! இப்பெண் இவ்வாறு கூறுவதை நீங்கள் செவிமடுத்துக் கொண்டும் மௌனமாக இருக்கிறீர்களா? எனக் கேட்டார். அதற்கு அலி(ﷺ)அவர்கள் அம்மனிதரிடம்: "உமக்கு கேடு உண்டாகட்டும். இப்பெண்கள் இணைவைப்பாளர்களாக இருக்கும் நிலையில் கூட எமது கைகளை அவர்களை விட்டும் தடுத்துக்கொள்ளும்படி ஏவப்பட்டோம். ஆனால் இப்பெண்களோ முஸ்லிம்களாக இருக்கும் நிலையில் எமது கைகளை அவர்களை விட்டு தடுத்துக்கொள்ளாமல் இல்லாவிட்டால் எப்படி!" என்றார்கள்.

இன்னொரு மனிதர் அலி(ﷺ)அவர்களிடம் வந்து இரண்டு மனிதர்கள் ஆயிஷா(஢) அவர்களை வஞ்சிக்கிறார்கள் என்று கூறினார். அதற்கவர்கள் க.ஃ.கா இப்னு அம்ர் என்பவரை அவ்விருவருக்கும் 100 கசையடிகள் வழங்கமாறு கட்டளை இட்டார்கள். பிறகு ஆயிஷா(஢)அவர்கள் அவ்வீட்டிலிருந்தவர்களிடம் முஸ்லிம்களில் கொல்லப்பட்டவர்கள் பற்றி வினவினார். அதற்கு அங்கிருந்தோர் கொல்லப்பட்டவர்களின் பெயர்களை ஒவ்வொன்றாகச்சொல்ல ஒவ்வொருவருக்கும் இறையருளையும் பிரார்த்தனையையும் வேண்டினார்கள். சில நாட்களுக்குப்பிறகு ஆயிஷா (ரழி) அவர்கள் பஷராவை விட்டுச் செல்வதற்கு நாடியபோது கலீபா அலி(ﷺ)அவர்கள் பயணத்திற்குத்தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுத்து பஷராவிலுள்ள 40 பெண்களை ஆயிஷா (ரழி) அவர்களுக்குத் துணையாக அனுப்பி வைத்த அதேவேளை அவர்களுடைய சகோதரன் முஹம்மத் இப்னு அபீ பக்கர் அவர்களையும் அனுப்பி வைத்தார்கள். ஆயிஷா (஢)அவர்கள் செல்ல வேண்டிய நாள் வந்ததும் அலி(ﷺ)அவர்கள் அவ்வீட்டிற்கருகில் அவர்களுக்குப் பிரியாவிடை கொடுப்பதற்காக வந்திருந்தார்கள். அதேபோன்று பஷரா வாசிகள் அவ்விடத்தில் ஒன்று கூடியிருந்தனர். அப்போது ஆயிஷா(஢)அவர்கள் தனது வீட்டிலிருந்து வெளியேறி ஒட்டகத்தின் மீது ஏறியபோது அனைவருக்கும் பிரியாவிடை வழங்கினார்கள். பிறகு அங்கிருந்த அனைவருக்கும் கேட்கும் வண்ணம் பின்வருமாறு கூறினார்கள்:

"மக்களே! எம்மில் சிலர் சிலரை குறை காணல் கூடாது. நிச்சயமாக எனக்கும் அலி(ﷺ)அவர்களுக்கும் மத்தியில் இதற்கு முன் இடம் பெற்றவைகள் ஒரு பெண்ணுக்கும் அவளது கணவனின் சகோதரனுக்குமிடையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளைப் போன்றவையாகும். நிச்சயமாக அவர் மிகச்சிறந்தவர்களில் ஒருவராவார்"

அதற்கு அலி(ﷺ)அவர்கள்: "உண்மை சொல்லி விட்டீர்கள். எனக்கும் உங்களுக்கும் மத்தியில் இடம்பெற்றவை அதேபோன்றே ஒன்றாகும். நிச்சயமாக இவர்கள் இவ்வுலகத்திலும் மறுமையிலும் உங்கள் நபி (ஸல்) அவர்களின் மனைவியாவார் " என்று கூறினார்கள். பிறகு ஆயிஷா(஢)அவர்கள் புறப்பட்டு மக்காவிற்குச்சென்று அங்கு அவ்வருடத்திற்குரிய ஹஜ்ஜை நிறைவேற்றிவிட்டு மதீனாவிற்குச்சென்றார்கள். இவ்வாறு அலி(ﷺ)அவர்கள் ஆயிஷா (ரழி) அவர்களை கண்ணியமபன முறையில் மதீனாவிற்கு அனுப்பியது நபி (ஸல்) அவர்கள் தான் உயிரோடு இருக்கும் போது கூறிய முன்னறிவிப்பிற்கு அமையவே ஆகும். ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் அலி(ﷺ)அவர்களிடம் கூறினார்கள்: "உமக்கும்

ஆயிஷா(ழ)அவர்களுக்குமிடையில் ஒரு விடயம் (குழப்பம்) நிகழும். அதற்கு அலி(ரலி)அவர்கள் அப்படியானால் நானொரு நஷ்டவாளியாகி விடுவேன் என்றார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் அவ்வாறில்லை அது நிகழ்ந்தால் அவரை நீ அவரது பாதுகாப்பான இடத்திற்கு மீண்டும் அனுப்பி வை என்றார்கள். (முஸ்னத் அஹ்மத்: 06-393)

## ஸிப்பின்யுத்தம்

அலி(ரலி)அவர்கள் ஒட்டகப்போரை முடித்ததன் பிறகு கூபாவிற்கு ஹிஜ்ரி 36ம் ஆண்டு ரஜப் மாதம் செல்கிறார்கள். அங்கு சென்றதன் பிறகு பள்ளியில் இரண்டு ரக்அத்துக்கள் தொழுது விட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார். பிறகு ஜரீர் இப்னு அப்துல்லாஹ் அவர்களை முஆவியா(ரலி)அவர்களிடம் ஒரு ஏட்டைக்கொடுத்து தூதுவராக அனுப்பினார்கள். ஜரீர் இப்னு அப்துல்லாஹ் அவர்களை கலீபா அவர்கள் முஆவியா(ரலி)அவர்களுக்குத் தூதுவராக அனுப்பப்போகிறார்கள் என்ற செய்தி **அஸ்தர்** என்பவனுக்கு கிடைத்தவுடன் அலி(ரலி)அவர்களிடம் வந்து அவர் அதற்குப் பொறுத்தமானவரல்லர் அதற்கு நானே பொறுத்தமானவன். என்னையே அனுப்புங்களென்று கேட்டுக்கொண்டான். என்றாலும் அலி رضي الله عنهஅவர்கள் ஜரீர் இப்னு அப்துல்லாஹ்வை அனுப்புவதில் உறுதியாக இருந்தார்கள். அலி(ரலி)அவர்கள் முஆவியா(ரலி)அவர்களுக்கு கொடுக்கும்படி கூறிய ஏட்டில், “தனக்கு அன்ஸாரிகள் மற்றும் முஹாஜிரீன்கள் இணைந்து பைஅத் செய்துள்ளார்கள் என்றும் ஒட்டகப்போரில் நடந்த நிகழ்வுகள் பற்றியும் மக்கள் அனைவரும் எதில் நுழைந்துள்ளார்களோ அதில் நீங்களும் நுழைந்து கொள்ளுங்கள்” என்றும் குறிப்பிடப்பட்டிருந்தன. ஜரீர் இப்னு அப்துல்லாஹ் அக்கடிதத்தை முஆவியா(ரலி)அவர்களிடம் ஒப்படைத்தபோது அவர்கள் அம்ர் இப்னு ஆஸ்(ரலி)அவர்களிடமும் ஷாம் வாசிகளிடமும் இதுபற்றி ஆலோசனை கேட்டார்கள். அதற்கவர்கள் நாம் உதுமான்(ரலி)அவர்களைக் கொன்றவர்களை பழி தீர்க்கும் வரை அல்லது எங்களிடம் அவர்களை ஒப்படைக்கும் வரை நாம் அவருக்கு பைஅத் செய்யமாட்டோம் என்றனர். இதே முடிவையே முஆவியா (ரலி)அவர்கள் வந்த தூதுவரிடம் சொல்லியனுப்பினார்கள்.

ஜரீர் இப்னு அப்துல்லாஹ்(ரலி)அவர்கள் கூபாவிற்கு வந்து அலி(ரலி)அவர்களிடம் நடந்தவற்றைக் கூறினார்கள். அப்போது **அஸ்தர்** என்பவன் அவ்விடம் வந்து:“அமீருல் மு.ஃ.மினீனே! நான் உங்களிடம் ஜரீரை அனுப்ப வேண்டாம் என்று கூறவில்லையா? நீங்கள் என்னை அனுப்பியிருந்தால் முஆவியா இப்படியான காரணங்களை கூறுவதை விட்டும் நான் தடுத்திருப்பேன் என்றான்” அதற்கு ஜரீர் அவர்கள்: “நீ அங்கு சென்றிருந்தால் உம்மை அவர்கள் உதுமான(ரலி)அவர்களின் கொலைக்கு பழி தீர்க்கும் முகமாக உம்மை கொலை செய்திருப்பார்களௌன்று கூறினார்கள்” அதற்கு **அஸ்தர்** “அல்லாஹ்வின் மீது ஆனையாக என்னை நீங்கள் அனுப்பியிருந்தால் முஆவியாவுடைய பதில் எனக்கு தேவைப்பட்டிருக்காது. நான் அவருடைய சிந்தனையை மாற்றியிருப்பேன். அவர் எனக்கு கட்டுப்பட்டிருந்தால் உம்மையும் உன் போற்றோர்களையும்

கைது செய்து இச்சமூகத்தின் நிலமை சீராகும் வரை தடுத்து வைத்திருப்பேன் என்று கூறினான்” இதைக்கேட்ட ஜரீர் இப்னு அப்துல்லாஹ் அவர்கள் கோபமடைந்து எழுந்து சென்று அங்கு கூறப்பட்டவற்றை முஆவியா(ؓ)அவர்களுக்கு எழுதி அனுப்பினார்கள். முஆவியா(ؓ)அவர்கள் ஜரீர்(ؓ)அவர்களை ஷாமிற்கு வருமாறு அழைப்பு விடுத்தார்கள்.

இதுவரை காலமும் முஆவியா(ؓ)அவர்க்ள அலி(ؓ)அவர்களிடத்தில் பைஅத் செய்யவில்லை. உதுமான்(ؓ)அவர்களுடைய கொலைக்கு உரித்த பதில் கிடைக்கும் வரை பைஅத் செய்யமாட்டேன் என்றார். எனினும் அலி(ؓ)அவர்கள் தனக்கு முஆவியா தற்போது பைஅத் செய்ய வேண்டும் என்ற பிடிவாதத்தில் இருந்தார்கள். தான் இப்போதே ஒரு படையை தயார் செய்து ஷாமிற்கு முஅவியா(ؓ)அவர்களை எதிர்கொள்வதற்கு அல்லது அவரை வட்பறுத்தி பைஅத் பெறுவதற்கு தீர்மாணம் எடுத்து 100000 வீரர்கள் கொண்ட படையோடு ஷாமிற்கு அருகிலுள்ள நுகைலா என்னுமிடத்தில் இராணுவத்தளத்தை அமைத்தார்கள்.

இச்செய்தி முஆவியா (ؓ)அவர்களுக்கு எட்டிய போது மிம்பர் மீது ஏறி, “நிச்சயமாக அலி(ؓ)அவர்கள் இராக் வாசிகளோடு படையெடுத்து வருகிறார். நீங்கள் என்ன கருதுகிரீர்கள் எனக்கேட்டார்” எனினும் அனைவரும் தங்களது தலைகளை குணிந்தவண்ணம் வைத்துக்கொண்டு எதுவுமே பேசாமல் இருந்தனர். இச்சந்தர்ப்பத்தில் துல்கலா அல்ஹிம்மியரி என்ற நபர் எழுந்து, “மக்களோ அமைதியாக இருக்கிறார்கள் நீங்கள் கருத்துச்சொல்லுங்கள் நாங்கள் செயற்படுத்துகிறோம் என்றார்கள்” மறுபுரம் அலி(ؓ)அவர்கள் தங்களது படைக்கு மத்தியில் எழுந்து, “நிச்சயமாக முஆவியா(ؓ)அவர்கள் உங்கள் மீது ஷாம் வாசிகளோடு படையெடுத்து வரப்போகிறார்கள் உங்களது கருத்து என்ன?” என்று ட்டோர்கள். உடனே அங்கிருந்தவர்கள் சப்தத்தை உயர்த்த ஆரம்பித்தார்கள். ஒவ்வொருவரும் தங்களது கருத்துக்களை முந்தியடித்துக் கொண்டு கூறலாயினர். எனினும் அவ்விடத்தில் சப்தம் அதிகரித்ததால் அலி(ؓ)அவர்களால் எதையும் விளங்கிக்கொள்ள மடியவில்லை. ஆகவே **இன்னாலில்லாஹி வ இன்னாலில்லாஹி ரஜிஊன்** என்று கூறியவாறு மிம்பரை விட்டு இறங்கினார்.

(தாரீஹுல் இஸ்லாம்: 540வது பக்கம்)

ஒருபுரம் ஷாம் வாசிகள் அமைதியாக இருந்து முஆவியா(ؓ)அவர்கள் சொன்னதைக்கேட்டு கட்டுப்பட்டார்கள். மறுபுரம் இராக் வாசிகள் அலி(ؓ)அவர்கள் பேசியதற்கு மேலாக தங்களது கருத்துக்களை கூறி அவற்றை வீணாக வீணாக்கினர். ஏனெனில் இராக் வாசிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் குழப்பத்திற்கும் பிரச்சினைகளுக்கும் உரியவர்கள். இறுதியில் அவர்களே அலி (ؓ)அவர்களை விட்டு விழகி அவர்களை கொலையும் செய்தனர். இதற்குப்பிறகு அலி(ؓ)அவர்கள் தங்களது படையோடு ஹிஜ்ரி 37ம் ஆண்டு ஸபர் மாதம் ஸிப்பினை வந்தடைகிறார்கள். இதற்குப்பிறகு இரு சாராறுக்கும் மத்தியில் போர்

மூண்டது. அலி ﴿﵁﴾அவர்கள் கலந்து கொண்ட ஜமல் மற்றும் ஸிப்பின் ஆகிய இரு யுத்தங்களும் அவர்களின் ஆய்விற்குட்பட்ட இஜ்திஹாதின் அடிப்படையிலேயே இடம்பெற்றன. இமாம் அபு தாவுத் அவர்கள் தனது நூலில் கைஸ் இப்னு உபாதா என்பவரைத் தொட்டு ஒரு செய்தியை குறிப்பிடுகிறார். “நான் அலி﴿﵁﴾அவர்களிடம் நீங்கள் கலந்து கொண்ட இரு போர்களும் நபி (ஸல்) அவர்களிடமிருந்து பெற்ற வாக்குறுதியா? அல்லது உங்களது கருத்தா? என்று கேட்டனே். அதற்கவர்கள் நான் நபி (ஸல்) அவர்களிடம் அவ்வாறு எந்த வாக்குறுதியும் பெறவில்லை. அவை எனது கருத்தின் பிரகாரமே இடம்பெற்றன. என்று கூறினார். (அபு தாவுத்: 4666)

## முஆவியா﴿﵁﴾அவர்கள் ஆட்சிப் பொறுப்பை வாதிட்டார்களா?

அபு முஸ்லிம் அல்ஹவ்லானி என்பவர் முஆவியா﴿﵁﴾அவர்களிடம் ஒரு சந்தர்ப்பத்தில் சென்று, “நீர் அலி﴿﵁﴾அவர்களோடு ஆட்சிப்பொறுப்பு விடயத்தில் வாதாடுகிறீர்களா? அல்லது நீர் சிறப்பில் அவரைப்போன்றவரா?” என்று கேட்டார். அதற்கவர்கள், “அல்லாஹ்வின் மீது ஆனையாக அவ்வாரில்லை அலி﴿﵁﴾அவர்களே என்னை விடச் சிறந்தவர்களும் இவ்வாட்சிப் பொறுப்புக்குத் தகுதியானவருமென நான் நன்கு அறிவேன். எனினும் உதுமான்﴿﵁﴾அவர்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தி உங்களக்குத் தெரியாதா? நான் அவர்களுடைய சிறிய தந்தையின் மகனாவேன். ஆகவேதான் அவருடைய கொலைக்கான பழியைக் கேட்கிறேன். நீங்கள் அலி﴿﵁﴾ அவர்களிடம் சென்று என்னிடம் உதுமான்﴿﵁﴾அவர்களைக் கொன்றவனை ஒப்படைக்கும்படி கூறுங்கள். நான் அவரிடம் அனைத்துப் பொறுப்புக்களையும் ஒப்படைத்து விடுகிறேன்” என்று கூறினார். அவர்கள் அலி﴿﵁﴾அவர்களிடம் சென்று இது விடயமாக பேசினார்கள். எனினும் அலி அவர்கள் மறுப்புத் தெரிவித்து கொலையாளிகளை ஒப்படைக்கவில்லை.

(தாரீஹுல் இஸ்லாம்: 540)

ஆகவே முஆவியா﴿﵁﴾அவர்கள் தன்னை கலீபா என்றோ அலி﴿﵁﴾அவர்கள் அதற்குத் தகுதி இல்லையென்றோ கூறவில்லை. இதன் காரணமாகவே இருவரும் முரண்பட்டுக்கொண்ட போது இருவருக்கும் மத்தியில் உடன்பாட்டு ஒப்பந்தம் நிகழும் சந்தர்ப்பத்தில் இருவரும் தங்களது கைகளால் பின்வருமாறு வாக்குறுதி அளிக்கிறார்கள். அவ்வாக்குறுதியில் முஆவியா அவர்களுடைய வாக்குறுதி குறிப்பிடத்தக்க ஒன்றாகும். **அதாவது:** இது அமீருல் முஃமினீன் அலி முஆவியா இப்னு அபி ஸுப்யானுடன் இடுகின்ற ஒப்பந்தமாகும். என்று அலி﴿﵁﴾அவர்கள் எழுதிய போது உடனே முஆவியா﴿﵁﴾அவர்கள் அமீருல் முஃமினீன் என்று எழுதாதே! நான் உம்மை அமீருல் முஃமினீனென ஏற்று பைஅத் செய்திருந்தால் நான் உம்மோடு போர் செய்திருக்க மாட்டேன். ஆகவே எனது பெயரையும் உமது பெயரையும் மாத்திரம் குறிப்பிட்டால் போதுமானதாகும். பிறகு எழுத்தாளரை பார்த்து அவர் என்னை விட இஸ்லாத்தில் முந்தியவரும் என்னை விட சிறப்பில் முந்தியவரும் என்றடிப்படையில் அவரது பெயரை எனக்கு முன்னால் எழுதுங்கள் என்றார்கள்.

(அல்பிதாயா வன்னிஹாயா: 07-288)

ஆகவே அலி(ﷺ)மற்றும் முஆவியா(ﷺ)ஆகிய இருவருக்குமிடையில் இடம்பெற்ற போர் இரு கலீபாக்களுக்கு மத்தியில் இடம்பெற்ற போரென்று சொல்லுவது மாபெரும் தவரு ஆகும். எனினும் போர் இடம்பெறடறமைக்கான காரணம், அலி(ﷺ)முஆவியா(ﷺ)யை ஷாமின் பொறுப்பிலிருந்து நீக்கவும், அவர்களிடம் பைஅத் பெறவும் விரும்பினார். ஆனால் முஆவியா(ﷺ)அவர்கள் உதுமான்(ﷺ)யைக் கொன்றவர்களை கொல்லும் வரை அல்லது தன்னிடம் அவர்களை ஒப்படைக்கும் வரை பைஅத் செய்யவோ அல்லது பதவி விலகவோ மாட்டேன் என்றார்கள். இதுவே இருவருக்கும் மத்தியில் நடைபெற்ற உண்மை நிலவரம் ஆகும். எனினும் கவலைக்குரிய விடயம் என்னவெனில் சிலர் மக்கள் மத்தியில் முஆவியா (ﷺ)அவர்கள் போர் செய்தது ஆட்சியை தக்க வைத்துக்கொள்ளவே என்று பிரச்சாரம் செய்கின்றனர். இவ்வாறு கூறுபவர்கள் அவருடைய விவகாரத்தில் அல்லாஹ்வை அதிகம் அதிகம் அஞ்சிக்கொள்ள வேண்டும்.

## யாரின் பக்கம் சத்தியம் இருந்தது?

இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: “அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்களில் பெரும்பான்மையானோர் அலி(ﷺ)அவர்களோடு போராடியவர்களைளேயே சரிகாண்கின்ற அதேவேளை அலி(ﷺ)அவர்களுக்கு எதிராக போர் செய்தவர்களை வரம்பு மீறியவர்கள், எனறு கூறும் அதே சந்தர்ப்பத்தில், அவர்கள் பாவமிழைத்தவர்களாக மார்க்கத்தின் கண்ணோட்டத்தில் கருதப்படமாட்டார்கள், மாறாக அவர்கள் செய்த இஜ்திஹாத்தின் அடிப்படையிலேயே போர் புரிந்தார்கள் எனினும் அதில் தவறு விட்டுடார்கள். என்றே ஒருமித்த முடிவில் கூறுகின்றனர்” (பத்ஹுல் பாரி: 13-72)

மேலும் இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) கூறுகிறார்கள்: “ஸஹாபாக்களுக்கு மத்தியில் ஏற்பட்ட விடயத்தில் அவர்களில் யாரின் பக்கம் சத்தியம் இருக்கின்றதென்று அறிந்த பிறகும் அவர்களில் எவரையும் தவறாக விமர்சனம் செய்யக்கூடாது. ஏனெனில் அவர்கள் ஒவ்வொருவரும் தங்களின் இஜ்திஹாத்தின் அடிப்படையிலேயே போர் புரிந்தார்கள். என்பதில் அஹ்லஸ்ஸுன்னாக்கள் உடண்படடுள்ளார்கள்” (பத்ஹுல் பாரி: 13-37)

மேலும் இமாம் தபரி (ரஹ்) அவர்கள் அலி(ﷺ)அவர்களின் பக்கமே சத்தியம் இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் பின்வருமாறு கூறுகிறார்கள்: “முஸ்லிம்களுக்கு மத்தியில் ஏற்படும் முரண்பாடுகளின் போது அதை விட்டு ஒதுங்கி அவற்றைத்தடுக்காமல் வீடுகளில் இருப்பது கடமையாக்கப் பட்டிருக்குமானால், குற்றங்களுக்கான தண்டனைகள் நிறைவேற்றப்பட்டிருக்க மாட்டாது தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டிரக்க மாட்டாது, மேலும் இதை குழப்பக்காரர்கள் பாவங்கள் இழைப்பதறகான சந்தர்ப்பமாக பயன்படுத்தி இருப்பார்கள்”

மேற்குறிப்பிடப்பட்ட இமாம் தபரியுடைய கூற்று மிகச்சரியானதே ஆகும். ஒரு விடயம் தவறென தோன்றும்போது அதற்கெதிராக போராட வேண்டும்.

ஆனால் அதே விடயம் சந்தேகத்திற்கிடமான நிலையில் இருந்தால் அதை விட்டுத் தூரமாகுவது சிறந்த வழி முறையாகும். ஆகவேதான் அதிகமான ஸஹாபாக்கள் இவ்விரண்டு போர்களில் கலந்து கொள்வதை விட்டும் பின் வாங்கினார்கள். எனினும் ஆயிஷா, தல்ஹா, ஸுபைர், முஆவியா, அலி(ﷺ)ஆகியோரும் அவர்களைச் சார்ந்தோரும் போரிட்டுக்கொண்டது தங்கள் எதிரணி தவறில் ஈடுபட்டுள்ளது என்ற இஜ்திஹாத்தின் அடிப்படையிலாகும். ஏனென்றால் அக்காலப்பகுதி குழப்பங்கள் நிறைந்த ஒன்றாக காணப்பட்டது. அதே போன்று ஒட்டகப் போரைப் பொறுத்தவரையில் போருக்கான எந்த ஆயத்தமும் அவர்களால் மேற்கொள்ளப்படவில்லை. அதுமட்டுமல்லாமல் அவர்கள் போரிட்காக அவ்விடத்தில் ஒன்று கூடவுமில்லை. ஒரு வழிகெட்ட கூட்டத்தினரின் சூழ்ச்சியினாலேயே ஒருவர் மீது ஒருவர் சந்தேகம் கொள்ள நேர்ந்து இறுதியில் போர் மூண்டது. இதே வேளையில் இமாம் இப்னு ஹஸம், இமாம் இப்னு தய்யமிய்யா (ரஹ்) போன்ற அறிஞர்கள் இவ்வாறு ஸஹாபாக்கள் மத்தியில் ஏற்பட்ட விடயம் தொடர்பாக பேசுவது கூடாது என்று கூட சொல்லியிருக்கிறார்கள்.

இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: “அலி(ﷺ)அவர்களே போரிட்கான ஆரம்ப வேளையைச்செய்து போரை ஆரம்பித்தார்கள் என்று ஒருவர் கூறினால்! அவருக்கு பின்வருமாறு பதில் அளிக்கப்பட வேண்டும்: “அலி(ﷺ)அவர்களைச்சாராத மற்றையோர் அவருக்குக் கட்டுப்படுவதை விட்டும் பைஅத் செய்வதை விட்டும் தங்களைத் தடுத்துக் கொண்டனர். மேலும் அலி (ﷺ)அவர்களை அநியாயக்காரர் என்றும் உதுமான்(ﷺ)அவர்களுடைய கொலையில் பங்கு கொண்டவர் என்றும் நினைத்தனர்”

(மின்ஹாஜுஸ் ஸுன்னா: 04-410)

இமாம் இப்னு தய்மிய்யா (ரஹ்) அவர்கள் கூறுவது போன்று உதுமான்(ﷺ)அவர்களுடைய கொலையில் அலி(ﷺ)அவர்களுக்கும் தொடர்புள்ளது என்ற கருத்தை ஷாம் வாசிகளே கொண்டிருந்தனர். இக்கருத்தை அவர்கள் கூறியதற்கு சில காரணங்கள் சொல்லப்படுகின்றன. <u>**அவையாவன:**</u>

01- உதுமான(ﷺ)அவர்களைக்கொலை செய்தவர்களுக்கு தண்டனை வழங்காமல் இருந்தது.

02- ஒட்டகப்போரில் கலந்து கொண்டமை.

03- மதீனாவை விட்டுவிட்டு உதுமான்(ﷺ)அவர்களுடைய கொலைக்கு காரணமாக இருந்தவர்களுடைய பிரதேஷமான கூபாவை தனது இருப்பிடமாக அமைத்துக் கொண்டமை.

04- உதுமான்(ﷺ)அவர்களை கொன்றவர்களென சந்தேகப்பட பட்டவர்கள் அலி(ﷺ) அவர்களின் படையிலிருந்தமை.

இவ்வாறு சில காரணங்களாலேயே ஷாம் வாசிகளுக்கு உதுமான்(ﷺ)அவர்களின் கொலையில் அலி(ﷺ)அவர்களுக்கும் தொடர்புள்ளது என்ற சந்தேகம் ஏற்பட்டது. எனினும்

அலி(ரலி)அவர்களுக்கு அக்கொலையில் எதுவித தொடர்பும் காணப்படவில்லை. மாறாக உதுமான்(ரலி)அவர்களைக் கொலை செய்தவர்களை அவர்களை சபிக்கக் கூடியவர்களாக இருந்தார்கள்.

## தீர்ப்புக் கூறும் நிகழ்வு

ஸிப்பின் யுத்தம் இறுதியில் இருவருக்கும் மத்தியில் இரு தீர்ப்பாளர்களை நியமித்து அவர்கள் மூலமாக முடிவுகளை வெளியிடுதல் என்ற அடிப்படையில் முடிவடைந்தது. அதாவது போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது முஆவிய(ரலி)அவர்கள் சார்பாக அப்போரை நிறுத்துவதற்கு குர்ஆன் உயர்த்தப்படுகிறது. இறுதியில் போர் நிறுத்தப்பட்டு இருவருக்கும் மத்தியில் இரு நடுவர்களை நியமித்து அவர்கள் கூறும் தீர்ப்பே இறுதி முடிவாக அமைய வேண்டுமென்ற உடன்பாட்டில் அலி (ரலி)அவர்கள் தன் சார்பாக அபு மூஸா அல்அஷ்அரி(ரலி)அவர்களையும், முஆவியா(ரலி)அவர்கள் தன் சார்பாக அம்ர் இப்னு ஆஸ்(ரலி)அவர்களையும் நியமிக்கின்றனர். இந்நிலையில் இறுதி முடிவு அபூ மூஸா அல்அஷ்அரி மற்றும் அமர் இப்னு ஆஸ்(ரலி)ஆகிய இருவரின் கைகளிலேயே இருந்தது. இருவரும் ஒன்று கூடி ஆலோசனை செய்து முஆவியா(ரலி)அவர்கள் தனது பகுதியான ஷாமிற்கும், அலி(ரலி)அவர்கள் தனது பகுதியான கூபாவிற்கும் செல்ல வேண்டும். அடுத்த வருடம் ரமழான் மாதத்திலேயே தீர்ப்புச் சொல்லப்படும என்று முடிவெடுத்து அப்போதிருந்த பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தனர். எனினும் இவ்விடத்தில் இந்நிகழ்வு தொடர்பாக ஒரு பிரபல்யமான செய்தி மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. எனினும் அவர்களால் பிரச்சாரம் செய்யப்படும் அந்நிகழ்வு தொடர்பாக கூறும் அச்செய்தி உறுதிப்படுத்தப்படாத ஒன்றாகும்.

**பிரபல்யமான அச்செய்தி:** அம்ர் இப்னு ஆஸ்(ரலி)அவர்கள் அபூ மூஸா அல்அஷ்அரி(ரலி) அவர்களோடு அலி மற்றும் முஆவியா(ரலி)ஆகிய இருவரையும் தங்களது பொறுப்பக்களிலிருந்து நீக்குவதென்பதில் உடன்பட்டார்கள். தீர்ப்புச்சொல்ல வேண்டிய கால எல்லை வந்தது. ஆம்ர் இப்னு ஆஸ்(ரலி)அவர்களை அபூ மூஸா அல்அஷ்அரி (ரலி)அவர்களை எடுக்கப்பட்ட முடிவை முதலில் அறிவிக்குமாறு அவரை முட்படுத்தினார். இதை நம்பி அபூ ஸ்ரீ மூஸா(ரலி)அவர்களும் மிம்பர் மீது ஏறி பின்வருமாறு கூறினார்கள்: "நான் எனது இந்த மோதிரத்தை நீக்குவது போன்று அலி(ரலி)அவர்களை கிலாபத்திலிருந்து நீக்கி விடுகிறேன் என்றுகூறி தான் அணிந்திருந்த மோதிரத்தை கழட்டினார்கள்"

இதற்குப்பிறகு அம்ர் இப்னு ஆஸ்(ரலி)அவர்கள் மிம்பர் மீது ஏறி அபூமூஸா(ரலி)அவர்கள் எவ்வாறு அலி(ரலி)அவர்களை நீக்கினாரோ அதேபோன்று நானும் நீக்குகின்றேன் என்று கூறி தனது மோதிரத்தை கழட்டினார்கள். பிறகு முஆவியாவை அவரது பதவியிலேயே தரித்திருக்கச் செய்கிறேன் என்று கூறி கழட்டிய மோதிரத்தை மீண்டும் அணிந்து கொள்கிறார்கள். இவ்வாறு அம்ர் இப்னு ஆஸ்(ரலி)அவர்கள் கூறியவுடன் அபூ மூஸா அல் அஷ்அரி(ரலி)அவர்கள் இவர் நமக்கு மோஷடி செய்துவிட்டார்

என்ற கோபத்தில் கூபாவிற்குச் செல்லாமல் மக்காவிற்குச் சென்றுவிட்டார்கள். (தாரீஹுத் தபரி: 04-51)

இதுவே அந்நிகழ்வு தொடர்பாக அந்திமகாலமாக மக்களால் பிரச்சாரம் செய்யப்படுகின்ற ஒரு செய்தியாகும். எனினும் இவ்வறிவிப்பு ஒரு பலவீனமான அறிவிப்பாகும். இதை நாம் ஏளவே கூறியது போன்று அனைத்து அறிஞர்களாலும் பொய்யர் என குற்றம் சாட்டப்பட்ட அபூ மிஹ்னப் என்பவனுடைய அறிவிப்பேயகும். எனினும் இந்நிகழ்வு தொடர்பான சரியான செய்தி இதற்கு முற்றிலும் மாறுபடுகின்றது. **அதாவது:** அம்ர் இப்னு ஆஸ்﴾﵁﴿அவர்கள் அபூ மூஸா அல்அஷ்அரி ﴾﵁﴿அவர்களைச்சந்தித்து இவ்விடயம் தொர்பாக தங்களது கருத்து என்ன என்று கேட்கிறார். அதற்கு அபூ மூஸா﴾﵁﴿அவர்கள்: “நிச்சயமாக அவர் நபி (ஸல்) அவர்களால் பொருந்திக்கொள்ளப்பட்ட நபராவார் ” என்று அலி رضي الله عنهஅவர்களைப்பற்றி குறிப்பிடுகிறார்கள். அதற்கு அம்ர் இப்னு ஆஸ்﴾﵁﴿அவர்கள் “என்னையும் முஆவியாرضي الله عنهஅவர்களையும் எவ்விடத்தில் வைத்து நோக்குகிறீர்கள்” என்று கேட்டபோது அதற்கவர்கள்: “அவர் (அலி)உங்களைக்கொண்டு உதவி தேடினால் நீங்கள் அவருக்கு உதவி செய்ய வேண்டும். உங்களது உதவி தேவையில்லயென்று அவர் கருதினால் அல்லாஹ்வுடைய விடயம் உங்களிருவரை விட்டும் ஒதுங்கி விட்டது” என்பதாகும் என்று கூறினார். (தாரீஹுத் தமஸ்க்: 46-175)

இதற்குப்பிறகு அபூ மூஸா﴾﵁﴿அவர்கள் கூபாவிற்கச் செல்கிறார்கள். அம்ர் இப்னு ஆஸ் ﴾﵁﴿அவர்கள் இச்செய்தியோடு ஷாமிற்குச் செல்கிறார்கள். ஆகவே இச்செய்தியை அந்நிகழ்வு தொடர்பாக கூறும் சரியான அறிவிப்பாகும், எனினும் நாம் மேற்குறிப்பிட்ட அபூமிஹ்னப் என்பவனின் அறிவிப்பு அம்ர் இப்னு ஆஸ்﴾﵁﴿அவர்களை ஒரு சூழ்ச்சிக் காரனென்றும் நம்பிக்னை மோஷடிக் காரனென்றும் அவர்களைப்பற்றிய தவறான எண்ணத்தை மனதில் விதைக்கிறது. ஆகவே தீர்ப்புக் கூறும் நிகழ்வு தொடர்பாக உண்மையில் நிகழ்ந்தது நாம் இரண்டாவதாக கூறியவேயாகும். அதில் அலி﴾﵁﴿அவர்கள் கலீபாவாக இருப்பாரென்றும் முஆவியா﴾﵁﴿அவர்கள் ஷாம் பகுதியில் கவர்னராக இருப்பாரென்றும் போர் நிறுத்தப்பட வேண்டுமென்றும் முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

நாம் ஏளவே குறிப்பிட்டது போன்று முஆவியா﴾﵁﴿அவர்களின் படையிலிருந்து அல்-குர்அன் உயர்த்தபப்ட்ட போது அலி﴾﵁﴿அவர்கள் போரை நிறுத்துகிறார்கள். அதற்குப்பிறகு இரு பக்கத்திலிருந்தும் இரு தீர்ப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அச்சந்தர்ப்பத்தில் போர் நிறுத்தப்படக்கூடாது அல்லாஹ்வுடைய தீர்ப்புக்கு முன் இரு மனிதர்களுடைய தீர்ப்புக்களை ஏற்றுக்கொள்ள முடியாது. என்று கூறி ஒரு கூட்டம் அலி﴾﵁﴿அவர்களுடைய படையிலிருந்து விலகிச்செல்கிறது. இவர்களே இஸ்லாமிய உம்மத்தை தோன்றிய இரண்டாவது கவாரிஜ்கலாகும். இவர்களுக்கெதிராக அலி﴾﵁﴿அவர்கள் ஹிஜ்ரி 38ம் ஆண்டு போர் தொடுத்தார்கள். இதற்கு நஹ்ரவான் போர் எனப்படும். இதில் முஸ்லீம்கள் வெற்றி ஈட்டுகிறார்கள்.

இந்த கவாரிஜ்கள் பிரிந்து சென்ற ஆரம்பகட்டத்தில் அப்துல்லாஹ் இப்னு ஹப்பாப்(ؓ) அவர்களையும் கற்பினியாகயிருந்த அவர்களுடைய மனைவியையும் கொலை செய்கிறார்கள். இச்செய்தி அலி(ؓ)அவர்களுக்குக் கிடைத்தபோது அவர்களை யார் கொன்றது என்று கேட்டு கவாரிஜ்களிடம் ஒரு தூதுவரை அணுப்புகிறார்கள். அதற்கவர்கள் நாங்கள் அனைவருமே கொன்றோம் என்று பதில் அணுப்பினர். உடனே அலி(ؓ)அவர்கள் அவர்களோடு போர் தொடுப்பதற்காக 10,000 வீரர்கள் கொண்ட ஒரு படையை தயார் செய்து நஹ்ரவான் என்னுமிடத்தில் அவர்களோடு போர் தொடுத்தார்கள். போர் முடிந்த போது அலி(ؓ)அவர்கள் கவாரிஜ்களுடைய படையில் பெண்களுடைய மார்பகத்தைப் போன்று தனது ஒரு மார்பகம் பெறுத்திருந்து ஒரு நபர் கொல்லப்பட்டுள்ளாரா? என வினவினார்கள். அதற்கு ஆம் என்று பதிலளிக்கப்பட்டது. உனே அவர்கள் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தும் முகமாக ஸுஜுதில் விழுகிறார்கள். ஏனெனில் நபி(ﷺ)அவர்கள் இதுபற்றி முன்னறிவிப்புச் செய்துள்ளார்கள்.

**அதாவது:** முஸ்லிம்களுக்கு மத்தியில் முரண்பாடு வரும் காலகட்டத்தில் முஸ்லிம்கள் இருபகுதியினராக காணப்படுவர். அவ்விரு பகுதியனரை விட்டும் ஒரு கூட்டம் பிரிந்து செல்லும் அவர்களோடு யார் பேரிடுகிறார்களோ அக்கூட்டத்தினரே அவ்விரு கூட்டத்தினரில் சத்தியத்தில் முதன்மையானவர்களாவர் என்றும் அவ்வாறு பிரிந்து செல்லும் கூட்டத்தில் இப்படிப்பட்ட மார்பகமுடைய ஒரு நபரிருப்பார் என்றும் நபி (ஸல்) அவர்கள் இதற்குமுன் கூறியிருந்தார்கள். இதனடிப்படையிலேயே அலி (ؓ)அவர்கள் அப்படியொரு நபரிருக்கிறார் என்பதையறிந்து அல்லாஹ்விற்கு ஸுஜுது செய்து நபி(ﷺ)அவர்கள் கூறிய சத்தியத்தில் முன்னிலையில் உள்ளவர்கள் என்ற நிலையை அடைந்ததற்காக நன்றி செலுத்துகிறார்கள்.

(முஸ்னத் அஹ்மத்: 02-184, முஸ்லிம்: 1064)

## ஏன் அலி(ؓ)அவர்கள் உதுமான்(ؓ)யைக் கென்றவர்களை கொள்ளவில்லை?

அலி(ؓ)அவர்கள் உதுமான் (ؓ)யின் கொலையாலிகளை விட்டுவடும் நோக்கில் இருந்ததில்லை. மாறாக பல குழப்பங்களுக்கு மத்தியில் காணப்பட்ட இஸ்லாமிய ஆட்சி சீராகும்வரை அதை சற்று தாமதப்பத்தலாம் என்ற கருத்தில் இருந்தார்கள். ஏனெனில் நபியவர்கள் ஆயிஷா(ؓ)அவர்கள் மீது பொய்யாக பரப்பப்பட்ட அவதூரில் கடைப்பிடித்த வழிமுறையையே இதிலும் அலி (ؓ)கடைபிடித்தார்கள். ஆயிஷா(ؓ)அவர்கள் மீது அவதூறு கூறியவர்களில் முக்கியமான ஒருவனாக நயவஞ்சகன் அப்துல்லாஹ் இப்னு உபைப் காணப்பட்டான். இவனுக்கு மதீனாவில் பெரும் அந்தஸ்து காணப்பட்து இவனே உஹத் போரின் போது முஸ்லிம்களின் படையில் மூன்றில் ஒரு பகுதியினரை அழைத்துக் கொண்டு மதீனாவிற்கு சென்றான். இந்தளவு அந்தஸ்து இவனுக்கு மதீனாவில் காணப்பட்டது. இதன் காரணமாக நபியவர்கள் அவதூறு பரப்பியோருக்கு தண்டனை வழங்க வேண்டும் என முடிவெடுத்த போது இவன் அவர்களில் இருந்ததன் காரணத்தினால் தண்டனை வழங்குதில் சற்று பின்வாங்கினார்கள்.

ஏனென்றால் இவனுக்கு தண்டனையை நிறைவேற்றுவதன் மூலமாக மதீனாவின் நிலை சீர்குலைவதை நபியவர்கள் பயந்தார்கள். தண்டனையை நிறைவேற்றுவதை விட நிறைவேற்றாமல் இருப்பது சிறந்தது எனக்கருதினார்கள்.

இதேபோன்றதே அலி(ﷺ)அவர்களின் நிலையும். மீண்டும் குழப்பம் ஏற்படுவதை தடுப்பதற்காக தண்டனையை பிற்படுத்தினார்கள். அது மாத்திரமில்லாமல் கொலையாலிகள் யார்? ஏன அவர்கள் அறிந்திருக்கவுமில்லை. அங்கு குழப்பம் விதைத்தவர்கள் என சில இனங்காணப்பட்டாலும், அவர்களுக்கு தண்டனை நிறை வேற்றவிடாமல் தடுக்கும் வகையில் அவர்களது கோத்திரங்கள் அங்கு காணப்பட்டன. அதேபோன்று அது வரைகாலமும் அங்கு அமைதி நிலவவில்லை. இந்த அடிப்படையிலேயே முஆவியா(ﷺ)அவர்கள் ஆட்சிப்பொறுப்பை பெற்ற போது கூட கொலையாலிகளுக்கு தண்டனையை நிறைறேற்றவில்லை. ஏனெனில் அவர்களும் அலி(ﷺ)நோக்கிய விதத்தலேயே நோக்கினார்கள். அலி (ﷺ)அவர்கள் ஆட்சியில் இருந்த போது அவர்கள் அதை களத்தில் இருந்தகொண்டு சிந்தித்தார்கள். ஆனால் முஆவியா(ﷺ)அவர்கள் வெளியில் இருந்து கொண்டு சிந்தித்தார்கள். முஆவியா(ﷺ)அவர்களுக்கு ஆட்சி கிடைத்தபோது அவர்களும் களத்தில் இருந்த நிலையில் சிந்தித்தார்கள்.

எனினும் ஒரு கட்டத்தில் நிலைமை சீரான போது அவர்களில் சிலருக்க தண்டனை வழங்கினார்கள். மீதித் தொகையினர் கலீபா அப்துல் மலிக்கின் காலம் வரை எஞ்சி இருந்தனர். அவர்களுக்கு அக்காலத்தில் தண்டனை வழங்கப்பட்து. எனினும் இங்கு அவசியமான கூறப்படவேண்டிய விடயம் என்னவெனில் அலி(ﷺ)அவர்களால் அப்போதிருந்த நிலையில் கொலையாலிகளுக்கு தண்டனை வழங்கமுடியவில்லை.

## அலி(ﷺ)அவர்கள் கொலை செய்யப்படுதல்.

ஹிஜ்ரி 38ல் இடம்பெற்ற நஹ்ரவான் யுத்தம் முடிவுற்று கிட்த்தட்ட 02 ஆண்டுகளுக்கு பிறகு மூன்று கவாரிஜ்கள் மக்காவில் ஒன்றுகூடி அலி, முஆவியா மற்றும் அம்ர் இப்னு ஆஸ்(ﷺ)மூவரையும் கொல்வதற்கு திட்டம் தீட்டினார்கள். அம்மூவரும் இவர்கள் மூவரையும் கொல்வதன் மூலம் அல்லாஹ்விடம் நெருக்கத்தை எற்படுத்தலாம் என்ற தவறான எண்ணத்தின் அடிப்படையிலேயே இவ்வாறு திட்டம் தீட்டினர்.

அம்மூவரில் ஒருவன் **அப்துர்ரஹ்மான் இப்னு முல்ஜிம் அல் முராதி** நான் அலியைக் கொல்ல பொறுப்பு என்றான். இரண்டாமவன் **அல் பர்க் அத்தமீமி** என்பவன் நான் முஆவியாவைக் கொல்வதற்கு பொறுப்பு என்றான். மூன்றாமவன் **அம்ர் இப்னு பக்ர்** நான் அம்ர் இப்னு ஆஸ் ஐக் கொல்வதற்கு பொறுப்பு என்றான். இவ்வாறு முடிவெடுத்து இது ரமழான் மாதம் 17ம் நாளிற்கு பிறகு இரவு நேரத்தில் இடம்பெற வேண்டும் என்று உடண்பட்டுக் கொண்டனர்.

இக்காலகட்டதில் அம்ர்(ரலி)மிஸ்ரிலும் முஆவியா(ரலி)ஷாமிலும் அலி(ரலி)கூபாவிலும் இருந்தனர். இவ்வேலையில் அலி (ரலி)ஸுபஹ் தொழுகைக்காக வெளியில் வந்தபோது அவர்களை **இப்னு முல்ஜிம்** தான் வைத்திருநத கூரிய ஆயுதத்தால் குத்துகிறான். அலி(ரலி) தாக்கப்பட்டும் "நான் சற்று நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளேன் நான் அவனைப் பார்த்துக்கொள்கிறேன்" நான் இறந்து விட்டால் நீங்கள் இருவரும் அவனைக் கொல்லுங்கள் என்று அவருடைய இரு புதல்வரகள் ஹஸன் மற்றும் ஹஸைன்(ரலி)இருவரிடமும் கூறினார். இதைக்கேள்விப்பட்ட **இப்னு முல்ஜிம்:** "அல்லாஹுவின் மீது ஆணையாக என்னை உம்மால் கொல்ல முடியாது ஏனெனில் நான் எனது ஆயுதத்தை 7 நாட்கள் விஷமிட்டு தைத்திருந்தேன் என்றான்"

அலி(ரலி)அவர்கள் இறந்ததும் அவ்விருவரும் இப்னு முல்ஜிமிடம் வந்து அவனது கைகளை துணடித்தனர். மேலும் அவனது கண்களை குருடாக்கினர். எனினும் அவன், அவனது கொலையில் உறுதியாக இருந்து நான் செய்தது சரிதான் என்று மீண்டும் மீண்டும் கூறியதால், அவனது நாவைத்துண்டிக்க எத்தனித்தனர். அப்போது அவன்: "நான் வாழும் காலப்பகுதியில் அல்லாஹுவை திக்ர் செய்யாமல் இரப்பதை பயப்படுகிறேன் என்றான்" ஸுப்ஹானல்லாஹ்!!....... தெளிவான வழிகேடு, அல்லாஹுவுடைய நேசர் ஒருவரை கொன்று விட்டு, அல்லாஹுவை திக்ர் செய்யாமல் இருப்பதை பயப்படுகிறான் ?....... முஆவியா(ரலி) அவர்களை கொலை செய்ய பொறுப்பேற்ற அல் பர்க் என்பவன், ஸுபஹ் நேரத்தில் அவரைத்தாக்குகிறான் எனினும் அவனால் அவரைக் கொல்ல முடியவில்லை. அவர் நிவாரணம் அளிக்கப்பட்டு காப்பற்றப்பட்டார். இதன் காரணமாகவே அவர்களுடைய பிள்ளைப்பாக்கியம் அற்றுப்போனது என்று கூறப்படுகிறது.

அதேபோல் அம்ர் இப்னு ஆஸ்(ரலி)அவர்களை கொல்ல நியமக்கப்பட்டவன் ஸுபஹ் நேரத்தில் வருகிறான் எனினும் அமர்(ரலி)நோயால் பீடிக்கப்பட்டு இருந்ததால், அவர்கள் அன்று வெளியில் வரவில்லை. இதன் காரணமாக அவன் அமர்(ரலி)என எண்ணி பள்ளியில் தொழுகை நடாத்தியவரை கெல்லுகிறான்.... அப்போது இமாமாக இருந்தவர் **காரிஜா இப்னு அபீ ஹுபைப்** என்பவர் ஆவார். எனினும் இவன் அங்கிருந்தவர்களால் பிடிக்கப்பகிறான். அப்போது அவர்கள் அவனிடம் என்ன காரியம் செய்து விட்டாய் என்றனர். அதற்கவன் **"அம்ரைக்கென்று மக்களை அமைதியில் ஆழ்த்துகிறேன்"** என்றான். அதற்கவர்கள் அவனிடம் நீ அம்ரைக் கொல்லவில்லை அவருக்குப்பதிலாக காரிஜாவையே கொன்றுள்ளாய் என்றனர். அதற்கவன் நான் அம்ரைக் கெள்ளவே நாடினேன் ஆனால் அல்லாஹுவோ காரிஜாவை நாடியுள்ளான் என்றான். (அத்தபகாத் அல் குப்ரா: 3-35)

**ஸஹாபாக்களுக்கு மத்தியில் முரண்பாடு ஏற்படக் காரணம் ?**

தல்ஹா, ஸுபைர் மற்றும் ஆயிஸா(ரலி)மூவரும் உதுமான்(ரலி)அவர்கள் கொல்லப்பட்டமைக்கு பழிக்குப்பழி வாங்கும் நோக்கத்திலேயே மக்காவிலிருந்து சென்றார்கள் என்பது அனைவரும் அறிந்ததே அதேபோன்று முஆவியா (ரலி)அவர்களைப் பொருத்தவரை அலி(ரலி)அவர்கள்

ஆட்சிப்பொறுப்பை பெற்றுக் கொண்டபோது, சில பகுதிகளில் உதுமான் அவர்களால் நியமிக்கப்பட்ட கவர்னர்களை நீக்கினார்கள், அந்த அடிப்படையில் முஅவியா ﴾ؓ﴿அவர்களையும் நீக்கினார்கள். இச்செய்தி முஆவியா ﴾ؓ﴿வை எட்டிய போது இதை மறுத்து யார் தன்னை நீக்கியது எனக் கேட்டார்கள். அதற்கு அலி என்று கூறப்பட்டது. அதற்கவர்கள்: எனது சிறிய தந்தையின் மகனைக் கொன்றவர்கள் எங்கே எனக் கேட்டார்கள். அதற்கு: முதலில் பைஅத் செய்வீராக, பிறகு உதுமான்﴾ؓ﴿யைக் கொன்றவர்களைக் கேள் என்றார்கள். அதற்கவர்: இல்லை, முதலில் என்னிடம் அவர்களை ஒப்படையுங்கள் அதற்குப்பிறகு பைஅத் செய்கிறேன் என்றார்கள்.

### ஆகவே அலி மற்றும் முஆவியா ﴾ؓ﴿க்கு இடையில் முரண்பாடு எதை முற்பத்துவது என்பதிலேயே ஆகும்

**அலி (ரழி):** முதலில் முஆவியாவின் பைஅத் முற்படுத்தப்பட வேண்டும், அதற்குப்பிறகு உதுமான்﴾ؓ﴿யின் கொலை பற்றி பார்க்கபபபடும் என்றார்.

**முஆவியா:** இதற்கு மாற்றமாக அலி﴾ؓ﴿முதலில் கொலை விவகாரம் பற்றி கருத்தில் கொள்ளவேண்டும் அதற்குப்பிறகே பைஅத் செய்வேன் என்றார்.

இவ்விடயத்தில் முஆவியா﴾ؓ﴿இற்கும் தல்ஹா மற்றும் ஸுபைர்﴾ؓ﴿ஆகிய மூவருக்கும் ஒற்றுமை இருப்பினும், முஆவியா﴾ؓ﴿பைஅத் செய்யவில்லை. ஆனால் தல்ஹா மற்றும் ஸுபைர் ஆகிய இருவரும் அலி﴾ؓ﴿இற்கு பைஅத் செய்திருந்தனர்.

### இக்காலப் பகுதியில் ஸஹாபாக்கள் மூன்று பகுதியினராக காணப்பட்டனர்

**01-** தல்ஹா, ஸுபைர், அயிஸா மற்றும் முஆவியா﴾ؓ﴿ஆகிய நால்வரும் அவர்களைச் சார்ந்தோறும்.
**02-** அலி﴾ؓ﴿அவர்களும் அவரகளைச்சார்ந்தோரும்.
**03-** இருசாராரை விட்டும் பொரை விட்டும் ஒதுங்கி இருந்தவர்கள். ஸ.்.த், இப்னு உமர், அபூ ஹுரைரா, முஹம்மத் இப்னு மஸ்லமா, உஸாமா, அபூ பக்ரா தகபீ﴾ؓ﴿போன்ற ஸஹாபாக்கள்.

## உதுமான், ஸுபைர், அலி, ஹுஸைன்(£)போன்ற நபித்தோழர்களை கொன்றவர்கள் தொடர்பாக அஹ்லுஸ் ஸுன்னாக்களின் நிலைப்பாடு

இமாம் தஹபீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: "அலி ﴾ؓ﴿யைக்கொலை செய்த **இப்னு முல்ஜிமைப்** பொருத்தவரை நாம் அவனுக்கு நரகம் கிடைக்க வேண்டும் என எதிர்பார்க்கிறோம், அதேபோன்றே உதுமான்﴾ؓ﴿யைக்கொலை செய்தவனுக்கும் நரகத்தை ஆசை கைக்கின்றோம். மேலும் ஸுபைர், தல்ஹா, ஸஈத் இப்னு ஜுபைர், அம்மார், காரிஜா, ஹுசைன்﴾ؓ﴿போன்றாரை கொலை செய்தவர்களை நாம் வெறுக்கின்றோம், அவர்களை அல்லாஹுவிடம் பொறுப்புச்சாட்டுகிறோம். (தாரீகுல் இஸ்லாம்: 645)

## ஸஹாபாக்கள் மத்தியில் இடம்பெற்ற விடயங்களில் சத்தியம் யார் பக்கம் உள்ளது?

நபிகள் நாயகம் அவர்கள் ஒரு முறை அம்மார்(ﷺ)அவர்கள் பற்றி பின்வருமாறு கூறினார்கள்: “அவரை வரம்பு மீறிய ஓர் கூட்டம் கொலை செய்யும்”

(ஸஹீஹுல் புஹாரி: 448)

இன்னுமொறு சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள் கவாரிஜ்கள் பற்றிக்கூறும்போது: “முஸ்லிம்களுக்கு மத்தியில் முரண்பாடு தோன்றும் காலப்பகுதில் அவர்கள் வெளியாவார்கள், (அப்போது காணப்படும்) இரு கூட்டங்களில் சத்தியத்திற்கு மிக நெருக்கத்தில் இருக்கும் கூட்டம் அவர்களோடு போராடும். இந்த இரண்டு செய்திகளே எமக்கு யார் சத்தியத்தில் இருப்பவர்கள் என்பதை எமக்குக்கூறும் செய்திகளாகும்.

**முதலாவது** கூறப்பட்ட நபிகளாரின் செய்தியை பார்த்தால்: அம்மார்(ﷺ)அவர்கள் அலி(ﷺ) அவர்களின் படையில் இருந்தார்கள் அப்படியெனில் நிச்சயமாக அவர்களைக் கொன்றது அலி(ﷺ)அவர்களின் படையல்லாத வேறு நபர்களாகவே இருக்க வேண்டும்.

**இரண்டாவது** செய்தியைப்பார்த்தால்: கவாரிஜ்களோடு போர் செய்வதை அளவு கோளாக கொண்டிருக்கிறது. அப்படியானால் கவாரஜ்களொடு போர் செய்தவர்கள் யார் எனப்பார்த்தால், அது அலி(ﷺ)அவர்களேயாகும். ஆகவே இரு செய்திகளும் அலி(ﷺ)அவர்களும் அவர்களைச் சார்ந்தோருமே சத்தியத்திற்கு மிக நெருக்கமானவர்கள், அவர்கள் பக்கமே அதிக நியாயம் உள்ளது, என்று சொல்கின்றன. இதை அடிப்படையாகக்கொண்டு அலி(ﷺ)அவர்களுக்கு எதிராக போராடியவர்கள் அனைவரும் அசத்தியவாதிகள், அநியாயக்காரர்கள் என்றோ கூறமுடியாது. ஏனெனில் நாம் மேற்குறிப்பிட்ட நபிமொழி அவர்களை சத்தியத்திற்கு மிக்க நெருக்கமானவர்கள் என்று சொல்கின்றதே தவிர சத்தியத்தில் முழுமையாக நுழைந்தவர்கள் என்று கூறமுடியாது.

இவ்வாறு கூறுவது அலி(ﷺ)மீது குறை சொல்வதாக ஆகாது. ஏனெனில் போரில் ஈடுபடுவதை விட்டும் தங்களையும் மற்றவர்களையம் தடுத்துக்கொண்டு இருந்தவர்களே சத்தியத்தில் முழுமையானவர்கள். என்றும் அந்நபிமொழி மூலம் நாம் விளங்கிக்கொல்ல முடியும். இதன் காரணமாகவே போர் முற்றுப்பெற்றவுடன் அலி (ﷺ)நடந்த நிகழ்வுகளுக்காக கைதேசபட்டுள்ளார்கள். தல்ஹா(ﷺ)அவர்கள் கொல்லப்பட்டுள்ளயதை கண்டவுடன்: “நான் இதற்கு 20 வருடங்களுக்கு முன்னர் இறந்திருக்கக்கூடாதா” என கவலைப்பட்டார்கள்.

ஸிப்பீன் யுத்தம் முடிவடைந்ததன் பிறகு, ஹுஸைன்(ﷺ), அலி(ﷺ)அவர்களிடம் வந்து நடந்தவற்றைப்பற்றி வினவினார்கள்: அதற்கு அலி(ﷺ)அவரகள்: “அல்லாஹுவின் மீது ஆணையாக இது, இந்தளவிற்கு வரும் என எண்ணியதே இல்லை” எனக்கூறினார்கள். இதன் காரணமாகவே நபியவர்கள் ஹஸன் (ﷺ)பின்வருமாறு புகழ்ந்துள்ளார்கள்: “நிச்சயமாக

எனது இந்த மகன் ஓர் தலைவனாவான், இவனின் மூலமாக அல்லாஹ் தஆலா முஸ்லிம்களில் இரு பகுதியினரை சமாதானப்படுத்தி வைப்பான்" (ஸஹீஹுல் புஹாரி: 3746)

இங்கு நபியவர்கள் ஹஸன்﵁அவர்களைப் புகழ்துள்ளார்கள் ஏனெனில் அவர் முஸ்லிம்களை சமாதானம் செய்து வைத்தார், ஆனால் நபியவர்கள் அலி﵁அவர்களை இது தொடர்பாக புகழவில்லை ஏனெனில் அவர்கள் போரிட்டார்கள். ஆகவே முடிவில்: அலி ﵁அவர்கள் பக்கம் அதிக நியாயம் இருப்பது போன்று முஆவியா﵁அவர்கள் பக்கமும் ஓரளவு நியாயங்கள் இருக்கின்றன.

# அமீருல் முஃமினீன் ஹஸன் இப்னு அலி﵁

**பகுதி-01**

## ஹஸன்﵁அவர்கள் பற்றிய சுருக்கக் குறிப்பு

**மனைவிமார்கள்:**

01- கவ்லா பின்த் மன்லூர்.

02- உம்மு இஸ்ஹாக் பின்த் தல்ஹா.

03- உம்மு பஸீர் பின்த் அபீ மஸ்ஊத்.

**பிள்ளைகள்:**

01-ஹஸன். 02-ஸைத். 03-தல்ஹா. 04-ஹுஸைன். 05-அப்துல்லாஹ். 06-அபூபக்கர். 07-காசிம்.

**இவர்கள் பற்றி நபிகள் நாயகம்:**

அபூ புக்ரா﵁அவர்கள் தான் நபியவர்களிடம் செவியுற்றதாக அறிவிக்கிறார்கள்: "நபி (ஸல்) மிம்பர் மீது ஹஸன்﵁அவர்களை தனக்கு அருகில் வைத்துக்கொணடு: "நிச்சயமாக எனது இந்த மகன் தலைவன் ஆவான், அல்லாஹ் தஆலா இவரின் மூலம் முஸ்லிம்களில் இரு பகுதியினரை சமாதானப்படுத்தி வைப்பான்" (ஸஹீஹுல் புஹாரி: 3746)

உஸாமா﵁அவர்கள் நபியவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள்: "நபியவர்கள் ஹஸன் ﵁அவர்களையும் என்னையும் அவர்களோடு அணைத்துக் கொண்டு "இறைவா! நான் இவர்கள் இருவரையும் நேசிக்கிறேன். நீயும் இவர்களை நேசிப்பாயாக என்றார்கள்.

(ஸஹீஹுல் புஹாரி: 3735)

**இவர்களது மரணம்:** ஹஸன்﵁அவர்கள் ஹிஜ்ரி 49ம் ஆண்டு முஆவியா﵁அவர்களது ஆட்சிக்காலத்தில் நஞ்சூட்டப்பட்டு மரணித்தார்கள். உமைர் இப்னு இஸ்ஹாக் என்பவர் அறிவிக்கிறார்: "நானும் எனது தோழர் ஒருவரும் ஹஸன்﵁அவர்களை சுகம் விசாரிப்பதற்காக

சென்றிருந்தோம். அப்போது அவர்கள் எனது தோழரிடம்: என்னிடம் கேளுங்கள் என்றார்கள்" அதற்கவர்: "நான் உங்களிடம் எதைப்பற்றியும் தற்போது கேற்கமாட்டேன் என்றார்" மீண்டும் ஹஸன்(ؓ)அவர்கள் "என்னிடம் கேளுங்கள் என்று கூறிவிட்டு, நிச்சயமாக நான் பல தடவைகள் நஞ்சூட்டப்பட்டேன்" என்றார்கள். அதற்கு எனது தோழர்: "அல்லாஹ் நாடினால் உங்களுக்கு நிவாரணம் அளிப்பான் என்றார்கள்" பிறகு நாங்கள் வெளியேரிவிட்டோம். மறுநாள் நான் அவர்களிடம் வந்தபோது ஹுஸைன்(ؓ)அவர்களும் வந்தார்கள். அவருடைய தலைக்கு அருகில் அமர்ந்து எனது சகோதரனே உமக்கு யார் நஞ்சூட்டியது என என்னிடம் கூறு என்றார்கள். அதற்கு ஹஸன் (ؓ)அவர்கள்: எதற்காக? நான் கூறினால் நீர் அவர்களைக் கொன்றுவிடுவாயா! எனக்கேட்டார்கள். அதற்கு ஹுஸைன்(ؓ): ஆம் என்றார்கள். அதற்கு ஹஸன்(ؓ): நான் உம்மிடம் கூறமாட்டேன், நான் சந்தேகம் கொள்பவராக அவர் இருந்தால் அவருக்கு அல்லாஹ் தண்டனை வழங்குவான், அவர் இல்லாவிட்டால் எனக்காக ஒரு நிரபராதி கொல்லப்படக்கூடாது என்றார்கள்.
(துபகாத் அலகப்ரா: 335)

எனினும் இவ்விடயத்தில் ஹஸன்(ؓ)அவர்களுக்கு நஞ்சூட்டியதாக சந்தேகம் கொள்ளப்படுவது, அவர்களுடைய மனைவி **ஜ.்.தா பினத் அல் அஸ்அத்** என்பவளாகும். ஏனெனில் இவளது தந்தை அலி(ؓ)அவர்களது படையில் இருந்தவன் பிறகு கவாரிஜ்களோடு பிரிந்து சென்றவராவார். ஆகவே இவரின் தூன்டுதல் காரணமாக நஞ்சூட்டி இருக்கலாம். என சந்தேகம் கொள்ளப்படுகிறார்...... எனினும் இச்செய்தி உறுதிப்படுத்தப்படட ஒன்றல்ல, இமாம் தஹபி (ரஹ்) கூறுகிறார்கள்: "இது ஓர் சரியான தகவல் அல்ல, இதை யார் கூறியது என்றும் அறியப்படவில்லை"
(தாரீகுல் இஸ்லாம்: 40)

இமாம் இப்னு கதீர் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: "என்னிடம் இது சரியான தகவல் அல்ல"
(அல்பிதாயா வன் நிஹாயா: 8-44)

**ஹஸன்(ؓ)அவர்கள் கலீபாவாக பைஅத் செய்யப்படுதல்:** அலி(ؓ)அவர்கள் கொலை செய்யப்பட்டதன் பிறகு ஹஸன்(ؓ)அவர்கள் கலீபாவாக பிரகடனப்படுத்தப்பட்டார்கள். அவருக்கு பைஅத் செய்யப்பட்டதன் பிறகு கூபாவிலிருந்து ஷாமிற்கு சென்றுவிடுகிறார்கள்.

## முஆவியா(ؓ)அவர்களோடு சமாதனம் மேற்கொள்ளலும், முஸ்லிம்களை ஒன்று படுத்துதலும்

ஹஸன்(ؓ)அவர்கள் ஷாமிற்கு புறப்பட்டபோது சமாதானம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்திலேயே செல்கிறார்கள். ஏனெனில் அவர்கள் அடிப்படையிலேயே போர் செய்வதை விரும்பாதவர்களாகவே இருந்தார்கள். இதன் காரணமாகவே அலி(ؓ)அவர்கள் போரிற்காக ஷாமிற்குப் புறப்பட்டபோது அவர்களைத்தடுத்தார்கள். இவ்வாறு ஹஸன்(ؓ) சமாதானம் மற்றும் ஒற்றுமையை நாடுகிறேன் என்பதை தெரிவுக்கும் முகமாக படைத் தளபதியாக இருந்த கைஸ் இப்னு ஸ.்.த் ஐ நீக்கிவிட்டு இப்னு

அப்பாஸ்(﵁)அவர்களை நியமித்தார்கள். இமாம் ஹஸனுல் பஸரி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: “ஹஸன்(﵁) அவர்கள் பெரும் பட்டாளங்களுடன் முஆவியா (﵁) அவர்களிடம் சென்றபோது, இதைப் பார்த்த அம்ர் இப்னு ஆஸ்(﵁)அவர்கள் முஆவியா(﵁)அவர்களிடம்: “நான் போரிலிருந்து பின்வாங்கக்கூடிய நீர் இதுவரை நியமித்திராத பெரும்பட்டாளத்தை காண்கிறேன் என்றார்கள்” நபிகள் நாயகம் அவர்கள் ஹஸன்(﵁)பற்றி இவர் முஸ்லிம்களை சமாதானம் செய்து ஒற்றுமைப்படுத்தி வைப்பார் என கூறிய செய்தி உண்மையில் நிதர்சனமான ஒன்றுதான். அல்லாஹ் அவர்களை பொருந்திக்கொள்வானாக.

இமாம் ஸுஹ்ரி (ரஹ்) கூறுகிறார்கள்: “ஹஸன்(﵁)ஷாமிற்கு வருகை தந்தபோது முஆவியா, ஹஸன்(﵁)அவர்களிடம் முத்திரை பதிக்கப்பட்ட ஒரு ஏட்டை அனுப்பி, இது உங்களுக்குரியது, நீங்கள் நாடியதை இதில் எழுதுங்கள் என்றார்கள். அதற்கு அம்ர் இப்னு ஆஸ்(﵁)நாம் அவர்களோடு போரிடுவோம் என்றார். அதற்கு முஆவியா (﵁)அவர்கள் “அபூஅப்துல்லாஹ்வே! பொருமையாகயிரு... நிச்சயமாக நீ அவர்களிலொரு தொகையினர் ஷாம் வாசிகளால் கொல்லப்படுவதையே விரும்புகிறாய் என்றார்கள்” அதற்குப்பிறகு வாழ்க்கையில் என்ன நலவுள்ளதென்று கேட்டார். இந்நிகழ்வுக்குப்பிறகு முஆவியா(﵁)அவர்கள் ஹஸன்(﵁)அவர்களை சந்திக்கிறார். அந்த வேளையில் ஹஸன்(﵁)அவர்கள் தனது கலீபா பதவியை விட்டும் இறங்கி அதை முஆவியா(﵁)அவர்களுக்கு வழங்குகிறார்கள். அப்போதிலிருந்து முஆவியா(﵁)அவர்கள் அமீருல் முஃமினீன் என்றழைக்கப்பட்டார். அவ்வருடம் ஒற்றுமை வருடமென அழைக்கப்பட்டது. இதற்கிடையில் முஆவியா(﵁)அவர்களுக்கு ஆட்சிப்பொறுப்பு ஒப்படைக்கப்படுவதற்கு முன் ஹஸன்(﵁)அவர்கள் 06 மாத காலங்கள் ஆட்சி செய்துள்ளார்.

## அமீருல் முஃமினீன் முஆவியா(﵁)

### பகுதி-(01

### முஆவியா(﵁)அவர்கள் பற்றிய சுறுக்கக் குறிப்பு

முஆவியா(﵁)அவர்கள் தனது தந்தை அபூ ஸுப்யானுக்கு முன்னரே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். ஹிஜ்ரி 07ம் ஆண்டு இஸ்லாத்தை தழுவியிருந்தாலும் மக்கா வெற்றியன்று அதை வெளிப்படுத்தினார்.

**இவரது மனைவிமார்கள்:**

01- மய்ஸுன் பின்த் பஹ்தல்.
02- பாகிதா பின்த கர்லா.
03- நாயிலா பின்த் உமாரா.

**இவரது பிள்ளைகள்:**

01- அப்துர் ரஹ்மான்.
02- அப்துல்லாஹ்.

03- யஸீத்.

**முஆவியா﴾ؓ﴿அவர்கள் பற்றி நபிகள் நாயகம்:** நபியவர்கள் கூறினார்கள்: இறைவா! இவரை நேர்வழி காட்டுபவராகவும் நேர்வழியுடையவராகவும் ஆக்குவாயாக!...(திர்மிதி: 4113)

நபியவர்கள் கூறினார்கள் இறைவா! முஆவியா﴾ؓ﴿அவர்களுக்கு வேதத்தை கற்றுக் கொடுப்பாயாக! வேதனையை விட்டும் அவரை காப்பாற்றுவாயாக!...(முஸ்னத் அஹ்மத்: 127)

**முஆவியா﴾ؓ﴿அவர்கள் பற்றி இமாம்கள்:** இமாம் இப்னு முபாறக் அவர்கள் முஆவியா﴾ؓ﴿அவர்கள் பற்றிக்கேட்க பட்டார்கள்: அதற்கவர்கள் ரஸுலுல்லாஹ் அவர்களுக்குப்பின்னால் நின்று தொழுது அவர்கள் சமியல்லாஹுலிமன் ஹமிதா என்று சொல்ல ரப்பனா லகல் ஹம்து என்று கூறிய மனிதரைப்பற்றி நான் என்ன கூறுவது? ஏனக் கேட்டார். (அல்பிதாயா வன்னிஹாயா: 08-130)

மேலும் இமாம் இப்னு முபாறக் அவர்களிடம் முஆவியா﴾ؓ﴿அவர்கள் சிறந்தவரா? அல்லது உமர் இப்னு அப்துல் அஸீஸ் சிறந்தவரா? என கேட்க்கப்பட்டது. அதற்கவர்கள் ரஸுலுல்லாஹ் அவர்களோடிருந்த முஆவியா ﴾ؓ﴿அவர்கள் சிறந்தவர் என்று கூறினார்.

(அல்பிதாயா வன்னிஹாயா: 08-130)

இமாம் முஆபா இப்னு இம்ரான் (ரஹ்) அவர்கள் முஆவியா﴾ؓ﴿அவர்கள் சிறந்தவரா? அல்லது உமர் இப்னு அப்துல் அஸீஸ் சிறந்தவரா? என கேட்கப்பட்டார்கள். அதற்கவர் கோபமடைந்து அந்தக்கேள்வியைக் கேட்டவரைப்பார்த்து நபித்தோழர் ஒருவரை தாபியி ஒருவரோடு சமமாகக்கருதிகிறாயா? முஆவியா﴾ؓ﴿அவர்கள் நபியவர்களின் தோழர், மேலும் அவர்களின் உறவு, மேலும் அவர்களுடைய எழுத்தாழர், மேலும் அவர்களுடைய வஹ்யின் பாதுகாவலன் என்று கூறினார். (அல்பிதாயா வன்னிஹாயா: 08-130)

**முஆவியா﴾ؓ﴿அவர்களின் மரணம்:** முஆவியா﴾ؓ﴿அவர்கள் கிட்டத்தட்ட 20 வருடங்கள் அதாவது ஹிஜ்ரி 60ம் ஆண்டு வரை ஆட்சி செய்து அவ்வாண்டிலேயே இறையடி சேர்ந்தார்கள். இவர்களுடைய காலப்பகுதி செல்வச்செழிப்பு மிக்கதாகவும், வெற்றிகள் அதிகமானதாகவும் இருந்தது.

**(பகுதி-02)**

## முஆவியா﴾ؓ﴿அவர்களின் காலத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள்

முஆவியா﴾ؓ﴿அவர்களுடைய காலப்பகுதி அதிக நலவுகள் நிறைந்த காலப்பகுதியாகவும் முஸ்லிம்களுக்கிடையிலான பிரச்சினைகள் இஸ்லாத்தின் எதிரிகளின் சூழ்ச்சிகளற்ற காலப்பகுதியாகவும் காணப்பட்டது. மேலும் முஸ்லிம்களுடைய பலம் வெளி உலகிற்கு யாராலும் கவிழ்க்க முடியாத ஒரு சவாலாக மாறியது. அதுமட்டுமல்லாமல் கலீபா

முஆவியா(ﷺ)அவர்கள் கூட அனைவருக்கும் ஒரு முன்மாதிரியாக விழங்கினார்கள்.

01- மிஸ்ரிலே கப்பல்கள் செய்வதற்கான தொழிற்சாலையை ஹிஜ்ரி 54ல் நிறுவினார்கள்.
02- குஸ்தந்தேனியா யுத்தம் ஹிஜ்ரி 50ல் - இவ்யுத்தத்திலேயே முஸ்லிம்கள் முதன்முதலாக தாங்கள் உறுவாக்கிய கடற்படையின் மூலம் யுத்தம் செய்தார்கள். இது நபிகள் நாயகம் முன்னறிவிப்புச்செய்த ஒன்றாகும்.
03- கேய்ரவான் நகரை உறுவாக்குதல்.

## கிலாபத்திலிருந்து மன்னராட்சிக்கு

❖ முஆவியா(ﷺ)அவர்கள் ஆட்சியைப்பொறுப்பேற்று தனது இறுதிக்காலத்தை அடைந்த போது அதுவரை காலமும் நிலவி வந்த கிலாபத் ஆட்சி முறையை மன்னராட்சியாக மாற்றினார்கள்.
❖ சபீனா அபு அப்திர் ரஹ்மான்(ﷺ)அவர்கள் நபியவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள்: நுபுவ்வததின் ஆட்சிக்காலம் 30 வருடங்கள் காணப்படும். பிறகு அல்லாஹ் தான் நாடியோருக்கு அதை மன்னராட்சியாக வழங்குவான். இதன் அறிவிப்பாளரான சபீனா(ﷺ)அவர்கள் கூறுகிறார்கள்: அபூ பக்கரின் ஆட்சிக்காலம் 02 வருடங்கள், உமர்(ﷺ)அவர்களின் ஆட்சிக்காலம் 10 வருடங்கள், உதுமான்(ﷺ) அவர்களின் ஆட்சிக்காலம் 13 வருடங்கள், அலி(ﷺ)அவர்களின் அட்சிக்காலம் 06 வருடங்களேயாகும் என்றார்கள். (அபு தாவூத்: 4646)

நாம் வரலாற்று நூல்களை நோக்கும்போது அவற்றில் அபூ பக்கர்(ﷺ)அவர்கள் 02 வருடங்களும் 03 மாதங்களும் என்றும் உமர்(ﷺ)அவர்களின் ஆட்சிக்காலம் 10 வருடங்களும் 02 மாதங்களும் என்றும் உதுமான்(ﷺ)அவர்களின் ஆட்சிக்காலம் 12 வருடங்களும் 04 மாதங்களும் என்றும் அலி(ﷺ)அவர்களுடைய அட்சிக்காலம் 04 வருடங்களும் 09 மாதங்களும் என்றும் ஹஸன்(ﷺ)அவர்களுடைய ஆட்சிக்காலம் 06 மாதங்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவையனைத்தின் கூட்டுத்தொகை 30 வருடங்களேயாகும். ஆகவே நபியவர்கள் குறிப்பிட்ட கிலாபத் ஆட்சியில் 30 வருடங்கள் இதுவே ஆகும்.

❖ அபூ உபைதா ஆமிர் இப்னு ஜர்ராஹ்(ﷺ)அவர்கள் நபயவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள்: உங்களது மார்க்கத்தின் ஆரம்ப காலப்பகுதி நபித்துவமும் அருளும் காணப்படும். பிறகு மன்னராட்சியும் அருளும் காணப்படும். பிறகு மன்னராட்சியும் சற்று மண் கலந்ததுமாக காணப்படும். பிறகு மன்னராட்சியும் அடக்கியாழுதலும் காணப்படும்.

நபியவர்கள் இச்செய்தியில் முதலாவது காலப்பகுதி நபித்துவமும் அருளும் காணப்படும் என்று கூறியது தனது ஆட்சியையும் மற்றும் அபூ பக்கர், உமர், உதுமான், அலி, ஹஸன் (ﷺ)ஆகியவரின் ஆட்சியை குறிப்பதாகும். பிறகு நபியவர்கள் மன்னராட்சியும் அருளும் என்று கூறியது முஆவியா(ﷺ)அவர்களின் ஆட்சியைக் குறிப்பதாகும். பிறகு நபியவர்கள்

மன்னராட்சியும் மண் கலந்ததுமானது என்று கூறியது அவ்வாட்சியை இழிவுபடுத்து முகமாக கூறியதாகும். ஏனெனில் அரபிகளுடைய வழக்கப்படி ஒரு விடயத்தில் மண் கலந்தது என்று கூறினால் அவ்விடயம் சீராகாமல் போனது என்று அர்த்தமாகும். பிறகு நபியவர்கள் மன்னரட்சியும் அடக்கியாழுதலும் என்று கூறியது உமர் இப்னு அப்தில் அஸீஸ் (ரஹ்) அவர்கள் தவிர்ந்த முஆவியா﴿ﷺ﴾அவர்களுக்குப்பிறகு வந்த ஆட்சியாளர்களைக் குறிப்பதாகும்.

### யஸீத் இப்னு முஆவியாவிற்கு பைஅத் செய்யப்படுதல்

ஹிஜ்ரி 36ம் ஆண்டில் முஆவியா﴿ﷺ﴾ அவர்கள் தனக்குப்பிறகு அட்சியாளராக தனது மகன் யஸீதை தெரிவு செய்து அவருக்கு பைஅத் செய்யும்படி மக்களை ஏவினார்கள். இவ்விடத்திலேயே முஅவியா﴿ﷺ﴾அவர்கள் தனக்கு முன்னிருந்த வழிமுறையை மாற்றுகிறார்கள். அந்நேரத்தில் முஆவியா﴿ﷺ﴾அவர்களுக்கு இவ்விடயம் தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டது. அதாவது பின்வருமாறு கூறப்படுகிறது: இவ்வாட்சிப்பொறுப்பை நீங்கள் நபியவர்களின் காலத்தில் காணப்பட்டது போன்று விட்டுவிடுங்கள். அல்லது அபூ பக்கர﴿ﷺ﴾ அவர்கள் செய்தது போன்று உங்களைச்சாராத வேறு ஒரு நபருக்கு இவ்வாட்சிப் பொறுப்பை ஒப்படையுங்கள். அல்லது உமர்﴿ﷺ﴾அவர்கள் செய்தது போன்று 06 நபர்களில் ஆலோசனை செய்யும் முடிவை ஒப்படையுங்கள். அப்படியும் இல்லையெனில் முஸ்லிம்களுடைய விடயத்தை அவ்வாறே விட்டுவிங்கள் அவர்களே தங்களது ஆட்சியாளரை தெரிவு செய்து கொள்ளட்டும் என்று கூறப்பட்டது. எனினும் முஆவியா﴿ﷺ﴾அவர்கள் இதை மறுத்து தனக்குப்பிறகு தனது மகன் யஸீதிடமே அது சென்றடைய வேண்டுமென்று உறுதியாக இருந்தார்கள். (தாரீகு கலீபது கய்யாத்: 53)

எனினும் முஆவியா﴿ﷺ﴾இவ்விடயத்தில் அத்துனை காலமும் நிலவி வந்த சிறந்த வழிமுறையை விட்டுவிட்டு அவருடைய கருத்தை முற்படுத்தினார் என்பதே உண்மையாகும். ஏனெனில் முஆவியா﴿ﷺ﴾அவர்கள் ஆலோசனை சபையிடம் இவ்விடயம் ஒப்படைக்கப்பட்டால். வேறு ஒரு பிரச்சனையை அது தோன்றலாம் என அவர்கள் அஞ்சியிருக்கலாம்.

**யஸீத் இப்னு முஆவியாவின் பைஅத் தொடர்பாக அஹ்லுஸ்ஸுன்னாக்களின் நிலைப்பாடு:** அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாத்தினர் யஸீதிற்கு செய்யப்பட்ட பைஅத் சரியானது என்று கூறினாலும் அது தொடர்பாக சில விமர்சனங்களை முன்வைக்கின்றனர்:-

1. இதுவரை காலமும நிலவி வந்த ஆலோசனை சபை மற்றும் முன்னைய கலீபாக்கள் கடைபிடித்து நெருங்கிய உறவுகளுக்கு ஆட்சியை கொடுக்காமை போன்ற வழிமுறைகளுக்கு இது முற்றிலும் முரணான புதிய பித்அத்தான செயலாகும். அதுமாத்திரமல்லாமல் ஆட்சிப்பொறுப்பை அனந்தரமாக மாற்றுகின்ற ஒரு மோசமான வழிமுறை இது முன்மாதிரியாக அமைந்தது.

2. அக்காலப்பகுதியில் யஸீதை விட சிறந்த, ஆட்சிக்கு மிகத்தகுதியான இப்னு உமர், இப்னு ஸுபைர், இப்னு அப்பாஸ், ஹுஸைன் رضي الله عنهم போன்ற பெரும் ஸஹாபாக்கள் உயிரோடு இருந்தனர்.

இமாம் இப்னு அல் அரபி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: முஆவியா(ﷺ)அவர்கள் இவ்விடயத்தில் ஆலோசனை சபையிடம் இதை ஒப்படைப்பதை விட்டும் நெருங்கிய சொந்தங்கள் எவரையும் தெரிவு செய்யாமல் இருப்பதை விட்டும் சிறப்பானதை விட்டு விட்டார். எனினும் தனது மகனுக்கு அவர் பைஅத் செய்தாலும் அது மார்க்க ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். (அல் அவாசிம் மினல் கவாசிம்: 228)

இவ்விடயத்தில் ஷீயாக்களுடைய பார்வை என்னவெனில் அவர்களின் கருத்துப்பிரகாரம் தலைமைத்துவம் மற்றும் ஆட்சிப்பொறுப்பு அலி(ﷺ)அவர்களும் அவர்களுடைய குடும்பத்திலேயே இருக்க வேண்டும் என்பதாகும். ஆகவே அவர்கள் யஸீதிற்கு நிறை வேற்றப்பட்ட பைஅத்தை அவர்கள் விமர்சிக்கின்றனர். இவ்வாறு அவர்கள் விமர்சிப்பதற்கு யஸீதிற்கு பைஅத் செய்யப்பட்டது என்பதல்ல. மாறாக அந்த பைஅத்தில் அலி(ﷺ) அவர்களோ அவர்களின் குடும்பத்தினரோ இல்லை என்பதினாலேயாகும். இதன் காரணமாக அவர்கள் அபூ பக்கர், உமர், உதுமான் رضي الله عنهم ஆகியோரின் கிலாபத்தில் குறை காண்கின்றனர்.

**யஸீத் கிலாபத்திற்குத் தகுதியானவராக இருந்தாரா?**

இமாம் இப்னு கதீர் (ரஹ்) அவர்கள் தனது நூலில் ஒரு வரலாற்று நிகழ்வை பதிவு செய்கிறார்கள். அப்துல்லாஹ் இப்னு முதீ∴ என்பவரும் அவரது தோழர்கள் சிலரும் அலி (ﷺ)அவர்களுடைய மகனான முஹம்மத் இப்னு ஹனபிய்யாவிடம் யஸீதை நீக்குவது தொடர்பில் ஆலோசனை கேட்பதற்கு சென்றார்கள். அதற்கு முஹம்மத் இப்னு ஹனபிய்யா மறுப்புத் தெரிவித்துவிட்டார். அதற்கு இப்னு முதீ∴: “நிச்சயமாக யஸீத் மது அருந்துபவராகவும் தொழுகையை விடுபவராகவும் இருக்கிறார்” என்று கூறினார். அதற்கு முஹம்மத் அவர்கள்: “நீங்கள் கூறுகின்ற எதையுமே நாம் அவரிடம் காணவில்லை. ஏனெனில் நான் ஒரு முறை அவரிடம் சென்று சில நாட்கள் தங்கினேன். அப்போது அவரை நான் தொழுகையில் பேணுதல் உடையவராகவும், நல்லவற்றில் முந்திக்கொள்பவராகவும், மார்க்கச்சட்டங்களை கேட்பவராகவும், ஸுன்னாவைப்பற்றிப் பிடிப்பவராகவும் கண்டு கொண்டேன்” என்றார்கள்.

அதற்கு அங்கு வந்தவர்கள்: “இவற்றை அவர் உங்களுக்கு காண்பிப்பதற்காக செய்திருக்கலாம். இதற்கு முஹம்மத் இப்னு ஹனபிய்யா:- “என்னிடமிருந்து அவர் பயப்பட என்ன இருக்கிறது. நீங்கள் கருதியது போன்று அவர் மது அருந்துவதை நீங்கள் அருந்திருந்தால் நிச்சயமாக நீங்களும் அவரோடு சேர்ந்து மது அருந்துபவர்களாக இருக்க வேண்டும். எதற்காக அவர் தனது குறையை வெளிக்காட்ட வேண்டும். நீங்கள் அறியாதவற்றைக்கொண்டு சாட்சி சொல்வது கூடாத ஒன்றாகும்” என்று கூறினார்கள். அதற்கவர்கள் நிச்சயமாக நாங்கள் கூறியது உண்மையாகும்

என்றார்கள். அதற்கு முஹம்மத் இப்னு ஹனபிய்யா அவர்கள் அல்லாஹ்வுத் தஆலா இப்படிப்பட்ட சாட்சியங்களை மறுக்கிறான் என்று கூறி ஸுரத்துஸ் ஸுஹ்ருபில் 86வது வசனத்தை ஓதிக்காட்டினார்கள்.

ஆகவே, யஸீத் அவர்கள் மீது கூறப்படும் குற்றச்சாட்டுக்களான மது அருந்துதல், விபச்சாரம், மேலும் தவறான சில நடவடிக்கைகள் போன்றவை உறுதிப்படுத்தப்படாதவை ஆகும். ஆகவே இவற்றை நாம் உண்மைப்படுத்தக் கூடாது. ஒருவரில் நாம் கொள்ள வேண்டிய அடிப்படையான விடயம் அவர் பற்றிய நல்லெண்ணமாகும். அதையே நாம் யஸீத் மீது கொண்டுள்ளோம். மேலும் முஹம்மத் இப்னு ஹனபிய்யா அவர்களின் அறிவிப்பின்படி அவரிடம் எதுவித கெட்ட பண்புகளும் காணப்படவில்லை. என்பதே உண்மையாகும். ஒரு விவாதத்திற்கு இவர் மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அவரிடம் காணப்பட்டன, என்று வைத்துக்கொண்டால் அவரை நீக்குவதோ அல்லது அவருக்கெதிராக கிழர்ச்சி செய்வதோ ஆகுமாக்கப்பட்டதொன்றல்ல.

## யஸீத் இப்னு முஆவியாவின் ஆட்சி

## (பகுதி-01)

## யஸீதிற்கான பைஅத்தும் ஹுஸைன்﴾﵁﴿அவர்கள் பைஅத் செய்ய மறுத்து மக்காவிலிருந்து கூபாவிற்குச் செல்லுதலும்

யஸீத் ஹிஜ்ரி 60ம் ஆண்டு 34 வயதாக இருக்கும்போது ஆட்சியாளராக பைஅத் செய்யப்படுகிறார். எனினும் அவருக்கு ஹுஸைன்﴾﵁﴿அவர்களும், அப்துல்லாஹ் இப்னு ஸிபைர்﴾﵁﴿அவர்களும் பைஅத் செய்யவில்லை. இருவருமே மதீனாவிலேயே இருந்தனர். அவர்களிடம் யஸீதிற்கு பைஅத் செய்யுமாறு வேண்டப்பட்டபோது அதற்கு அப்துல்லாஹ் இப்னு ஸுபைர்﴾﵁﴿அவர்கள்: “இன்றைய தினம் இரவு நான் சிந்தித்து விட்டு உம்மிடம் எனது முடிவை சொல்கிறேன் என்றார்கள்” அதற்கவர்கள் ஒப்புக் கொண்டு சென்றுவிட்டனர். அன்றைய தினம் இரவு வந்ததும் அப்துல்லாஹ் இப்னு ஸுபைர்﴾﵁﴿அவர்கள் மதீனாவை விட்டு வெளியேறி மக்காவிற்குச் சென்றுவிட்டார்கள்.

பிறகு அக்குழு ஹுஸைன்﴾﵁﴿அவர்களிடம் வந்து யஸீதிற்கு பைஅத் செய்யுங்கள் என்றார்கள். அதற்கவர் “நான் இரகசியமாக பைஅத் செய்ய மாட்டேன் ஆகவே மக்கள் முன் வெளிப்படையாக பைஅத் செய்கிறேன்” என்று கூறினார். வந்த குழுவினர் இதற்கு உடன்பட்டு சென்றுவிட்டனர். அன்றிரவு அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் ﴾﵁﴿அவர்களுக்குப் பின்னால் இவர்களும் மக்காவிறகுச் சென்றுவிட்டார்கள்.

## இராக் வாசிகள் ஹுஸைன்﴾﵁﴿அவர்களுக்கு கடிதம் அணுப்புதல்

ஹுஸைன்﴾﵁﴿அவர்கள் யஸீதிற்கு பைஅத் செய்யவில்லையென்ற செய்தி இராக் வாசிகளுக்கு எட்டியது. இந்நிலையில் அவர்களும் யஸீதையோ முஆவியா﴾﵁﴿ அவர்களையோ ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருந்தார்கள். ஏனெனில் அலி ﴾﵁﴿அவர்களும் அவர்களுடைய

பிள்ளைகளுமே இவ்வாட்சிப் பொறுப்புக்குத் தகுதியானவரென எண்ணிக்கொண்டிருந்தனர். அந்தவகையில் ஹுஸைன்(رضي الله عنه)அவர்களுக்கு பல கடிதங்களை அவர்கள் அனுப்பி வைத்தனர். அவற்றில் நாம் உங்களுக்கு பைஅத் செய்கிறோம் என்றும் நீங்களல்லாத வேறு எவரையும் நாங்கள் பொருந்திக்கொள்ளப் போவதில்லை என்றும் குறிப்படப்பட்டிருந்தது. இவ்வாறு ஹுஸைன்(رضي الله عنه)அவர்களிடம் கிட்டத்தட்ட 500 இற்கும் மேற்பட்ட கடிதங்கள் வந்து சேர்ந்தன. அவையனைத்தும் கூபா வாசிகளால் எழுதப்பட்டவை ஆகும்.

## ஹுஸைன்(رضي الله عنه)அவர்கள் முஸ்லிம் இப்னு அகீலை அனுப்புதல்

இச்சந்தர்ப்பத்தில் ஹுஸைன்(رضي الله عنه)அவர்கள் தனது சிறிய தந்தையின் மகனான முஸ்லிம் இப்னு அகீலை கூபாவில் சரியான நிலவரத்தையும் அம்மக்களின் நிலைப்பாட்டடையும் அறிந்து கொள்வதற்காக முஸ்லிம் இப்னு அகீலை அனுப்பி வைத்தார்கள். இவர் அங்கு சேர்ந்ததும் மக்கள் அனைவரிடமும் இது தொடர்ாக இரகசியமாக கேட்டறிந்து கொண்டார். இக்கால கட்டத்தில் அவர் கூபா வாசியான ஹானி இப்னு உர்வா என்பரின் வீட்டில் தங்கியிருந்தார்கள். இக்காலப்பகுதியில் கூபா வாசிகள் ஹுஸைன்(رضي الله عنه)அவர்களேயே பொருந்திக் கொண்டார்கள் என்ற விடயத்தை அறிந்து ஹுஸைன்(رضي الله عنه)அவர்களுக்கு இச் செய்தியை அனுப்பி வைத்து அவர்களை அவசரமாக வரும்படியும் கூறினார்கள்.

கூபா வாசிகள் அனைவரும் அங்கு தங்கியிருந்த முஸ்லிம் இப்னு அகீல் அவர்களிடம் வந்து ஹுஸைன்(رضي الله عنه)அவர்களுக்கு பைஅத் செய்வதாக அவர்களிடம் பைஅத் செய்தனர். இக்காலப்பகுதியில் கூபாவின் கவர்னரான நுஃமான் இப்னு பஷீர்(رضي الله عنه)அவர்கள் இருந்தார்கள் ஹுஸைன்(رضي الله عنه)அவர்களுக்கு மக்கள் பைஅத் செய்கிறார்கள் என்ற செய்தி எட்டியிருந்தும் இவ்விடயம் தொடர்பாக அறியாதவர்கள் போன்று இருந்தார்கள். எனினும் அவர்களுடைய சபையில் இருந்த சிலர் ஷாமிற்குச் சென்று யஸீதிடம் இது பற்றி தெரிவித்து மேலும் நுஃமான் இப்னு பஷீர் இதை அறிந்திருந்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மறைப்பாடு செய்தனர்.

## உபைதுல்லாஹ் இப்னு ஸியாதை கூபாவின் கவர்னராக ஆக்குதல்

இச்செய்தி யஸீதிற்கு கிடைத்ததும் நுஃமான் இப்னு பஷீர்(رضي الله عنه)அவர்களை கவர்னர் பதவியிலிருந்து நீக்குவதாகவும் அதற்குப்பகரமாக உபைதுல்லாஹ் இப்னு ஸியாதை நியமிப்பதாகவும் அறிவித்தார். உபைதுல்லாஹ் இப்னு ஸியாத் அப்போது பஷராவில் கவர்னராக இருந்தார். ஆட்சியாளர் யஸீத் அவர்கள் இவ்விடயம் கேள்விப்பட்டதும் இதை கையாழுவதற்காக கூபாவிற்கும் அவரை கவர்னராக நியமித்தார். உடனே உபைதுல்லாஹ் இப்னு ஸியாத் இரவு நேரத்தில் தனது முகத்திற்கு திரையிட்டவராக கூபாவிற்கு வந்து சேர்ந்தார். பிறகு அவ்வாறே மக்கள் மத்தியில் நடமாடினார். அவர் அவ்வாறு செல்லும் போது மக்கள் அனைவரும் அவரை ஹுஸைன்(رضي الله عنه)அவர்கள் வந்துள்ளார்கள் என நினைத்து **ரஸுல்லாஹ்வின் மகளின் மகனே!** என்று கூறி அவருக்கு முகமன் கூறினர். இதைக்கண்ணுற்ற உபைதுல்லாஹ் இப்னு ஸியாத் விடயம் இந்தளவிற்கு

முத்திவிட்டது. மக்கள் அனைவரும் ஹுஸைன்(ﷺ)அவர்களை எதிர்பார்கின்றனர் என்பதை அறிந்து கொண்டார். பிறகு தனது கோட்டைக்கு சென்று தனது அடிமையை ம∴க்கில் என்பவனை இவ்விடயம் தொடர்பாக அறிந்து வரும் படியும் இதற்கு யார் தலமை தாங்குகின்றார் என்பதை நோட்டமிட்டு வரும்படியும் அனுப்புகிறார்கள்.

அம்மனிதர் ஹம்ஷ் பிரதேஷத்தை சார்ந்தவர் போன்று தன்னோடு 3000 தீனார் பணத்தையும் இணைத்துக்கொண்டு ஹுஸைன்(ﷺ)அவர்களுக்கு ஆதரவு அளிப்பது போல் கூபா வாசிகளிடம் வந்து ஹானி இப்னு உர்வாவுடைய வீட்டை தனக்குக் காட்டும்படி கேட்டார். அம்மக்களும் அவருக்கு வீட்டை காட்டினார்கள். வீட்டிற்குள் நுழைந்த போது முஸ்லிம் இப்னு அகீலை கண்டு கொள்கிறார். அவருக்கு பைஅத்தும் செய்து தான் கொண்டு வந்த 3000 தீனார்களை அவருக்கு வழங்கினார். இவ்வாறு 03 நாட்கள் அவர்களிடம் தங்கி அனைத்து விடயங்களையும் அறிந்த பிறகு உபைதுல்லாஹ் இப்னு ஸியாத்திடம் சென்று அனைத்தையும் கூறினார்.

## ஹுஸைன்(ﷺ)அவர்கள் கூபாவிற்கு புரப்படுதல்

கூபாவில் அதிகமான மக்கள் ஹுஸைன்(ﷺ)அவர்கள் சார்பாக முஸ்லிம் இப்னு அகீலிடம் பைஅத் செய்கிறார்கள். அவர் ஹுஸைன(ﷺ)அவர்களை கூபாவிற்கு வருமாறும் இங்கு அனைத்து விடயங்களும் தங்களுக்கு சார்பாகவே உள்ளது. என்றும் கடிதம் மூலம் அறிவித்தார்கள். எனவே ஹுஸைன்(ﷺ)அவர்கள் துல் ஹஜ் மாதம் கடைசிப்பத்து நாட்களில் தர்வியா என்ற தினமன்று மக்காவை விட்டு புரப்பட்டார்கள். மறுபுரம் உபைதுல்லாஹ் இப்னு ஸியாத் முஸ்லிம் இப்னு அகீல் செய்த அனைத்தையும் அறிந்து கொண்டு ஹானி இப்னு உர்வாவை என்னிடம் அழைத்து வாருங்கள் என்று கூறினார். அவரும் உபைதுல்லாஹ் இப்னு ஸியாத்துடைய சபைக்கு அழைத்து வரப்பட்டார். அவரிடம் முஸ்லிம் இப்னு அகீல் எங்கே? என கேட்கப்பட்டது, அதற்கவர் எனக்குத் தெரியாதென்று கூறினார்.

உடனே தனது அடிமை ம∴கிலை உபைதுல்லாஹ் இப்னு ஸியாத் அவ்விடத்திற்கு அழைத்தார். பிறகு அவரிடம் இவனை உனக்குத் தெரியுமா? அதற்கு ஹானி இப்னு உர்வா ஆம் என்று பதிலளித்தார். அப்போதுதான் உபைதுல்லாஹ் இப்னு ஸியாத் தனக்கு சூழ்ச்சி செய்து விட்டான் என்பதை அவர் அறிந்து கொண்டார். மீண்டும் முஸ்லிம் இப்னு அகீல் எங்கே எனக்கேட்டார். அதற்கவர் அல்லாஹ்வின் மீது ஆனையாக அவர் எனது காலுக்குக் கீழ் இருந்தாலும் நான் எனது காலை உயர்த்தமாட்டேன் என்றார். உடனே உபைதுல்லாஹ் இப்னு ஸியாத் அவரைத் தாக்கி விட்டு சிறையிலடைக்கும் படி கட்டளை இட்டார்.

## முஸ்லிம் இப்னு அகீலிற்கு கூபாவாசிகள் துரோகம் இழைத்தல்

தான் தங்கியிருந்த வீட்டாரான ஹானி இப்னு உர்வாவிற்கு நிகழ்தது முஸ்லிம் இப்னு உகைலிற்கு கிடைத்த போது 4000 வீரர்கள் கொண்ட படையோடு வெளியேரி உபைதுல்லாஹ் இப்னு ஸியாத்தின் கோட்டையை

முற்றுகை இட்டார். அந்நேரத்தில் கூபாவாசிகளின் தலைவர்கள் என கருதப்படும் சிலர் உபைதுல்லாஹ்விற்கு சார்பாக இருந்தனர். அவர்களிடம் உபைதுல்லாஹ், "நீங்கள் மக்களை முஸ்லிமை விட்டும் விலகும்படி கோருங்கள் அவ்வாறு விலகுவோருககு நன்கொடைகள் இருப்பதாகவும் அவ்வாறு விலகாதோருக்கு எதிராக ஷாமிலிருந்து படை வரவழைக்கப்பட்டு அவர்களுக்கெதிராக போர் தொடுக்கப்படும் என்றும் அச்சத்தை ஏட்படுத்துங்கள்" என்று கூறினார். அதற்கு அங்கிருந்த தலைவர்கள் கூபாவாசிகளுக்கு அவ்வாறே கூறியபோது, அனைவரும் அஞ்சி ஒவ்வொரு பெண்ணும் தனது பிள்ளையை அழைத்துச்சென்றால், ஒவ்வொரு மனிதனும் தன் சகோதரனை அழைத்துச்சென்றான். ஓவ்வொரு கோத்திரத்தின் தலைவரும் தனது கோத்திரத்தை தடுத்துக்கொண்டனர், இறுதியில் அவரோடிருந்த 4000 நபர்களில் 30 நபர்களே எஞ்சியிருந்தனர், சூரியன் மறையும் போது அவர் மாத்திரம் அவ்விடத்தில் தனியாக நின்று கொண்டிருந்தார்.

பிறகு கூபாவுடைய பாதைகளில் சுய நினைவிலந்து தான் எங்கே போவதென்று அறியாது நடந்து கொண்டிருந்தார். வழியில் ஹின்தா கோத்திரத்தைச்சேர்ந்த ஒரு பெண்ணின் வீட்டின் கதவை தட்டி தனக்கு நீர் தரும்படி கோட்டார். அவரிடம் அப்பெண் நீங்கள் யாரென வினவினார். அதற்கவர் நான்தான் முஸ்லிம் இப்னு அகீலென்றும் தனக்கு கூபா வாசிகள் செய்த துரோகத்தையும் ஹுஸைன்(ﷺ)அவர்களையும் கூபாவிற்கு வந்து கொண்டிருக்கிறார் என்று கூறினார். உடனே அப்பெண் தனது வீட்டில் அருகிலுள்ள மற்றுமொரு வீட்டில் அவரை தங்க வைத்து அவருக்குத்தேவையான நீர் மற்றும் உணவுகளை வழங்கினார். எனினும் அப்பெண்ணுடைய மகன் உபைதுல்லாஹ் இப்னு ஸியாத்திடம் சென்று தனது தாய் முஸ்லிம் இப்னு அகீலுக்கு தனது தாய் அடைக்களம் வழங்கிய செய்தியையும் அவர் தங்கியிருக்கின்ற இடத்தையும் அறிவித்தான். உடனே உபைதுல்லாஹ் இப்னு ஸியாத் 70 நபர்களை அனுப்பி அவரை முற்றுகையிடும் படி கட்டளை இட்டார். எனினும் முஸ்லிம் இப்னு அகீல் தன்னால் இயன்றளவு அவர்களோடு சண்டையிட்டு தன்னைக் காத்துக்கொள்ள முயற்சித்தார். எனினும் இறுதியில் அவர்களால் கைது செய்யப்பட்டு உபைதுல்லாஹ் அவர்களுடைய ஆட்சி பீடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அவரிடம் தான் வெளியேறிய காரணம் என்ன என கேட்கப்பட்டது. அதற்கவர்: "நாங்கள் ஹுஸைன்(ﷺ)அவர்களுக்கே பைஅத் செய்துள்ளோம் " என்றார். அதற்கு உபைதுல்லாஹ்: "அப்படியெனில் நீங்கள் யஸீதிற்கு பைஅத் செய்யவில்லையா" என்று கேட்டார். அப்படி இல்லையெனில் நான் உம்மைக்கொன்று விடுவேனென்று கூறினார். அதற்கு முஸ்லிம் இப்னு அகீல் நான் மரணிப்பதற்கு முன் ஒருவருக்கு நான் வஸிய்யத் செய்ய விரும்புகிறேன் என்றார். அதற்கு நீங்கள் தாராளமாக வஸிய்யத் செய்யலாம் எனப்பட்டது. உடனே அவர் திரும்பி அருகில் யாரிருக்கிறாரென்று பாரத்தபோது உமர் இப்னு ஸ.்.த் இப்னு அபீ வக்காஸ் இருப்பதைக்கண்டு அவரை அழைத்து, "நீர் இவர்களை விட எனக்கு மிக நெருங்கியவர். ஆகவே உமக்கு நான் நெருங்கியவன் என்று கூறி வீட்டின் ஒரு பகுதிக்கு அழைத்துச்சென்று கூபாவிற்கு வந்து கொண்டிருக்கின்ற ஹுஸைன்(ﷺ)அவர்களிடம் அவரை மீண்டும் செல்லுமாறு கூறும்படி

வஸிய்யத் செய்தார்" அவ்வாறே உமர் இப்னு ஸஃத்தும் ஒரு மனிதனை ஹுஸைன்(ﷺ)அவர்களிடம் அனுப்பி கூபாவில் இடம்பெற்ற அனைத்தும் முடிவுற்று விட்டன. முஸ்லிம் இப்னு அகீலிற்கு கூபா வாசிகள் துரோகம் இழைத்து விட்டார்கள் என்றும் முஸ்லிம் இப்னு அகீல் சொல்லியனுப்பிய பின்வரும் வாசகத்தையும் கூறுகிறார்: "நீங்கள் உங்களது குடும்பத்தோடு திரும்பிச்சென்று விடுங்கள். ஏனெனில் உங்களுக்கும் கூபா வாசிகள் துரோகம் இழைக்காமல் இருக்கட்டும். அவர்கள் என்னையும் உங்களையும் பொய்ப்பித்து விட்டார்கள். பொய்யனுடைய கருத்தை ஏற்றுக்கொள்ளும் முடியாது" இவ்வாறு ஹுஸைன்(ﷺ)அவர்களிடம் அனுப்பப்பட்ட அம்மனிதர் கூறுகிறார். எனினும் மறுபுரம் கூபாவிலிருந்த முஸ்லிம் இப்னு அகீல் அவர்கள் அரபா தினமன்று உபைதுல்லாஹ் இப்னு ஸியாத்தினால் கொல்லப்படுகிறார்.

## ஹுஸைன்(ﷺ)அவர்கள் வெளியேறுவதை ஸஹாபாக்கள் தடுத்தல்

ஹுஸைன்(ﷺ)அவர்கள் கூபாவிற்குச் செல்லப்போகிறார் என்ற செய்தி மக்காவில் பரவிய போது அதிகமான ஸஹாபாக்கள் அவரை தடுக்கும் முயற்சியில் ஈடுபட்னர். அவர்களில் முக்கியமான நபர்களாக: அப்துல்லாஹ் இப்னு உமர், அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ், அப்துல்லாஹ் இப்னு அம்ர், அபூ ஸஈத் அல் குத்ரி, அப்துல்லாஹ் இப்னு ஸுபைர், முஹம்மத் இப்னு ஹனபிய்யா போன்றவரகளாகும். இவர்கள் ஹுஸைன்(ﷺ)அவர்களைத் தடுக்கும்போது கூறிய சில வார்த்தைகள் பின்வருமாறு:

01- அப்துல்லாஹ் இப்னு ஸுபைர்: இவர் ஹுஸைன்(ﷺ)அவர்களிடம் வந்து: "எங்கே செல்லப்போகிறீர்கள்???!!! உமது தந்தையைக்கொன்ற உமது சகோதரனுக்கு நஞ்சூட்டிய ஒரு சமூகத்திடமா செல்லப்போகிறாய்" என்று கேட்டார்.

02- அபு ஸஈத் அல் குத்ரி: "அபூ அப்துல்லாஹ்வே! நிச்சயமாக நான் உனக்கு உபதேஷம் செய்பவனாகவும் உன் மீது அண்பு கொண்டவனாகவும் இருக்கிறேன். கூபாவிலிருந்து உங்களுக்கு சார்பான சிலர் அங்கு வரும்படி கடிதம் அனுப்பிய செய்தி எனக்கு எட்டியது எனினும் அவர்களிடம் செல்லாதே. நான் உமது தந்தை கூபா வாசிகளைப்பற்றி பின்வருமாறு கூறக்கேட்டுள்ளேன்: "அல்லாஹ் மீது ஆனையாக நான் அவர்களை வெறுக்கிறேன் அவர்களும் என்னை வெறுத்தார்கள். அவர்களிடம்வெ வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற தகுதியில்லை. அல்லாஹ் மீது ஆனையாக அவர்களிடம் எண்ணங்கள் இருக்கின்றன எனினும் அவற்றில் உறுதி இல்லை. மேலும் அவர்களிடம் பொருமையும் இல்லை"

03- அப்துல்லாஹ் இப்னு உமர்: ஹுஸைன்(ﷺ)அவர்களிடம் இராக்கிற்கு புறப்பட்டு நாட்களுக்குப்பிறகு அப்துல்லாஹ் இப்னு உமர்(ﷺ)அவர்களுக்கு இச்செய்தி எட்டுகிறது. உடனே அவர் மக்காவிலிருந்து புரப்பட்டுச்சென்று ஹுஸைன்(ﷺ)அவர்களை அடைந்து கொள்கிறார்கள். அவர்களிடம், "நீர் எங்கு செல்கிறீர்" என்று கேட்டார். அதற்கவர்: "நான் இராக்கிற்குச் செல்கிறேன்" என்று கூறி தனக்கு அம்மக்கள் அனுப்பிய கடிதங்களை எடுத்துக்காட்டுகிறார். அதற்கு இப்னு உமர்(ﷺ)அவர்கள் நீ அவர்களிடம்

செல்லாதே என்றார்கள். எனினும் ஹுஸைன(ﷺ)அவர்களை இதை மறுத்து நான் அவசியம் சென்றேயாக வேண்டும் என்றார்கள்.

அதற்கு இப்னு உமர்(ﷺ)அவர்கள் நான் உமக்கு ஒரு செய்தியை சொல்கிறேன். "ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து இவ்வுலகம் மற்றும் மறுமை ஆகியவற்றில் எதை தேர்ந்தெடுக்கப் போகிறீர் என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்)அவர்கள் மறுமையையே தேர்ந்தெடுத்தார்கள். ஆகவே நீர் அவர்களிடம் இருந்து ஒரு பகுதியாவீர். எனவே இது உங்களுக்கு பொறுத்தமான ஒன்றல்ல. அல்லாஹ் உங்களை இழிவானதிலிருந்து நல்லதின்பால் திருப்பிவிட்டான்" எனினும் ஹுஸைன்(ﷺ)அவர்கள் தாம் செல்வதிலேயே குறியாக இருந்தார்கள். ஆகவே இப்னு உமர்(ﷺ)அவர்கள் அவரைக் கட்டித்தழுவி அழுது விட்டு வழி அனுப்பி வைத்தார்.

**04-** ஹுஸைன்(ﷺ)அவர்கள் இராக்கிற்குச்செல்லும் வழியில் பரஸ்தக் என்னும் கவிஞ்ஞரை சந்திக்கிறார்கள். அப்போது அக்கவிஞ்ஞரிடம், "நீர் எங்கிருந்து வருகிறீர்" எனக்கேட்டார். அதற்கவர், "இராக்கிலிருந்து வருகிறேன்" என்றார்கள். மீண்டும் அவர்களிடம், "இராக் வாசிகளின் நிலமை எவ்வாறுள்ளது என்று வினவினார். அதற்கு அக்கவிஞ்ஞர்: "அவர்களின் உள்ளங்கள் உம்மோடு உள்ளன. எனினும் அவர்களுடைய வால்கள் பனு உமைய்யாக்கள் சார்பாகவே உள்ளன" என்றார்கள்.

## ஹுஸைன்(ﷺ)அவர்கள் காதிஸிய்யாவை வந்தடைதல்

ஹுஸைன்(ﷺ)அவர்கள் காதிஸிய்யாவிற்கு வந்தடைந்தபோது உமர் இப்னு ஸஃத் தனது தூதுவர் மூலமாக அனுப்பிய முஸ்லிம் இப்னு அகீலுடைய செய்தி கிடைக்கப்பெற்றது. அவ்வேளையில் ஹுஸைன்(ﷺ)அவர்கள் திரும்பிச்செல்வதற்கு ஆசைப்பட்டார்கள். எனினும் தனது படையில் முஸ்லிம் இப்னு அகீலுடைய பிள்ளைகள் இருந்ததால் அவர்களிடம் இதுபற்றி ஆலோசனை கேட்டார். அதற்கவர்கள் நாம் எமது தந்தை கொள்ளப்பட்டதற்கு பழிக்குப்பழி எடுக்கும்வரை செல்லமாட்டோம் என்றனர்.

ஹுஸைன்(ﷺ)அவர்களும் இக்கருத்திற்கு உடன்பட்டார்கள். மறுபுரம் உபைதுல்லாஹ் இப்னு ஸியாத்திற்கு ஹுஸைன்(ﷺ)அவர்கள் மக்காவிலிருந்து காதிஸிய்யாவிற்கு வந்து சேர்ந்துவிட்டார் என்ற செய்தி கேள்ளவிப்பட்டதும் ஹுர் இப்னு யஸீத் அத்தமீமி என்பவருடைய தலமையில் 1000 பேர் கொண்ட ஒரு படையை தயார் செய்து ஹுஸைன் (ﷺ)அவர்களைத் தடுக்கும்படி அனுப்பி வைத்தார். இப்படையை காதிஸிய்யாவிற்கு அருகில் உள்ள பகுதியில் அவர்களை சந்தித்தது. அவ்வேளையில் ஹுர் இப்னு யஸீத்: "ரஸீலுல்லாஹ்வின் மகளின் மகனே! எங்கே செல்லப்போகிறீர்" என்று கேட்டார், அதற்கவர்கள், "இராக்கிற்கு செல்லப்போகிறேன்" என்று பதிலளித்தார். அதற்கு ஹுர் இப்னு யஸீத், "நான் உங்களுக்கு தீரும்பிச்செல்லும்படி கூறிக்கொள்கிறேன். அல்லாஹ் உங்களைக்கொண்டு என்னை சோதிக்காமல் இருப்பானாக, அல்லது யஸீதை

நோக்கி ஷாமிற்குச்செல்லுங்கள், கூபாவிற்கு மாத்திரம் வந்து விடாதீர்கள்" என்று கூறினார்.

அதற்கு ஹுஸைன்(ﷺ)அவர்கள் மறுப்புத்தெரிவித்து இராக்கை நோக்கி செல்ல ஆரம்பித்தார்களன். எனினும் ஹுர் இப்னு யஸீத் அவர்களை தடுத்த வண்ணமே இருந்தார். அப்போது ஹுஸைன்(ﷺ)அவர்கள் என்னை விட்டுத்தூரமாகு உமது தாய் உம்மை இழக்கட்டும். என்றார்கள். இதைக்கேட்டதும் ஹுர் இப்னு யஸீத்: "அல்லாஹ்வின் மீது ஆனையாக நீர் தற்போது கூறிய வார்த்தைய அரபிகளில் வேறு எவராவது கூறியிருந்தால் அவருடைய தாய்க்காக அவரை நான் பழி வாங்கியிருப்பேன் எனினும் உமது தாயோ உலகப்பெண்களில் தலைவியாவார். அவர் விடயத்தில் நான் என்ன கூறுவது?" என்று கூறினார்.

## (பகுதி-02)

## ஹுஸைன்(ﷺ)அவர்கள் கொலை செய்யப்படுதல்

கர்பலாவை வந்தடைதல்: ஹுஸைன்(ﷺ)அவர்கள் இராக்கிற்குச்செல்லும் வழியில் ஒரு இடத்தில் நிற்கிறார்கள். அப்போது தனது படையிடம் இது என்ன இடம் என்று கேட்டார். அவர்கள் இது கர்பலா என்றார்கள். அதற்கவர்கள் கஷ்டமும் சோதனையும் என்று அவ் ஊரின் அர்த்தத்தை கூறினார்கள். அப்போது உபைதுல்லாஹ் இப்னு ஸியாத், உமர் இப்னு ஸஃத்தின் தலைமையில் 4000 பேர் கொண்ட ஒரு படையை கர்பலாவிற்கு அனுப்பி வைத்தார். படைத்தளபதியான உமர் இப்னு ஸஃத் ஹுஸைன்(ﷺ)அவர்களிடம் வந்து தன்னோடு இராக்கிற்கு உபைதுல்லாஹ் இப்னு ஸியாத்திடம் வரும்படி கூறினார். இதை மறுத்து ஹுஸைன்(ﷺ)அவர்கள் உமர் இப்னு ஸஃத்திடம், "நான் உமக்கு 03 விடயங்களைக்கூறுவேன் அவற்றில் ஒன்றை எனக்கு நீ தெரிவு செய்து சொல், அதன் பிரகாரம் நான் செயற்படுகிறேன்" என்று கூறினார்கள். அதற்கு உமர் இப்னு ஸஃத் அவை என்ன என்று கேட்டார். அதற்கவர்:-

01- என்னை விட்டுவிடுங்கள் நான் திரும்பிச்சென்று விடுகிறேன்.
02- முஸ்லிம்கள் வாழ்கின்ற ஏதாவதொரு பகுதிக்கு சென்று விடுகிறேன்.
03- ஷாமிற்குச்சென்று யஸீத்துடன் ஒன்றாக இருக்கிறேன்.

அதற்கு உமர் இப்னு ஸஃத் நாம் இவற்றை தெரிவு செய்வதை விட நீர் யஸீத்திடம் இவற்றை அனுப்பி வை நான் இவற்றை உபைதுல்லாஹ் இப்னு ஸியாத்திடம் அனுப்பி வைக்கிறேன். அவர்கள் எதை தெரிவுசெய்கிறார்கள் என்பதை பார்ப்போம் என்றார். எனினும் ஹுஸைன்(ﷺ)அவர்கள் யஸீத்திடம் இவ்விடயங்களை அனுப்பவில்லை. உமர் இப்னு ஸஃத் மாத்திரமே உபைதுல்லாஹ் இப்னு ஸியாத்திடம் இது தொடர்பான செய்தியை அனுப்பி வைக்கிறார். அனுப்பி வைக்கப்பட்ட தூதுவர் உபைதுல்லாஹ் இப்னு ஸியாத்திடம் வந்து தான் கொண்டு வந்த செய்தியை அறிவித்தபோது அதற்கவர் ஹுஸைன்(ﷺ) அவர்களே ஒன்றை தெரிவு செய்து கொள்ளட்டும் நான் அதனை பொருந்திக்கொள்கிறேன் என்றார்கள். அவ்வேளையில் உபைதுல்லாஹ் இப்னு ஸியாத்தின் சபையில் **ஷமிர் இப்னு தீ அல் ஜவ்ஸன்** என்ற ஒருவன் இருந்தான். இவன் உபைதுல்லாஹ் இப்னு ஸியாத்திடம் நெறுக்கமான உறவு வைத்திருந்தவன். இவன் எழுந்து

“அவ்வாறு முடியாது அவர் உமது சட்டத்திற்கு கீழ் படிய வேண்டும்” என்று கூறினான். இதைக்கண்டு ரோஷமடைந்த உபைதுல்லாஹ் இப்னு ஸியாத் ஆம் அவர் எனது சட்டத்திற்கு கீழ் படிய வேண்டும் என்றார். உடனே உபைதுல்லாஹ் எழுந்து ஆலோசனை கூறிய ஷமிர் இப்னு தீ அல் ஜவ்ஸன் என்பவனை கர்பலாவிற்குச்செல்லுமாறு கட்டளையிட்டு ஹுஸைன்(ﷺ)அவர்களை எனக்கு கீழ் படிய வைக்குமாறு உமர் இப்னு ஸ.்.த்திடம் கூறுங்கள். அதற்கு அவர் மறுத்தால் நீயே படைத்தளபதியாக பொறுப்பேற்றுக்கொள் என்றார்.

அப்போது உபைதுல்லாஹ், உமர் இப்னு ஸ.்.த்திற்கு “ரை” என்ற பகுதிக்கு பொறுப்பாளராக செல்லும்படி கட்டளை இட்டிருந்தார். அதனடிப்படையில் உமரும் தனது படையோடு அங்கு செல்ல ஆயத்தமான வேளையில் ஷமிர் இப்னு தீ அல் ஜவ்ஸன் அங்கு வந்தடைகிறான். அப்போது உமரிடம் நீ முதலாவதாக ஹுஸைனுடைய விடயத்திற்கு முடிவு கண்டுவிட்டு அதன் பிறகு “ரை” என்ற இடத்திற்கு செல் என்றான். தன்னை உபைதுல்லாஹ் அவரது சட்டத்திற்குக்கட்டுப்பட வேண்டும் என்று கூறியபோது ஹுஸைன்(ﷺ)அவர்களுக்கு எட்டியபோது நான் அவருக்குக்கட்டுப்பட மாட்டேன் என்று கூறி மறுத்துவிட்டார்.

## ஹுஸைன்(ﷺ)அவர்கள் கூபாவின் படைக்கு அல்லாஹ்வை ஞாபகமூட்டல்

ஹுஸைன்(ﷺ)அவர்களுடைய படையில் 72 குதிரை வீரர்கள் இருந்தனர். ஆனால் கூபாவின் படையில் 5000 வீரர்கள் இருந்தார்கள். அப்போது ஹுஸைன்(ﷺ)அவர்கள் உபைதுல்லாஹ் இப்னு ஸியாத் அனுப்பிய படையைப்பார்த்து, “உங்களது கருத்துக்களை நீங்கள் மீளப்பெற்றுக் கொள்ளுங்கள், உங்களது உள்ளங்களை நீங்கள் மீள் பரிசோதனை செய்து கொள்ளுங்கள். என்னைப்போன்று ஒருவரோடு நீங்கள் போர் செய்வது சிறந்த விடயமாகும். நான் உங்களது நபி (ஸல்) அவர்களின் மகளின் மகன் அல்லவா” என்று கூறினார். மேலும் உபைதுல்லாஹ் இப்னு ஸியாத்துடைய கட்டளையை விட்டு விடும்படியும் தன்னோடு இணைந்து கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார். அப்போது ஹுர் இப்னு யஸீத் உட்பட 30 நபர்கள் இணைந்து கொண்டனர். அப்போது ஹுர் இப்னு யஸீத்திடம் அவர் தலைமை தாங்கிய படை பின்வருமாறு கேட்டது: “நீர் எங்களுக்கு இதற்கு முன் தலைவராக இருந்தாய் இப்போது ஹுஸைனின் பக்கம் சென்று விட்டாயா? ” என்று கேட்டனர்.

அதற்கவர், “உங்களுக்கு கேடு உண்டாகட்டும். நிச்சயமாக நான் சுவர்க்கம், நரகம் இவற்றில் ஒன்றை எனக்கு தெரிவு செய்ய சந்தர்ப்பம் அளிக்கப்பட்டேன். நான் எறிக்கப்பட்டாலோ அல்லது வெட்டப்பட்டாலோ சுவர்க்கத்ததை தவிர வேறு எதையும் தெரிவு செய்ய மாட்டேன்” என்று கூறினார். அதற்குப்பிறகு வியாழக்கிழமையன்று ஹுஸைன்(ﷺ)அவர்கள் ளுகர் மற்றும் அஸர் தொழுகைகளை நடாத்தினார். பிறகு ம.்.ரிபுடைய நேரம் நெறுங்கியபோது உபைதுல்லாஹ் இப்னு ஸியாத்துடைய படை ஹுஸைன்(ﷺ)அவர்களை நோக்கி வந்தபோது இதைப்பார்த்த அவர்கள் தனது படையிடம் இது என்ன என்று கேட்டார்கள். அதற்கவர்கள் அவர்கள் எம்மை நோக்கி வருகின்றனர் என்று கூறினர். அதற்கு

ஹுஸைன்(ரலி) அவர்கள், நீங்கள் அவர்களிடம் சென்று பேச்சுவார்த்தை நடாத்துங்கள், மேலும் அவர்கள் என்ன நாடுகிறார்கள் என்று கேளுங்கள் என்றார். அப்போது அப்படையிலிருந்து அப்பாஸ் இப்னு அலி அவர்கள் உட்பட 20 குதிரை வீரர்கள் அங்கு சென்று பேச்சுவார்த்தை நடத்தினர். அதற்கு உபைதுல்லாஹ் இப்னு ஸியாத்தின் படை, "ஒன்றில் அவர் கட்டுப்பட வேண்டும் அல்லது போர் செய்ய வேண்டும் என்று கூறினார்கள்"

அதற்கு அவர்கள், "நாங்கள் இதை ஹுஸைன்(ரலி) அவர்களிடம் அறிவித்து விட்டு வருகிறோம் என்றனர். அவர்கள் ஹுஸைன்(ரலி) அவர்களிடம் இச்செய்தியை கூறியபோது அதற்கவர்கள் இன்றைய தினம் இரவு மாத்திரம் சற்று தாமதியுங்கள். ஏனெனில் இன்றிரவு நான் எனது இறைவனைத்தொழுது மண்ணிப்புக்கேட்டு விட்டு நாளைய தினம் எனது பதிலை அறிவிக்கிறேன்" என்றார்.

## கர்பலா யுத்தம் ஆரம்பமாதல்

ஹிஜ்ரி 66ம் ஆண்டு துல் ஹிஜ்ஜா மாதம் ஒரு வெள்ளிக் கிழமையன்று காலை வேளையில் இரு படைகளுக்கு மத்தியில் போர் ஆரம்பமானது. ஹுஸைன்(ரலி) அவர்கள், உபைதுல்லாஹ் இப்னு ஸியாத்திடம் கைதியாக கூபாவிற்கு வருவதை மறுத்ததை விட்டு போர் அதனது உக்கிரத்தன்மையை அடைந்தது. கூபாவின் படையை விட ஹுஸைன்(ரலி) அவர்களின் படை எண்ணிக்கையிலும் ஆயுதப்பலத்திலும் குறைவாக இருந்ததால் தாங்கள் நிச்சயமாக வெற்றி கொள்ள முடியாது என்று ஹுஸைன்(ரலி) அவர்களோடு இருந்த அவர்களது தோழர்கள் கருதினர். இதன் காரணமாக அவர்கள் ஒவ்வொருவரின் உயிரும் உபைதுல்லாஹ் அவர்களின் படையின் மூலமாக காவு கொள்ளப்பட்டது. ஹுஸைன்(ரலி) அவர்கள் களத்தில் நின்று கொண்டிருக்கும் போதே அவரது கண்ணுக்கு முன்னால் அவரது பிள்ளைகள் உறவினர்கள் ஆகியோர் ஒருவரின் பின் ஒருவராக மரணித்தார்கள். இறுதியில் ஹுஸைன்(ரலி) அவர்களும் அவர்களுடைய மகன் அலி என்பவருமே மிகுதியாக இருந்தனர்.

அதன் பிறகு ஹுஸைன்(ரலி) அவர்கள் அக்கலத்தில் பகல் வேளையில் நீண்ட நேரம் தனியாக நின்று கொண்டிருந்தார்கள். உபைதுல்லாஹ்வின் படையிலிருந்து இவர்களைக் கொள்வதற்கு எவரும் முன் வரவில்லை. அவ்வேளையில் **ஷமிர் இப்னு தீ அல் ஜவ்ஸன்** அவ்விடம் வந்து தனது வீரர்களைப்பார்த்து, "உங்களுடைய தாய்மார்கள் உங்களை இழந்து போகட்டும். அம்மனிதரை சூழ்ந்து அவரைக்கொள்ளுங்கள்" என்றான். அவர்களும் ஹுஸைன்(ரலி) அவர்களிடம் வந்து அவர்களை சூழ்ந்து கொண்டு தங்களது வால்களை அவருடைய முகத்திற்கு முன்னால் சுற்றிய வண்ணம் இருந்தனர். இவ்வேளையில் **ஷமிர் இப்னு தீ அல் ஜவ்ஸன்** என்பவன், "உங்களுக்கு நாஷம் உண்டாகட்டும் இன்னும் எதற்காக காத்திருக்கிறீர்கள் அவரைக்கொள்ளுங்கள் என்றான். அவர்களும் முன்னேரிச் சென்ற ஹுஸைன்(ரலி) அவர்களை கொன்றனர். எனினும் ஹுஸைன்(ரலி) அவர்களைக் கொல்வதில் நேரடியாக தொடர்புபட்டவன் **ஸினான் இப்னு அனஸ் அந்நஹயி** என்பவனாகும். இவனே ஹுஸைன்(ரலி) அவர்களுடைய

தலையைக்கொய்தான். மற்றுமொரு அறிவிப்பில் ஷமிர் என்று கூறப்பட்டுள்ளது. இருவரையும் அல்லாஹ் இழிவுபடுத்துவானாக....

ஹுஸனை(ﷺ)அவர்கள் கொல்லப்பட்டதன் பிறகு அவரது தலை கூபாவிலுள்ள உபைதுல்லாஹ் இப்னு ஸியாத்திடம் கொண்டு செல்லப்பட்டது. அவன் அவர்களுடைய தலையை கேலி செய்து தன்னிடம் இருந்த தடியால் அவர்களுடைய வாய்க்குள் அதை நுழைவித்தான். அங்கிருந்த அனஸ் இப்னு மாலிக் அவர்கள் எழுந்து கூறினார்கள்: "அல்லாஹ்வின் மீது ஆணையாக நீ இழிவான வேளையை செய்து விட்டாய் நான் ரஸூலுல்லாஹ் அவர்களை நீ தடியை வைத்திருக்குமிடத்தில் முத்தமிடுவதைக் கண்டுள்ளேன்" என்றார். இப்ராஹீம் அந்நஹயி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: "நான் ஹுஸைன்(ﷺ)அவர்களைக்கென்றவர்களில் ஒருவராக இருந்திருந்து பிறகு சுவர்க்கம் நுழைவிக்கப்பட்டிருந்தால் நபிகள் நாயகத்தின் முகத்தைப்பார்ப்பதற்கு வெட்கப்பட்டிருப்பேன்" என்றார்கள்.

## ஹுஸைன்(ﷺ)அவர்களோடு, அவர்களது குடும்பத்தில் கொலை செய்யப்பட்டவர்கள்

**01-** அலி(ﷺ)அவர்களுடைய பிள்ளைகள்: ஜ.ஃ.பர், அப்பாஸ், அபூ பக்கர், முஹம்மத், உதுமான்.

**02-** ஹுஸைன்(ﷺ)அவர்களுடைய பிள்ளைகள்: அப்துல்லாஹ், அலி அக்பர்.

**03-** ஹஸன்(ﷺ)அவர்களுடைய பிள்ளைகள்: அப்துல்லாஹ், காசிம், அபூ பக்கர்.

**04-** அகீல் என்பவருடைய பிள்ளைகள்: அப்துல்லாஹ், ஜ.ஃ.பர், அப்துர் ரஹ்மான், முஸ்லிம்.

**05-** முஸ்லிமடைய பிள்ளைகள்: அப்துல்லாஹ்.

**06-** அப்துல்லாஹ் இப்னு ஜ.ஃ.பருடைய பிள்ளைகள்: அவ்ன், முஹம்மத்.

(தாரீஹ் கலிபதுல் இப்னு கய்யாத்: 234)

## ஹுஸைன்(ﷺ)அவர்களுடைய கொலை தொர்பான முன்னறிவிபப்

உம்மு ஸலமா(ன)அவர்கள் அறிவிக்கிறார்கள்: "நபியவர்களிடம் ஜிப்ரீல் (அலை) அவர்கள் வந்தபோது, ஹுஸைன்(ﷺ)அவர்கள் என்னிடமிருந்து கொண்டு அழுத நிலையில் இருந்தார்கள். அப்போது நான் அவர்களை விட்டுவிட்டேன். அவர் நபியவர்களிடம் சென்று மிக நெறுக்கமாகச் சென்றபோது ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபியவர்களை பார்த்து "முஹம்மதே! நீ இவரை நேசிக்கிறாயா" என்று கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் ஆம் என்றார்கள். அதற்கு ஜிப்ரீல் (அலை) அவர்கள் நிச்சயமாக உமது சமூதாயம் இவரைக் கொலை செய்யும் என்றார். நீ நாடினால் இவர் கொள்ளப்படுகின்ற இடத்தை நான் உமக்கு காட்டுகிறேன் என்றார்கள். அப்போது அவருக்கு காட்டப்பட்ட இடம் கர்பலாவாக இருந்தது"

(பலாயிலுஸ் ஸஹாபா: 02-782)

(இச்செய்தி பிரபல்யமான செய்தியாக இருந்தாலும் அறிஞர்களால் பலவீனமானது என சுட்டிக்காட்டப்பட்டதாகும்)

உம்மு ஸலமா(ழ)அவர்கள் கூறுகிறார்கள்: "ஹுஸைன்(ﷺ)அவர்கள் கொல்லப்பட்ட போது அவர்கள் மரணச்செவய்தியை ஜின்கள் அறிவித்ததை நான் செவியுற்றேன் என்றார்கள்"
(பலாயிலுஸ் ஸஹாபா: 02-766)

இது தவிர்ந்த ஹுஸைன்(ﷺ)அவர்கள் கொல்லப்பட்டபோது வானம் இரத்தத்தை மழையாக பொழிந்தது. மேலும் சிவர்களெல்லாம் இரத்தத்தால் பூசப்பட்டு காணப்பட்டன. எந்தக்கல்லை தூக்கினாலும் அதற்கு கீழ் இரத்தம் காணப்பட்டது. எந்த ஆடு அறுக்கப்பட்டாலும் அவை அனைத்துமே இரத்தமாக காணப்படும். இவையெல்லாம் பொய்யானவையும் உறுதிப்படுத்தப்படாதவையுமாகும். ஹுஸைன்(ﷺ)அவர்களுடைய கொலையை கொடூரமாக காட்டப்பட வேண்டும் என்பதற்காக இயற்கையை அவருக்காக கண்ணீர் வடித்தது என்று கூறி புனையப்பட்ட செய்திகளே ஆகும். இப்னு அப்பாஸ்(ﷺ)அவர்கள், ஹுஸைன் (ﷺ)அவர்கள் கொல்லப்பட்ட அதே இரவு கனவில் நான் நபிகள் நாயகத்தைக்கண்டேன். அவர் தலை குலைந்த நிலையில் தூசி படிந்தவராக அவரோடு ஒரு கிண்ணத்தில் இரத்தத்தை வைத்திருந்த நிலையில் கண்டேன். அப்போது நான் அவரிடம் ரஸுலுல்லாஹ்வே! இது என்ன என நான் கேட்டேன். அதற்கவர்கள் ஹுஸைனுடையவும் அவர்களுடைய தோழர்களுடைய இரத்தம் ஆகும் என்று பதிலளித்தார்கள்.

(பலாயிலுஸ் ஸஹாபா: 02-778)

## மறுமை வேதனைக்கு முன்னரான உலக வேதனை

ஹுஸைன்(ﷺ)அவர்களை கொலை செய்வதற்கு ஏவிய உபைதுல்லாஹ் இப்னு ஸியாத் நீண்டகாலம் உயிரோடு வாழவில்லை. அவனை முஹ்தார் இப்னு அபீ உபைத் என்பவன் ஹுஸைன்(ﷺ)அவர்களுடைய கொலைக்கு பழிவாங்கும் முகமாக அவனைக்கொலை செய்தான். இந்த முஹ்தார் கூட முஸ்லிம் இப்னு அகீலிற்கு துரோகம் இழைத்தவர்களில் ஒருவனாவான். கூபா வாசிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் செய்த தவறுகளுக்காக தங்களேயே பழிவாங்கும் நிலை ஏற்பட்டது. ஏனெனில் ஆரம்பமாக முஸ்லிம் இப்னு அகீலிற்கு அவர்கள் கொலை செய்யப்படுகின்ற அளவிற்கு துரோகம் இழைத்தார்கள். இரண்டாவதாக ஹுஸைன்(ﷺ)அவர்கள் மக்காவிலிருந்து வந்தபோது ஹுர் இப்னு யஸீத் மற்றும் அவரைச் சார்ந்தவற்றவரைத்தவிர ஹுஸைன்(ﷺ)அவர்களோடு போராடுவதற்கு கூபா வாசிகள் எவரும் முன் வரவில்லை. கூபா வாசிகள் அவரை அழைத்துவிட்டு பிறகு மோஷடி செய்து விட்டனர். இதன் காரணமாகவே, **முஹ்தார்** தனது படையோடு வெளியேறியபோது தனது மூதாதேயர்கள் செய்த தவறிற்காக தங்களது நெஞ்சுகளில் அடித்தவாறு வெளியேறினார். உமாரா இப்னு உமைர் என்பவர் அறிவிக்கிறார்: "முஹ்தார் என்பவரால் உபைதுல்லாஹ் இப்னு ஸியாத்தும் அவர்களது தோழர்கள் கொல்லப்பட்டதன் பிறகு அவர்களின் அனைவரின் தலைகளையும் துண்டித்து பள்ளியினுடைய முற்றத்தில் வைக்கப்பட்டது. அப்போது முஹ்தார், அவர்கள் அனைவருடைய கதையையும் முடித்து விட்டேன் என்று கூறினார். அப்போது ஒரு பாம்பு தலைகளைக்கடந்து வந்து உபைதுல்லாஹ் இப்னு ஸியாத்தினுடைய

மண்டையோட்டிற்குள் நுழைந்தது. சற்று நேரம் அதற்குள் இருந்துவிட்டு பின்பு வெளியேறிச் சென்றுவிட்டது. மீண்டும் அப்பாம்பு அவ்வாறு 02 அல்லது 03 முறை செய்தது. (ஜாமியுத் திர்மிதி: 3780)

இது அல்லாஹ்வால் ஹுஸைன்(رضي الله عنه)அவர்களுடைய கொலைக்குக்காரணமாக இருந்த மனிதருக்கு கொடுக்கப்பட்ட இழிவாகும்...

அபு ரஜா அல் உதாரிதி என்பவர் கூறுகிறார்: “அலி(رضي الله عنه)அவர்களையோ அவர்களது குடும்பத்தாரையோ திட்டாதீர்கள். ஏனெனில் பல்ஹுஜைஷன் என்ற கோத்திரத்ததைச் சேர்ந்த ஒரு மனிதர் எங்களது அண்டை வீட்டாராக இருந்தார். அவர் தினமும் ஹுஸைன் (رضي الله عنه)அவர்களைத் திட்டிக்கொண்டே இருப்பார். அல்லாஹ்வுத்தஆலா ஒரு நாள் அவரிற்கு வானிலுள்ள நட்சத்திரத்தை அவரது கண்ணில் விழ வைத்து குருடாக்கிவிட்டான்.

(மு.ஃ.ஜமுல் கபீர்: 03-17)

## ஹுஸைன்(رضي الله عنه)அவர்களைக் கொலை செய்தது யார்?

ஹுஸைன்(رضي الله عنه)அவர்களுடைய கொலை பற்றி பார்ப்பதற்கு முன் அலி மற்றும் ஹுஸைன் (رضي الله عنه)அவர்களின் அணியினர் (கூபாவாசிகள்) பற்றி சற்று மீட்டிப்பார்க்கலாம். அவ்விருவரின் அணியைச்சார்ந்த (ஷீயா) வர்களாக கருதப்படுபவர்கள் கூபா வாசிகளே ஆகும். இவர்களே அலி(رضي الله عنه)அவர்கள் மற்றும் அவர்களுடைய பிள்ளைகளுடைய ஆட்சிதான் தங்களுக்கு வேண்டும் எனக்கூறி விட்டு அவர்களுக்கே அநீதி இழைத்தவர்கள் இவர்களேயாவர்.

01- அலி(رضي الله عنه)அவர்கள் தனது அணியினர் (கூபா வாசிகள்) பற்றி பின்வருமாறு முறையிடுகிறார்கள்: “அனைத்து சமூகமும் தங்களது ஆட்சியாளர்களின் அநீதியையே பயப்படும். ஆனால் நானோ எனது கண்கணிப்பில் உள்ள மக்களின் அநீதியை பயப்படுகிறேன். நான் உங்களை ஜிஹாத் செய்யும்படி கட்டளையிட்டேன். எனினும் நீங்கள் செல்லவில்லை. நீங்கள் செவிமடுக்கும்படி சில விடயங்களை கூறினேன், எனினும் நீங்கள் செவிமடுக்கவில்லை. இரகசியமாகவும் பரகசியமாகவும் உங்களை அழைத்தேன், எனினும் நீங்கள் பதிலளிக்கவில்லை. நான் உங்களுக்கு உபதேஷம் செய்தேன், அவற்றை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்து கொண்டு இல்லாதவர்களைப்போலும் அடிமைகளாக இருந்து கொண்டு எஜமான்களாகவும் பாஷாங்கு செய்கிறீர்கள். உங்களுக்கு அறிவு, ஞானங்களை சொல்லித்தந்தேன், எனனும் அவற்றை விட்டு நீங்கள் விரண்டோடி விட்டீர்கள். மேலும் உங்களை வரம்பு மீறிய கூட்டத்திற்கெதிராக ஜிஹாத் செய்யும்படி நான் உங்களை தூண்டிக்கொண்டிருந்தேன், எனதுரையை முடிப்பதற்குள் உங்களை நாளா பக்கமும் திரிந்தவர்களாக நான் உங்களை கண்டு கொண்டேன். நீங்களோ உங்கள் இருப்பிடங்களை நோக்கி விரைந்து சென்றீர்கள்.

உடல்களை வைத்துக்கொண்டு புத்திகளை மறைத்துக்கொண்டு, சிந்தனைகளை வேறுபடுகின்ற கூட்டமே!, உங்களைக்கொண்டு உங்கள் தலைவர்கள் சோதிக்கப்படுகிறார்கள். உங்களது தோழரோ அல்லாஹ்விற்கு வழிப்படுகிறார். நீங்களோ அவனுக்கு மாறுசெய்கிறீர்கள். அல்லாஹ் மீது ஆனையாக முஆவியா(ﷺ)அவர்கள் என்னிடம் தீனார், திர்கங்களை பரிமாற்றிக்கொள்வது போன்று உங்களில் 10 பேரை எடுத்துவிட்டு அவர்களிலிருந்து ஒருவரை தந்திருக்கலாமே என்று நான் ஆசைப்பட்டேன். கூபா வாசிகளே நீங்கள் செவிகலிருந்தும் செவிடர்களாக உள்ளீர்கள், பேசும் திறனிருந்தும் உமையாக இருக்கின்றீர்கள், பார்வையிருந்தும் குருடர்களாக இருக்கிறீர்கள். உங்களை சோதனைகளின் போது உறுதி மிக்க தோழர்களாக எடுத்துக்கொள்ள முடியாது. தங்களது எஜமான்களை இழந்த ஒட்டகத்தைப் போன்றவர்களே உங்களது கரங்கள் தரித்து நிற்கட்டும். (நஹ்ஜுல் பலாகா: 01-177)

ஷரீப் ரிழா என்பவர், அமீருல் மு.ஃமினீன் அலி(ﷺ)அவர்களைத்தொட்டும் அறிவிக்கிறார்கள்: “இராக் வாசிகளே நீங்கள் கற்பினிப்பெண்ணை போன்றவர்கள். அவள் தனது பிள்ளையைச் சுமந்து அப்பிள்ளை பிறந்து இறந்ததன் பிறகு அப்பெண்ணைப் போன்றவர்கள் நீங்கள். மேலும் நீங்கள் அலி(ﷺ)அவர்கள் பொய்யுரைக்கிறார் என நீங்கள் கூறும் செய்தி எனக்கு எட்டியது உங்களை அல்லாஹ் சபிப்பானாக! நான் யார் மீது பொய்யுரைப்பேன்?

02- ஹஸன் இப்னு அலி(ﷺ)அவர்கள் கூபா வாசிகள் தொடர்பாக கூறுகின்றபோது “அல்லாஹ்வின் மீது ஆனையாக நான் முஆவியாவை இவர்களை விடச்சிறந்தவர்களாகக் கருதுகிறேன். அவர்கள் எனது அணியைச்சார்ந்தோரென எண்ணிக்கொண்டுள்ளார். அவர்களே என்னைக்கொல்வதற்கு தயாராக இருந்தார்கள். மேலும் எனது செல்வங்களை எடுத்தார்கள்” (நஹ்ஜுல் பலாகா: 187)

## கூபா வாசிகளுடைய சூழ்ச்சியும் ஹுஸைன்(ﷺ)அவர்களின் கொலையாளிகளாக அவர்கள் மாறுதலும்

ஹுஸைன்(ﷺ)அவர்களின் சகோதரனான முஹம்மத் இப்னு அலி அவர்களுக்கு ஹுஸைன் மக்காவிலிருந்து கூபாவிற்கு செல்லப்போகிறார் என்ற செய்தி கிடைத்தவுடன் அவர்களிடம் வந்து எனது சகோதரனே!..... நிச்சயமாக நீ கூபா வாசிகள் உமது தந்தைக்கும் உமது சகோதரனுக்கும் செய்த மோஷடியை அறிவாய். ஆகவே இதற்கு முன் நடந்தது போல் உனக்கும் ஏற்படுவதை நான் பயப்படுகிறேன் என்றார்கள்.

(அல்லுஹூப்: 39வது பக்கம், ஆஷீரா: 115வது பக்கம்)

இதேபோன்று நாம் ஏளவே குறிப்பிட்டது போல் ஹுஸைன்(ﷺ)அவர்கள் கூபாவிற்குச் செல்லும் வழியில் பரஸ்தக் என்ற கவிஞரை சந்தித்து கூபா வாசிகளுடைய நிலைமை தொடர்பாக கேட்கிறார். அதற்கவரும், முஹம்மத் இப்னு அலி அவர்கள் சொன்னது போல கூபா வாசிகளுடைய சூழ்ச்சிகளைப்பற்றியே சொல்கிறார்கள். அவரின் கூற்றுப்படி: “அவர்களின்

உள்ளங்கள் உம்மோடு உள்ளன. ஆனால் அவர்களது வால்கள் உமக்கெதிராக உள்ளன. முடிவை அல்லாஹ்வே வானத்திலிருந்து இறக்குவான். அவன் தான் நாடியதை செய்யக்கூடியவன்” அதற்கு ஹுஸைன்(ﷺ)அவர்கள்: “உண்மை சொல்லி விட்டீர்கள், இறுதி முடிவு அல்லாஹ்விடமே உள்ளது. அவன் நாம் நாடியவாறு முடிவை இறக்கினால் அவனது அருளுக்காக நாம் அவனைப்புகழ்வோம். நமது விருப்பத்திறகு மாறாக முடிவு இறக்கப்பட்டால் எவருடைய எண்ணத்தில் சத்தியம் இருக்கிறதோ அவர் தூரமாகமாட்டார்” (அல்மஜாலிஸுல் பாகிரா: 79வது பக்கம்)

*03–* அலி இப்னு ஹுஸைன் (ரஹ்) அவர்கள் கூபா வாசிகள் தொடர்பாக பின்வருமாறு கூறுகிறார்கள்: “மக்களே! அல்லாஹ்வை சாட்சியாக வைத்து உங்களுக்கு கூறுகிறேன். நீங்கள் எனது தந்தைக்கு கடிதங்கள் அனுப்பி அவருக்கு மோஷடி செய்ததை அறிவீர்களா? மேலும் அவரோடு: நிங்கள் உடன்படிக்கை செய்ததன் பிறகு அவரை இழிவுபடுத்தும் முகமாக அவரோடு போர் செய்வதை அறிவீர்கள்ா? நீங்கள் செய்தவைக்கு நாஷம் உண்டாகட்டும். அப்போது அங்கிருந்த பெண்களுடைய அழுகைக்குரல் உயர்த்தப்பட்டது. மேலும் அவர்களில் சிலர் சிலரை திட்டிக்கொண்டனர்” மேலும் அவர்கள் கூறினார்கள்: “எனது உபதேஷத்தை ஏற்ற மனிதருக்கு அல்லாஹ் அருன் செய்வானாக… மேலும் அல்லாஹ்வுடைய விடயத்திலும் அவனது தூதரின் விடயத்திலும் அவருடைய குடும்பத்தினரின் விடயத்திலும் எனது வஸிய்யத்தை பாதுகாத்தவனுக்கு அல்லாஹ் அருள் செய்வானாக… எமக்கு அல்லவாஹ்வின் தூதரில் அலகிய முன்மாதிரி உள்ளது”
அங்கிருந்தொர் அனைவரம் ஒன்றினைந்து “நாங்கள் அனைவரும் உங்களுக்கு செவிசாய்க்கிறோம், கட்டுப்படுகிறோம், உங்களது வஸிய்யத்தை பாதுகாக்கிறோம், உங்களை நாங்கள் வெறுக்க மாட்டோம், நீங்கள் விரும்பிய கட்டளைகளை இடுங்கள், நீங்கள் போரென்று சொல்லும்போது நாங்களும் போர் செய்கிறோம், நீங்கள் சமாதானம் என்கின்ற போது நாங்களும் சமாதானம் ஆகிறோம்” என்றனர். அதற்கு அலி இப்னு ஹுஸன்(ரஹ்)அவர்கள்: “சூழ்ச்சிக்காரர்களே!… காலம் சென்றுவிட்டது, காலம் சென்று விட்டது, என்று சொல்லி விட்டு நீங்கள் எனது மூதாதேயர்களிடம் வந்தது போன்று என்னிடமும் வர நாடுகிறீர்களா? எனது தந்தை நேற்றைய தினம் அவர்களுடைய குடும்பத்தினரோடு கொல்லப்பட்டார். அல்லாஹ்வின் தூதர் தனது குடும்பத்தை இழந்ததையும் நான் எனது தந்தை மற்றும் பாட்டனை இழந்ததையும் மரக்கமாட்டேன் என்று கூறிவிட்டு அவ்விடத்திலிருந்து புரப்பட்டார்கள். அப்போது அங்கிருந்த கூபா வாசிகள் அழுது கொண்டும் புலம்பிக்கொண்டும் இருந்தர். அதற்கு அலி இப்னு ஹுஸைன் (ரஹ்) அவர்கள் நீங்கள் எங்களுக்காக அழுகிறிர்கள், எனினும் எங்களைக்கொன்றவர் யார் எனக்கேட்டார்?”

## ஹுஸைன்(ﷺ)அவர்களை கொல்வதில் நேரடியாக தொர்புபட்டவர்

வரலாற்று நூல்களில் அனைவர்களாலும் பிரபல்யமாக பதியப்பட்ட செய்திதான், ஹுஸைன் (ﷺ)அவர்களைக் கொல்வதில் இரண்டு நபர்கள் நேரடியாக தொடர்பு பட்டுள்ளார்கள். அவர்கள் முறையே **“ஸினான் இப்னு அனஸ் அந்நஹயி ” மற்றும் “ஷமிர் இப்னு தீ அல் ஜவ்ஸன் ”**

ஆகியவர்களாகும். இவர்களை நியமித்தது உபைதுல்லாஹ் இப்னு ஸியாத் ஆகும். இவர்கள் அனைவருமே ஆரம்பத்தில் அலி(ؓ)அவர்களுடைய படையிலே காணப்பட்டவர்களாவர்.

## ஹுஸைன்(ؓ)அவர்களது கொலையில் மக்களின் நிலைப்பாடு

ஹுஸைன்(ؓ)அவர்கள் கொல்லப்பட்டமை முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட மாபெரும் சோதனை என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஏனெனில் அந்நிலையில் நபிகள் நாயகதத்தின் பேரப்பிள்ளை என்ற அந்தஸ்தில் அவரைத்தவிர வேறு எவரும் இருந்ததில்லை. அது மட்டுமல்லாமல் நபியவர்களின் வஸிய்யத்தான அஹ்லுல் பைத்தினரும் அநியாயமாக கொல்லப்பட்டனர். ஹுஸைன்(ؓ)அவர்கள் விடயத்தில் அவருக்கு அதிக சிறப்புக்களும், உயர்ந்த அந்தஸ்த்தும், அல்லாஹ்விடம் நெருக்கமும் உள்ளது. ஆகவே அல்லாஹுத் தஆலா அவரை இவ்வுலகை விட்டுவிட்டு சுவர்கத்திற்காக அவர்களை எடுத்துக்கொண்டான்.

**நாம் கூறுகிறோம்:** அவர்கள் மக்காவை விட்டு வெளியேராமல் இருந்திருக்கக்கூடாதா!!, இதன் காரணமாகவே ஸஹாபாக்கள் அந்நேரத்தில் அவரைத்தடுத்தார்கள். இவரின் கொலை மூலமாக அநீதப்பாவிகள் பாவங்களை தங்கள் ஏடுகளில் அள்ளிக்கொண்டார்கள், அவர் வெளியேராமல் இருந்திருந்தால் இப்படி ஒரு குழப்ப நிலை ஏற்பட்டிருக்காதே. எனினும் அல்லாஹ் நிர்ணயித்து நடந்து விட்டது, நாம் விரும்பினாலே, விரும்பாவிட்டாலோ அது நடந்தே தீரும்.

ஹுஸைன்(ؓ)அவர்கள் கொல்லப்பட்மை அல்லாஹ்வின் தூதர்களின் கொலையோடு ஒப்பிட்ப்பார்க்கும் போது பாரதூரமான ஒன்றல்ல. யஹ்யா (அலை) அவர்களின் தலை வெட்டப்பட்டது, அவரது தந்தை ஸகரிய்யா (அலை) அவர்கள் கொல்லபபட்டார்கள், மேலும் ஸஹாபாக்களான உமர் மற்றும் உதுமான(ؓ) ஆகிய இருவரும் அநியாயமான முறையில் கொல்லப்பட்டனர். இவர்கள் அனைவரும் ஹுஸைன்(ؓ)அவர்களை விட சிறப்பில் கூடியவர்களே, இப்படி சிறப்பு இருப்பதற்காக அவர்களது இறந்த தினத்தை வருடா வருடம் நினைவில் கொண்டு அவர்களுக்காக கவலை தெரிவிப்பதோ அழுதுபுலம்புவதோ, ஆகுமாக்கப்பட்டவை அல்ல. இந்த அடிப்படையிலேயே ஹுஸைன்(ؓ)அவர்கள் கொல்லப்பட்டமைக்காக வருடா வருடம் அவர் கொல்லப்பட்ட ஆஸுரா தினமன்று அருக்கு கவலை தெரிவிக்கும் முகமாக அல்லது நாங்களது அவர் அன்றைய தினம் பட்ட சோதனையில் பங்கு கொல்கிறோம் என்பதற்காக தங்களது கண்ணங்களில் அறைந்து கொல்வதோ, தங்களை தாங்களே காயப்படுத்திக்கொள்வதோ, வால்களால் தங்களது உடல்களை வெட்டிக்கொள்வதோ ஆகமாக்கப்பட்டவை அல்ல, இவ்வாறு செய்வது இஸ்லாத்திற்கு முற்றிலும் முரணானது. நபி(ﷺ)அவர்கள் கூறுகிறார்கள்: “கண்ணத்தில் அரைந்து கொண்டு ஆடைகளை (ஆடையை நுழைவிக்கும் பகுதி) கிழித்துக் கொள்பவர்களும் எங்களைச்சார்ந்வர்கள் அல்ல” (ஸஹீஹுல் புாரி: 1294)

மேலும் நபி(ﷺ)அவர்கள் கூறுகிறார்கள்: “மரண ஓலம் விடுகின்றவர்கள், தலை முடியை மலித்துக் கொள்பவர்கள் மற்றும் ஆடைகளை

கிழித்துக்கொள்பவர்கள் போன்றவர்களை விட்டும் நான் நீங்கிக் கொண்டவன்” (ஸஹீஹுல் புஹாரி: 1296)

ஆகவே மேற்கண்ட நபி மொழிகளின் பிரகாரம் ஹுஸைன்(ﷺ)அவர்கள் கொல்லப்பட்டமைக்காக ஷீஆக்கள் செய்வது போன்று அனைத்து செயற்பாடுகளும் மாரக்கத்தில் அனுமதிக்கப்படாதவை ஆகும். எனினும் அவர்கள் கொல்லப்பட்டமை சோதனை என்பது அனைவராலும் எற்றுக்கொள்ளப்பட்டதே. ஆகவேதான் சோதனைகளின் போது ஒரு முஸ்லிம் நடந்து கொள்ளவேண்டிய முறையை இஸ்லாம் எமக்கு சொல்லித்தருகிறது.

الَّذِينَ إِذَا أَصَابَتْهُمْ مُصِيبَةٌ قَالُوا إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

**ஹுஸைன்(ﷺ)அவர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக மக்களிடத்தில் மூன்று வகையான கருத்துக்கள் நிலவுகின்றன.**

**கருத்து ஒன்று:-** ஹுஸைன்(ﷺ)அவர்கள் சரியானதேயாகும். ஏனெனில் அவர் ஓர் ஆட்சித் தலைவருக்கெதிராக புரட்சி செய்வதற்கு தயாரானார், மேலும் முஸ்லிம்களின் ஒற்றுமையை உடைக்கப்பார்த்தார். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “ஒருவர் உங்களிடம் வந்து ஒரு ஆட்சியாளருக்கு கிளர்ந்து எழும்படி கூறி உங்களது ஒற்றுமையை உடைக்க எண்ணினால் அவர் யாராக இருந்தாலும் அவரைக்கொல்லுங்கள். (முஸ்லிம்: 1852)

ஆகவே ஹுஸைன் (ﷺ)அவர்கள் முஸ்லிம்களின் ஒற்றுமையை தகர்த்தப்பார்த்தார். எனவே அவர் கொல்லப்பட்டது சரியானதே. (இது நாஸிபா என்னும் பிரிவினரைச்சார்ந்தவர்களின் கொள்கையாகும்:- இவர்கள் அஹ்லுல் பைத்தினரை வெறுக்கும் கூட்டத்தினராகும்)

**கருத்து இரண்டு:-** ஹுஸைன்(ﷺ)அவர்களே உண்மையில் தலைமைத்துவத்திற்கு தகுதியானவராவார். அவருக்கே அனைவரும் கட்டுப்பட வேண்டும். (இது ஷீஆக்களின் கொள்கையாகும்)

**கருத்து மூன்று:-** அநியாயமான முறையில் கொல்லப்பட்டார். எனினும் இவர் ஆட்சியை பொறுப்பேற்கும் நிலையில் இருந்ததில்லை, அந்நேரத்தில் யஸீதே ஆட்சியாளராக இருந்தார். மேலும் இவரை இஸ்லாமிய ஆட்சிக்கெதிராக கிளர்ந்தெழுந்த நிலையில் கொல்லப்பட்டார் என்றும் கூற முடியாது. ஏனெனில் நபியவர்கள் இவர்கள் சுவர்க்கவாதிகளின் தலைவர் என புகழ்ந்துள்ளார்கள். (இது அஹ்லுஸ்ஸுன்னாக்களின் கூற்றாகும்) அதுமட்டுமல்லாமல் இறுதியில் அவர் தான் திரும்பிச்செல்லப்போவதாக அல்லது ஆட்சியாளர் யஸீதிடம் ஷாமிற்கு செல்லப்போவதாக ஒப்புக்கொண்டார் எனினும் உபைதுல்லாஹ் இப்னு ஸய்யாதின் படையே அவரை செல்ல விடாமல் தடுத்து வலுக்கட்டாயாக போரிற்கு அழைத்தது.

**புதிதாக உருவாக்கப்பட்ட இரண்டு நூதன அநுஸ்டானங்கள்**

இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: “ஹுஸைன்(ﷺ) அவர்களின் கொலைக்குப்பிறகு இச்சமூகத்தில் இரு பித்அத்துக்கள் தோற்றம் பெற்றுள்ளன:

**ஒன்று:-** இறங்கற்பா பாடல், அழுதல், தன்னைத்தானே வேதனைகளுக்கு உட்படுத்தல், கண்ணத்தில் அறைதல். போன்றவற்றின் மூலம் கவலை மற்றும் தங்களது ஆத்திரங்களை ஆஷுரா தினத்தன்று வெளிப்படுத்தல். அதேபோன்று முன்னோர் மீது இட்டுக்கட்டப்பட்ட செய்திகளையும், பொய்யான கற்பனைகளையும் பரப்பி, ஸலபுஸ்ஸாலிஹீன்கள் மீது மக்கள் மத்தியில் வெறுப்பை உறுவாக்கல். இவ்வாறு வருடா வருடம் ஆஷுரா தினத்தன்று இரத்தம் சிந்தி கபுர்களை கட்டியனைத்து முன்சென்ற காலங்களை மீட்டிப்பார்த்தல்.

**இரண்டு:-** ஹுஸைன்(ﷺ)அவர்கள் கொலை செய்யப்பட்டமைக்காக அதே ஆஷுரா தினத்தில் தங்களது சந்தோஷங்களை வெளிக்காட்டி இனிப்பு பண்டங்களை பங்கு வைத்தல்.

## யஸீத் இப்னு முஆவியா பற்றிய அஹ்லுஸ் ஸுன்னாக்களின் நிலைப்பாடு

ஹுஸைன்(ﷺ)அவர்களுடைய கொலையில் யஸீத்திற்கு எவ்விதப்பங்கும் காணப்படவில்லை. இவ்வாறு நாம் கூறுவது யஸீதை காப்பாற்றுவதற்காக அல்ல. மாறாக சத்தியத்தையும் இடம்பெற்ற உண்மையான நிகழ்வையும் காப்பாற்றுவதற்கே ஆகும். ஹுஸைன் (ﷺ)அவர்கள் கூபாவை நோக்கி வருகிறார்கள் என்ற செய்தி யஸீத்திற்கு எட்டியபோது உபைதுல்லாஹ் இப்னு ஸியாத்தை கூபாவிற்கு அனுப்பி ஹுஸைன்(ﷺ)அவர்களை அதற்குள் வரவிடாமல் தடுக்கும்படி ஏவினார். எனினும் ஹுஸைன்(ﷺ)அவர்களோடு போர் செய்யவோ அவரைக்கொல்லவோ அனுப்பவில்லை. அதேபோன்று ஹுஸைன்(ﷺ)அவர்கள் கூட யஸீத் பற்றி நல்லெண்ணமே வைத்திருந்தார்கள். இதன் காரணமாகவே அவர்கள் இறுதியாகக்கூறிய 03 ஆலோசனைகளில் ஒன்றாக “நான் யஸீத்திடம் சென்று அவரோடு ஒன்றாக இருக்கிறேன் எனக்கூறினார்” இவ்வாறு அவர்கள் கூறியது யஸீத் மீதிருந்த அவர்களின் நல்லெண்ணமே ஆகும். இமாம் இப்னு தைய்மிய்யா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: “நிச்சயமாக யஸீத் ஹுஸைன்(ﷺ)அவர்களைக் கொல்லுமாறு கட்டளை இடவில்லை. எனினும் உபைதுல்லாஹ் இப்னு ஸியாத்தை அவர்கள் அனுப்பியது ஹுஸைன்(ﷺ)அவர்கள் இராக்கிற்குள் நுழைவதை தடுப்பதற்கே ஆகும். அவர்கள் கொல்லப்பட்ட செய்தி யஸீத்திற்கு கிடைத்ததும் அதற்காக தனது கவலையை தெரிவித்து வீட்டில் அழுத வண்ணம் இருந்தார்கள்.

ஹுஸைன்(ﷺ)அவர்களோடு இராக்கிற்கு வந்த அஹ்லுல் பைத்தைச்சார்ந்த எந்தப் பெண்ணையும் அவர் சிறை பிடிக்கவில்லை. அவர்களை யஸீத் எங்கிருந்து வந்தார்களோ அவ்விடத்திற்கே மீள அனுப்பினார்கள். யஸீத் அஹ்லுல் பைத்தைச்சார்ந்த பெண்களை ஷாமிற்கு சிறைக்கைதிகளாக அழைத்து வந்து அவர்களை இழிவு படுத்தியதாக கூறுகின்ற அனைத்து அறிவிப்புக்களும் பலவீனமானவையாகும். இதற்கு மாறாக பனு உமைய்யா கோத்திரத்தினர் எப்போது பனு ஹாஷிம்களை கண்ணியப்படுத்தி

இருருந்தனர். இதன் காரணமாகத்தான் ஹஜ்ஜாஜ் இப்னு யூஸுப் பாத்திமா பின்த் அப்தில்லாஹ் இப்னு ஜ.்.பர் என்ற அஹ்லுல் பைத்தைச்சார்ந்த பெண்ணை திருமணம் செய்தபோது அக்காலத்தில் ஆட்சியாளராக இருந்த அப்துல் மலிக் இப்னு மர்வான் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் ஹஜ்ஜாஜிற்கு அப்பெண்ணை தலாக் செய்து விடும்படி ஏவினார்"

(மின்ஹாஜுஸ் ஸுன்னா: 04-557)

பனு ஹாஷிம் கோத்திரத்தைச்சார்ந்த பெண்கள் அக்காலப்பகுதியில் கண்ணியமானவர்களாகவும், மதிப்பிற்குரியவர்களாகவும் காணப்பட்டார். இதன் காரணமாக ஹஜ்ஜாஜ் இப்னு யூஸுப் அப்பெண்ணை திருமணம் செய்தபோது அவன் மீது மக்கள் மீது அதிருப்தியும் கோபங்களும் காணப்பட்டன. இதன் காரணமாகவே அப்துல் மலிக் இப்னு மர்வான் அவ்வாறு கட்டளை இட்டார். மேலும் ஹுஸைன்(ரழி)அவர்களது வெட்டப்பட்ட தலை யஸீத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. என்ற செய்தியும் உறுதிப்படுத்தப்படாததுமாகும். மாறாக அவர்களின் தலை கூபாவில் உபைதுல்லாஹ்விடமே காணப்பட்டது. மேலும் அவர் அடக்கம் செய்யப்பட்ட இடம் மறைக்கப்பட்டு விட்டாலும் மக்கள மத்தியில் காணப்படும் பிரபல்யமான கருத்தின்படி அவர் கர்பலாவிலேயே அடக்கம் செய்யப்பட்டார்.

## யஸீத் பற்றிய நடுத்தரமான நிலைப்பாடு

இமாம் இப்னு தைய்மிய்யா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: "மக்களிடத்தில் யஸீத் பற்றிய இரு தவறான நிலைப்பாடுகளும் ஒரு நடுத்தரமான நிலைப்பாடும் காணப்படுகின்றன"

தவறான நிலைப்பாடு ஒன்று: அவரின் மீது அளவற்றப்பற்றுக் கொண்டு அவரை நேசிக்கின்றனர். அதுமட்மல்லாமல் அவரை ஒரு நபியென்றும் பாவங்களில் இருந்து பாதுகாக்கப்பட்டவர் என்றும் கூறகின்றனர்.

தவறான நிலைப்பாடு இரண்டு: அவரின் மீது கேபாம் கொண்டு அவரை ஒரு நிராகரிப்பாளராக கருதுகின்றனர். மேலும் அவரை இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட முனாபிக் என்று கூறுகின்றனர். இவ்விரண்டு நிலைப்பாடுகளும் தவறானவை ஆகும். அவர் அக்காலத்தில் வாழ்ந்த முஸ்லிம்களின் அரசர்களிலொரு அரசர் ஆவார். ஹுஸைன் (ரழி)அவர்களின் கொலையைப்பொருத்தவரையில் அவர் அநீதிழைக்கப்பட்டு கொல்லப்பட்டார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மேலும் அவரைக்கொலை செய்தவர்களும் அவர் கொல்லப்படுவதற்கு உதவியாக இருந்தவரும் அல்லது அவர் கொலையைப்பொருந்திக் கொண்டவர்களும் அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் மாறு செய்தவர்களென கணிக்கபர்படுவர்.

## யஸீத்தை சபிப்பதை விட்டும் தடுத்தல்

அவர்களின் காலத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகளான ஹர்ரா நிகழ்வு, (ஹர்ரா நிகழ்வு என்பது மக்காவிற்குள் யஸீதின் படை நுழைந்து அங்குள்ள பெரும்பான்மை முஸ்லிமகளை கொலை செய்த நிகழ்வாகும்),

ஹுஸைன்(ﷺ)அவர்களின் கொலை, அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் அவர்களோடு போர் புரிதல் போன்ற நிகழ்வகளின் காரணமாக சிலர் யஸீத்தை சபிக்கலாமென அனுமதிக்கின்றனர். சிலர் அவ்வாறு சபிப்பதற்குத் தடை விதிக்கின்றனர். யஸீத்தை சபிப்தற்கு அனுமதிப்போர் கட்டாயமாக 03 விடயங்களை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

01- அவர் கெட்டவர் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
02- அவர் செய்த பாவங்களிலிருந்து தவ்பா செய்து மீளவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
03- ஒருவரை பெயர் குறிப்பிட்டு சபிப்பது ஆகுமாக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
அல்லாஹ்வோ அல்லது அவனது தூதரோ சபிக்காத ஒருவரை நாம் சபிப்பது ஆகுமாக்கப்பட்ட ஒன்றல்ல. ஏனெனில் நபியவர்கள் கூறினார்கள்: மரணித்தவர்களை நீங்கள் திட்டாதீர்கள், ஏனெனில் அவர்கள் முட்படுத்தியவை அவர்களின் பக்கமே பொறுப்புச்சாட்டப்பட்டு விட்டன. (ஸஹீஹுல் புகாரி: 1393)

அல்லாஹ்வின் மார்க்கம் மற்றவர்களை திட்டுவதைக்கொண்டு எழுச்சி பொரவில்லை. மாறாக நல்ல பண்படு மூலமாக எழுச்சி பெற்றது. ஏனெனில், நபியவர்கள் கூறுகிறார்கள்: “முஸ்லிமைத் திட்டுவது பாவமாகும், அவனைக்கொள்வது இறை நிராகரிப்பாகும்”

(ஸஹீஹுல் புகாரி: 48)

அஹ்லுஸ் ஸுன்னாக்களில் எவரும் யஸீத்தை மார்க்கத்தை விட்டு வெளியேறியவர் என்று கூறவில்லை. மாறாக சிலர் அவரை கெட்டவர் என்கின்றனர். எனினும் இது தொடர்பான அறிவு அல்லாஹ்விடமே உள்ளது. நபியவர்கள் கூறுவதாக ஒரு செய்தி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கைசரின் நகரத்தை முதன் முதலாக போர் தொடுக்கும் படை மண்ணிக்கப்பட்டதாகும்.

(ஸஹீஹுல் புகாரி: 2924)

இவ்வாறு கைசரின் நகரத்தின் மீது முதன்முதலாக போர் தொடுத்த படையாக யஸித்தின் தலைமையிலான படையே கருதப்படுகிறது. அது மாத்திரமல்லாமல் இப்னு உமர், இப்னு அப்பாஸ், அபு அய்யுப் அல் அன்ஷாரி, அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் போன்ற பெரும் ஸஹாபாக்கள் அந்நேரத்தில் அவரோடு இருந்ததாக அறிவிக்கப்படுகிறது. இமாம் இப்னு கதீர் (ரஹ்) கூறுகிறார்: யஸீத் மதீனாவில் தொடர்ச்சியாக 03 நாட்கள் ஸஹாபாக்கள் மற்றும் அவர்களது புதல்வர்களின் இரத்தங்களை ஓட்டி பாரிய தவறு இழைத்து விட்டார். அதற்கான தண்டனையை அவர் அனுபவிப்பார். (அல் பிதாயா வன்னிஹாயா: 8:225)

**இறுதியாக** நாம் யஸீத் தொடர்பாக இமாம் தஹபி (ரஹ்) அவர்கள் கூறியதையே கூறுகிறோம்: “நாம் அவரைத்திட்டவும் மாட்டோம் அவரை நேசிக்கவும் மாட்டோம்.

(ஸியரு அ∴லாமின் நுபலா: 4-36)

## நபி(ﷺ)அவர்களுக்குப் பிறகு ஆட்சிப்பொறுப்புக்குத் தகுதியானவர் யார்?

அஹ்லுஸ் ஸுன்னாக்கள் நபி(ﷺ)அவர்களுக்குப்பிறகு ஆட்சிப்பொறுப்புக்குத் தகுதியானவர் அபூபக்கர்(ؓ)அவர்களென்பதில் உடன்பட்டுள்ளனர். இவ்விடயத்தில் ஷீயாக்கள் இவர்களுக்கு முரண்பட்ட கொள்கை கொண்டுள்ளனர். அவர்களின் கருத்துப்படி அபூபக்கர், உமர், உதுமான் ஆகிய மூவரையும் விட அலி(ؓ)அவர்களே நபி(ﷺ)அவர்களுக்குப்பிறகு ஆட்சியாளராக வர தகுதியுடையவர் என்பதாகும். இவர்கள் இக்கருத்தை உறுதிப்படுத்தும் வகையில் சில குர்ஆனிய வசனங்களையும் சில ஹதீத்களையும் ஆதாரமாக முன்வைக்கின்றனர். இப்பகுதியில் அவர்களால் முன்வைக்கப்படுகின்ற ஆதாரங்களும் அவற்றிற்கான சரியான விளக்கங்களும் குறிப்பிடப்படுகின்றன.

**எமதுகருத்து:** நிச்சயமாக அலி(ؓ)அவர்கள் தன்னைப்புகழ்வதை விரும்பாதவர்கள். நுபி (ஸல்) அவர்களால் மிகவும் விரும்பத்தக்க புதல்வியை திருமணம் செய்து நபிகள் நாயத்தோடு தனது உறவை மேலும் பலப்படுத்திக்கொண்டார். அதேபோன்று அவர்கள் நபி (ஸல்) அவர்களின் சிறிய தந்தையின் மகனும் இஸ்லாமிய ஆட்சியின் 4வது கலீபாவுமாவார். எனினும் அதிகமான சிறப்புக்களை இவர்கள் கொண்டிருந்தாலும் கிலாபத் எனும் விடயத்தில் ஷீயாக்கள் சொல்வதுபோன்று இவர்கள் நபி (ஸல்) அவர்களுக்குப்பிறகு கலீபாவாக வறுவதற்குத் தகுதியுடையவர் என்று அவர்கள் கூறுகின்ற அனைத்து ஆதாரங்களும் அலி(ؓ)அவர்களுடைய கிலாபத்தை குறிப்பவை அல்ல. இவர்களால் முன்வைக்கப்படுகின்ற ஆதாரங்களை இரண்டு வகைகளாக நோக்கமுடியும்:

01- குர்ஆன் மற்றும் ஹதீதில் வந்துள்ள ஆதாரங்கள்.
02- சிந்தனை ரீதியான ஆதாரம்.

மேற் குறிப்பிடப்பட்ட இரண்டுவகைகளில் முதலாவது வகையில் பின்வருகின்றவற்றை ஆதாரங்களாக முன்வைக்கின்றனர்.

01- கதீர் கும் செய்தி.
02- போர்வை தொடர்பான நபிமொழியும் முபாகழா தொடர்பான வசனம்.
03- விலாயா பற்றிய வசனம்.
04- மன்ஸிலா தொடரபான நபிமொழி.
05- தகலைன் தொடர்பான நபிமொழி.
06- அலி(ؓ)அவர்கள் என்னைச்சார்ந்தவர், நான் அவரைச்சார்ந்தவர் என்ற நபிமொழி.
07- மதீனதுல் இல்ம் என்ற நபிமொழி.
08- அல் இன்தார் யவ்முத்தார் என்ற நபிமொழி.

மேற்குறிப்பிட்ட இரண்டாவது வகையில் பின்வருகின்ற சிந்தனா ரீதியான ஆதாரங்கள் முன்வைக்கப்படுகின்றன.

01- நபி(ﷺ)அவர்களுக்குப் பிறகு அலி(ؓ)அவர்களே மனிதர்களில் வீரமானவராவார்.

02- மனிதர்களில் மிக்க அறிவுடையவர்.

03- நபி(ﷺ)அவர்களோடு குடும்ப உறவில் மிக்க நெறுக்கமுடையவர்.

04- இஸ்லாத்தை முதன்முதலில் ஏற்றுக்கொண்டவர்.

05- ஜாஹிலிய்யக் காலத்தின் எந்தவொரு சிலைக்கும் சிரம் பனிந்ததில்லை.

**01- போர்வை தொடர்பான நபிமொழியும் முபாகழா தொடர்பான வசனம்:-** ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: “நபியவர்கள் ஒரு பகல் வேளையில் தன்னோடு ஒரு போர்வையை எடுத்துக்கொண்டு வெளியில் வந்து, அப்போர்வைக்குள் அலி, பாத்திமா, ஹஸன், ஹுஸைன்ؓஆகிய நாழ்வரையும் நுழைவித்து

إِنَّمَا يُرِيدُ اللَّهُ لِيُذْهِبَ عَنْكُمُ الرِّجْسَ أَهْلَ الْبَيْتِ وَيُطَهِّرَكُمْ تَطْهِيرًا

பொருள்: (நபியின்) வீட்டையுடையவர்களே! உங்களை விட்டும் அசுத்தங்களை நீக்கி உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்கிவிடவே அல்லாஹ் நாடுகிறான். (அஹ்ஸாப் : 40)

எனும் இறைவசனத்தை ஓதிய நிலையில், “இறைவா! இவர்களும் எனது அஹ்லுல் பைத்தினரே இவர்களை விட்டும் அசுத்தங்களைப்போக்குவாயாக” என பிராத்தனை செய்தார்கள்” (ஸஹீஹுல் முஸ்லிம்: 2424)

இச்செய்தியை ஆதாரமாகக்கொண்டு அல்லாஹ் தஆலா அவர்களை விட்டும் அசுத்தங்களை நீங்குவதற்கு நாடிவிட்டான். ஆகவே அவன் நாடியது நிகழ்ந்து விடும், அவர்களை விட்டும் அசுத்தங்கள், பாவக்கரைகள் நீக்கப்பட்டால் அவர்கள் பாவங்களிலிருந்தும் பாதுகாக்கப்பட்டவர்களாக மாறிவிட்டனர், அவ்வாறெனில் இவர்களே ஆட்சிப்பொறுப்பிற்கு தகுதியானவர்கள் என்ற வாதத்தை ஷீஆக்கள் முன்வைக்கின்றனர்.

எனினும் இவ்வாதம் தவறானது என பின்வருமாறு நிருபிக்கலாம்

01- மேற்குறிப்பிடப்பட்ட அல் குர்ஆனிய வசனத்திற்கு “தூய்மைப்படுத்தல் வசனம்” என பெயர் சொல்லப்படும். இவ்வசனத்தை முழுமையபக படித்துப்பார்க்கும் போது இது நபியவரகளின் மனைவிமார்கள் விடயத்திலேயே இறக்கப்பட்டது என்பதனை அறிந்து கொள்ளலாம்.

(நபியின் மனைவிகளே!) நீங்கள் உங்கள் வீடுகளிலேயே தங்கியிருங்கள் முன்னர் அஞ்ஞான காலத்தில் (பெண்கள்) திரிந்து கொண்டிருந்ததைப் போல் நீங்கள் திரியாதீர்கள் தொழுகையை முறைப்படி உறுதியுடன் கடைப்பிடித்து தொழுங்கள் ஜகாத்தும் கொடுத்து வாருங்கள். அல்லாஹ்வுக்கும்இ அவனுடைய தூதருக்கும் கீழ்படியுங்கள் (நபியின்) வீட்டையுடையவர்களே! உங்களை விட்டும் அசுத்தங்களை நீக்கி உங்களை

முற்றிலும் பரிசுத்தமாக்கிவிடவே அல்லாஹ் நாடுகிறான். (அஹ்ஸாப்: 40)

எனினும் இவ்வசனத்தின் உரைநடை பொண்பாலில் அமையாமல் ஆண்பாலிலேயே அமைந்துள்ளது. நபியவர்களின் மனைவிமார்களைக் குறிப்பதாக இருந்தால் அவ்வசனத்தின் வாக்கிய அமைப்பு பெண்பாலில் அல்லவா அமைந்திருக்க வேண்டும்? என சிலர் கூறுகின்றார். எனினும் இவ்வசனம் அதன் முன்னைய பகுதியோடு தொடர்புபட்டுள்ளது. அதாவது இதற்கு முன்னால் உள்ள பகுதி எதைக்கூறவந்ததோ அதைப் பூரணப்படுத்தும் முகமாகவே இவ்வசனமும் அமைந்துள்ளது. அது மாத்திரமல்லாதல் முன்னைய வசனத்தில் யாரை முன்னிலையாக அது வைத்ததோ அவர்களையே இவ்வசனமும் முன்னிலையாக வைக்கும்.

02- இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள அஹ்லுல் பைத் (நபியவர்களின் குடும்பம்) என்ற வாசகம் அலி﴾ﷺ﴿அவர்களின் குடும்பத்தினரைக் குறிப்பது போன்று நபியவர்களின் மனைவிமாரையும் குறிக்கும். இதை பின்வருகின்ற செய்தியின் ஊடாக விளங்கிக் கொள்ளலாம். “ஒரு முறை ஸைத் இப்னு அர்க்கம்﴾ﷺ﴿அவர்களிடம் நபியவர்களின் மனைவிமார்கள் அஹ்லுல் பைத்தினரைச் சார்ந்தவர்களா?.. எனக்கேட்கப்பட்டது. அதற்கவர்கள், ஆம் என்று கூறிவிட்டு எனினும் அஹ்லுல் பைத்தினருக்கு தர்மப் பொருட்கள் ஹராமாக்கப்பட்டுள்ளன. அவர்கள்: அலி﴾ﷺ﴿இன் குடும்பத்தினர், ஜ∴பர்﴾ﷺ﴿ இன் குடும்பம், அகீல்﴾ﷺ﴿இன் குடும்பத்தினர், அப்பாஸ்﴾ﷺ﴿இன் குடும்பத்தினர் என்று கூறினார்கள்.

ஆகவே ஒட்டு மொத்தமாகக்கூறினால், அஹ்லுல் பைத்தினரை நாம் அடையாளம் கண்டு கொள்வது மேற்குறிப்பிட்ட இறை வசனத்தின் அடிப்படையில் நபியவர்களளின் மனைவிமார்கள் என்றும், அவ்வசனம் இறக்கப்பட்டதன் பிறகு நபியவர்கள் செய்த பிராத்தனைக்குப்பிறகு அலி﴾ﷺ﴿அவர்களின் குடும்பத்தினர் என்றும், ஸைத் இப்னு அர்க்கம் ﴾ﷺ﴿அவர்களின் அறிவிப்பின் மூலமாக அப்பாஸ்﴾ﷺ﴿, ஜ∴பர்﴾ﷺ﴿, அகீல்﴾ﷺ﴿ போன்றோரின் குடும்பத்தினர் என்றும் விளங்கிக்கொள்ளலாம்.

03- ஷீஆக்கள் கூறுவது போன்று உண்மையிலேயே அவ்வசனம் அலி, பாத்திமா, ஹஸன், ஹுஸைன்﴾ﷺ﴿ஆகியோரையே குறிப்பிடுகின்றது, என்று எடுத்துக்கொண்டால் நபியவர்கள் எதற்காக அவ்வசனம் இறக்கப்பட்டதன் பிறகு இந்நாழ்வரையும் அழைத்து இவர்களும் எனது அஹ்லுல் பைத்தினர் தான் என மீண்டும் ஒரு முறை பிராத்திக்க வேண்டும். ஆகவே அவ்வசனம் நபியவர்களின் மனைவிமார்களை குறிப்பிட்டே அருளப்பட்டது, இப்பாக்கியத்தில் தனது மகளின் குடும்பத்தினரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசையிலேயே நபியவர்கள் அவ்வாறு பிரார்த்தனை செய்தார்கள்.

04- அல்லாஹ்வால் தூய்மைப்படுத்தப்படுதல் என்பது அலி﴾ﷺ﴿அவர்களின் குடும்பத்தினறிட்கு மாத்திரம் உரித்தியமான ஒன்றல்ல. ஏனைய மு∴மின்களும் அப்பாக்கியத்தைப் பெற்றுக்கௌள்ள முடியும் என்று அல்லாஹ் கூறுகிறான். அல்லாஹ் அவனது பாதையில் தர்மம் செய்பவர்கள் தொடர்பாகக் கூறும் போது

(நபியே!) அவர்களுடைய செல்வத்திலிருந்து தர்மத்திற்கானதை எடுத்துக் கொண்டு அதனால் அவர்களை உள்ளும் புறமும் தூய்மையாக்குவீராக இன்னும் அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வீராக நிச்சயமாக உம்முடைய பிரார்த்தனை அவர்களுக்கு (சாந்தியும்) ஆறுதலும் அளிக்கும் அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனகவும் அறிபவனாகவும் இருக்கின்றான். (தவ்பா: 103)

மேலும் பத்ர் ஸஹாபாக்கள் தொடர்பாகக் கூறும்போது:

(நினைவு கூறுங்கள்) நீங்கள் அமைதியடைவதற்காக அவன் சிறியதொரு நித்திரை உங்களை பொதிந்து கொள்ளுமாறு செய்தான் இன்னும் உங்களை அதன் மூலம் தூய்மைப்படுத்துவதற்காகவும் ஷைத்தானின் தீய எண்ணங்களை உங்களைவிட்டு நீக்குவதற்காகவும் உங்கள் இருதயங்களைப் பலப்படுத்தி உங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவதற்காகவும் அவன் உங்கள் மீது வானிலிருந்து மழை பொழியச் செய்தான்.

(அன்பால்: 11)

ஆகவே இவர்களையும் தூய்மைப்படுத்தப் பட்டவர்கள் என்று கூறி இவர்களையும் அலி(ரழி) அவர்களின் அந்தஸ்தில் உயர்த்துவதற்கு ஷீஆக்கள் அனுமதிப்பார்களா?.........

05- ஒருவரை விட்டும் அசுத்தங்கள் நீக்கப்பட்டால் என்பது அவரை ஆட்சிக்குத் தகுதியானவராக மாற்றிவிடாது. மாறாக எம்மை விட அல்லாஹ்வால் பெருமைப்படுத்தப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் அவர்கள் எம்மைவிட உயர்வானவர்கள், கண்ணியத்திற்கு உரியவர்கள், எம்மால் அதிகம் நேசிக்கப்படக்கூடியவர்கள்.

அல்லாஹ் கூறுகிறான்: இந்த நபி முஃமின்களுக்கு அவர்களுடைய உயிர்களைவிட மேலானவராக இருக்கின்றார் இன்னும் அவருடைய மனைவியர் அவர்களுடைய தாய்மார்களாக இருக்கின்றனர். (ஒரு முஃமினின் சொத்தை அடைவதற்கு) மற்ற முஃமின்களை விடவும் (தீனுக்காக நாடு துறந்த) முஹாஜிர்களை விடவும் சொந்த பந்துக்களே சிலரைவிட சிலர் நெருங்கிய (பாத்தியதையுடைய)வர்களாவார்கள் இது தான் அல்லாஹ்வின் வேதத்திலுள்ளது என்றாலும் நீங்கள் உங்கள் நண்பர்களுக்கு நன்மை செய்ய நாடினால் (முறைப்படி செய்யலாம்) இது வேதத்தில் எழுதப்பட்டுள்ளதாகும். (அஹ்ஸாப்: 06)

மேலும் இச்சிறப்பைக் காரணமாகக்கொண்டு நபிமார்களைப்போன்று பாவங்களில் ஈடுபடுவதை விட்டும் அப்பாட்பட்டவர்கள் என்றும் எடுத்துக் கொள்ளமுடியாது. மேலும் நாம் ேற்குறிப்பிட்ட வசனம் அவர்களின்

சிறப்பையும் அந்தஸ்தையுமே சொல்கிறதே தவிர அவர்களின் தலைமைத்துவத்தையோ ஆட்சிப்பொறுப்பையோ கூறவில்லை.

**02- விலாயா பற்றிய வசனம்:-** அல்லாஹ் கூறுகிறான்: நிச்சயமாக உங்களுக்கு உற்ற நண்பர்கள் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும். எவர் ஈமான் கொண்டு தொழுகையைக் கடைப்பிடித்து ஜகாத்தும் கொடுத்து (அல்லாஹ்வின் கட்டளைக்கு எந்நேரமும்) தலைசாய்த்தும் வருகிறார்களோ அவர்கள்தாம். (அல் மாயிதா: 55)

இந்த அல்குர்ஆனிய வசனத்தை ஷீஆக்கள் ஆதாரமாகக்கொள்வதற்கு பின்வரும் செய்தியை ஆதாரமாகக் கொள்கின்றனர். அதுமாத்திரமில்லாமல் இச்செய்தி ஷீஆக்களின் நூல்களில் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது. “அலி(ﷺ) ஒருமுறை தொழுகையில் ருகூவில் இருந்த நிலையில், ஒரு ஏழை அவரிடம் வந்து தர்மம் கேட்டார். அப்போது அலி (ﷺ)அவர்கள் தான் மோதிரம் அணிந்திருந்த கையை அந்த ஏழையின் பக்கம் நீட்டினார். அப்போது அவர் அந்த மோதிரத்தை எடுத்துக்கொண்டார். அந்த சந்தர்ப்பத்தில் அல்லாஹ் இந்த வசனத்தை இறக்கினான்” ஆகவே ருகூவில் இருந்த நிலையில் தர்மம் வழங்கியவர் அலி(ﷺ)அவர்கள் மாத்திரமே, எனவே இவர்தான் நபியவர்களுக்குப்பிறகு ஆட்சியாளராக வரத்தகுதியடையவர். எனக்கூறுகின்றனர்.

இவர்களின் இவ்வாதம் தவறு என்பதனை நாம் பின்வரும் வழிமுறைகள் மூலம் நிரூபிக்கலாம்

01- இவ்வாறு அலி(ﷺ)அவர்கள் தர்மம் செய்ததாக சொல்லப்படும் இச்செய்தி பொய்யான செய்தியாகும். ஷீயாக்களின் பொய்யான பிரச்சாரங்கள் செய்யும் நூல்களைத்தவிர வேறு எந்த நூல்களிலும் இது உறுதிப்படுத்தும் வகையில் வந்ததில்லை. மேலும் அலி(ﷺ)அவர்கள் இவ்வாறு பொய்யான செய்திகளினூடாக தான் புகழப்படுவதை விட்டும் தேவை அற்றவர்கள். அல்லாஹ் தொழுகையாளிகள் தொடர்பாகக் கூறுகிறான்:

ஈமான் கொண்டவர்கள் நிச்சயமாக வெற்றி பெற்று விட்டனர். அவர்கள் எத்தகையயோரென்றால் தங்கள் தொழுகையில் உள்ளச்சத்தோடு இருப்பார்கள்.

(முஃமினூன் -1,2)

நபியவர்கள் கூறுகிறார்கள்: “தொழுகையை பாலாக்கக்கூடிய சில விடயங்கள் இருக்கின்றன”
ஆக மொத்தத்தில் இவ்விரு செய்திகளும் தொழுகையில் இறை அச்சத்தோடு இருப்பதை சுட்டிக்காட்டுகின்றன. அலி(ﷺ)அவர்களைப் பொருத்தவரை அவர்அல்லாஹ்வை தொழுகையிலும் ஏனைய சந்தர்ப்பங்களிலும் அஞ்சக்கூடிய ஒருவர், அவர் எவ்வாறு இப்படி தொழுகைக்கு அப்பாட்பட்ட ஒரு காரியத்தை தொழுகையில் இருந்த நிலையில் செய்வார், தொழுகை

முடியும் வரை காத்திருந்து அதற்குப்பிறகு தர்மத்தை வழங்கி இருக்கலாம் இல்லையா?.......

முதல் விடயம் ஒரு மனிதன் தொழுகையில் அமைதியாக அல்லாஹ்வைப் பயந்த நிலையில் நிற்க வேண்டும், அதற்குப்பிறகே இவ்வாறான காரியங்களில் ஈடுபட வேண்டும்.

01- அலி(ﷺ)அவர்களைப் பொருத்தவரை அவர் நபியவர்கள் உயிரோடிருந்த காலபகுதியில் வறுமை நிலையிலேயே இருந்தார். அவர் பாத்திமா (ரழி) அவர்களைத் திருமணம் செய்து கொண்ட போது மஹர் தொகையாக அவர் வழங்கியது அவரிடம் இருந்த போர்க்கவசத்தை ஆகும். பெரும் செல்வத்தை அவர்கள் வழங்கவில்லை காரணம் அவர் ஏழ்மையிலேயே வாழ்ந்து வந்தார். ஆகவே தர்மம் (ஸகாத்) வழங்குவது அலி(ﷺ)அவர்களுக்கு கடைமையாக்கப்பட்ட ஒன்றல்ல.
02- இவ்வசனம் நிச்சயமாக தொழுகையில் ருகூவில் இருந்த நிலையில் தர்மம் வழங்குவதை புகழ்ந்து கூறவில்லை. அப்படி இருக்குமானால், ருகூவில் இருக்கும் நிலையில் தர்மம் வழங்குகின்ற அனைவரையும் இந்த ஷீஆக்கள் ஆட்சிக்குத்தகுதியானவர் என்று கூறுவார்களா?.........
03- இவ்வசனத்தில் ருகூ:. என்று கூறப்படுவது தொழுகையில் செய்யப்படுகின்ற ருகூவை அல்ல வார்த்தையைப்பார்க்கும் போது ஒன்றாக இருந்தாலும் விளக்கத்தின் அடிப்படையில் பாக்கின்ற பொழுது அவ்வாறு ருகூ:. எனச்சொல்லப்படும் வேறு ஓர் அர்த்தத்தை நாடுகிறது. தொழுகையில் இருந்தவாறு ருகூவில் தர்மம் செய்வதை இவ்வசனத்தில் அல்லாஹ் கூறவில்லை மாறாக ருகூ:. என்று இங்கு அல்லாஹ் சொல்வது **இறை அச்சத்தை** ஆகும். இதை அல் குர்ஆனின் வேறு வசனங்களின் மூலமாக விளங்கிக் கொள்ளலாம். அல்லாஹ் தாவூத் (அலை) பற்றி கூறும்போது:

(அதற்கு தாவூது) உமமுடைய ஆட்டை அவர் தம்முடைய ஆடுகளுடன் சேர்த்து விடும்படிக்கேட்டது கொண்டு நிச்சசமாக அவர் உம்மீது அநியாயம் செய்து விட்டார் நிச்சயமாகக் கூட்டாளிகளில் பெரும்பாலோர் - அவர்களில் சிலர் சிலரை மோசம் செய்து விடுகின்றனர் ஈமான் கொண்டு (ஸாலிஹான) நல்லமல்கள் செய்பவர்களைத் தவிர இத்தகையவர் சிலரே என்று கூறினார் இதற்குள் நிச்சயமாக நாமே அவரைச் சோதித்து விட்டோம் என்று தாவூது எண்ணித் தம்முடைய இறைவனிடம் மன்னிப்பு கோரிக்குனிந்து விழுந்தவராக இறைவனை நோக்கினார். (ஸாத்: 24)

இங்கு ருகூ:. எனும் வார்த்தை தொழுகையில் செய்யப்படும் ருகூவைக் குறிக்கவில்லை, மேலும் அல்லாஹ் கூறுகிறான்:
நீங்கள் குனிந்து வணங்குங்கள் என்று அவர்களிடம் கூறப்பட்டால் அவர்கள் குனிந்து வணங்கமாட்டார்கள். (முர்ஸலாத்: 47)

இவ்வசனத்திலும் ருகூ∴ என்னும் வார்த்தை தொழுகையில் செய்யப்படும் ருகூவைக் குறிக்கவில்லை. மேலும் அல்லாஹ் மர்யம் (அலை) பற்றி கூறும்போது கூறுகிறான்:

மர்யமே! உம் இறைவனுக்கு ஸுஜுது செய்தும் ருகூ∴ செய்வோருடன் ருகூ∴ செய்தும் வணக்கம் செய்வீராக (என்றும்) கூறினர். (ஆல இம்ரான்: 43)

ஆகவே மேற்குறிப்பிட்ட வசனங்களில் கூறப்பட்டுள்ள ருகூ∴ எனும் வார்த்தைகள் குறிப்பது, இறை அச்சம், பணிவு போன்றவற்றையாகும் இந்த அர்த்தத்திலேயே நாம் ஏளவே குறிப்பிட்ட அல் மாயிதா: 55வது வசனத்திலும் நாடப்பட்டுள்ளது.

04- ஷீஆக்கள் அலி(ﷺ)அவர்கள் விடயத்தில் இறங்கியதாக கூறும் அவ்வசனம் உண்மையிலேயே உபாதா இப்னு ஸாமித்(ﷺ)அவர்களின் விடயத்திலேயே இறங்கியது.
மதீனாவில் வாழ்ந்த பனூ கைனுகா என்ற கோத்திரம் நபியவர்களோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தை முறித்து அவருக்கு மாறு செய்தது, பிறகு அக்கோத்திரம் உபாதா இப்னு சாமித்(ﷺ)அவர்களிடம் சென்று அவரை தம்மோடு இணைந்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டனர் எனினும் யூதர்களோடு நட்புக்கொள்வதை விரும்பாத உபாதா(ﷺ)அவர்கள் அக்கோத்திரத்தோடு இணைந்து கொள்ளாமல் அல்லாஹ்வும் அவனது தூதருமெ தனக்கு முக்கியம் என்று கூறி மறுத்துவிட்டார் இச்சந்தர்பத்திலேயே நபியவர்களுக்கு இவ்வசனமும் அதற்கு முன்னைய வசனமும் இறக்கப்பட்டது. (தப்ஸீருத் தபரி: 6–178)

ஆகவே ஷீஆக்கள் அலி(ﷺ)அவர்கள் பற்றி இறங்கியதாக கூறி நபியவர்களுக்குப்பிறகு அவருக்கே ஆட்சிப்பொறுப்பு உரித்தானது என அவர்கள் வாதிட்ட வசனம் உபாதா இப்னு ஸாமித்(ﷺ)அவர்கள் விடயத்தில் இறக்கப்பட்டதாகும்.

**03-மன்ஸிலா தொடர்பான நபிமொழி:-** நபிகள் நாளகம் அவர்கள் தபூக் யுத்தத்திற்கு மதீனாவிலிருந்து சென்ற போது எவரையும் அப்போரில் சமூகமளிக்காமல் இருப்பதற்கு அனுமதிக்கவில்லை. எனினும் இந்நிலையில் 6 வகையினர் மதீனாவில் போரிற்குச் செல்லாமல் தங்கியிருந்தனர்.
01- நபியவர்களின் அனுமதியோடு மதீனாவில் தங்கியிருந்தோர்.
02- நோய், முதுமை, ஏழ்மை போன்ற காரணங்களால் மதீனாவில் தங்கியிருந்தோர்.
03- பெண்கள்.
04- சிறுவர்கள்.
05- நபியவரகளின் கட்டளையை ஏற்காது, அவர்களுக்கு மாறு செய்து போரிலிருந்து பின்வாங்கியோர்.
06- நயவஞ்சகர்கள்.

இந்த 6 வகையினர் மாத்திரமே போரில் கலந்து கொள்ளாமல் மதீனாவில் இருந்தனர். இவர்களில் அலி(ﷺ)அவர்கள் முதலாவது வகையைச்

சார்ந்தவராவார். அவரை நபியவர்கள் போரில் சமுகமளிக்காமல் இருக்க அனுமதி வழங்கினார்கள். எனினும் மதீனாவில் இருந்த நயவஞ்சகர்கள் சிலர் நபியவர்கள் அலியை மதீனாவில் இருக்கச் சொன்னது அவரிலிருக்கும் பலவீனத்தின் காரணமாகவே என மோசமாக கதைத்துக் கொண்டனர். இச்செய்தி அலி(ரழி) அவர்களுக்கு எட்டியபோது நபியவர்களை சந்திப்பதற்காக மதீனாவை விட்டு வெளிறேி அழுது கொண்டு சென்றார். நபியவர்களை சந்தித்து என்னை நீங்கள் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் மத்தியில் விட்டுச் செல்கிறீர்களா?.... எனக்கேட்டார். அப்போது நபியவர்கள் அவர்களை சமாதானப்படுத்தி “நீ என்னிடத்தில் மூஸாவிடம் ஹாரூன் இருந்த அந்தஸ்த்தில் இருக்க விரும்பவில்லையா?.. எனக்கேட்டார்கள். . (ஸஹீஹுல் புஹாரி: 3706)

இச்செய்தியை ஷீஆக்கள் ஆதாரமாகக் கொண்டு மூஸா (அலை) அல்லாஹ்வின் கட்டளைப்பிரகாரம் சென்றதன் பின்னர் அவருக்குப்பகரமாக ஹாரூன் (அலை) அவர்களே பொறுப்பில் இருந்தார்கள். ஆகவே நபியவர்கள் யுத்ததிற்கு சென்றபோது அலி (ரழி) அவர்களை மதீனாவின் பொறுப்பிற்கு நியமித்தது போன்று நபியவர்களின் இறப்பிற்குப் பிறகும் அவர்களே ஆட்சியாளராக வறத்தகுதியானவர் என்று கூறுகின்றனர். இது அவர்கள் இதற்கு வைத்த வாதங்களை விட சற்று பலமான ஒன்றாக இருப்பினும், இது தவறான வாதம் என்பதனை நாம் நிரூபிக்கலாம்.

01- மூஸா (அலை) அல்லாஹ்வின் கட்டளைப்பிரகாரம் சென்றதன் பிறகு ஹாரூன்(அலை) அவர்களின் பொறுப்பை வகித்தாலும், மூஸா (அலை) அவர்களின் மரணத்திற்குப்பிறகு அவர் அப்பொறுப்பை வகிக்கவில்லை ஏனெனில் மூஸா (அலை) மரணிப்பதற்கு முன்பே ஹாரூன் (அலை) அவர்கள் மரணித்து விட்டார்கள்.

02- மூஸா (அலை) அல்லாஹ்வின் கட்டளைப்பிரகாரம் சென்றதன் பிறகு ஹாரூன்(அலை) அவர்களுடன் படைப்பட்டாளங்கள், மற்றும் அனைத்து முஸ்லிம்களும் இருந்தன. ஆனால் நபியவர்கள் போரிற்காக சென்றதன் பிறகு அலி(ரழி) அவர்களோடு சிறுவர்களும் பெண்களும், நயவஞ்சகர்களுமே காணப்பட்டனர். ஆகவே அலி மற்றும் ஹாரூன் ஆகிய இருவருக்கும் மத்தியில் பல்வேறுபட்ட வித்தியாசங்கள் காணப்படுகின்றன.

03- நபியவர்கள் இச்செய்தியை அலி(ரழி) அவர்களுக்கு கூறியதற்கு ஒரு காரணம் இருந்தது அதாவது: அலி(ரழி) நயவஞ்சகர்களின் கூற்றைக் கேள்விப்பட்டே நபியவர்களிடம் இதுபற்றி முறையிடுவதற்காக வந்தார்கள். அப்போது நபியவர்கள் அவரின் உள்ளத்திலிருந்த கவலையை போக்கும் முகமாக அவ்வாறு கூறினார்கள். ஒருவேளை அலி(ரழி) இவ்வாறு முறையிட்டு வராவிட்டால் இவ்வார்த்தையை நபியவர்கள் கூறியிருக்க மாட்டார்கள். அவர் அவ்வாறு முறையிட்டு வந்ததன் காரணமாகவே நீ எண்ணுவது போன்றோ அல்லது முனாபிக்கள் சொல்லுவது போன்றோ நான் உம்மை விட்டுச் செல்லவில்லை, மூஸா (அலை) சென்றபோது ஹாரூன் (அலை) அவர்கள் மக்களைப் பாதுகாத்தது அவருக்கு எவ்வாறு இழிவாக அமையாதோ அதேபோன்றே உமக்கும் இது இழிவாக அமையாது, என்று கூறி அவர்களை சமாதானப்படுத்தினார்கள்.

ஏனெனில் மதீனாவிலிருந்த நயவஞ்சகர்கள் போரில் செல்லாது இருந்தவர்கள் அனைவரைப் பற்றியும் இவ்வாறு கூறவில்லை மாறாக, அலி(ﷺ)அவர்கள் பற்றி மாத்திரமே இவ்வாறு கூறினர். இதன் காரணமாகவே அவர்கள் மாத்திரம் சென்று முறையிட்டார்கள். அதுமாத்திரமில்லாமல் அலி((ﷺ)அவர்கள் முறையிட்டது போன்று மதீனாவில் தங்கியிருந்த இன்னொறு நபித்தோழர் இவ்வாறு முறையிட்டு இருந்தால் இதே வார்த்தையை அவருக்குக்கூறியிருப்பார் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. இதுபோன்று அலி(ﷺ)அவர்கள் இவ்வாறு நபியவர்கள் தன்னைப்போரிற்கு அழைத்துச்செல்லாமல் மதீனாவில் விட்டுச்செல்வது தனக்கு ஒரு இழிவாகவும், குறையாகவும் கருதியதால் நபியவர்களிடம் இதன் காரணத்தை வினவிச்சென்றார்கள். இதன்போதே நபியவர்கள் தான் அவரை விட்டுச்சென்றது முனாபிக்கள் பேசிக்கொள்வது போன்று அவரில் காணப்படும் குறைபாட்டிற்காகல்ல. மாறாக மூஸா (அலை) அவர்கள் ஹாரூன் (அலை) அவர்களை எந்த நிலையில் விட்டுச்சென்றார்களோ அந்நிலையிலேயே உம்மையும் விட்டுச்செல்கிறேன் என்று அவருக்கு விழங்க வைத்தார்கள்.

04- ஷீயாக்கள் சொல்வது போன்று நபியவர்கள் போரிற்குச்செல்லும் போது அலி(ﷺ)அவர்களிடம் மதீனாவின் பொறுப்புக்களை ஒப்படைத்துச்செல்ல வேண்டும். மாறாக அலி(ﷺ)அவர்களை தனது குடும்பத்தைப் பாதுகாப்பதற்காகவே அவரை விட்டுச்சென்றார். இவ்வாறே வரலாற்றாசிரியரான இமாம் இப்னு ஜரீர் அத்தபரி அவர்கள் கூறுகிறார்கள். அந்நேரத்தில் நபியவர்களுக்குப் பகரமாக மதீனாவின் பொறுப்புக்களை முஹம்மத் இப்னு மஸ்லமா(ﷺ)அவர்களே ஏற்றிருந்தார்கள். (பிதாயா வன்னிஹாயா: 5–6)

05- உண்மையிலேயே நபியவர்கள் அலி(ﷺ)அவர்களை தனக்குப்பகரமாக மதீனாவின் ஆட்சியாளராக நியமித்தார்கள் எனில் முனாபிக்கள் அவரை குறைகண்டு பேசியபோது நபியவர்களிடம் சென்று தன்னை விட்டுச்சென்ற காரணத்தை கேட்டிருக்க மாட்டார்கள். முனாபிக்களுடைய போச்சுக்களை அலட்சியம் செய்திருப்பார்கள். இவ்விடயத்தில் ஷீயாக்கள் சொல்வது போன்று நபியவர்கள் அலி(ﷺ)அவர்களை மதீனாவில் ஆட்சிப்போறுப்பிலே விட்டுச்சென்றார்கள் எனில் அலி(ﷺ)அவர்கள் விழங்காதொன்றை இவர்கள் விழங்கிக் கொன்டார்களா? என்ற கேள்வி எழுகிறது.

06- இந்நிகழ்வுக்குப்பிறகு நபியவர்கள் ஹிஜ்ரி 10ம்ஆண்டு ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்காக மக்காவிற்குச்செல்ல வேண்டிய நிலையேற்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் கூட அலி(ﷺ)அவர்களே நபியவர்கள் மதீனாவிற்குப் பொறுப்பாளராக அமர்த்தவில்லை.

07- அலி(ﷺ)அவர்களே நபியவர்கள் மூஸர் (அலை) அவர்களின் சகோதரன் ஹாரூன் (அலை) அவர்களுக்கு ஒப்பிட்டதாக கூறி இது அலி(ﷺ)அவர்களுக்கு மாத்திரமுள்ள சிறப்பு எனக் கூறுகின்றனர். ஆனால் நாம் வரலாற்றுப்பக்கங்களைப் பிரட்டுகின்ற போது ஹாரூன் (அலை) அவர்களை விடச்சிறந்தவரான மற்றும் உலுல் அஸ்மகளான இப்ராஹீம் மற்றும் ஈஸா (அலை) அவர்களுக்கு அபூ பக்கர்(ﷺ)அவர்களையும் நூஹ் மற்றும் மூஸா (அலை) அவர்களுக்கு உமர்(ﷺ)அவர்களையும் நபியவர்கள் ஒப்பிட்டுள்ளதைக் காணலாம். பத்ர் போர் முடிந்ததன் பிறகு அதில்

பிடிக்கப்பட்ட கைதிகளை என்ன செய்வதென்ற விடயத்தில் ஸஹாபாக்களிடத்தில் நபியவர்கள் ஆலோசனை கேட்ட போது அபூ பக்கர்(ﷺ)அவர்கள் அதற்கு அவர்களிடமிருந்து தெண்டப்பனத்தை வசூலித்து விட்டு அவர்களை விடுவித்து விடலாமென ஆலோசனை கூறினார்கள். ஆனால் உமர்(ﷺ)அவர்கள் கைதிகள் அனைவரையும் கொண்று விட வேண்டுமென்பதில் உறுதியாகயிருந்தார்கள். இச்சந்தர்ப்பத்திலேயே நபியவர்கள் அவ்விரு நபித்தோழர்களையும் இவ்வாறு ஒப்பிட்டார்கள்.

(முஸ்னத் அஹ்மத்: 01-383)

**04-தகலைன் தொடர்பான நபிமொழி:-** நபியவர்கள் கூறினார்கள்: "நான் உங்களுக்கு மத்தியில் (இரண்டு) விடயங்களை விட்டுச்செல்கிறேன், அவற்றை நீங்கள் பற்றிப்பிடிக்கும் காலமெல்லாம் ஒரு போதும் வழி தவறமாட்டேன். அல்லாஹ்வுடைய வேதமும் எனது குடும்பத்தினரும் ஆகும்" (திர்மிதி: 3786)

இந்த செய்தியை ஷீயாக்கள் ஆதாரமாகக்கொண்டு ஒரு மு.ஃமின் அவசியமாக நபியவர்களின் அஹ்லுல் பைத்தினரே பற்றிப்பிடித்துக்கொள்ள வேண்டும். அவர்களைப் பற்றிப்பிடித்தால் அவர்களே மு.ஃமின்னகள் மீது ஆட்சி செய்வதற்கு மிகத்தகுதியானவர்கள், எனக்கூறுகின்றனர்.

**இக்கூற்று தவறு என்பதை பின்வரும் வழிகள் மூலும் நிருபிக்கலாம்**

01- நாம் மேற்குறிப்பிட்ட நபியவர்கள் கூறியதாக சொல்லப்படும் செய்தி பல்வேறு நபர்கள் ஊடாக பல்வேறு வாசகங்களைக்கொண்டு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் திர்மிதி எனும் கிரந்தத்தில் இடம்பெற்றுள்ள இச்செய்தி பலவீனமான செய்தியாகும். இச்செய்தியை இமாம் முஸ்லிம் அவர்கள் தனது நூலில் உறுதிப்படுத்தப்பட்ட நபர்கள் ஊடாக அதனது சரியான வாசகத்தை பின்வருமாறு அறிவிக்கிறார்: ஸைத் இப்னு அர்கம்(ﷺ)அறிவிக்கிறார்கள்: "நபியவர்கள் ஒரு முறை எங்களுக்கு அல்லாஹ்வின் வேதத்தைப் பற்றிப்பிடிக்கும்படி ஆர்வமூட்டினார்கள். பிறகு அவர்களது குடும்பத்தினர் (அஹ்லல் பைத்தினர்) பற்றிக்கூறி அவர்கள் விடயத்தில் அல்லாஹ்வை உங்களுக்கு ஞாபகமூட்டுகிறேன் என்று 03 முறை கூறினார்" (ஸஹீஹுல் முஸ்லிம்: 2408)

இச்செய்தியின் அடிப்படையில் நபியவர்கள் பற்றிப்பிடிக்கும்படி கூறியது அல்லாஹ்வின் வேதத்தை மாத்திரமே, அஹ்லுலல் பைத்தினரைப்பொறுத்த வரையில் அவர்களுடைய உரிமைகளை வழங்கும்படியும் அவர்கள் விடயத்தில் அல்லாஹ்வை அஞ்ஞிக் கொள்ளும்படியும் உபதேஷம் செய்கிறார்கள்.

02- நபியவர்களின் அஹ்லுல் பைத்தினரைப்பொறுத்த வரையில் அவர்களின் மிக்க அறிவு ஞானமுடையவரையாக அலி(ﷺ)அவர்களே கருதப்படுகிறார்கள். இவர்களே தன்னை விட அபூ பக்கர் மற்றும் உமர்(ﷺ)அவர்களே சிறந்தவர்கள் எனக்கூறியுள்ளார்கள்.

(அபூ தாவூத்: 4607)

03- நபியவர்களின் அஹ்லுல் பைத்தினரை கணிப்பிட்டுப்பார்த்தால் அலி(ﷺ)அவர்களின் குடும்பத்தினர் மாத்தரிம் அதில் உள்ளடங்க மாட்டாது. மாறாக ஸகாத் பொருட்களைப் பெறுவது யாரின் மீது ஹராமாக்கப்பட்டுள்ளதென்று கூறப்பட்டுள்ளதோ அவர்கள் அனைவரும் அதற்குள் நுழைவர். ஆகவே இவர்கள் அனைவருடைய உரிமைகளைப் பாதுகாப்பது எமது கடமையாகும்.

**05-அலி(ﷺ)அவர்கள் என்னைச் சார்ந்தவர், நான் அவரைச் சார்ந்தவர்:-**
நாம் மேற்குறிப்பிட்ட செய்தி நபியவர்கள் கூறியதாக (ஸஹீஹுல் புஹாரி: 2699) என்ற இலக்கமிடப்பட்ட செய்தியாகும். இச்செய்தி அபூ இஸ்ஹாக் அஸ்ஸபீயி என்பவர் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இவர் தொடர்பாக அறிஞர்கள் மத்தியில் பல்வேறுபட்ட விமர்சனங்கள் காணப்படுகின்றன. இவர் ஹதீஸ்களை அறிவிக்கும் போது (ஹத்ததனா) என்ற வார்த்தை கூறி அறிவித்தால் அச்செய்தியை ஏற்றுக்கொள்ளலாம் என்று ஏகோபித்த முடிவு காணப்படுகின்றது. இமாம் அபூ இஸ்ஹாக் அல் ஜுஸ்ஜானி என்பவர் கூறுகிறார்: “கூபா வாசிகளில் தலைமைத்துவப்பதவியை அபூ இஸ்ஹாக், அல் அஃமஷ் போன்றோர் காணப்பட்டனர். எனினும் இவர்களது கொள்கைகள் மக்கள் மத்தியில் மதிக்கப்படவில்லை. எனினும் இவர்கள் கூறுகின்ற ஹதீஸ்களை மக்கள் உண்மைப்படுத்தினர்.
(தஹ்தீபுத் தஹ்தீப்: 08-66)
இச்செய்தி நபியவர்களைத்தொட்டு அறிவிக்கப்பட்ட செய்திதான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எனினும் இதை விழங்குகின்ற விதத்திலேயே முரன்பாடு காணப்படுகின்றது. அலி(ﷺ)அவர்கள் நபியவர்களைப் பின்பற்றுகின்ற விடயத்தில் அவர்களைச்சார்ந்தவர்களே இதேபோன்று நபியவர்களை பின்பற்றக்கூடிய சிலருக்கு அலி(ﷺ)அவர்களுக்குக் கூறியது போன்று கூறியள்ளார். உஹத் போரின்போது நபியவர்கள் ஜுலைபீப் என்ற நபித்தோழரை தேடும்படி ஸஹாபாக்களுக்கு கட்டளையிட்டார்கள். அப்போது அவர் கொல்லப்பட்டுள்ளதை கண்ணுற்ற அவர்கள் அவரைச்சூழ 07 நிராகரிப்பாளர்கள் கொல்லப்பட்டுள்ளதையும் அவதாணித்தார்கள். அப்போது: “இவர் 07 நிராகரிப்பாளர்களைக் கொன்றார். அவர்களும் இவரைக்கொன்றார்கள். ஜுலைபீப் என்னைச் சார்ந்தவர் நான் அவரைச் சார்ந்தவர்” என்று கூறினார். (ஸஹீஹுல் முஸ்லிம்: 2472)

நபியவர்கள் அஷ்அரி கோத்திரத்ததைப் பற்றிக்கூறுகின்றபோது அவர்கள் என்னைச் சார்ந்தவர்கள் நான் அவர்களைச்சார்ந்தவன் என்று கூறினார்கள்.(ஸஹீஹுல் முஸ்லிம்: 2500)

இவ்வாறு நபியவர்கள் அலி(ﷺ)அல்லாத வேறு நபர்களை சுட்டிக்காட்டி பல முறை கூறியுள்ளார்கள். ஆகவே நபியவர்கள் அலி(ﷺ)கூறியது அவரை நபியவர்களுக்கு அடுத்த ஆட்சியாளராக எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்கு ஆதாரமாகக்கொள்ள முடியாது. ஆகவே அலி(ﷺ)என்னைசசார்ந்தவர் நான் அவரைச்சார்ந்தவர் என்ற வாசகம் நபிகள் நாயகம் மற்றும் அவருக்கும் இடையிலான நேசத்தையும் ஒற்றுமையையும்

உதவுகின்ற மனப்பான்மையையும் குறிக்கின்றது. அது மாத்திரமல்லாமல் நபியவர்களுக்கும் அலி(ரழி) அவர்களுக்குமிடையிலான உறவு சிறு பராயத்திலிருந்து தோன்றியதாகும். மேலும் நபியவர்கள் புதல்வியை திருமணம் செய்தவரும்கூட. இந்தளவுக்கு நெறுக்கமாக இருக்கின்ற இருவருக்கு மத்தியில் இவ்வாறான நேசத்தை வெளிக்காட்டும் வார்த்தைகள் வெளிவருவது சகஜமாகும். ஆகவே இதை வைத்துக்கொண்டு ஆட்சியுரிமையென்றோ அதிகாரமென்றோ கூறமுடியாது.

**06-நான் அறிவின் நகரமாவேன், அலி அதனது வாயிலாவான்:-** இந்த செய்தியை ஷீயாக்கள் ஆதாரமாகக்கொண்டு நபியவர்களின் அறிவிற்கு வாயிலென வர்ணிக்கப்பட்ட அலி(ரழி)அவர்களே ஏனைய மனிதர்களை விட சிறப்பானவர் என்ற வாதத்தைக் கூறுகின்றனர். **முதலில்** இந்த செய்தி ஹதீஸ் நூற்களில் இடம் பெற்றிருப்பினும் இதன் உருதித்தன்மையில் நம்பகமின்மை காணப்படுகிறது. இந்த செய்தியை அறிஞர்கள் இதன் அறிவிப்பாளர் வரிசை ரீதியாகவும் செய்தியுடைய வாசக ரீதியாகவும் விமர்சித்துள்ளனர்.

✓ **அறிவிப்பாளர் வரிசை** இச்செய்தி இமாம் ஹாகிம் அவர்கள் தனது நூலிலி இப்னு அப்பாஸ்(ரழி)அவர்களைத் தொட்டும் இரண்டு வழிகள் மூலமாக அறிவிக்கிறார்கள்.

01- அபு ஸல்த் அல்ஹர்வி இவர் தொடர்பாக பல அறிஞர்கள் விமர்சித்துள்ளார்கள். இமாம் அபு ஹாதம் அவர்கள் கூறுகிறார்: இவர் என்னிடத்தில் உண்மையாளர் அல்ல. இமாம் உகைலி கூறுகிறார்: இவர் ஒரு மோசமான ஷீயா ஆவார். இமாம் இப்னு அலி அவர்கள் கூறுகிறார்: இவர் சந்தேகப்படப்பட்டவர் ஆவார்.

02- இதன் அறிவிப்பாளர் வரிசையில் 02வது நபராக முஹம்மத் இப்னு அஹ்மத் இப்னு ஹகீம் என்பவர் இடம் பெறுகிறார். இவர் ஹதீஸகளை அறிவிப்பதில் பலமானவர் அல்ல என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

03- இதன் அறிவிப்பாளர் வரிசையில் அடுத்ததாக ஹஸன் இப்னு பஹ்ம் என்பவர் இடம் பெறுகிறார். இவர் பலவீனமானவர் என விமர்சிக்கப்பட்டுள்ளார்.

மேலும் இந்த செய்தியை பல அறிஞர்களும் பலவீனப்படுத்தியுள்ளனர். இமாம் புஹாரி அவர்கள் கூறுகிறார்: இந்த செய்திக்கு சரியான ஒரு வடிவம் இல்லை.

(மகாஸிதுல் ஹஸனா: 170)

இமாம் அபு ஹாதம்: இதுவொரு அடிப்படையில்லாதொரு செய்தியாகும்.

(கஷ்புல் கபா: 01-235)

இமாம் தாரகுத்னி: இந்த செய்தி உறுதியில்லாத இருட்டடிப்பிற்கு உட்பட்ட ஒன்றாகும்.

இமாம் அல்பானி, இப்னு தைய்மிய்யா, தஹபி, நவவி: இது இட்டுக்கட்டப்பட்ட செய்தியாகும்.

**செய்தியின் வாசகம்:** இந்த செய்தி பலவீனமானதென அறிவிப்பாளர் வரிசையில் மட்டுமல்லாது இச்செய்தியின் வாசகத்தின் மூலமாகவும் விமர்சிக்கப்பட்டுள்ளது.

01- ஒரு அறிஞர் தனதறிவைப்பற்றி கூறுகின்றபோது ஒரு வரையறுக்கப்பட்ட அம்சத்தை ஒப்பிட்டு கூறமாட்டார்கள். தன்னை ஓர் அறிவுக்கடல் என்றோ அறிவின் விசாலம் என்றோ கூறுவர். இந்த செய்தியில்

சொல்லப்பட்டுள்ளது போல் அறிவு நகரம் என்ற வார்த்தை அவ்வறிவு மட்டிடப்பட்டதை என்பதை சுட்டிக்காட்டுகிறது. இதில் சொல்லப்பட்டுள்ளது போல நபியவர்களின் அறிவின் கதவாக அலி (ரழி) இருந்திருந்தால் அந்த இடத்தில் சிறப்புள்ளது போன்றும் நபியவர்களைவிட அவரே முதிர்ச்சியானவர் என்றும் என்ன தோன்றுகிறது?

02- ஒரு விடயத்திற்க வாயில் போடப்பட்டால் அவ்வாயிலைத் தாண்டி எவருமே உட்செல்ல முடியாது. இங்கு நபியவர்களின் அறிவிற்கு அலி(ரழி)அவர்கள் வாயிலாக இருக்கும் நிலையில் அவரின் எதிரியான ஆயஷா, அபூ பக்கர், உமர் போன்றவர்கள் அவ்வறிவைப் பெற்றுக்கொண்டார்கள்.

## 06-ஹதீதுல் இன்தார்:-

நபி (ஸல்) அவர்களுக்கு நபிப்பட்டம் கிடைக்கப்பெற்ற ஆரம்ப காலப்பகுதியில் குரைஷிகளுக்கு ஓர் வருந்துபசாரத்தை நிகழ்த்தினார். அதில், அங்கு வந்தோரிடம் அலி (ரழி)அவர்களை சுட்டிக்காட்டி: "நிச்சயமாக இவர் எனது சகோதரர் எனது வஸிய்யத்திற்கு சொந்தக்காரரும், எனக்குப்பிறகு வரப்போகினற கலீபாவும் ஆவார். ஆகவே, இவருக்கு நீங்கள் செவிசாயுங்கள், கட்டுப்படுங்கள்" என்று கூறினார்களாம். மேலும் அவ்விருந்தில் பனூ அப்தில் முத்தலிப் கோத்திரத்தில் இருந்து 40 பேர் வந்திருந்தனர். என்றவாறு அச்செய்தி கூறுகிறது. எனினும் இச்செய்தி ஓர் பலவீனமான செய்தியாகும், செய்தியின் அறிவிப்பாளர் வரிசை ஊடாகவும், செய்தியின் வாசகம் முலமாகும் பல விமர்சனங்களுக்கு உட்பட்டுள்ளது.

**அறிவிப்பளர் வரிசை:-** இதன் அறிவிப்பாளர் வரிசையில் அப்துல் கப்பார் இப்னு அல் காஸிம் என்ற ஒரு நபர் இடம் பெற்றுள்ளார். இவர் அறிஞர்களால் பல்வேறு விமர்சனங்களுக்கு உட்பட்டவர் ஆவார். இமாம் இப்னு கதீர் (ரஹ்) கூறுகிறார்:- இச்செய்தியை இவர் மாத்திரமே அறிவிக்கிறார். (அல் பிதாயா வன்னிஹாயா: 3 – 37)

இமாம் இப்னு அல் மதனி (ரஹ்) கூறுகிறார்கள்:- இவர் ஹதீஸகலை இட்டுக்கட்டக்கூடியவர்.

(மீஸானுல் இ∴திதால்: 2 - 328)

இமாம் அபூ ஹாதம் மற்றும் இமாம் நஸாயி கூறுகிறார்கள்:- இவர் ஹதீஸ்களில் விடப்பட வேண்டியவர்.

**இச்செய்தியின் வாசகம் :-** இச்செய்தியை மேலோட்டமாக வாசக்கும்போதே இது இட்டுக்கட்டப்பட்ட ஓர் செய்தி என்பதை விளங்கிக்கொள்ளலாம். **அவற்றில்:-**

✓ இச்செய்தியில் பனு அப்தில் முத்தலிப் கோத்திரத்தை சார்ந்தோர் 40 பேர் கலந்து கொண்டதாக கூறப்படுகிறது. இது பொய்யான் எண்ணிக்கையாகும் ஏனெனில் அவர்கள் அக்காலப்பகுதியில் 40 பேர் என்ற அளவைக்கூட எட்டவில்லை. மிகவும் குறைவான தொகையினரே அக்கோத்திரத்தில் காணப்பட்டனர். அவர்களது எண்ணிக்கை பின்வருமாறு:-

அபூ தாலிப்-அபூ லஹப்-அல் கய்தாக்-குதம்-ஹஜ்ல்-அல் மகூம்-ழிரார்-அப்பாஸ்-ஹம்ஸா– அபதுல் க.ஃபா-ஸுபைர்-அப்துல்லாஹ்-ஹாரித். இவர்களே அந்நேரத்தில் பனு அப்தில் முத்தலிப் கோத்திரத்தைச் சார்ந்தோராகக் கருதப்பட்டனர். இன்னும் சற்று ஆய்வு செய்து அவர்களின் பிள்ளைகளைப்பார்த்தால்:-

ஹம்ஸா:- இவருக்கு சிறு பிள்ளைகள் காணப்பட்டனர்.

அப்பாஸ்:- இவருடைய மூத்த பிள்ளை பழ்ல் ஆவார். என்னும் இவர் பிறந்தது நபிப்பட்டம் கிடைத்து 5 ஆண்டுகளுக்கு பிறகே ஆகும்.

அபூ தாலிப்:- இவரிற்கு 4 பிள்ளைகள் காணப்பட்டனர். (அலி–தாலிப்-அகீல்-ஜ.ஃபர்)

அபூ லஹப்:- இவனுக்கு 3 பிள்ளைகள் இருந்தனர் (உத்பா–உதைபா–முஅத்தப்)

அல் கய்தாக்:- இவருக்கு பிள்ளைகள் இல்லை.

குதம்:- இவரது பிள்ளைகள் சிறு வயதிலே இறந்து விட்டனர்.

ஹஜ்ல்:- முர்ரா என்ற ஒருவர் இருந்ததாக கூறப்படுகிறது.

அல் மகூம்:- இவரிற்கு ஆண் பிள்ளைகள் இருந்ததில்லை.

ழிரார்:- இவரிற்கு பிள்ளைகள் இல்லை.

ஹாரித்:- இவரிற்கு 7 பிள்ளைகள் இருந்தனர். இவர்கள் அனைவரையும் எண்ணிப்பார்த்தால் கூட அச்செய்தியில் சொல்லப்பட்டது போல் 40 என்ற எண்ணிக்கையை அவடையாது, அப்படியானால் அச்செய்தியில் கூறப்பட்ட 40 பேர் எங்கே?......

மேலும் அவ்விடத்தில் நபியவர்கள் அபூ தாலிப் அவர்களுக்கு நீர் உமது பிள்ளைக்கு கட்டுப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது. எனினும் அபூ தாலிபைப் பொருத்தவரை அவர் இஸ்லாத்தை எத்திவைத்த அடிப்படையான நபியவர்களுக்கே செவிசாய்க்கவில்லை பிறகு எவ்வாறு அவர் நபியவர்களை வயதில் சிறிய ஒருவருக்கு செவிசாய்ப்பார்!!??..

## நபிகள் நாயகத்திற்குப் பிறகு மனிதர்களிளே மிக வீரமானவராக காணப்பட்டார்

ஸஹாபாக்கள் மத்தியிலே அலி(ரலி)அவர்கள் வீரமான ஒருவர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அவர் அல்லாஹ்வின் சிங்கம் எனப்போற்றப்பட்டவர் ஆவார். அது மாத்திரமல்லாமல் எதிரிகளுக்கு சவால் விடுக்கக் கூடியவராகவும் இருந்தார். எனினும் இந்த வீரம் அனைத்து ஸஹாபாக்களை விடவும் இவரை முற்படுத்தமா! என்பதை இங்குள்ள முக்கிய பிரச்சினையாகும். பொதுவாக வீரத்தை 02 வகையாக நோக்கலாம்.

01- மனஉறுதி மற்றும் நிலையான தன்மை.
02- உடல் ரீதியான பலம்.

இவ்விரண்டில் முதலாவதைப் பொருத்தவரை இஸ்லாத்தின் அடிப்படையில் அதுவே உண்மையான வீரமாக கருதப்படும். இரண்டாவதைப் பொருத்தவரை அது உடல் பலத்தை மாத்திரமே சுட்டிக்காட்டும். அதேபோன்று உடல் ரீதியாக பலம்பெற்ற அனைவரும் மனஉறுதியுடையவர் என்று கூற முடியாது. இதன் காரணமாகவே உடல் ரீதியான பலம் பெற்ற அதிகமானோர் தங்களோடு ஒரு கூட்டத்தார் தம்மை

காப்பதற்கு இருக்கும் நிலையில் அதிகமாக போராடுவதை பார்க்கலாம். அதேவேளை அவர் மாத்திரம் அவ்விடத்தில் இருக்கும்போது அவர் கோழையாகிப் போவதை அவதானிக்கலாம். ஆனால் உள்ளத்தில் அதிக மனஉறுதி கொண்டவர் அதிகமாக போராடவிட்டாலும் சில நேரங்களில் அவர் தனித்து நின்றாலோ அல்லது ஒரு கூட்டத்தாரோடு நின்றாலோ எப்போதுமே மனம் தளராதிருப்பதை காணலாம்.

இது போரில் தலைமை தாங்குகின்ற தளபதிகளுக்கு இருக்க வேண்டிய முக்கிய பங்குகளில் ஒன்றாகும். இது போன்றே நபிகள் நாயகம் அவர்களும் அதிக மனஉறுதி கொண்டவராவார். போர்களில் அவர் அதிகமானோரை வீழ்த்தா விட்டாலும் போரிற்கான தந்திரங்களை வகுப்பதிலும் போர் வீரர்களை வழி நடாத்துவதிலும் அதிக மன உறுதியோடு செயற்பட்டார். நாம் வரலாறுகளைப் படிக்கும்போது நபிகள் நாயகம் அவர்களால் போரில் வீழ்த்தப்பட்ட நபர்களை கண்ணுற்றால் **உபைய் இப்னு கலப்** என்ற ஒருவர் மாத்திரமே அவர்களால் கொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். நபியவர்கள் உடல் மற்றும் உள ரீதியாக பலம் பெற்றிருந்தாலும் போர்களில் மற்றவர்களை வீழ்த்துவதை விட போர் வீரர்களுக்கு உற்சாகம் ஊட்டுகின்ற விடயத்தில் மனஉறுதியோடு செயற்பட்டுள்ளார். இது மாத்திரமல்லாமல் பத்ர் கலத்தை நாம் சற்று வாசித்துப்பார்த்தால் அலி(ﷺ)மற்றும் வேறு சில ஸஹாபாக்கள் நபியவர்களைக் கொண்டு தங்களைக்காத்துக் கொண்டதைப் பார்க்கலாம். (பிஹாருல் அன்வார்: 16-232)

எனினும் நபியவர்களுக்குப்பிறகு அபூ பக்கர்(ﷺ)அவர்களே வீரமான ஒரு நபித்தோழர் ஆவார். ஏனெனில் நபியவர்கள் ஒரு ஆட்சியாளராக மாத்திரமல்லாமல் ஒரு தளபதியாகயிருந்து நேரடியாக எந்தளவுக்குப் பிரச்சினைகளை முன்னோக்கினார்களோ அதேயளவு பிரச்சினைகளை அபூ பக்கர்(ﷺ)அவர்கள் முன்னோக்கினார்கள். மதீனாவில் ஹிஜ்ரத் மேற்கொண்ட போதும் அதற்குப்பிறகும் தன்னை அர்ப்பணித்து நபியவர்களைப் பாதுகாத்துள்ளார். பத்ர் யுத்தத்தில் இணைவைப்பாளர்கள் நபியவர்களை கொல்வதற்கு எண்ணுகிறார்கள் என்ற செய்தி கேள்விப்பட்டவுடன் உடனடியாக நபியவர்களைப் பாதுகாப்பதற்கு வந்து விட்டார்கள். அதேபோன்று அலி(ﷺ)அவர்களை விட காலித் இப்னு வலீத், பரா இப்னு மாலிக் போன்ற ஸஹாபாக்கள் பத்ர்கலத்தில் அதிகமானோரை வெட்டி வீழ்த்தியுள்ளார்கள்.

### மனிதர்களிலேயே மிக அறிந்தவர்

ஒரு நபித்தோழரின் அறிவின் ஆழத்தை 02 வழி முறைகள் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

01- மார்க்கத் தீர்ப்புக்கள் வழங்குவதில் தவறிழைக்காமவல் இருத்தல்.
02- நபிகள் நாயகத்தோடு அதிகமான தொடர்புகளை வைத்திருத்தல்.

**முதலாவது விடயமான**:- மார்க்கத் தீர்ப்புக்கள் வழங்குவதில் தவறிழைக்காமல் இருப்பது என்பதைப் பொருத்தவரை அபூ பக்கர்(ﷺ)அவர்கள் எந்த விடயத்திலும் தீர்ப்பு வழங்குவதில் தவறிழைத்ததாக நாம் அறியவில்லை. அவர் வழங்கிய தீர்ப்புக்களில்

ஏனைய ஸஹாபாக்கள் முரண்பட்டிருப்பின் அம்முரண்பாட்டை அவர் நீக்கியுள்ளார். அது மாத்திரமல்லாமல் அலி, உமர் மற்றும் உதுமான்﵃ஆகிய ஸஹாபாக்கள் தீர்ப்புக்கள் வழங்குவதில் தவறிழைத்தும் உள்ளார்கள், முரண்பட்டும் உள்ளார்கள். இமாம் ஷாபி (ரஹ்) அவர்கள் தனது நூலான அல்உம் என்ற நூலில் அலி மற்றும் இப்னு மஸ்ஊத் ஆகியவர்களுக்கும் மத்தியிலுமான முரண்பாடு என்ற தலைப்பிலான ஒரு பகுதியினை இணைத்துள்ளார்கள்.

**இரண்டாவது விடயமான:-** நபிகள் நாயத்தோடு அதிகமான தொடர்புகளை வைத்திருந்தவராக அபூபக்கர்﵁அவர்களே கணிக்கப்படுகிறார்கள். அதன் காரணமாகவே நபியவர்கள் தான் நோயுற்றிருந்த காலப்பகுதியில் அவர்களை தொழுகையை நடாத்துமாறும் ஹஜ்ஜிற்கு தலைமை தாங்குமாறும் பணித்தார்கள். இமாம் மன்ஸூர் அஷ்ஷம்ஹானி அவர்கள்: அலி ﵁அவர்களை விட அபூ பக்கர்﵁அவர்களே அறிவில் கூடியவர் என்ற ஏகோபித்த முடிவை குறிப்பிட்டுள்ளார்கள். (மின்ஹாஜுஸ் ஸுன்னா: 07-502)

## நபியவர்களுக்கு உறவால் மிக நெறுங்கியவர்கள்

நபியவர்களுடனான நெறுங்கிய உறவு ஒருவரை சிறப்பாக கருதினாலும் அல்லாஹ்விடம் அவர் முட்படுத்தப்படுவதற்கு உறவு மாத்திரம் போதாது. அவ்வாறு உறவு மாத்திரம் போதுமாக இருப்பின் அலி﵁அவர்களை அபுலஹபே முட்படுத்தப்பட்டவனாக கணிக்கப்படுவான். ஏனெனில் அவனே நபியவர்களுக்கு நெறுங்கிய உறவுடையவன் ஆவான். பரம்பறை ரீதியாக பார்க்கப்போனால் அலி﵁அவர்களை விட அப்பாஸ்﵁அவர்களே மிக நெறுக்கமானவர் ஆவார். அது மாத்திரமல்லாமல் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ், ஜ:.பர், பழ்ல் இப்னு அப்பாஸ், அகீல் போன்ற நபித் தோழர்கள் அனைவரும் அலி﵁ அவர்களுடைய அதே அந்தஸ்த்தை உடையவர்களாவர். ஒரு வேளை குலபவுர் ராஷிதீன்கள் மூவரை விட அலி﵁அவர்கள் நபியவர்களுடன் நெறுங்கிய உறவுடையவர் என்று கூறுவது சரியாக இருந்தாலும் இவ்வுறவு ரீதியான நெறுக்கம் ஆட்சிக்குத் தகுதியுடைவராக மாற்றாது.

## இஸ்லாத்தில் முதலில் இணைந்து கொண்டவர்

நபிகள் நாயகம் அவர்களுக்கு நபிப்பட்டம் வழங்கப்பட்டபோது அலி﵁அவர்கள் 08 வயதுடைய சிறுவராக இருந்தார். அதேபோன்று சிறுவர்களில் முதலாவதாக இஸ்லாத்தில் இணைந்து கொண்டவராகவும் கணிக்கப்படுகிறார். இதேபோன்று அபூபக்கர்﵁அவர்கள் பெரியவர்களின் முதலாவதாக இஸ்லாத்தில் இணைந்து கொண்டவராகவும், கதீஜா (ரழி) அவர்கள் பெண்களின் முதலாவது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவராகவும் கணிக்கப்படுகின்றார். நபித்துவத்தின் ஆரம்ப கட்டத்தில் அலி﵁அவர்கள் சிறு பராயத்தில் இருந்ததன் காரணமாக, அபூபக்கர்﵁அவர்கள் மூலம் அடைந்து கொண்ட உதவிகள் போன்று, அலி﵁அவர்கள் மூலம் பெற்றுக்கொள்ள முடியவில்லைவில்லை. மேலும் உதுமான், தல்ஹா,

ஸுபைர், ஸ.்.த், அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப் போன்ற பெரும் ஸஹாபாக்கள் அபூ பக்கர்(ﷺ)அவர்களின் மூலமே இஸ்லாத்தில் இணைந்து கொண்டனர்.

### ஒரு போதும் சிலைகளுக்கு சிரம் பணிந்ததில்லை

அலி(ﷺ)அவர்கள் எதுவித சிலைகளுக்கும் சிரம் தாழ்த்தவில்லை என்பதில் எவரும் முரண்பட்டதில்லை. சிறுவயதிலிருந்தே நபிகளாரின் வீட்டில் வளர்ந்த ஒருவர் எவ்வாறு சிலைகளுக்கு சிரம் பணிந்து இருப்பார். அனைவரும் அறிந்த ஓர் செய்திதான் நபியவர்களின் சிறிய தந்தை அபூ தாலிப் கடுமையான வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்த காலப்பகுதியில் நபியவர்களும் மற்றும் அப்பாஸ், ஹம்ஸா(ﷺ)ஆகிய மூவரும் அபூ தாலிப் அவர்களிடம் சென்று தங்களது பிள்ளைகளில் மூவரை தங்கள் ஒவ்வொருவரிடமும் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொண்டனர். அதற்கினங்க நபியவர்கள் அலி(ﷺ)அவர்களை பெறுப்பேற்கிறார் அந்நேரத்தில் அவர் நான்கு வயதுடையவராக இருந்தார். இந்தளவு சிறுவயதில் இருப்பவர் எவ்வாரு சிலைகளுக்கு சிரம் பணிவார். அலி(ﷺ)அவர்களைப் போன்றே அபூபக்கர்(ﷺ)அவர்களும் ஜாஹிலிய்யா காலத்தில் சிலைகளை வணங்கியதில்லை. இவ்வாறே இப்னு உமர், இப்னு அப்பாஸ், இப்னு ஸுபைர் போன்ற சிறிய நபித்தோழர்களும் ஒருபோதும் சிலைகளை வணங்கியது இல்லை.

அது போன்றே நாமும் இதுவரை காலமும் எதுவித சிலையையும் வணங்கியதே இல்லை. இதை அடிப்படையாக வைத்து நாமும் கிலாபத் பொறுப்பிற்கு தகுதியானவர் எனக் கூறமுடியுமா?....... ஆகவே இதை வைத்து கிலாபத்தை ஒருவருக்கு சொந்தமாக்கிக் கொள்ள முடியாது.

### ஷீஆக்களிடத்தில் ஏகத்துவம்

**தவ்ஹீத் அர்ருபூபிய்யா:-** தவ்ஹீத் அர்ருபூபிய்யா என்பது இவ்வுலகத்தை ஆளுதல் மற்றும் திட்டமிடுதல், பரபாலித்தல், உணவழித்தல், உயிர்ப்பித்தல், மரம் அடையச்செய்தல் போன்ற விடயங்களில் அல்லாஹ் மாத்திரமே சகல ஆற்றலும் சக்தியும் உள்ளவன் என்று அவனை ஏகத்துவப்படுத்தலைக் குறிக்கிறது. இதை அல்லாஹ் அல்குர்ஆனில் பல்வேறுபட்ட இடங்களில் தெளிவாகக் குறிப்படுகிறான்.

இன்னும், வானங்களுடையவும், பூமியினுடைய ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது! அல்லாஹ்வின் பாலே அனைவரின் திரும்பிச்செல்லுதல் இருக்கிறது. (ஸுரா அந்நூர்: 42)

நிச்சயமாக உங்கள் இரட்சகன் அல்லாஹ்தான்: அவன் எத்தகையவனென்றால் வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான்: பின்னர் (தன் கண்ணியத்திற்குத் தக்கவாறும், மகத்துவத்திற்குரியவாறும் அர்ஷின் மீது இருப்பது அவனுக்கு எவ்வாறு தகுமோ அவ்வாறே) அவன் அர்ஷின் மீது உயர்ந்து (நிலைபெற்று) விட்டான்: அவனே இரவால் பகலை மூடுகிறான். அது தீவிரமாக அதனைப்பின்

தொடர்கிறது: இன்னும் சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும தன் கட்டளைக்கு வயப்படுத்தப்பட்டதாகப் (படைத்திருக்கிறான்) படைத்தலும், கட்டளையும் அவனுக்கே உரியதெனத்தெரிந்து கொள்ளுங்கள்: அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ் மகத்துவமுடையவனாகிவிட்டான்.

(ஸுரா அல் அ.்.ராப்: 54)

பூமியும், அதிலுள்ளவையும் யாருக்குரியதென நீங்கள் அறிந்திருந்தால் கூறுங்கள்! என்று (நபியே) நீர் கேட்பீராக! (84)

அ(தற்க)வர்கள், "அல்லாஹ்வுக்கே உரியன" என்று கூறுவபர்கள்: "அவ்வாறாயின் அல்லாஹ்தான் வணக்கத்திற்குரியவன் என்பதை நீங்கள் நினைத்துப்பார்க்க மாட்டீர்களா?" என்று (நபியே) நீர் கூறுவீராக! (85)

(அன்றி) "ஏழு வானங்களின் இரட்சகனும், மகத்தான அர்ஷின் இரட்சகனும் யார்?" என்று (நபியே) நீர் கேட்பீராக! (86)

அ(தற்க)வர்கள் (அவை யாவும்), "அல்லாஹ்வுக்கே உரியன" என்று கூறுவார்கள். "(அவ்வாறாயின்) நீங்கள் (அவனுடைய தண்டனையை) பயப்பட மாட்டீர்களா?" என்று நீர் கூறுவீராக! (87)

ஒவ்வொரு பொருளின் ஆட்சியும் எவன் கைவசம் இருக்கின்றது? அவன் பாதுகாக்கிறான், (அவனது தண்டனையிலிருந்து தப்ப) அவனுக்கெதிராக எவரும் பாதுகாக்கப்பட முடியாதே அவன் யார்? ஏன நீங்கள் அறிந்தவர்களாக இருப்பின் (கூறுங்கள்) என்று கேட்பீராக! (88)

அ(தற்க)வர்கள் "(சகல அதிகாரமும்) அல்லாஹ்வுக்கே உரியது" என்று கூறுவார்கள். "(அவ்வாறாயின்) நீங்கள், எங்கிருந்து சூனியமாக்கப்படுகிறீர்கள் (எவ்வாறு மதியப்படுகிறீர்கள்) என்று கேட்பீராக! (89) (ஸுரா அல் மு.்.மினூன்: 84-89)

இதை இறைவனுக்கு உள்ளது என்று உறுதிப்படுத்துவது இயல்பான ஓர் விடயமாகும். இறை நிராகரப்பாளர்கள் மற்றும் இனைவைப்பாளர்கள் கூட இவ்வகை சார்ந்த தவ்ஹீதை நம்புகின்றனர். எனினும் ஷீஆக்கள் இப்பகுதியை பாதுகாத்துள்ளார்களா? அல்லது இதில் ஏதாவது குலருபடிகள் செய்துள்ளார்களா எனப்பார்த்தால், வரலாறுகளை அவர்கள் எவ்வாறு நாசப்படுத்தினார்களோ அதைவிட மோசமான முறையில் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துகின்ற விடயத்தில் தங்களது இமாம்களை அல்லாஹ்வோடு இணையாகச் சேர்ப்பதை அவதானிக்கலாம், முன்னைய பழமை வாய்ந்த மதங்கள் தங்கள் ரிஷிகளையும், தேவர்களையும் எந்தளவிற்கு உயர்வாகக் கருதினபர்களோ அதே ஷீஆக்களிடமும் ஏற்பட்டுள்ளது. இவர்களின் நம்பிக்கையின் மொத்த வடிவத்தை பார்க்குமிடத்து:- அல்லாஹ் முதலாவதாக படைத்தது அவர்களது இமாம்களது ஒளிக்கீற்றுக்களையாகும். அதிலிருந்தே வானம் மற்றும் பூமியில் உள்ள அனைத்தும் படைக்கப்பட்டன. பின்பு அந்த இமாம்களிடமே அப்படைபினங்களின் அனைத்துப் பொறுப்புக்களும் ஒப்படைக்கப்பட்டன. அவர்களே அவைகளின் வாழ்வு, இறப்பு, ஆகாரம், செயல் போன்ற அனைத்து விடயங்களையும் பராமரிப்பார்கள் இவ்வாறு ஷீஆக்களின் ருபூபிய்யா தொடர்பான நம்பிக்கை சொல்கிறது. இவ்விடயங்களை

அக்கொள்கைகள் சொல்லப்பட்டுள்ள மூல நூல்களிலிருந்து நோக்கினால் சற்று விளக்கமாக இருக்கும். இமாம் ஜ.்.பர் அஸ்ஸாதிக் கூறுகிறார்: “மறுமை நாள் வரை அல்லாஹ் இமாம்களின் ஒளியாக உள்ளான். அவர்கள் அல்லாஹ்வின் ஒளியாக உள்ளனர். அவர்களே வானங்கள் மற்றும் பூமியுடைய அல்லாஹ்வின் ஒளியாக உள்ளனர்”

(உஸுலுல் காபி: 1-250)

நபியவர்கள் கூறியதாக பின்வரும் இட்டுக்கட்டி தங்களது நூல்களில் பதிந்து வைத்துள்ளனர்: “அல்லாஹ் தனக்கு தனது ஒளிகளை (இமாம்களை) அறிமுகப்படுத்தி வைத்தான். பின்பு அவைகளுக்கு தனதசுவர்க்கத்தை ஆகுமாக்கி, தனது பொறுப்புக்கள் அனைத்தையும் ஒப்படைத்தான். பிறகு அவன் ஆதம் (அலை) அவர்களைப்படைத்து எனது நபித்துவத்தையும் அலியுடை அட்சிப்பொறப்பையும் அவர் ஏற்றுக்கொண்டதன் பிறகு அவரை சுவர்க்கத்தில் நுழைவித்தான். எனது உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது சத்தியமாக, இப்றாஹீம் (அலை) அவர்களை அவன் தனது உற்ற நேசராக எடுத்துக்கொண்டது எனது நபித்துவத்தையும் அலியுடைய ஆட்சிப்பொறுப்பையும் அவர் ஏற்றுக்கொண்டதன் பிறகே ஆகும். மூஸா (அலை) அவர்களோடு அல்லாஹ் பேசியதும், ஈஸா (அலை) அவர்களுக்கு அவன் பல அத்தாட்சிகளை வழங்கியதும், எனது நபித்துவத்தையும் அலியையும் அவர்கள் அறிந்ததன் பிறகே ஆகும்.

அலி இச்சமுதாயத்தின் மார்க்கத்திற்கு சொந்தக்காரரும், சாட்சியாளரும், அவர்களின் கேள்வி கணக்கிற்கு பொறுப்பாளரும் ஆவார்………… மேலும் அவர் அல்லாஹ்வின் பார்க்கின்ற கண்ணும், கெற்கின்ற செவியும், பேசுகின்ற நாவும், மேலும் அடியார்களுக்கு அருள் வழங்குகின்ற அவனின் கையும், அவனின் முகமுமாக இருக்கிறார். மேலும் அவரின் வீடு ஒரு பாதுகாப்பு அரனாகும். அவரின் ஸிராத் எனும் பாலத்தில் உள்ளது, மேலும் அவரை அறிந்தவர் அறிந்தவர் சுவர்க்கம் நுழைவார். அவரை மறுப்பவர் நரகம் நுழைவார்”

(ஸலீம் இப்னு கைஸ்: 228)

இது நபியவர்கள் மீது இட்டுக்கட்டப்பட்ட செய்தியாகும். இதில் அனைத்துமே அலி﴾ﷺ﴿ அவர்களின் கைகளிளேயே உள்ளதாக பொய்யான தோற்றம் காண்பிக்கப்படுகிறது. இதனடிப்படையில் நோக்கினால் அல்லாஹ்விற்கு இதற்குப்பிறகு என்ன வேலை உள்ளது என்று கேற்கத்தோன்றுகிறது. அல்லாஹ் இவற்றை விட்டும் மிகப் பரிசுத்தமானவன். இதைவிட கொடிய பாவமும் இணைவைப்பும் வேறு என்ன உள்ளது. புராத் அல்கூபி எனும் ஷீஆக் கொள்கை சார்ந்த ஒருவர் அலி (ரழி) அவர்கள் கூறியதாக அவர் மீது இட்டுக் கட்டி பின்வரும் செய்தியை பதிந்துள்ளார்: “அல்லாஹ்வின் மீது ஆனையாக மறுமை நாளில் நானே மக்களுக்கு மார்க்கத்தின் சொந்தக்காரன் ஆவேன். மேலும் சுவனம் மற்றும் நரகத்தை பிரிப்பவனும் நானே, மலக்குகள், அல்லாஹ்வின் தூதர்கள் மற்றும் அனைத்து உயிர்களும் நாம் படைக்கப்பட்டதன் காரணமபகவே படைக்கப்பட்டன” (தப்ஸீர் புராத் :178)

அது மாத்திரமல்லாமல் உயிர்ப்பித்தல் மற்றும் மரணிக்கச்செய்தல் போன்றவற்றிட்கு இமாம்களே பொறுப்பாளர்கள் ஆவர், எனக்கருதுகின்றனர். அபூபஷீர் என்பவரைத்தொட்டு ஷீஆக்களின் அல் காபி எனும் நூலில் பின்வருகின்ற பொய்யான செய்தி பதியப்பட்டுள்ளது.

அபூபஷீர் என்பவர் கூறுகிறார்: "நான் இமாம் அபூ ஜஃபர் அவர்களிடம் ஒருமுறை சென்ற போது நான் அவரிடம் "நீங்கள் நீங்கள் மரணித்தவர்களை உயிர்ப்பிப்பதற்கும், குஸ்டரோகம் உடையவர்களை குணப்படுத்துவதற்கும் சக்தி பெற்றவர்களா எனக்கேட்டேன்" அதற்கவர்: "ஆம் அல்லாஹ்வின் அனுமதியோடு" எனக்கூறினார். இந்நிலையில் நான் பார்வையை இழந்தவராக இருந்தேன் அப்போது இமாமவர்கள் என்னிடம் "அருகில் வா" என்றார்கள். நான் அவரின் அருகில் சென்றபோது அவர் எனது முகத்தை தடவினார். அப்போது நான் சூரியன், வீடுகள், வானம், பூமி, வீடுகள் போன்ற அனைத்தையும் பார்க்க சக்தி பெற்றேன். பின்பு அவர் என்னிடம்: "நீர் மனிதர்களுக்கு இருப்பது போன்று இவ்வாறு இருக்க விரும்புகிறாயா அல்லது மறுமை நாளில் சுவனத்தை அடைந்து கொள்வதற்கு முன்னைய நிலையில் இருக்க விரும்புகிறாயா?" எனக்கேட்டார். அப்போது நான் "நான் இருந்தவாரே இருக்க விரும்புகிறேன் என்றேன். அப்போது அவர் எனது கண்ணின் மீது தடவினார் நான் என் பழைய நிலைக்கு மீண்டேன்" (அல் காபி: 1–529)

**மற்றுமொரு நிகழ்வு:-** ஒரு முறை இமாம் மூஸா இப்னு ஜஃபர் மினா என்னுமிடத்தில் தனது மாடு இறந்ததால் அழுதுகொண்டிருந்த ஒரு பெண்ணைக்கடந்து சென்றார்கள். அப்போது அவர் அப்பெண்ணிடம் அல்லாஹ்வின் அடிமைப்பெண்ணே உமக்கு நான் அதை மீள உயிர்ப்பித்து தரட்டுமா? எனக்கேட்டார். அதற்கு அவள் ஆம் என்றாள். உடனே அவர் எழுந்து மாடு கத்துவது போன்று தன் சப்தத்தை உயர்த்தி அதற்கு ஒரு உதை உதைத்தார்கள். உடனே அது எழுந்தது. (அல்காபி: 1-557)

இதுமாத்திரமல்லாமல் அவர்களது அல் காபி என்னும் நூலில் பூமி அனைத்தும் இமாமிற்கே சொந்தமானது என்ற தனித்தலைப்பே உள்ளது. மேலும் அதில் பின்வரும் செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளது. "இவ்வுலகம், மறுமை ஆகிய இரண்டும் இமாமிற்கே உரியது என்பதை நீ அறியவில்லையா!...... அவரே அவற்றை தான் நாடியவாறு இயக்குவார்.(அல் காபி: 1-475)

நாம் மேற்கூறிய அனைத்தும் ஷீஆக்கள் அல்லாஹ்வின் ஏகத்தவத்தில் கலங்கம் ஏற்படுத்துகின்ற தெளிவான இணைவைப்பாகும். ஏனெனில் மேற்கூறப்பட்ட அனைத்தும் அல்லாஹுவிற்கு மாத்திரமே சொந்தமானவை என அவன் அல்குர்ஆனில் குறிப்பிடுகின்றான்.

(ஸுரா அல் மாயிதா 18, ஸுரா அஸ்ஸப: 24)

ஆகவே எவ்வாறு இந்த வழிகெட்ட கூட்டத்தினர் அல்லாஹீவிற்கு மாத்திரம் சொந்தமான மனிதர்கள் அனைவரும் சக்தியற்ற ஒன்றை தங்களது இமாம்களுக்கு உரித்தாக்கும். இது அவர்களின் கற்பனையும் பொய்யான தகவல்களுமே ஆகும். அது மாத்திரமல்லாமல் இவ்வுலக ஆட்சி

அதிகாரங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் மூலமாக அவர்களுக்கு வழங்கப்பட்டவை என்றும் பொய்யுரைக்கின்றனர். மேலும் இவர்களின் இமாம்களிடத்தில் இவ்வுலகம் சுற்றுகின்ற பந்து போன்றதாகும். அவரே அதை இயக்குகிறார். இத்ரீஸ் இப்னு அப்துல்லாஹ் என்பவர் கூறுகிறார்: "நான் அபூஅப்துல்லாஹ் அவர்கள் கூறுவதாக செவிமடுத்துள்ளேன். எங்கள் அஹ்லுல் பைத்களிடம் இவ்வுலகம் வட்டம் போன்றதாகும்"

(அல் பிஹார் : 7-269)

மேலும், "மலக்குகள் படைப்புக்களின் செயற்பாடுகளை அல்லாஹ்வின் நேசரிடம் ஒரு வாரத்திற்கு இரு தடவைகள் காண்பிக்கிறார்கள்" (கலிமது இமாம் அல் மஹ்தி: 146)

ஆகவே இவ்வழிகெட்ட கூட்டதினர் இவ்வுலகத்தில் இடம்பெறுகின்ற அனைத்தும் அல்லாஹ்வின் கட்டளைப்பிரகாரம் இடம்பெறுகின்றன என்பதை முழுமையாக மறுக்கின்றனர். அல்லாஹ் தன் அதிகாரம் தொடர்பாக பின்வருமாரு அல்குர்ஆனில் கூறுகிறான்: "உங்களுக்கு வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் உணவளிப்பவன் யார்? (உங்கள்) செவிப்புலன் மீதும் (உங்கள்) பார்வைகளின் மீதும் சக்தியுடையவன் யார்? இறந்தவற்றிலிருந்து உயிருள்ளவற்றையும் உயிருள்ளவற்றிலிருந்து இறந்தவற்றையும் வெளிப்படுத்துபவன் யார்? (அகிலங்களின் அமைத்துக்) காரியங்களையும் திட்டமிட்டுச் செயல்படுத்துபவன் யார்?" என்று(நபியே!) நீர் கேளும். உடனே அவர்கள் "அல்லாஹ்" என பதிலளிப்பார்கள் "அவ்வாறாயின் அவனிடம் நீங்கள் பயபக்தியுடன் இருக்க வேண்டாமா?" என்று நீர் கேட்பீராக. (யூனூஸ்: 31)

அவன் எத்தகையவெனின் அச்சத்தையும் (அதே நேரத்தில் மழைக்குரிய) ஆதரவையும் தரக்கூடிய நிலையில் மின்னலை அவன்தான் உங்களுக்குக் காட்டுகிறான் கனத்த மேகத்தையும் அவனே உண்டாக்குகிறான். (அர்ர.்.த் : 12)

இவ்வழிகெட்ட கூட்டத்தினர் அல்லாஹ் தன் அதிகாரதில் உள்ளது எனக்கூறிய இடி,மின்னல் போன்றவற்றை யாரிடம் உள்ளதெனக்கூறுவதை பின்வரும் அவர்களின் நாசகாரக்கூற்று விளக்குகிறது. அபூ அப்தில்லாஹ் என்பவர் கூறுகிறார்: "இந்த இடி மற்றும் மின்னல் அனைத்தும் உங்களின் தோழரது கட்டளைப்பிரகாரமே இயங்குகின்றன. அதற்கு இச்செய்தியை அறிவிக்கின்ற அறிவிப்பாளர், அபூ அப்தில்லாஹ் அவர்களிடம் எங்களது தோழர் என்றால் யார் எனக்கேட்டார். அதற்கு அபூ அப்தில்லாஹ்: "அமீருல் மு.்.மினீன் (அலி) எனக்கூறினார்" (அல் இக்திஸாஸ்: 326)

அதாவது இவர்களின் கொள்கையின் பிரகாரம் இடி மற்றும் மின்னல் ஆகியவை அலி(ﷺ) அவர்களின் கட்டளையின் அடிப்படையிலேயே இயங்குகின்றன. அல்லாஹ்வின் கட்டளைப் பிரகாரம் அல்ல என்பது ஆகும். இதே கொள்கையையே நாம் ஏற்கனவே பார்த்த அப்துல்லாஹ் இப்னு ஸப.்.

என்ற யூத கைக்கூலியும் பிரச்சாரம் செய்தான். இவர்களின் இக்கொள்கைகள் அனைத்தும் எவ்வித ஐயமும் சந்தேகமும் இல்லாமல் சிலை வணங்கிகளின் கோட்பாடுகளை அச்சடித்தது போலவே இருக்கின்றன. இவ்வாறு இவ்வழிகெட்ட கூட்டத்தினர் இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படைக்கோட்பாடுகளை மாற்றியமைக்கும் நோக்கத்தில் அஹ்லுல் பைத்துக்கள் கூறாத பல்வேறுபட்ட செய்திகளை அவர்கள் மீது இட்டுக்கட்டி மக்கள் மத்தியில் பரப்பியுள்ளார்கள். இவர்கள் இஸ்லாமிய மார்க்கத்தை சீர் குலைப்பதற்கு மற்றமொறு வழிமறையையும் மேற்கொண்டுள்ளார்கள். அதாவது இமாம்கள் மீது நம்ப முடியாத ஆதாரமில்லாத பல செய்திகளை அவர்கள் கூறியதாகவும் மேலும் அவர்கள் செய்து காட்டியதாகவும் தங்களது நூலில் எழுதி வைத்துள்ளார்கள். அல்ஹகீமி என்கின்ற ஷீயா அறிஞர் பின்வருகின்ற செய்தியை தனது நூலில் குறிப்பிடுகிறார்: ஒரு முறை அலி﴾ﷺ﴿அவர்கள் கூபாவிலுள்ள மிம்பர் மேடையில் ஏறி அல்லாஹ்வுத்தஆலண وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا என்று கூறுகின்ற அவ்விரண்டு பெற்றோர்களும் நானும் முஹம்மத் நபி (ஸல்) அவர்களும் ஆவோம் என்றார்.

(சலூனி கப்ல அன் தப்கிதூனி: 1ம் பாகம், 44ம் பக்கம்)

ஒரு முறை ஒரு மனிதன் அலி﴾ﷺ﴿அவர்களுக்கு முன்னால் எழுந்து நின்று என் அபூ தாலிபின் மகனே! ஹிஜாஸ் வாசிகளை நீர் உமது சூனியத்தின் மூலமாக தன் வயப்படுத்திக் கொண்டாய், அதேபோன்று இராக் மக்களை தன்வயப்படுத்துவதற்கு இங்கு வந்துள்ளாய் என்று கூறினார். அப்போது அலி﴾ﷺ﴿அவர்கள் தனது தடியால் அம்மனிதருக்கு எறிந்தபோது உடனே அவர் காகம் போன்று மாறிவிட்டார். ஒரு முறை அலி﴾ﷺ﴿அவர்கள் மிம்பர் மீதேறி மக்களைப்பார்த்து மக்களே! நீங்கள் என்னை இழப்பதற்கு முன் என்னிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள், வானத்தின் பாதைகள் மற்றும் பூமியின் பாதைகள் பற்றி என்னிடம் கேளுங்கள் என்றார். அப்போது ஒரு மனிதரெழுந்து அமீருல் மு.ஃ.மினீனே! இந்நேரத்தில் ஜிப்ரீல் (அலை) அவர்கள் எங்குள்ளார்? என்று கேட்டார். அப்போது அலி﴾ﷺ﴿அவர்கள் எட்டுத்திக்கிலும் பார்த்து விட்டு அம்மனிதரை நோக்கி நீதான் ஜிப்ரீல் என்று கூறினார். அப்போது அவர் தனதுருவத்தை மாற்றிக்கொண்டு அக்கூட்டத்தாரின் மத்தியில் பரந்து சென்றார். இதுபோன்று இன்னும் ஏராளமான கட்டுக்கதைகளை அவர்கள் தங்களது நூல்களில் பதிந்து வைத்துள்ளார்கள். நிச்சயமாக இவையனைத்தும் அல்லாஹ்வை ஏகத்துவப்படுத்துவதை விட்டும் திசை திருப்பக்கூடியவையாகும்.

**தவ்ஹீத் அல் உலூஹிய்யா:** தவ்ஹீத் அல் உலூஹியா என்பது நாம் ஈடுபடக்கூடிய அனைத்து வழிபாடுகள் மூலமாகவும் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துதல் என்பதாகும். வணங்குவதற்குத் தகுதியானவன் அவன் மாத்திரமே எனஉறுதியாக நம்பிக்கை கொள்வதிலுமாகும். இதை அல்லாஹ் அல்குர்ஆனில் பல இடங்களில் குறிப்பிடுகின்றான். (நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும் ”நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) நாயன் என்னைத் தவிர வேறு எவருமில்லை எனவே என்னையே நீங்கள் வணங்குங்கள்" என்று நாம் வஹீ அறிவிக்காமலில்லை.

(ஸூரா அல் அன்பியா: 25)

இன்னும் ஜின்களையும் மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை. (ஸூரா அத்தாரியாத்: 57)

வணக்க வழிபாடுகளில் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவது என்பதையாவது ஷீயாக்கள் பாதுகாத்துள்ளார்களா? என்று நோக்கினால் அவர்களது நூல்களில் ஒருமைப்படுத்துவதற்குப் பகரமாக இணைவைப்பில் நிறைந்து காணப்படுவதைக்காணலாம். அது மாத்திரமல்லாமல் இணைவைப்பது தொடர்பான அல்குர்ஆனிய வசனங்களை தங்களது கருத்துக்களுக்கு ஏற்றவாறு விளக்கங்கள் வழங்கி மாற்றியிருப்பதைக்காணலாம். அல்லாஹ் ஸூரத்துஸ் ஸுமர்: 65வது வசனத்தில் தனக்கு இணைவைப்பது அமல்களை அழித்து விடக்கூடியது என எச்சரிக்கை செய்கிறார். எனினும் இவ்வசனத்தை ஷீயாக்களால் எழுதப்பட்ட அல்குர்ஆன் விளக்க நூல்களில் தேடிப்பார்த்தால் இதற்குப்பின்வருமாறு வியாக்கியானம் செய்யப்பட்டுள்ளது. அலி(ﷺ)அவர்களுடைய ஆட்சியதிகாரத்தில் வேறு எவரை கூட்டுச்சேர்ப்பது அல்லது அவரை விட மற்றொருவரை முட்படுத்துவது இணைவைத்தலாகும். (அல் புர்ஹான்: 6ம் பாகம், 557ம் பக்கம்)

இவ்வாறு அல் குர்ஆன் இறக்கியருளப்பட்டதற்கான நோக்கத்தையே இவர்கள் மாற்றுகிறார்கள். அது மாத்திரமல்லாமல், "அறிவிலிகளே! நான் அல்லாஹ் அல்லாதவற்றை வணங்க வேண்டுமென்று என்னை நீங்கள் ஏவுகிறீர்களா?" என்று (நபியே!) நீர் கூறுவீராக. அன்றியும் உமக்கும் உமக்கு முன் இருந்தவர்களுக்கும் வஹீ மூலம் நிச்சயமாக அறிவிக்கப்பட்டது என்னவென்றால் "நீர் (இறைவனுக்கு) இணை வைத்தால் உம் நன்மைகள் (யாவும்) அழிந்து நஷ்டமடைபவர்களாகி விடுவீர்கள்" (என்பதுவேயாகும்). ஆகவே நீர் அல்லாஹ்வையே வணங்குவீராக! மேலும் அவனுக்கு நன்றி செலுத்துபவர்களில் நின்றும் இருப்பீராக! (ஸூரத்துஸ் ஸுமர்: 64-66)

என்ற வசனம் வணக்க வழிபாடுகள் அனைத்தும் அல்லாஹ்விற்கே உரியன என்று தெளிவாக கூறுகிறது. எனினும் இவ்வழிகெட்ட கூட்டத்தினர் இவ்வசனம் அலி(ﷺ)அவர்கள் தொடர்பாகவும் அவரது ஆட்சி தொடர்பாகவும் கூறுவதாக பொய்யுரைக்கின்றனர்.

(உஸூலு மத்ஹபுஷ் ஷீயா: 2ம் பாகம், 428ம் பக்கம்)

இந்தப்பூமியை வசிக்கத் தக்க இடமாக ஆக்கியவனும் அதனிடையே ஆறுகளை உண்டாக்கியவனும் அதற்காக (அதன் மீது அசையா) மலைகளை உண்டாக்கியவனும் இரு கடல்களுக்கிடையே தடுப்பை உண்டாக்கியவனும் யார்? அல்லாஹ்வுடன் (வேறு) நாயன் இருக்கின்றானா? இல்லை! (எனினும்) அவர்களில் பெரும்பாலோர் அறியாதவர்களாக இருக்கின்றனர். (ஸூரா அந்நம்ல்: 61வது)

இவ்வசனத்தில் அல்லாஹ் வணங்கப்படுவதற்குத் தகுதியானவன் தன்னைத்தவிர வேறு எவருமில்லை என்று கூறுகின்றான். எனினும் இக்கூட்டத்தினரின் விளக்கத்தின் அடிப்படையில் இவ்வசனத்திற்கு பின்வருகின்ற அர்த்தத்தை வழங்குகின்றனர். ஒரே காலப்பகுதியில் நேர்வழி மிக்க ஒரு தலைவரையும், வழிகேட்டிலுள்ள ஒரு தலைவரையும் எடுத்துக்கொள்கிறீர்களா? (பிஹாருல் அன்வார்: 23-361)

அது மாத்திரமில்லாமல்,

(நபியே!) நீர் கூறுவீராக "எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது இன்னும் அவன் தேர்ந்தெடுத்துக் கொண்ட அவனுடைய அடியார்கள் மீது ஸலாம் உண்டாவதாக! அல்லாஹ் மேலானவனா? அல்லது அவர்கள் (அவனுக்கு) இணையாக்குபவை (மேலானவை)யா?" அன்றியும் வானங்களையும் பூமியையும் படைத்து உங்களுக்கு வானத்திலிருந்து மழையை இறக்கி வைப்பவன் யார்? பின்னர் அதைக் கொண்டு செழிப்பான தோட்டங்களை நாம் முளைக்கச் செய்கிறோம். அதன் மரங்களை முளைக்கச் செய்வது உங்களால் முடியாது. (அவ்வாறிருக்க) அல்லாஹ்வுடன் (வேறு) நாயன் இருக்கின்றானா? இல்லை! ஆயினும் அவர்கள் (தம் கற்பனை தெய்வங்களை அல்லாஹ்வுக்கு) சமமாக்கும் மக்களாகவே இருக்கிறார்கள். (நம்ல்: 59,60)

மேற்குறிப்பிட்ட வசனங்களை படிக்கின்ற ஒருவர் அதில் அல்லாஹ் தனது ஏகத்துவம் தொடர்பாக கூறுகிறான், என்பதை அறிந்து கொள்வார். இது சாதாரண ஒரு பாமரர் கூட இலேசாக விளங்கிக் கொள்ளக்கூடிய ஓர் இறை வசனமாகும். எனினும் இதைக்கூட இந்த வழிகெட்ட ஷிஆக்கள் இதற்கு விளக்கம் கொடுப்பதாக கூறி இவ்வசனம் தங்களது இமாம்கள் தொடர்பாகக் கூறுவதாக சொல்கின்றனர். மேலும், (நபியே!) நீர் சொல்வீராக "நிச்சயமாக நான் உங்களைப் போன்ற ஒரு மனிதனே! நிச்சயமாக உங்களுடைய நாயன் ஒரே நாயன்தான் என்று எனக்கு வஹீ அறிவிக்கப்பட்டிருக்கிறது எவன் தன்னுடைய இறைவனைச் சந்திக்கலாமென ஆதரவு வைக்கின்றானோ அவன் (ஸாலிஹான) நல்ல செயல்களைச் செய்து தன் இறைவனை வணங்குவதில் வேறெவரையும் இணையாக்காதும் இருப்பானாக." (கஹ்ப்: 110)

என்ற வசனத்தில் அல்லாஹ் தனது அடியார்களைப்பார்த்து நல்லமல் புரியும் படியும் அவனுக்கு எவரையும் இணையாக்க வேண்டாம் என்றும் கூறுகிறான். எனினும் இந்த வழிகெட்ட ஷீஆக்கள் நல்லமல் புரிதல் என்பதற்கு **“இமாம்களை அறிதல்”** என்றும், அல்லாஹ்வற்கு எவரையும் இணையாக்காமல் இருத்தல் என்பதற்கு **“அலி(ரலி) அவர்களுடைய ஆட்சியில் எவரையும் இணையாக்காமல் இருத்தல் ”** என்றும் வியாக்கியானம் செய்கின்றனர். வழிகெட்ட இக்கூட்டத்தினர் அல்லாஹ்வுத்தஆலா

தன்னைப்பற்றியும் தனது ஏகத்துவம் பற்றியும் சொல்கின்ற வசனங்கள் அனைத்தையும் தவறான முறையில் விளக்கங்கள் வழங்குகின்றனர். மக்களுக்கு நேர்வழி காண்பிப்பதற்கு அருளப்பட்ட அல்-குர்ஆனை இவர்கள் தங்களது கொள்கை பரப்பும் நூலாக மாற்றிவிட்டனர். அல்லாஹ் தனக்கு எவரையும் இணையாக்க வேண்டாம் என கூறுகிறான். ஒவ்வொரு வசனத்திற்கும் இவர்களின் கொள்கையின் பிரகாரம் இவ்வாரு அர்த்தம் என்றால் இவர்களின் எந்தளவிற்கு ஏகத்துவம் நிலைத்து நிற்கும் என்பதை நான் சொல்லி நீங்கள் அறிய வேண்டிய அவசியம் இல்லை. அது மாத்திரமல்லாமல் தவ்ஹீத் அல்லாஹ்விடம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு அலி(ﷺ) அவர்களின் ஆட்சியை ஏற்றுக்கொள்வதை ஒரு நிபந்தனையாக இக்கூட்டம் கருதுகிறது.

(பிஹாருல் அன்வார்: 27-201)

மேலும் மறுமை நாளில் எவ்வித நன்மையும் இல்லாமல் பாவங்களோடு மாத்திரம் ஒருவர் வந்தால், அவர் சுவனம் நுழைவதற்கு அவரிடம் அலி(ﷺ)அவர்களின் ஆட்சி பற்றிய நம்பிக்கை மாத்திரம் போதுமானது, எனவும் இக்கூட்டத்தினர் கூறுகின்றனர். அதுமாத்திரமல்லாமல் இவர்களிடம் கப்ர் வணக்கம், அவ்லியாக்களுக்கு நேர்ச்சை செலுத்தல், இறந்தவர்களிடம் பிராத்தனை செய்தல் போன்ற அனைத்து பெரும் பாவங்களும் நிறைந்து காணப்படுகின்றன. மேலும் தங்களது ஒவ்வொரு இமாம்களையும் அல்லாஹ் தனக்கு சொந்தமாக்கிக் கொண்ட வணக்கமான பிராத்தனைக்கு பொறுப்பாக்கி அதை பல வகைகளாக பிரித்துக்கொள்கின்றனர்.

**அவர்களின் விபரங்களை பின்வருமாறு நோக்கலாம்:**

01 அலி இப்னு ஹுஸைன்: ஷைத்தானிடம் இருந்து பாதுகாப்பு.
02 முஹம்மத இப்னு அலி மற்றும் ஜ.்.பர் இப்னு முஹம்மத்: மறுமைக்கு அவசியமான நன்மைகளைக் கேட்டல்.
03 மூஸா இப்னு ஜ.்.பர்: அல்லாஹ்விடமிருந்து மண்ணிப்பை பெற்றுக்கொடுத்தல்.
04- அலி இப்னு மூஸா: தரை மற்றும் கடல்களிலே பாதுகாப்பை வேண்டுதல்.
05- முஹம்மத் இப்னு அலி: அல்லாஹ்விடமிருந்து ரிஸ்கை பெற்றுக்கொடுத்தல்.
06- அலி இப்னு முஹம்மத்: உபரியான நண்மைகளை பெற்றுக்கொடுத்தல்.
07- ஹஸன் இப்னு அலி: மறுமைக்கான உதவிகளைத்தேடுதல்.

(பிஹாருல் அன்வார்: 91-33)

இது போன்று இவர்களிடம் கேட்பதற்கு பல்வேறு பட்ட பிரார்த்தனைகளையும் தங்களது நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் இமாம்களை எவ்வாறு பிரித்தார்களோ! அது போன்று பிரார்த்தனைகளையும் பிரித்து வைத்துள்ளனர். அதுமாத்திரமல்லாமல் ஹுஸைன் (ﷺ)அவர்களுடைய அடக்கஸ தலத்தை தர்சிப்பது 20 தடவைகள் ஹஜ் மற்றும் உம்ரா செய்வதற்குச் சமமானதாகும் என்று கூறுகிறார்.

(நூருல் அய்ன்: 253வது பக்கம்)

இவ்வாறு வணக்க வழிபாடுகளில் இவர்களிடம் ஏகப்பட்ட இணைவைப்புக்கள் காணப்படுகின்றன.

**தவ்ஹீத் அஸ்மாஉஸ்ஸிபாத்:** தவ்ஹீத் அஸ்மாஉஸ்ஸிபாத் என்பது ஒரு அடியான் அல்லாஹ் தன்னைப்பற்றி தனது வேதத்திலும் மேலும் நபியவர்கள் தனது பொன் மொழிகளிலும் அல்லாஹ் பற்றி சொன்ன அவனது பெயர்கள் மேலும் அவனைப்பறிறிய வர்ணிப்புக்கள், அவனது செயற்பாடுகள், அவனது தகுதிக்கும் உயர்விற்கும் ஏற்ற வகையில் உறுதியாக நம்புதல் ஆகும். அல்லாஹ் தனது திருநாமங்கள் மற்றும் பண்புகள் பற்றி அல்-குர்ஆனில் பல்வேறுபட்ட இடங்களில் குறிப்பிட்டுள்ளான். அல்லாஹ் அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் வேறு இல்லை. அவன் என்றென்றும் ஜீவித்திருப்பவன் என்றென்றும் நிலைத்திருப்பவன் அவனை அரி துயிலே உறக்கமோ பீடிக்கா வானங்களிலுள்ளவையும் பூமியிலுள்ளவையும் அவனுக்கே உரியன அவன் அனுமதியின்றி அவனிடம் யார் பரிந்துரை செய்ய முடியும்? (படைப்பினங்களுக்கு) முன்னருள்ளவற்றையும் அவற்றுக்குப் பின்னருள்ளவற்றையும் அவன் நன்கறிவான். அவன் ஞானத்திலிருந்து எதனையும் அவன் நாட்டமின்றி எவரும் அறிந்துகொள்ள முடியாது. அவனுடைய அரியாசனம் (குர்ஸிய்யு) வானங்களிலும் பூமியிலும் பரந்து நிற்கின்றது. அவ்விரண்டையும் காப்பது அவனுக்குச் சிரமத்தை உண்டாக்குவதில்லை - அவன் மிக உயர்ந்தவன் மகிமை மிக்கவன். (ஸூரா அல் பகரா: 255)

எவரேனும் இவ்வுலகின் பலனை(மட்டும்) அடைய விரும்பினால் ”அல்லாஹ்விடம் இவ்வுலகப்பலனும் மறுவுலகப்பலனும் உள்ளன. அல்லாஹ் கேட்பவனாகவும் பார்ப்பவனாகவும் இருக்கின்றான்" (ஸூரா அன் நிஸா: 134)

(இவர்களைப்போன்றே வேறு) தூதர்கள் சிலரையும் (நாம் அனுப்பி) அவர்களுடைய சரித்திரங்களையும் உமக்கு நாம் முன்னர் கூறியுள்ளோம். இன்னும் (வேறு) தூதர்கள் (பலரையும் நாம் அனுப்பினோம். ஆனால்) அவர்களின் சரித்திரங்களை உமக்குக் கூறவில்லை. இன்னும் மூஸாவுடன் அல்லாஹ் பேசியும் இருக்கின்றான்.

(ஸூரா அன் நிஸா: 164)

(அனைத்தையும்) படைத்தவன் அறிய மாட்டானா? அவன் நுணுக்கமாக கவனிப்பவன் யாவற்றையும் நன்கு தெறிந்தவன்.

(ஸூரா அல் முல்க்: 14)

மிக்க வல்லமையும் கண்ணியமும் உடைய உம் இறைவனின் முகமே நிலைத்திருக்கும். (ஸூரா அர் ரஹ்மான்: 27)

எனினும் ஷீயாக்கள் தவ்ஹீத் அஸ்மாவஸ்ஸிபாத்தை அதை நம்ப வேண்டிய விதத்தில் நம்பியுள்ளார்களா? என்று நோக்கினால் இவ்வகையிலும் அவர்களுடைய குழருபடிகள் இருப்பதைக்காணலாம். இமாம் ராஸி அவர்கள் தனது நூலில் ஷீயாக்களின் கொள்கைகள் தொடர்பாக பின்வருமாறு கூறுகிறார்: "யூதர்கள் அனைவரும் இறைவனுக்கு உருவம் கற்பிப்பவர்களாவர். இஸ்லாமிய வட்டத்திற்குள் இஸ்லாம் என்ற பெயரில் ஷீயாக்கள் மூலமாகவே முதலாவதாக இறைவனுக்கு உருவம் கற்பிக்கப்பட்டது. ஷீயாக்களின் மூத்த அறிஞர்களான பன்னான் இப்னு ஸம்ஆன் என்பவன் அல்லாஹ்விற்கு இருக்கின்ற உடல் உறுப்புக்களின் அளவு பற்றிய நம்பிக்கையில் முதலாவது விதைத்தவன். மேலும் ஹிஷாம் இப்னு ஹிகம், ஹிஷாம் இப்னு ஸாலிம், யூனுஸ் இப்னு அப்திர் ரஹ்மான் போன்றோரும் இக்கொள்கையைச் சார்ந்தவர்களாவர்" மேலும் ஹிஷாம் இப்னு ஹிகம் என்பவன் தான்னால் வணங்கப்படுபவன் குறிப்பிட்ட உருவமுடையவனும் நீளமானவனும் சற்று கொழுத்தவனும் என நம்பிக்கொண்டிருந்தான். மேலும் ஹிஷாம் இப்னு ஸாலிம் என்பவன் தன்னால் வணங்கப்படுபவன் மனித உருவமுடையவனும் இரத்தமும் இறைச்சியுமற்றவனென நம்பிக்கை கொண்டிருந்தான்" (அல்பர்க் பைனல் பிரக்: 65-68)

முஹம்மத் இப்னு ஹுஸைன் என்பவர் கூறுகிறார்: நாங்கள் அபுல் ஹஸன் (அலை) அவர்களிடம் சென்றோம். பிறகு முஹம்மத் நபியவர்கள் தனதிரட்சகனை 30 வயதுடைய ஒரு இளைஞனின் வடிவத்தில் கண்ட செய்தியை நாம் அவரிடம் கூறினோம். உடனே அவர் ஸுஜுதில் விழுந்து பிறகு கூறினார்: இறைவா! நீ தூய்மையானவன் நிச்சயமாக இவர்கள் உம்மை அறியாததன் காரணமாக இவ்வாறு உம்மை வர்ணிக்கிறார்கள். நீர் உம்மைப்பற்றி வர்ணித்தவற்றை இவர்கள் அறிந்தால் இவ்வாறு கூறமாட்டார்கள். (தவ்ஹீத்: 113-114)

இதனடிப்படையில் ஆரம்பகாலத்தில் தவ்ஹீத் அஸ்மாஉஸ்ஸிபாத் என்ற விடயத்தில் இவர்கள் சரியான நிலைப்பாட்டிலேயே காணப்பட்டனர். எனினும் பிற்பட்ட காலத்தில் தோன்றிய ஹிஷாம் போன்றவர்களால் இவர்களின் கொள்கையில் சற்று தலம்பல் நிலை ஏற்பட்டது. இந்த ஹிஷாம் தொடர்பாக அறிஞர்கள் பல்வேறுபட்ட விமர்சணங்களை கூறுகின்றனர். அவற்றில இமாம் ஷஹரஸ்தான் என்பவர் பின்வருமாறு கூறுகிறார்: ஹிஷாம் இப்னு ஹிகம் இறைவனுக்கு உருவம் கற்பிப்பதை முதலாவதாக கூறியவன் ஆவான். மேலும் க.்.பி என்பவர் கூறுகிறார்: இவன் இறைவனை ஒரு வரையறுக்கப்பட்ட உருவமுடையவன் என்றும் மேலும் அவன் மனித வடிவில் உள்ளவன் என்றும் கூறி வந்தான். (அல்மிலல் வன்னிஹல்: 1வது பாகம்: 16-17)

ஒரு முறை இமாம் அலி இப்னு முஹம்மத் அவர்களிடம் ஏகத்துவம் தொடர்பாக கேட்க்கப்பட்டது. அப்போது நான் ஹிஷாம் இப்னு ஹிகமுடைய கூற்றையே நம்பிக்கை கொள்கிறேன் என்று கூறினேன்.

இதைக்கேட்ட இமாமவர்கள் கோபமடைந்து ஹிஷாமிற்கும் உங்களுக்கும் என்ன தொடர்புள்ளது? அவன் எம்மைசசார்ந்தவனல்ல. மேலும் அல்லாஹ்விற்கு யாரெல்லாம் உருவம் கறபிற்கிறார்களோ அவர்களை விட்டும் நாம் விடுபட்டவர்கள்.
(தவ்ஹீத்: 104வது பக்கம்)

ஆகவே ஷீயாக்களால் இமாம்களென மதிக்கப்பட்டவர்கள் கூட இவ்வகையில் சரியான நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர். எனினும் ஸீயாக்களிடம் இதுபற்றி தவறான நிலைப்பாடு தோன்றுவற்கு ஹிஷாம் இப்னு ஸாலிம், ஹிஷாம் இப்னு ஹிகம், யூனுஸ் இப்னு அப்திர் ரஹ்மான் போன்றவர்களை காரணமாக அமைந்துள்ளனர்.

## ஷீஆக்களுக்கும் யூதர்களுக்குமிடையிலான ஒருமைப்பாடுகள்

தந்தையின் குணம் பிள்ளையில் பிரதிபளிப்பது போல் யூதர்களின் தத்துப்பிள்ளைகளான ஷீஆக்களிடத்திலும் அவர்களை வளர்த்த, உரமூட்டிய யூதர்களின் பண்புகளும் தெட்டத்தெளிவாக காணப்படுகின்றன. இந்தடிப்படையில் இருவரிடமும் காணப்படுகின்ற ஒருமைப்பாடுள்ள சில பண்புகளைக்காணலாம்.

✓ யூதர்கள் தாவூத் (அலை) அவர்களின் குடும்பத்திலேயே ஆட்சி நிலைக்க வேண்டும் என்ற கொள்கைளை உடையோர்.

- ✓ ஷீஆக்கள் அலி(ﷺ)அவர்களின் பிள்ளைகளிலேயே ஆட்சி நிலைக்க வேண்டும் என்ற கொள்கையை உடையோர்.
- ✓ யூதர்கள் தஜ்ஜால் வெளியாகும் வரை ஜிஹாத் செய்யக்கூடாது என்கின்றனர்.
- ✓ ஷீஆக்கள் மஹ்தி வெளிப்படும் வரை ஜிஹாத் செய்யக்கூடாது என்கின்றனர்.
- ✓ யூதர்கள் நட்சத்திரம் வெளிப்படும் வரை அவர்களது வணக்க வழிபாடுகளை பிட்படுத்துகின்றனர்
- ✓ ஷீஆக்கள் ம.்.ரிப் தொழுகைகை நடசத்திரங்கள் வானத்தில் வெளிப்படும் நேரம் வரை பிற்படுத்துகின்றனர்.
- ❖ ஆனால் நபிகள் நாயகம் அவர்களின் செய்திகள் இவர்கள் செய்கின்ற செயல்களுக்கு மாற்றமாகவே உள்ளது. நபியவர்கள் கூறுகிறார்கள்: “எனது சமுதாயம் ம.்.ரிப் தொழுகையை நட்சித்திரங்கள் வெளிப்படும் வரை பிற்படுத்தாத வரை இயற்கை மார்க்கத்திலே (இஸ்லாத்திலே) நிலைத்திருக்கும்.
- ✓ யூதர்கள் தங்களது வணக்க வழிபாடுகளை நிறைவேற்றும் போது அதிகம் ஆட்டத்தையும் அசைவுத் தன்மையையும் தங்களது உறுப்புக்களால் வெளிக்காட்டுவார்கள். ஷீஆக்களும் இது போன்றே……
- ✓ யூதர்கள் அவர்களுக்கு அருளப்பட்ட தவ்றாத்தை மாற்றினார்கள்.
- ✓ ஷீஆக்கள் அல்-குர்ஆனை தங்களுக்கு விரும்பியவாறு மாற்றிக்கொள்கிறார்கள்.
- ✓ யூதர்கள் காலுரைகளுக்கு மேலால் அவர்களது வணக்கங்களுக்காக தூய்மையாகும் போது சுத்தம் செய்வதைத் தடுப்பார்கள். இவ்வாறே ஷீஆக்களும்…..

- ✓ யூதர்கள் மனிதர்கள் அனைவருடைய செல்வங்களை சுரண்டி உண்பதை ஆகுமாக்குவார்கள். இவ்வாறே ஷீஆக்களும்.........
- ✓ யூதர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களை அவர்களை வெறுப்பார்கள். அவர் தங்களது எதிரி என்று கூறுவார்கள். இவ்வாறே ஷீஆக்களும் அவரை வெறுக்கிறார்கள்.
- ✓ யூதர்கள் தங்களது வணக்கங்களின் போது கிப்லா திசையை விட்டும் சற்று விலகி நிற்பார்கள். இவ்வாறே ஷீஆக்களும்......
- ✓ இவர்கள் இரு சாராருக்கும் மத்தியில் வேறுபாடு என்று கருதினால் அது ஒரு விடயத்தில் மாத்திரமே உள்ளது.
- ✓ யூதர்களிடம் உங்களது மார்க்கத்தில் சிறந்த சமுதாயம் யாரெனக்கேட்டால், அவர்கள்: மூஸா (அலை) அவர்களுடைய தோழர்கள் என்று கூறுவார்கள்.
- ✓ ஷீஆக்களிடம் உங்களது மார்க்கத்தில் மோசமான சமுதாயம் யாரெனக்கேட்டால்: அதற்கவர்கள் முஹம்மத் நபி அவர்களுடைய தோழர்கள் எனக்கூறுவார்கள்.